Prescribed as a Text for Visharad Examination.

# Tamil and the Tamils


BY

M. E. VEERABAHU PILLAI, B.A., L.T.
*Assistant, Chintadripet High School, Madras.*

AND

S. A. RAMASWAMI,
*Author of Pulamai Vithaga Bodhini.*



**Ottrumai Office,**

**No. 8, Vyasarao Street,**
**THIYAGARAYANAGAR, MADRAS-17.**



Copyright reserved]



1953 [Rs. 3-0-0

CONNEMARA PUBLIC LIBRARY
31 DEC 1992
MADRAS-600 008.

க. த. திருநாவுக்கரசு
M. A. (தமிழ்) M. A. (வரலாறு)
M. LITT. DIP. IN LINGS

# தமிழும் தமிழரும்

★

ஆசிரியர்கள்

**M. E. வீரபாகு பிள்ளை, B. A. L. T.**

ஆசிரியர்

(சிந்தாத்திரிப்பேட்டை உயர்தரக் கல்லூரி சென்னை.)

**சு. அ. இராமசாமி**

(புலமை வித்தக போதினி, குறுந்தொகை வசனம்,
கல்லாட வசனம் முதலிய நூல்களின் ஆசிரியர்.)

★

**"ஒற்றுமை" ஆபீஸ்,**

8, வியாசராவ் தெரு,

**தியாகராயநகர் :: மதராஸ்-17.**

காப்பிரைட்] 1953 விலை ரூ. **3—0—0**

# முன்னுரை

நாம் வசிக்கும் இத்தமிழ் நாட்டைப்பற்றியும், இந் நாட்டிற் பண்டைக்காலத்தில் வாழ்ந்திருந்த மக்களையும், அவர்கள் பேசிய மொழி எழுதிய எழுத்தின் வடிவம், பழக்க வழக்கங்கள் நாகரிகங்கள் முதலியவைகளைப்பற்றி யும், ஆராய்ச்சி செய்து முதலில் மேனாட்டறிஞர்கள் பல நூல்கள் வெளிப்படுத்தினர். அவர்களைப் பின்பற்றித் தமிழ் நாட்டறிஞர்களும் தங்கள் தாய்நாட்டாராய்ச்சியிற் புகுந்து, தாங்கள் தோன்றிய நாடு எத்தன்மையது, இது முதலில் எவ்வாறிருந்தது, அந்நாளில் ஈண்டு வாழ்ந்திருந்த மக்களின் நடையுடை பாவனை எத்தகையது, என்று ஆராய்ச்சிகள் செய்து, தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்கள் பல எழுதி வெளியிடலாயினர்.

ஒருவர் ஆராய்ச்சி முடிபுகளை மறுத்தோ உடன் பட்டோ தங்கள் ஆராய்ச்சி முடிபுகளை எழுதினர். ஒரு செய்தியைப்பற்றிப் பலர் பலவித எண்ணமுடையவர்க ளாக விருப்பின், நூலின் போக்கும் பலவித மாறுபாடுக ளுடனிருத்தல் இயல்பே யன்றோ? ஆராய்ச்சி நூல்க ளெல்லாம் ஒன்றுக்கொன்று மாறுபாடு மிகுந்தவைக ளாகத் தானிருக்கும். சிலர் மிக அற்பமான ஆதாரங் களை வைத்துக்கொண்டு பெரிய பெரிய ஆராய்ச்சிகள் செய்து தாறுமாறான முடிவுகள் கட்டுகின்றனர். இம் முடிபுகள் மற்றவரின் ஆராய்ச்சி எழுந்ததும் சின்னபின்ன மாகச் சிதறி யொழிகின்றன.

ஆராய்ச்சிகளுக்குப் பழங்காலத்திற் கல்லில் வெட்டப் பட்டுள்ள கல் வெட்டுக்களும், மண்ணிற் புதையுண்டு கிடந்து அகப்படும் என்பு, மக்கள் உபயோகப்படுத்திய பொருள்கள், முதலிய பொருள்களும், பழைய நூல்களும் சரித்திரக் குறிப்புகளும் பெரிதுந் துணைபுரிகின்றன. இவைகளினுதவியின்றேல் ஆராய்ச்சி எட்டுணையும் பயன் படாது.

மேற்படி பொருள்களின் துணைகொண்டு ஊகமாகவே செய்யப்படுகிற ஆராய்ச்சி முடிபுகள், காலப்போக்கில் புதிய சான்றுகள் அகப்படுகிறபோது வேறுவிதமாக மாறு தலையடையும். எவ்வளவு நுட்பமாக நுணுகி ஆராய்ச்சி

புரியினும், தாங்கள் கூறுவதுதான் சரியான முடிபென்று எவராஜனும் உறுதியாக நிலைநாட்டுதலியலாது. இறந்த கால நிகழ்ச்சிகளை உண்மையென நிலைநாட்டுதல் அத்துணை எளிய காரியமன்று.

இவ்வுலகம் எப்படி உண்டாயிற்று, எப்படி யிருக்கின்றது, ஞாயிறு, திங்கள், விண்மீன் முதலியவைகளின் தன்மை யென்ன, இன்னோரன்ன செய்திகள்கூட இன்னும் தக்க சான்றுகளுடன் அனைவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய விதத்தில் நிலைநாட்டப் பெறவில்லை. மக்கள் முதல் முதல் எவ்வாறு தோன்றினர்க ளென்னுஞ் செய்தியைப் பற்றியும், ஒருவர் கொள்கைக்கு மற்றவர் கொள்கை ஒத்து வருவதில்லை. இக் கொள்கை மாறுபாடுகள் இந் நாட்டாருக்குஞ் சரி மேனுட்டாருக்குஞ் சரி இயல்பே. "உயிர்த் தொகைக ளெல்லாம் ஒரே காலத்தில் படைக்கப்பட்டன" என்பர் ஒரு சாரார். "அற்றன்று படிமுறை வளர்ச்சியில் ஓரறிவு முதல் ஆறறிவுவரை உள்ளவை, வரிசை முறையாக ஒன்றிலிருந்து ஒன்று தோன்றி வளர்ந்து முதிர்ந்து வேறு வடிவமாக மாறிற்று." என்பர் பிறிதொரு சாரார்.

ஒவ்வொரு நாட்டினரும் தங்கள் தங்கள் நாட்டிற்கே தொன்மைச் சிறப்பேற்பட வேண்டுமென்னும் எண்ணத்தால், மக்கட்படைப்பு, மொழித்தோற்றம் முதலியன தங்கள் தங்கள் நாட்டிலேதான் முதலில் தோன்றி வளர்ந்து பிறகு உலகெலாம் பரவினவென்று நிலைநாட்டமுற்படுவர். உண்மையில் எந்நாட்டில் எல்லாம் முதல் முதல் உண்டாயின என்பது, ஐயமற இன்னும் எவராலுங் கண்டறியப் படாத நிலைமையில்தான் இருக்கின்றதென்னலாம்.

நமது இந்திய நாட்டிலே, கடலின் வாய்ப்பட்டுள்ள இலெமூரியாக் கண்டம் என்னும் பெயரிய தென்னுட்டிலே தான், மக்கட்படைப்பும் மொழித் தோற்றமும் முதன் முதலுண்டாகி நாகரிகமடைந்து உலகெலாம்பரவிற்றென்னுங் கொள்கையை, மேனுட்டாராய்ச்சியாளர்களினும் பலர் கொண்டிருக்கின்றனர். இவர்கட்குச் சிறிது மாறுபாடாக, இப்பொழுதுள்ள தென்னிந்தியாவில் சில விடங்களில் தான் மக்கள் தோற்றம் முதலில் உண்டாயிற்றென்றுஞ் சிலர் எழுதியிருக்கின்றனர். உண்மையில் நமது

தென்னாடாகிய தமிழ் நாட்டிலேயே மக்கட்கூட்டம் முதலில் உண்டாகி நாகரிகமடைந்து, உலகெலாம் பரவியிருப்பினும் அதனால் நமக்கிப்பொழு தேற்படப்போகிற ஊதியம் யாதுமில்லை.

தமிழ் மொழி எப்படி உண்டாயிற்று, தமிழ் மொழி உண்டாவதற்குமுன் மக்கள் எப்படிப் பேசினார்கள், தமிழ் என்னும் பெயர் எவராலிடப் பெற்றது, இதற்குப் பொருளென்ன, உலகத்திலுள்ள பொருள்களுக்கெல்லாம் பெயரிட்டவர் யார், என்பன போன்ற செய்திகளை நாமாக ஊகஞ் செய்துகொள்ள வேண்டியதுதான். இச் செய்திகளைப் பற்றியும் பலரும் பலவித மனப்பான்மை கொண்டவர்களாக விருக்கின்றனர்.

திராவிடக் குடும்பமென்று மேனாட்டாராய்ச்சியாளர் பிரித்துள்ள தென்னாட்டு மொழிகட்குத், தமிழ்தான் தாய் என்பதை அனைவரும் ஒரே மனதாக ஒப்புக்கொள்ளுகின்றனர். வடமொழி வெளி நாட்டு மொழி முதலியவைகளும் தமிழ் மொழிகளையே அடிப்படையாகக் கொண்டு பிறந்தன வென்னும் செய்தியை, ஆராய்ச்சியாளரும் பிறரும் இன்னும் சிறிது காலத்திலேனும் உணராமற் போகார். இதனை இப்பொழுதே உணர்ந்தும் உலகிற்கு வெளிப்படுத்தாதிருக்கின்றனர் பலர். தமிழ் மொழியின் தனித் தன்மையும் தாய்மையும் நிலைபெறத் தக்க சான்றுகள் பல இந்நூலில் பலவிடங்களினும் காணலாம்.

செந்தமிழ் வழங்கும் நிலம் காலப் போக்கின் கொடுந்தமிழ் நிலமாக மாறிப், பின்னும் பன்னாளில் அது வேறு மொழியாகத் திரிந்துவிடுகிற தென்னும் உண்மையை, மலையாளம் முதலிய மொழித் திரிபுகளால் இனிதறியலாம்.

இலெமூரியாக் கண்டத்திலிருந்த தென் மதுரையில் கிறிஸ்து பிறப்பதற்கு 2740 யாண்டுகட்கு முன்னர்த் தலைச் சங்கந் தோன்றி 3780 யாண்டுகள் நடைபெற்ற தென்பதை, மறைமலையடிகள் முதலிய செந்தமிழ்ப் பெரியார்கள் தக்க சரித்திரச் சான்றுகளுடன் நிலைநாட்டுகின்றன ராதலின், முச்சங்கங்களும் உண்மையில் நடைபெற்றனவே யென்பதற்கு ஐயப்பாடிலது. சங்கங்களைப் பற்றி

எழுதப்பெற்றுள்ள சில செய்திகள் நம்பக்கூடாதவைக ளாக விருக்கலாம்.

கடவுள் வழிபாடு முதலியன, ஆரியர் இந் நாடு புகுந்த பிறகே பெரிதும் மாறுபாடடைந்த தென்பதும் ஆராய்ச்சியாளர் பலர் துணிபு.

தமிழெழுத்துக்கள் பிராமி யெழுத்துக்களி லிருந் துண்டாக்கப்பட்டன வென்று பலரும், வட்டெழுத்துக் களிலிருந் துண்டாக்கப்பட்டனவென்று சிலரும் முடிவு செய்கின்றனர்.

முற்கால வெழுத்துக்களின் வடிவத்தைத் தொல்காப் பியம் முதலிய இலக்கண நூல்களிலிருந்து நாம் முழுவதும் முடிவு செய்தலியலாது. "உட்பெறுபுள்ளி உருவாகும்மே." "எகர ஒகரத்தியற்கையுமற்றே." என்பன முதலிய சூத் திரங்களால் பழந் தமிழெழுத்துக்களின் வடிவ மாறுபாடு ஒரு சிறிதுதான் உணர முடியும்.

இந்நூலிற் சொல்லப்பெறும் செய்திகள் பல ஆராய்ச்சி நூல்களிலும் பத்திரிகைகளிலுமிருந்து திரட் டிச் சேர்க்கப்பட்டவையே தவிரச் சொந்தக் கற்பனையல்ல. எடுத்துக்கொண்ட தலைப்புகளுக்குப் பொருத்தமான பகுதிகள் ஒன்றுபடுத்தப் பெற்றுள்ளன. பல ஆராய்ச்சி நூல்களின் சாராம்சமான கருத்துக்களை இந் நூலில் ஒருங்கே காணலாம்.

தமிழையும் தமிழரையும் பற்றிய எல்லாச் செய்தி களையுமே இந்நூலில் அமைக்கவேண்டு மென்னுங் கருத் துடன், தமிழர் நாகரிகம், கற்பு, வாணிகம், நகைச்சுவை, விளையாட்டு, இசை, சீட்டுக்கவி, வெகுளி, வசைகவி, கையறு நிலை முதலிய எல்லாப் பகுதிகளையும் அமைத்திருக் கின்றோம்.

இந்நூலை வரன்முறையாகப் படிப்பவர் தமிழ்ப் பெரு மக்களின் தொன்மை, வாழ்வியல், நாகரிகம், பண்பாடு மொழித்திறன் முதலியவற்றை ஒரு தொகுதியாக அறிந்து கொள்வர். நூல் அதிக விரிவாகப் போகாது கூடியவரை எல்லாச் செய்திகளையும் சுருக்கமாகவே அமைத்திருக் கின்றோம்.

—ஆசிரியர்கள்.

# பொருளடக்கம்

| எண் | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | உலகத் தோற்றம் ... | 1 |
| 2. | தமிழர் தோற்றம் ... | 7 |
| 3. | தமிழ் நாடுங் கடல் கோளும் ... | 18 |
| 4. | தமிழரும் ஆரியரும் ... | 24 |
| 5. | தமிழ்மொழி ... | 29 |
| 6. | தமிழ்மொழியின் பிறப்பு ... | 33 |
| 7. | தமிழ்மொழியின் சிறப்பு ... | 38 |
| 8. | தமிழின் தொன்மை ... | 43 |
| 9. | தமிழ்மொழி முன்னர் வழங்கிய இடங்கள் ... | 59 |
| 10. | தமிழ்நாடும் அயல்நாடும் ... | 69 |
| 11. | தமிழ்நாடும் பிரிவுகளும் ... | 73 |
| 12. | தமிழ்நாட்டின் தற்கால எல்லை ... | 76 |
| 13. | தமிழ்மொழியும் பிறமொழிகளும் ... | 80 |
| 14. | தமிழுங் கொடுந்தமிழும் ... | 87 |
| 15. | தமிழும் மலையாளமும் ... | 90 |
| 16. | தமிழ்ச் சங்கம் ... | 95 |
| 17. | தமிழும் அகத்தியரும் ... | 100 |
| 18 | தமிழும் பௌத்தரும் ... | 106 |
| 19. | தமிழுங் கிறித்தவரும் ... | 108 |
| 20. | தமிழ் இலக்கணத்தின் சிறப்பு ... | 111 |
| 21. | தமிழ் இலக்கண நூல்கள் ... | 114 |
| 22. | தமிழ் இலக்கிய நூல்கள் ... | 120 |
| 23. | தமிழ்நூற் கடவுளர்கள் ... | 137 |
| 24. | தமிழர் மதமும் பிறமதமும் ... | 144 |
| 25. | தமிழ் மொழியும் பழமொழியும் ... | 148 |

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 26. | தமிழ் மொழியின் பண்டைக்கால உரைநடை | ... | 149 |
| 27. | தமிழிற் பிறமொழிச்சொற்கள் | ... | 154 |
| 28. | தமிழ்மாதர் கற்பு | ... | 157 |
| 29. | தமிழர் நாகரிகம் | ... | 164 |
| 30. | தமிழர் வாணிகம் | ... | 176 |
| 31. | தமிழர் நகைச் சுவை | ... | 181 |
| 32. | தமிழர் விளையாட்டு | ... | 198 |
| 33. | தமிழர் இசை | ... | 203 |
| 34. | தமிழர் சீட்டுக்கவி | ... | 209 |
| 35. | தமிழர் வெகுளி | ... | 214 |
| 36. | தமிழர் வசைகவி | ... | 219 |
| 37. | தமிழர் கையறு நிலை | ... | 247 |
| 38. | தமிழ்நாடுந் தற்காலமும் | ... | 251 |
| 39. | தமிழரும் மறுமைக் கொள்கையும் | ... | 253 |
| 40. | தமிழும் இஸ்லாமியரும் | ... | 258 |
| 41. | தமிழும் சமணரும் | ... | 261 |
| 42. | தமிழைப்போற்ற வேண்டியமுறை | ... | 264 |

# தமிழ்த்தாய் வணக்கம்

ஓங்குமா கடல்சூழ் உலகிதன் மிசையே
பாங்கொடு நாளும் படர்ந்து விளங்கும்
அமிழ்தினும் இனிய தமிழெனுந் தாயே!
இயற்கையாய் இந்த எழிற்புவி பிறந்து
செயற்கையால் நாளும் மாண்பு சிறந்து
புங்கமா தவன்முதற் புலவர்கள் பலபேர்
சங்கங் கொண்டு தகவுடன் வளர்க்கப்
பலகலை புனைந்து இலகி மிளிர்ந்தாய்
மாகலை சூடும் மேகலை யணிந்தாய்
சிந்தா மணியாஞ் செழுமணி புனைந்தாய்
நந்தாச் சிலம்பு நன்கா விசைந்தாய்
குண்டல மென்னுங் குழைசெவிக் கொண்டாய்
மண்டல மிதனில் வளைகைக் கமைத்தாய்
செந்தமிழ் மறையாஞ் செங்கோல் பிடித்தாய்
இந்த மாநிலம் எல்லாம் புரந்தாய்
உலகெலா மாட்சி ஒருகாற் கொண்டநீ
அலகில்சீர் இலகும் பலவித மொழியாய்ப்
பாரினில் விளங்குஞ் சீரிய சேய்களை
நின்னிடந் தோன்ற நீடருள் புரிந்தாய்
இந்நில மீதில் இக்கா லத்துன்
கான்முளை கட்குக் காணி கொடுத்துத்
தான்மிகச் சில்லிடத் தனியர சேற்றாய்
மன்னிய இன்னிசை துன்னி மின்னிய
நின்னெழிற் கலைபல தன்னகப் படுத்திப்
பொன்னிழை தன்னிலும் புகழுள இரண்டுகொள்
முன்னீர்க் கள்வன் முறையுடையானோ?
வாழியெம் அன்னாய்! வையக மிசையே
ஊழிபல் லூழியாய் உயர்வுடன் மிளிர்ந்தே

சு. அ. ரா.

---

உ

# தமிழும் தமிழரும்

## கடவுள் வணக்கம்

தமிழுந் தமிழருந் தாரணியி லோங்கத்
தமிழ்க்கடவுள் தாளதனைச் சாற்று.

# அதிகாரம் 1.

## உலகத் தோற்றம்

உலகம் அழகாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. இந்த உலகம் மிகப் பெரியது. நமது கண்ணுக்குக் காணப்பெறுகிற இந்த உலகம் எவ்வளவு நாளைக்கு முன்புண்டாயிற்று? எப்படியுண்டாயிற்று? ஏன் உண்டாயிற்று? என்பனபோன்ற கேள்விகட்கு இது தான் சரியானதென விடையிறுத்தல் எவரானு மியைவ தொன்றன்று. இத்தகைய செய்திகள் ஆராய்ச்சியாளர்களின் மூளைக்குக்கூட அப்பால் தானிருக்கின்றன வென்பது திண்ணம். ஆயினும் உலகத்தோற்ற வொடுக்கங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதினும், தாங்கள் கண்டுபிடித்த முடிபுகளை உலகிற்கு வெளிப்படுத்துவதினும் ஆராய்ச்சியாளர்கள் இற்றை ஞான்றுவரை ஒரு சிறிதும் பின் வாங்கினார்களில்லை. இனிமேலும் ஆராய்ச்சி செய்து முடிவுகள் வெளிப்படுத்துவதற்கும் பலர் முற்படுவர்.

உலகத்தோற்ற வொடுக்கங்களைப்பற்றிய பல செய்திகளை, இறைவனருள் பெற்றுராய் விளங்கிய முற்காலத்து முனிவர்கள் பழைய நூல்களிற் பலவிதமாகப் பகர்ந்துள்ளனர். அன்னவரே பலவிதமாக. மொழிந்தனரெனின், ஞானக்கண் பெறுராகிய ஊனக் கண்ணினர் தம் முடிபினைப்பற்றி உரைக்கவும் வேண்டுங் கொல்? நாகரிகத்தின் முடியிற் பறந்து கொண்டிருக்கும் இந்த இருபதாம் நூற்றுண்டிற் பழம் பெரியார் தங் கூற்றுக்காற்று வாக்கிற் பறக்கவிடப்படுமே தவிரக் கொள்ளப் பெறுதல் அரிதினும் அரிது.

கண்ணுக்குக் காணப்பெறுகிற இந்த உலகம் இறைவன் படைப்பு. இவ்வுலகம் வெகு காலமாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. உயிர்கள் எக்காலத்தினுமுள்ளன. உயிர்கள் நல்வினை தீவினைப் பயனை உடலெடுத்துத் துய்ப்பதற்காக இவ்வுலகம் உண்டாக்கப்பட்டது. இவ்வுலகம் முடிவை (ஊழியை) அடையுங் காலத்தில் பல்லாண்டுகள் மழை வளங் குன்றி மாபெரும் வற்கடம் மாநிலத்திலுண்டாகும். உயிர்த்தொகைகள் அப்பஞ்சத்திற் காற்றுது உடலினை இழந்துவிடும். பன்னிரு ஞாயிறுகளும் பாயொளி பரப்பிப் பாரெலாங் கொளுத்தும். இஞ் ஞாயிறுகளின் வெம்மை இறுதியிற் பாதாளத்திலிருந்து பாரினைப் பரிக்கும் பாம்பினையுஞ் சென்று தாக்கும். வெம்மைக் காற்றுத அவ்வாயிரந் தலைப் பாம்பு தனது நஞ்சினைக் கக்கும். அந் நஞ்சு பாரெலாம் பரந்து மழை பெய்தற்குக் காரணமாகிய ஏழு முகில்களையுஞ் சென்று வருத்தும். நஞ்சின் வெம்மைக் கஞ்சிய மஞ்சுகள் பாராவாரத்திடை சென்று படிந்து, நீரினைப் பருகி ஆரவாரத்

துடன் மேலே நிமிர்ந்து பாரின் வெம்மைமாறப் பல்லாண்டு மழை பொழியும். அந்நீர்ப் பெருக்கு அளவற்றதாகும். மண்ணும் விண்ணுந் தண்ணீர் நிறைந்து நிற்கும். பூமியிற் சிறிதிடமும் காணப்பெறமாட்டாது. இதுதான் ஊழி. வானளாவிய நீர் வற்றி மண்ணகந் தோன்றப் பல்லாண்டுகள் செல்லும். நீர் வற்றி நிலப் பரப்புத் தோன்றத் தொடங்கியதும் இறைவனருளாற் படைப்புத் தோன்றும்.

இனி மேனாட்டாரும் அவர் தங் கொள்கை வழிச் செல்வாரும் உலகத்தோற்ற வொடுக்கங்களைப் பற்றியும், ஞாயிறு, திங்கள், விண்மீன் முதலிய கோள்களின் இயக்கங்களைப்பற்றியும் தமது விசித்திரமான ஆராய்ச்சி முடிபுகளை வெளியிடுவர்.

இப்பொழுது காணப்பெறுகிற இந்த உலகம் ஏறக்குறைய ஐந்து நூறாயிரம் யாண்டுகட்கு முன்னர்த் தோன்றியிருக்கலாம். இவ் வண்டம் ஞாயிற்றினின்றுஞ் சிதறி வீழ்ந்த ஒரு பெரிய பிழம்புத்திவலை. இவ்வண்டப் பரப்பின் குறுக்களவு (மேலிருந்து கீழ்) எண்ணாயிரம் மைல். சுற்றளவு இருபத்தையாயிரம் மைல். இவ்வண்டம் மணிக்கு ஆயிரக்கணக்கான மைல் விரைவில் தன்னிலுள்ள பொருள்களோடுஞ் சுழன்று கொண்டிருக்கின்றது. ஓரேயிடத்தில் அசையாது நின்று கொண்டிருப்பதாய ஞாயிற்றின் பக்கமாக இவ்வுலகஞ் செல்லும்போது பகலும் வேறு பக்கமாகச் செல்லும்போது இரவும் உண்டாகின்றது. ஞாயிற்றினின்றுஞ் சிதறி வீழ்ந்த இப்பிழம்புத் திவலை நாளடைவிற் குளிர்ச்சியடையத் தொடங்கிற்று. முதலிற் குளிர்ச்சியடையத்

தொடங்கிய பகுதியில் உயிர்த் தொகுதிகளுண்டாகத் தொடங்கின. முன்னர் மரஞ்செடி கொடிகளும் புழுப் பூச்சி வௌவால் பறவை மாக்கள் முதலியவை களுந் தோன்றின. குரங்குக்கும் மனிதனுக்கும் இடைப்பட்டதாய இலெமூர் என்னும் பிராணியி லிருந்தே மக்கள் தோற்றம் உண்டாயிற்று.

நீர் நிலைகளிலுள்ள தண்ணீர் இரவில் வெம்மை யடைவதைப் பல விடங்களிற் பார்க்கிறோம். ஞாயிறு வெம்மையினையுடையது என்னுஞ் செய்தி எல்லோரும் நன்கறிந்தது. பூமிக்குள் தோண்டினால் தட்பத்தைவிட வெப்பமே அதிகமாகக் காணப் பெறுகிறது. பல இடங்களில் மலைகள் வெடித்துப் பூமிக்குள்ளிருந்து நெருப்புக் குழம்பு, கரி, புகை முதலியவைகளைக் கண்டபடி வீசி நாடுகளைப் பாழ் படுத்துவதாகவும் அறிகிறோம். மேலும் பூகம்பங்க ளெல்லாம் பூமியின் கீழுள்ள தீக்குழம்பு கொதித்து நெளிவதாலேற்படுகிறதெனவுங் கேள்விப்படுகின்றோம். இன்னோரன்ன பலவேதுக்களால், மேற்கூறிய கூற்றினை நாம் ஒருவாறு ஒப்புக் கொள்ளுதலுங்கூடும்.

---

*(1) "தொலை நோக்காடியின் (டெலஸ் கோப்) துணை கொண்டு வானைத் துருவிக்காணில் எண்ணில் பல் ஞாயிறுகளும் பிற உடுக்களும் கட்புலனுக்கும் மன உணர்ச்சிக்கும் எட்டுகின்றன. சிலநூல் கூறுகின்றபடி நமது மண்ணுலகமானது, சுழலும் ஞாயிற் றினின்றும் சிதறி வீழ்ந்த ஒரு பிழம்புத் திவலையாம். சுமார் 8000 மைல் குறுக்களவும், 25000 மைல் சுற்றளவும் கொண்ட இந் நெருப்புருண்டையில் எந்தப் பகுதி உயிர் வாழ்க்கைக் கேற்ற தகுதியை முதன் முதலடைந்தது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

உலகின் மேற்பரப்பே முதன் முதற் குளிர்ந்தது. கால அடைவில் உட்பகுதியும் வரவரக் குளிர்ந்து வருகிறது. இப்போதும் தரையிலிருந்து 30 மைல் தொலைவு கீழ் நோக்கி அகழ்ந்து செல்லக் கூடுமாயின், அங்கு இந் நிலவுருண்டையின் பண்டை அழற் பிழம்புருவ மிருக்கக் காணலாம் என்று நிலநூல் சொல்லும்.”

தமிழகம் பா. வே. மாணிக்க நாயகர்.

*(2) “பூமியின் மேற்புறத்தில் தோன்றும் கடினபாகம் ஒரு கோழி முட்டை ஓட்டைப்போலும் தேங்காய் ஓட்டைப்போலும் தானென்று கூறினாலும், அதன் கனம் ஏறக்குறைய இருபத்தெட்டு மைல்களிருக்கின்றன. அதாவது நாம் பூமியைத் துளைத்து உள்ளே செல்வோமானால் 28 மைல் தூரம் மேற்பாகத்திற்குக் கிட்டத்தட்டச் சமமாகச் சொல்லத்தக்க கடின பாகத்தைப் பார்ப்போம். 28 மைல்கள் தானே துளைத்துச் செல்வோமென்றால்; இரண்டு மைலுக்கப்புறம் நன்றாகக் கொதிக்கிற ஜலம் எவ்வளவு சுடுமோ அவ்வளவு சூடு உண்டாகும். அதாவது 100 டிக்ரி- ஏழரை மைல் போனால் பழுக்கக் காய்ச்சின இரும்பு எவ்வளவு சுடுமோ அவ்வளவு, அதாவது 400 டிக்ரி சூடு உண்டாகும். பதினெட்டு மைல் போனால் உருகியோடும் கண்ணாடி எவ்வளவு சுடுமோ அவ்வளவு, அதாவது 1000 டிக்ரி சூடு உண்டாகும். இருபத்தெட்டு மைல் போய்விட்டால், எந்தக் கடின பதார்த்தமும் இளகி ஒன்றோடொன்று சேரக் கூடிய நிலையை உண்டாக்கத்தக்க அதாவது 1500 டிக்ரி உஷ்ணம் உண்டாகும். தவிரவும் கொஞ்ச தூரம் போனாலே பிராணவாயுவற்றுப் பிராணிகள் ஜீவிப்பது அருமையாகும்.”

பூகோள சரித்திரம். ஸ்ரீ. வ. சு.

*(3) “உலகம் தோன்றியபொழுது ஒரே அக்கினிப் பிழம்பாயிருந்தது. காலம் செல்லச் செல்ல மேல்பாகம் சிறிது சிறிதாய்க் குளிர்ந்து இறுகியது. இம் மேல்பாகம் வேண்டிய அளவுக்கு இறுகிக் குளிர்ந்தபின் தாவரங்களும் உயிர்ப்பிராணிகளும்

நாம் வாழும் இந்த மண்ணுலகம்:
6,59,000,000,000,000,000,000 டன் கனமான தென்று நவீன சாஸ்த்ர ஆராய்ச்சிகளின் மூலம் கணக்கிடப்பட்டிருக்கிறது.

---

வாழ்வதற்கு ஏற்றதாயிற்று. இவ்வுண்மையை விஞ்ஞானிகள் எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர்.

பூமி எல்லா விடங்களிலும் ஒரே மாதிரியாகக் குளிர்ந்து இறுகவில்லை. சில இடங்களில் மேலோடு (பூமியின் மேல்பாகம்) மற்ற இடங்களைப்போல அவ்வளவு கெட்டியாயில்லை. தென் அமெரிக்காவின் மேற்குக் கரை முழுவதும் மேற்கூறியபடி உள்ளது.

பூமியின் மேலோடு கெட்டியாக இல்லாதிருப்பதினால் சில இடங்களில் பூமியின் உட்பாகத்தில் அமுக்கம் அதிகமானவுடன் கற்குழம்பு, வாயுக்கள் இவை பூமியின்மேற் பரப்புக்குத் தள்ளப் படுகின்றன. ஜப்பான், நியூசிலந்து, ஆசியா இவற்றில் இம்மாதிரி இடங்கள் உள்ளன. இம்மாதிரிப் பாகங்கள் எரிமலை ரூபத்தில் உள்ளன.

எரிமலை எரிய ஆரம்பித்தால் சாம்பல், கற்குழம்பு, பெரும் பாராங்கற்கள் இவை பேரிரைச்சலுடன் வெகு தொலைவிற்குத் தூக்கி எரியப்படுகின்றன. புகை மேகம்போல ஆகாச வெளியில் காணப்படும். நீராவியும் வெளிப்படுகின்றது. புகை மண்டலத் தில், எரிமலை வாயினுள் எரியும் நெருப்பின் வெளிச்சம் பிரதி பலிக்கப்படுவதையும் காணலாம். மேற்கூறியவை யெல்லாம் எரி மலை இலேசாகக் குமுறி வெடிக்கும்போது ஏற்படுவனவாம்.

எரிமலை பிரமாண்டமாக வெடித்தால் **(ERUPTION)** பூகம்பம் ஏற்படும். சமுத்திரத்திற் கடியில் உள்ள பூமியின் மேல் பரப்பில் அதிர்ச்சி உண்டாகும்போது ஏற்றவற்றத்திற்குரிய அலைகள் (Tidal waves) ஏற்படுகின்றன.''

எரிமலைகள். **K. R. ஆன-27 1·2**

# அதிகாரம் 2.

## தமிழர் தோற்றம்

இந்நிலவுலகில் ஏறக்குறைய மூந்நூறாயிரம் யாண்டு கட்கு முன்னர் மக்கள் தோற்றம் உண்டாகி யிருக்க வேண்டுமென ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மக்கள் தோற்றம் முதன் முதலில் தென் இந்தியாவில் இப்போதுள்ள சில விடங்களில், அல்லது கடல்கோளுக் குட்பட்ட குமரிக்கண்டத்தில், ஏற்பட்டிருக்க வேண்டு மென நமது நாட்டாராய்ச்சியாளர்களும், மேனாட் டாராய்ச்சியாளர்களும் விளம்புகின்றனர். முதலிற் குளிர்ச்சியடைந்த இப் பகுதியே மக்கள் தோற்றத்திற்கு ஏற்றதாக விருந்த தென்பது அவர்கள் முடிபு. பைபி ளின் கூற்றைத் தழுவிச் சென்ற ஸ்விஸ் ஆசிரியரும் வேறு இரண்டொருவரும், மக்கள் தோற்றம் முதலில் பாலஸ்தீன் நாட்டில் ஏற்பட்டிருக்கக் கூடுமென நாட்ட முற்பட்டுப் பல தடுமாற்றங்கட் குள்ளாயினர்.[1]*

---

*(1) "இனி, மேற்பரப்பிற்றானும் எப்பகுதி முதன் முதல் குளிரத் தலைப்பட்டிருக்கு மென்று ஆராயுமிடத்து, நடுக்கோட் டிற்கு இருமருங்குமுள்ள பகுதி மற்றைப் பகுதிகளைவிட மிக்க விரைவோடு சுழலுவதொன்றாகலின், அதுவே முதலிற் குளிர்ச்சி யடைந்திருக்கும். இம்முறையே அதற்கடுத்துள்ளவை. அதற் கடுத்தும், இன்னுந் தொலைவிலுள்ளவை பின்னும் பலகாலம் கழித் தும், இருதுருவங்களும் மற்றெப்பகுதிக்கும் பின்னுங் குளிர்ந் திருக்கும். ஆகவே, உலகின் நடுக்கோட்டுப் பகுதியே முதலில் தரைப்பாங்கு அடைந்தது என்று ஒப்பவேண்டி யிருக்கிறது.

இவ்வாறு முதலிற் குளிர்ந்த பகுதியிற்றான் தமிழகமுள்ளது. எனவே தமிழகமானது உயிர்த்தொகை தோன்றற்கேற்ற வசதிகள் முதன் முதல் வாய்க்கப்பெற்ற பகுதியிலுள்ள தென்பது விளங்கும். இத்தமிழகத் தொன்மைக்கு நில நூலாரும் வான நூலாரும் தொல் உயிர் நூலாரும் ஒருமித்துச் சான்று பகர்வர்.

*　　　　*　　　　*

ஒவ்வோரூழியிலும் நிலப்பரப்பு இன்ன வடிவோடிருந்திருக்குமென்று ஊகஞ் செய்து நில நூலார் படங்கள் வரைந்துள்ளார்கள். அவற்றுள் முதலூழிக்கால நிலையைக் காட்டும் படத்திலும் தென்னிந்தியா நிலப்பகுதியாகவே காட்டப்பெற்றிருக்கிறது. மூன்றும் ஊழிக் காலவரையிலும் இந்நிலப்பகுதி நிலமாகவே இருந்து வந்தது."

தமிழகம்.　　　　பா. வே. மாணிக்க நாயகர்.

*(2) "தமிழர் தென்னிந்தியாவை வென்று குடியேறினோர்களோ அல்லது பூர்வமே அங்கு வாழ்ந்து வருகின்றார்களோ என்று அறியக்கூடாத அவ்வளவு பழமைதொட்டு இந்தியாவில் உறைகின்றார்கள் என்றும், அவர்களுடைய உற்பத்தி மதுரை அல்லது தஞ்சாவூருக்குச் சமீபத்தில் இருக்கலாமென்றும், அவர்கள் பிறநாடுகளிலிருந்து இந்தியாவை அடைந்தார்களென்பதற்கு யாதும் வரலாறு காணப்படவில்லை யென்றும் வெர்கூசன் என்பவர் கூறுவர்."

தமிழகம்.　　　　ந. சி. க.

*(3) "Their ('The Dravidians') Settlements in India extend to such Prehistoric times that we cannot even feel sure that we regard them as immigrants or, at least, as either conquerors or colonists on a large scale but rather as aboriginal in the sense in which that term is usually understood.

The hypothesis, that would represent what we know of their history most correctly would place their original seat

in the extreme south, somewhere probably not far from Madura or Tanjore and thence spreading fanlike towards the north. They have no traditions which point to any seat of race out of India, or their having migrated from any country whose inhabitants thay can claim any kindred so far as they know they are indigenous and aboriginal."

—Dr. Fergusson quoted in Tamilian antiquary No. 1.

*(4) Stone age in India என்னும் நூலெழுதிய திரு. P. T. ஸ்ரீநிவாசய்யங்கார் மனித உற்பத்தி முதலில் தண்டகாரணியத்துக்கும் கடலுக்கும் இடையில்தான் ஏற்பட்டதெனக் குறிப்பிட்டார்.

Man therefore most probably rose and in the comparatively narrow strip of coast between the jungle (Dandakaraniam) and the Indian Ocean"—Stone age in India.

ஊழிக்குப்பின் இந்தியாவிலேதான் மக்கள் படைப்புத் தோன்றிப் பல்கிய தென்பதை மேனாட்டாராய்ச்சியாளர் சர் வால்ட்டர் ராலியும் குறிப்பிட்டார்.

*(5) 'ஹெக்கெல்' என்னும் ஜெர்மானியப் புலவர், குமரி முனைக்குத் தெற்கேயுள்ள ஞாலத்தின் நடுக்கோட்டிற்கு இருமருங்குமிருந்த நிலப்பகுதிகளே மக்கள் வாழ்விற்குத்தக்க நிலையை முதற்கண் அடைந்தனவென்றும், அவண் மக்கள் முதற்கண் தோன்றிவளர்ந்து நாகரிகத்திற்கு வித்திட்டனரென்றுங் கூறியுள்ளார். இலக்கிய வரலாறு.கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M. L.

*(6) "பிரித்தானிய சங்கம் (British Association) என்னும் ஆராய்ச்சிக் கழகத் தலைவராகிய ஸர் ஜான் எவன்ஸ் (Sir John Evans) என்னும் பெரியார் தமது தலைமை யுரையிலே பின் வருமாறு கூறுகிருர். " மனித சாதியாரின் தொட்டில் தென்னிந்தியாவாக இருக்கலாம். வடதிசை மக்களின் முன்னேரும் மத்திதரைக் கடற்கரையிலுள்ள நாடுகளில் வாழ்ந்த மக்களின் முன்

மக்கட் படைப்பு முதன் முதலில் எவ்வாறு ஏற்பட்டதென்பதை எந்த ஆராய்ச்சியாளர்களும் இதுவரை தெளிவுபடுத்தி எழுதினார்களில்லை. ஒரு சிலர் குறிப்பாக எழுதினார்கள். ஒரு சிலர் இச் செய்தியை நழுவ விட்டுவிட்டு, மற்றைச் செய்திகளைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதலாயினர். இது மக்கள் பிறப்பைப் பற்றிய செய்தியாதலின் எவருந்துணிந்து ஒரு முடிவு கூறுவதில்லை. இறையருள் வழியைப் பின்

---

னோரும் முதலிலேயிருந்து சென்ற இடம் தென்னிந்தியாவாக இருக்கலாமென்று ஆராய்ச்சித் துறைகள் காட்டுகின்றன.'' இள மாணவர்க்குக் கல்வி பயிற்றும் போதகாசிரியர்கள் தமிழ்க் குலத்தாரின் பழமையையும் செழுமையையும் ஆராய்ந்துணர்ந்து மாணவர்க்கு அறிவுறுத்துவார்களாக.''

செந்தமிழ். தொ. 39 ப. 1. உலக புராணம்.

சுவாமி விபுலாநந்தர்.

*(7) "ஆங்கில நூலாசிரியரிற் பெரும்பாலார் இந்து மகா சமுத்திரத்தினுள் முழுகியிருக்கும் பூமியில் (Submerged land—Lemuria) தான் முதற்கண் மக்கட்பகுப்பார் தோன்றினரென்று கூறுகின்றனர். அதற்கேற்ப மக்கள் முதற்கண் ஒலிக்கக்கூடிய இயல் ஒலிகளே தமிழ் மொழியில் இருக்கின்றன. முன்னர் வடக்கண் குமரியாற்றுக்கும் தெற்கெல்லையாகிய பஃறுளியாற்றுக்கும் இடையே கிழமேல் நீண்டுகிடந்த 7000 மைல் பரப்புள்ள நிலம் தமிழகம் எனப்பட்டிருந்தது. அதில் தென்பகுதியில் தென் மதுரை யிருந்தது.''

செந்தமிழ்த் தொகுதி 3 பகுதி 10.

விருதை சிவஞான யோகிகள்.

*(8) "According to Sir Walter Raleigh India was the first planted and peopled country after the flood."

Dravidian India.

பற்றினோர் இறைவன் படைப்பென்று கூறி அஃதோடு நிறுத்திவிடுவர். விவிலிய நூல்காரரோ திடீரென்று ஒரு ஆண்மகனும் அவனிடமிருந்து ஒரு பெண் மகளும் உண்டாக்கப் பெற்று மக்கட் படைப்புத் தோன்றிற் றென எழுதித் தனது கடமையைத் தீர்த்துவிட்டார்.

முதலில் புல் பூண்டு செடி கொடி முதலியன உண்டாயின. பிறகு சிறிய மரங்களும் பெரிய மரங் களும் நாளடைவில் உண்டாயின. ஓரறிவுடைய இந்தத் தாவர வர்க்கத்திடமிருந்து ஈரறிவுடைய கரையான் சிதல் முதலிய புழுப் பூச்சிகளுண்டாயின. தொட்டா லறிதலோடு நாவால் சுவையையும் அறியக்கூடிய புழுப் பூச்சிகளிலிருந்து மேற்கூறிய ஈரறிவுகளோடு மூக்கால் வாசனையையும் அறியக்கூடிய எறும்பு முதலிய உயிர்கள் தோன்றின. (எறும்புக்குத் தொட்டால் அறியும் உணர்ச்சியும். நாவால் சுவையை அறியும் உணர்ச்சியும் மூக்கால் வாசனையை அறியக்கூடிய உணர்ச்சியும் இருக்கிறதே தவிரக் கண் கிடையாது.) இந்த எறும்பு வர்க்கம் போன்ற உயிர்களிடமிருந்து, கண்ணாற்பார்க்கும் உணர்ச்சியுமுடைய தும்பி வண்டு முதலிய நான்கறிவுப் பிராணிகள் வளர்ந்து முதிர்ந்த பின் காதால் ஒலியையும் கேட்கக்கூடிய வௌவால் குரங்கு முதலிய எல்லா மாக்களுந் தோன்றின. மனிதக் குரங்கினிடமிருந்துதான் மனிதனும் தோன்றி யிருக்க வேண்டும். ஆனால் ஆராய்ச்சியாளர் மனிதனுக்குங் குரங்குக்கும் இடைப்பட்ட இலெமூர் என்னும் பிராணி யிலிருந்து மக்கள் தோன்றியதாக முடிவு செய் துள்ளனர். மக்கள் குரங்கிலிருந்து தோன்றிய காலத்தில் குரங்குத் தன்மையில் ஒரு சிறிதை யுடையவர்களாயிருந்

திருப்பினும், மக்கட் பண்பு நாளடைவில் வளர்ந்து முதிர்ச்சி பெற்றிருக்கலாம். இருகாற் பிராணிகளாகிய நாமும் நாற்காற்பிராணிகளாகிய விலங்கினங்களும் ஐயறிவும் ஆறறிவுமுடைய ஒரு சிறு மாறுபாட்டைக் கொண்டிருப்பதைக் கருதியே நமது முன்னோர்கள் மக்கள் என்றும் மாக்கள் என்றும் பேர்களமைத்தனர் போலும்.

இத் தோற்றச் செய்தியில் உண்மை ஒரு சிறிதேனும் உண்டென்பதில் ஐயமில்லை. அநுமார், சுக்கிரீவன், வாலி முதலிய வானர வீரர்களைப் பற்றி அனைவரும் அறிந்திருக்கின்றனர். இவர்கள் நன்றாகப் பேசிப் பகுத்தறிவோடிருந்ததாகத் தெரிகிறது. அங்ஙனமாக இவர்கள் ஐயறிவுடையவர்களா? அல்லது ஆறறிவுடையவர்களா? ஆறறிவுடையவர்களெனின்; மக்கட் பகுப்பிலன்றோ சேர்க்க வேண்டும். ஐயறிவுடையவர்கள் எனின்; இவர்கள் நன்மை தீமையைப் பகுத்தறிந்ததும் இராமனிடத்தில் பக்தி செய்ததும் எவ்வாறு? பொருள்களிலிருந்து இயற்கையாகவே புழுப் பூச்சிகளுண்டாகின்றன வென்பது அனைவரும் அறிந்ததொன்று. நமது உடலிலிருந்து கண்ணுக்குத் தெரியாத புழுப் பூச்சி முதல், ஒரு சாண் நீளமுள்ள பாம்பு வரை வெளி வருவதைப் பார்க்கிறோம். நல்ல மாம்பழங்களை அரியும்போது அவைகளிலிருந்து பெரிய வண்டுகள் புறப்பட்டுப் பறந்து போவதைப் பார்க்கிறோம். இவைகளெல்லாம் எவ்வாறுண்டாகின்றன? 1*

*(1) "இக் கொள்கையின்படி உயிர்களைக் கால முறைப் படுத்திக் காணுங்கால், கிளிஞ்சல், நண்டு, பாம்பு, பறவை நாற்கால் விலங்கு, குரங்கு, மனிதன் என்பவை ஒரு கோவையிலமையும்.

இவற்றில் எவ்விரண்டையேனும் ஒத்துப் பார்க்கில் முன்னதை விடப் பின்னது உறுப்பு முதிர்ச்சியில் மேம்பட்டும், தோன்றியகால அளவில் பின்பட்டும் இருக்கும். இஃதிங்ஙனமாக நிலநூல் அளவைக்காரர்கள் ஆங்காங்கு நிலத்தை அகழ்ந்து பார்க்குங்கால் பல்வகை எற்புச் சட்டங்களைக் காண்கின்றனர். அவைகளின் அடுக்கும் மேற்காட்டிய கோவை முறைக்கு ஒத்தே அமைந்திருக்கின்றது. அதாவது கிளிஞ்சில் போன்ற தொன்மை மிக்க உருவங்கள் மிக ஆழத்திலுள்ள பாறை எடுகளிலும், பறவை, விலங்கு முதலியவற்றின் என்புகள் அப் பாறைகளுக்கு மேன்மேலுள்ள எடுகளிலும் காணப்படுகின்றன. இவ்வாறு கிடைக்கும் எற்புக் கூடுகளிற் தென்னிந்தியாவில் கிடைப்பனவே, பிறதேயங்களிற் கிடைப்பனவற்றைவிட வகையிலும் தொகையிலும் தொன்மையிலும் சிறந்துள்ளன. இங்குக் கிடைத்த மனித மண்டையோடே இதுகாறும் உலகில் அகப்பட்ட மண்டையோடுகள் எவற்றினும் பழையது. மேற்கூறிய வளர்ச்சி முறையில் குரங்குக்கும் மக்கட்கும் இடையில் மற்றோருருவமிருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கின்றனர். அவ்வுருவத்தில் எற்புக்கூடு இன்னுங் கிடைத்திலது. அதைக்கண்டு பிடிக்க விரும்பின் கடல் வாய்ப்பட்ட பண்டைக் குமரி நாடாகிய லெமூரியாவிற்றான் தேடிப்பார்க்க வேண்டும். இவ்வாறு நிலநூலும் தொல்லுயிர் நூலும் ஒன்றற்கொன்று துணை நின்று தமிழகத்தின் தனித் தொன்மையை நாட்டுகின்றன.''

தமிழகம். பா. வே. மா.

*(2) ''இனி நிலத் தோற்ற இயலார் (Cosmogeny) மனிதத் தோற்றத்தைப் பற்றிக் கூறுவதை எடுத்துக் கொள்வோம். உயிர் வகைகள் அனைத்திலும் அறிவாலும் உடலமைப்பின் உயர்வாலும் தலைமையானவன் மனிதனே, படைப்புக்காலந் தொட்டு எல்லா உயிர் வகைகளும் தனித்தனியாகப் படைக்கப்பட்டன என்பது பலரது எண்ணம். மேல் நாட்டுச் சமயவாதிகளுள் பலர் இன்னும் இதே கொள்கையுடையவரா யிருக்கின்றனர்.

இத்தகைய எடுத்துக் காட்டுகளால் நாம் முன்னர்க் கூறிய செய்தி வலியுறுகின்றதன்றோ? மேனாட்டறிஞர் கள் இம் முறையில்தான் முடிவு கட்டியுள்ளனர். இங்ஙனம் இழிந்த புழுப் பூச்சிகளையும் குரங்குகளையுமா மக்கட் பிரிவு முன்னோர்களாகப் பெற்றிருக்கின்ற தென்று நகைக்கலாம். உலகத்திற்றோன்றுகின்ற உயிர்த் தொகுதிகளெல்லாம் தத்தம் நல்வினை தீவினைகட் கேற்ப ஏதேனும் ஒருடலை ஒரு பிறப்பிலடைந்து இன்ப துன்பங்களைப் புசித்து வேற்றுடலிற் புகுவனவே. இங்ஙனம் உயிர் இன்ப துன்பம் நுகர்தற்குப் புகாத வுடலெதுவும் பூமியில் இல்லை. இதனைக் கருதியன்றே திருவாதவூர் அடிகளும்:

---

ஆனல் அறிவியலார், உயிர் வகைகள் அனைத்துமே படிப்படி யான வளர்ச்சியுடையவை என்றும், முதன் முதல் ஓரறிவுயிர் களாகிய செடிகொடி வகைகளும், பின் படிப்படியாக ஈரறிவுயிர் முதல் ஐயறிவுயிர்களும், கடைசியில் மிகவுயர்ந்த ஆறறிவுயிராகிய மனிதப் பிறவியும் ஏற்பட்டன என்றும் அவர்கள் காட்டுகின்றனர். இத்தகைய படிமுறை வளர்ச்சியில், (Evolution) முதுகெலும்பற்ற உயிர்களுக்குப் பின் முதுகெலும்புடையவையும், அவற்றுள்ளும் முட்டையிடுபவற்றிற்குப் பிந்தியே குட்டியிட்டுப் பால் கொடுப்ப வையும் தோன்றின என்றும், குட்டியிட்டுப் பால் கொடுப்பவற் றுள்ளும் உயர்ந்தவையான மனிதக் குரங்கு முதலிய இருகால் உயிர்கள் மிகப் பிற்காலத்திலும், அதனினும் ஒருபடி உயர்ந்த அறிவுடைய மனிதப் பிறவி கடைசியிலும் தோன்றின என்றும், அறிஞர்கள் உடலமைப்பாராய்ச்சியினுலும் நிலத்தோற்ற ஆராய்ச்சி யினுலும் நிலை நாட்டுகின்றனர்.

ஞால இயலின்படி பார்த்தாலும், இப் 'படி முறை வளர்ச்சி' பொருத்தமாகவே காண்கிறது. மிகப் பழமை யான அதாவது அடிப் பகுதியிலுள்ள நில அடுக்குகளில்,

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"

என்று திருவாசகத்தின் கண் திருவாய் மலர்ந்தருளினுர். உயர்ந்த உடலைப் பற்றி நிற்கும் உயிர் தீவினையால் தாழ்ந்த உடலிற்புகும். தாழ்ந்த உடலைப்பற்றி நிற்கும் உயிர் நல்வினையால் உயர்ந்த உடலிற்புகும். இது உலகத்தியற்கையாகும். ஆதலின் மக்கள் மாக்களிலிருந்து தோன்றுவதும் தீவினையிருப்பின் மறுபிறப்பில் மாக்களாகப் பிறப்பதும் புதுமையானதொன்றன்று.

மனு என்று ஒருவர் இருந்ததாகவும் அவரால் மக்கள் தோற்றம் பரவிற்றென்றும், இவர் தம் வழியில்

---

புலனறிவிற் சிறுமைப்பட்ட உயிர்களின் குறிகளே காணப்படுகின்றன. படிப்படியாகப் புழுப்பூச்சிகளும், பின் முதுகெலும்புடையவை, பறவைகள், குட்டியிடுபவை, இருகாலுயிர் என்பவைகளுங் காணப்படுகின்றன.

ஆனல் இவ்விரு காலுயிர்களுக்கும் மனிதனுக்கும் வேற்றுமை மிகுதியாயிருப்பதால் அவற்றிற்கு இடைப்பட்ட இனம் ஒன்று இருக்கவேண்டும் என்று அறிவியலறிஞர்கள் நினைத்தார்கள், அதன்படியே தேடியதில் கிட்டத்தட்ட மனிதரது அமைப்பும் மூளை உருவும் உடைய லெமூர் (Lemur) என்ற உயிர் வகை ஒன்று நடுக்கோட்டுப் பகுதியைச் சுற்றி இருப்பதைக் கூர்ந்து நோக்கி, அந்த லெமூர்களிலிருந்தே மனிதர் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தீர்மானித்தனர்."

குமரிக் கண்டம். K. அப்பாதுரைப்பிள்ளை, M. A.

வந்தமையால்தான் மக்கள் மனிதரென்று கூறப்பட்டன ரென்றும், இவர் மக்கட்கு மனு தரும சாஸ்த்ரத்தை எழுதிவைத்து அதன்படி மக்கள் நடக்கவென விதித்தா ரென்றும் சில கதைகள் வழங்கும். மனுதரும . சாஸ்த்ரத்தின் அதர்மப் போக்கை யறிந்தவர்கட்கு அவை யெல்லாம் பொருந்தாக் கூற்று என்பது எளிதில் விளங்குவதாகும்.

இப்போதும் நாம் சில இடங்களில் அநுமார் அவதாரம் போன்ற சிலரைப் பார்க்கிறோம். மக்கட் பரம்பரையை நினைப்பூட்டவே இவர்கள் பிறந்திருக் கிறார்கள் போலும் !*

*மக்கள் தோன்றிப் பல்லாண்டுகள் வரை தாங்களும் மாக்களைப் போலவே நடையுடை பாவனைகளை யுடையவர்க ளாக விருந்தனர். இக்காலத்திற் கூறப்படும் காட்டு மனிதர்களைப் போன்றவர்களே முற்காலத்து மக்கள். அவர்கட்கு உடைகளில்லை. வெகு காலத்திற்குப் பின் தழை யுடைகளைத் தரிக்கத் தொடங்கி னர். வீடு வாசல்களில்லை. மலைக்குகைகளிலும் மரங்களிலும் வசித் திருந்தனர். வெகு காலத்திற்குப் பிறகுதான் குடிசைகள் கட்டி அதிற் குடியிருக்கத் தொடங்கினர். பசி வேளைக்கு மாக்களைப் போலவே காய்கனி கிழங்கு முதலியவைகளைத் தின்று வாழ்ந் தனர். மாக்களைப் போலவே ஒலியுஞ் செய்தனர்.

"பல்லாயிர ஆண்டுகட்கு முன்னர் இந்தியா காடடர்ந்து விரிந்ததோர் நிலமாயிருந்தது. அக்காடுகளில் தீயவிலங்குகள் திரிந்து கொண்டிருந்தன ........................................ மரங்களினடியிற் புற்றுக்களில் பெரும் பாம்புகள் மண்டலமிட்டுக் கொண்டிருந்தன. அக்காலத்தில் நகராதல், ஊராதல், வழியாதல் வீடாதல் காண்டலரிது. இங்குமங்குங் காட்டு மனிதர் சிலர் கரடிக ளெனக் குகைகளில் வசித்தனர். வேறு சிலர் குரங்குகளென மரங்களிற் படுத்துத் தூங்கினர். அவர்கள் குறுகிக் கறுத்த விகார

காலஞ் செல்லச் செல்ல மக்களின் கூட்டம் அதிகரித்து வந்தது. இவர்கள் படிப்படியாக பழக்க வழக்க ஒழுக்கங்களைத் தக்க முறையில் அமைத்துக் கொண்டனர்.

---

வுருவினர். ஆடையற்றவர். அழுக்கேறிய உடலினர். அவர்கள் காய்கனி வேர் கிழங்குகளையும் மான் பன்றி முதலிய மிருகங்களின் இறைச்சிகளையுந் தின்று பிழைத்து வந்தனர்.''

த. மொ. வ. வி. கோ. சூ.

# அதிகாரம் 3.

## தமிழ்நாடுங் கடல்கோளும்

பண்டைக் காலத்துத் தமிழ் நாடு இப்போதுள்ள தமிழ் நாட்டினும் பன்மடங்கு பெரியதாக விருந்தது. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் அந் நாட்டினைக் கடல் விழுங்கி விட்டது. விழுங்கப்பட்ட அந் நாட்டின் பெயர் குமரிக்கண்டம் என்று கூறப்படுகிறது. தெய்வத்தின் கோபத்தால் அந் நாடு கடலில் அமிழ்ந்தி விட்டதென்பது சிலர் கொள்கை. [1]

வேறு சில ஆராய்ச்சிக்காரர்கள் இயற்கையாகவே கடல் சிறிது சிறிதாக விழுங்கி விட்ட தென்று எண்ணுகின்றனர். திரு. பா. வே. மாணிக்க நாயகரவர்கள் செந்தமிழ்ச் செல்வி முதற் சிலம்பு மூன்றும் பரலில் கீழ்வரும் விநோதச் செய்தியை வெளியிட்டனர். [1*]

---

(1) "இலங்கையிலே இருந்த தெய்வங்கள் வெகுண்டு ஒரு கடல் கோளை உண்டு பண்ணின. 400000 தெருக்களும் 25 அரண்மனைகளும் இராவணனுடைய கோட்டைகளும் இருந்த தூத்துக்குடி முதல் மன்னார் வரையுமுள்ள நிலத்தைக் கடல் அடித்துக்கொண்டு போய்விட்டது. இது துபாவர ஊழியில் நிகழ்ந்தது. அப்படியே களனி இராசாவாகிய திசராசன் காலத்தில் 100,000 பட்டணங்களையும் 970 மீன்பிடிகாரர் குப்பங்களையும் 400 முத்துக்குளிகாரர் குறிச்சிகளையும் கடல் விழுங்கிவிட்டது." என்பது இராசாவளி நூல் வரலாறு.

எது எங்ஙனமாயினும் இப்பொழுதுள்ள தென்னிந்தியாவுக்குத் தெற்கேயிருந்த ஒரு பெரும் நாடு கடல் வாய்ப்பட்ட தென்பது மாத்திரம் எவராலும் மறுக்க முடியாத வுண்மையாம். ஸ்காட் எலியட் (W. Scott Elliot) என்பவர் உலகத்தின்கண் இது வரை ஏற்பட்டுள்ள பிரளயம் ஐந்தென்றும் இவற்றுள் முதலாவது பிரளயம் பதினாறாயிரம் வருடங்கட்கு முன்பும், இரண்டாவது பிரளயம் எண்ணூறாயிரம் வருடங்கட்கு முன்பும், மூன்றாவது பிரளயம் இருநூறாயிரம் வருடங்கட்கு முன்பும், நான்காவது பிரளயம் எண்பதினாயிரம் வருடங்கட்கு முன்பும், ஐந்தாவது பிரளயம் ஒன்பதாயிரத்தைந் நூறு வருடங்கட்கு முன்பும் ஏற்பட்டிருத்தல் கூடுமென்றெண்ணுகிறார். குமரிக்கண்டம் கடல் வாய்ப்பட்டதனை இப் பிரளயங்கட்குட் சேர்க்க முடியாது. பிரளயம் எனின் உலகம் முழுவதுமே மூழ்குதலுக்குட் படுதல் வேண்டும்.

---

*(1) "ஆஸ்த்ரேலியா ஒரு விந்தைமிக்க நாடு; இங்குள்ள மரஞ்செடிகளிற் பல இயற்கையாய் வேறெந்த நாட்டிலும் வளர்வதில்லை. அவ்வாறே வீணைப்பறவை, சுவர்க்கப் பறவை, எமு முதலிய பறவைகளிற் பலவும், கங்காரு முதலிய விலங்குகளிற் சிலவும் உலகில் வேறெங்கும் இயற்கையிற் காணக் கிடைப்பன வல்ல. மக்களும் அவ்வாறே. இவற்றால் கொள்ளக் கிடைப்பது யாதெனில், ஆஸ்த்ரேலியா முதலில் உலகொடு சார்பு பெற்றிராத ஒரு நில உருண்டை என்பதே உண்மையில் இதுவோர் விண்வீழ் மீன். இது விசும்பினின்று யாதோ காரணத்தால் இம் மண்ணுலகின்மீது வீழ்ந்திருக்க வேண்டும். இருவகை இயக்கத்தோடு கூடிய உலகின்மேல் வீழ்ந்த போதுதான் லெமூரியா கடல் வாய்ப் பட்டது."

குமரிக்கண்டம் கடல் வாய்ப்படுவதற்கு முன் தென இந்தியா, மேற்றிசையிலுள்ள ஆப்பிரிக்காக் கண்டத்தோடும், கிழக்குத் திசையிலுள்ள சாவா முதலிய தீவுகளோடும் தெற்குத் திக்கிலுள்ள தென்னமெரிக்காவோடும் ஒன்றுயிருந்ததெனை ஆராய்ச்சியாளர் உரைக்கின்றனர்.

மூழ்கிவிட்ட இக் கண்டத்திலிருந்த இலெமூர் என்னும் ஒருவகைப் பிராணிகளை யடுத்தே மக்கள் தோற்றமும் ஏற்பட்டதென்பது ஆராய்ச்சியாளர் முடிபு. மூழ்கிவிட்ட இக் கண்டம் எழுநூறுகாவத நீளமுடையதென நூல்கள் கூறுகின்றனவாதலின் தெற்கே தென்னமெரிக்காவரை நீண்டிருத்தல் கூடும்.

இந் நாட்டிலே குமரியாறு, பஃறுளியாறு முதலிய ஆறுகளும், குமரிமலை, மகேந்திரமலை முதலிய மலைகளுமிருந்திருத்தல் வேண்டுமென அறிஞர்கள் எண்ணுகின்றனர்.

"மன்னுமாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமந் தோற்றுவித் தருளியும்"
"மந்திர மாமலை மகேந்திர வெற்பன்"

என்று திருவாதவூரடிகள் திருவாசகத்தின்கண் குறிப்பிடுவதும் ஈண்டு கவனிக்கத் தக்கது.*

---

* 'மகேந்திரம்' எனப் பெரிய இம்மலை வடக்கே கஞ்சம் மாகாணத்திற், "பெர்ஹாம் பூருக்குத் தென்மேற்கே முப்பத்திரண்டு கல் இடைவழி கழிந்த ஓரிடத்தில் இருக்கின்றது; இம் மலையிற் சிவபிரான் திருக்கோயில்கள் பல இப்போதிடிந்து பாழாய்க்கிடக்கின்றன. இம் மலைக்கண் இத்தனைப் பல திருக்கோயில்கள் அக் காலத்தில் அமைக்கப்பட்டமையினை நினைந்து பார்க்குங்கால், அம் மலை

மேற்கூறிய மறைமலையடிகள் கூற்றை நோக்கின் வியப்பு ஏற்படுகிறது. மேற்படி நாட்டிலிருந்து திருவாதவூரடிகள் இளம்பிராயத்தில் உறவினருடன் தென்னாட்டிற்குக் குடியேறியிருக்கக் கூடுமென்றும் எழுதியுள்ளார்கள். மறைமலையடிகள் கொள்கைக் கேற்ப இராமாயணக் கதை கற்பனையேயாயினும் கதை எழுதுகிறவர்கள் கதைக்குப் பொருத்தமாகவே இடங்களையும் குறிப்பிடுவார்கள். இராமாயணக் கதையில் அநுமான் மகேந்திர மலைமீதிருந்து இலங்கைக்குத் தாவினன் என்று கூறப்படுகிறது. இம் மலை மேற் கூறிய நாட்டதாயின் இராமாயணக் கதை இயையுமாறு எங்ஙனம்? சிறகில்லாத அநுமான் பறந்த கதையாக விருத்தலின் மகேந்திர மலையிலிருந்து பறந்தானென்பது பின்னும் வேடிக்கையை விளைப்பதாயுள்ளது. முதற் சங்கமிருந்த மதுரையும் இடைச்சங்க மிருந்த கபாடபுரமும் இந் நாட்டகத்த தென்கின்றனர். மேலும் இக் கண்டத்திலே; ஏழ்தெங்கநாடு, ஏழ் மதுரைநாடு, ஏழ் முன்பாலைநாடு, ஏழ் பின்பாலைநாடு, ஏழ் குன்றநாடு, ஏழ் குணகரை நாடு, ஏழ் குறும்பனை நாடு முதலிய நாடுகளு மிருந்தனவாம்.

"எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீந்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே."

---

யடுத்த ஊர்களிற் சைவ சமயந் தழுவின மக்கள் பல்லாயிரக் கணக்காய் அஞ்ஞான்று குடியிருந்து வாழ்ந்தமை நன்கு விளங்கா நிற்கும்." மாணிக்கவாசகர் காலம் பக்கம் 693: மறைமலையடிகள்.

இப் பாடலிற் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி கூறப்பட்டிருப்பதுடன் பஃறுளியாறுங் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப் பாட்டுக் குமரிக்கண்டத்தில் பாடப்பட்டிருத்தல் கூடுமென்கின்றனர்.

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

இவ் வடிகளால் உக்கிர குமார பாண்டியன் வேலைத் தன்மீது செலுத்தியதால் அவனது நாட்டை வருணன் கோபங்கொண்டு விழுங்கியிருத்தல் கூடுமென்பது பெறப்படுகின்றது. கடல் சிறிது சிறிதாகவே நாட்டை விழுங்கியபடியால், ஆண்டிருந்த அரசர்களும் மக்களும் வடதிசையை நோக்கி வந்து விட்டன ரென்பதும்; அந் நாட்டிலிருந்து வந்த அரசன் இந் நாட்டிற் சில இடங்களைக் கைப்பற்றிக் கொண்டானென்பதும்;

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்பட
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினால் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்"

என்னும் அடிகளாலும் பிறசங்கநூற் பாடல்களாலும் நன்கு விளங்கும்.

இந் நாட்டைப்பற்றியும் இதில் வாழ்ந்திருந்தவர்களைப் பற்றியும் 'செர்வே' என்னும் மேனாட்டார் ஒருவர் எழுதிய நூலின் தொடக்கத்தை ஈண்டு காண்க. 1*

---

(1)* "முதலில் மனிதன் தோன்றியது எங்கே? மெஸொபெட்டேமியா, எகிப்து, இந்தியா, அபிசீனியா, சைனா,

ஓகியோ நதிப்பிரதேசம் இவற்றுள் யாண்டுத் தோன்றினன்? முதல் மனிதனுடைய நாகரிகம் வளர்ந்தது எங்கே? ஓரிடத்திலே தோன்றிப் பிறகு அங்கிருந்து உலகம் முழுவதும் பரவிற்ரு? அல்லது ஒரே காலத்திலேனும் பல்வேறு காலங்களிலேனும் இவ்வுலகப் பரப்பில் பல இடங்களில் வெவ்வேறு மனித இனங்களும் நாகரிகங் களும் தோன்றினவா? இவற்றுள் எந்த நாகரிகம் காலத்தினல் முற்பட்டது? எது சிறந்தது?

இவ்வாறு ஒவ்வொரு நாட்டிலும் கேள்விகள் கேட்கப்படு கின்றன. ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையாய் விடையளிக் கிருர்கள். இவர்கள் அனைவரும் கூறுவது தவறு. உண்மை என்ன வென்ருல், இந் நாகரிகங்கள் யாவும் மிகவுந் தொன்மையான நாக ரிகங்களே ஆயினும் இவை யாவற்றினும் தொன்மை மிக்கதான நாகரிகம் ஒன்று இருந்தது. அதுவேதான் இவை யாவற்றுக்கும் தாய் நாகரிகம் என்று சொல்லத் தகுந்தது. நாகரிகத்தின் ஆதி வளர்ப்புப் பண்ணை லெமூரியா என்னும் ஆதிநாடு. இப்பொழுது அது கடல் வாய்ப்பட்டுக் கடலின் அடியில் ஆழ்ந்து கிடக்கிறது.

சுமார் இரண்டு லக்ஷம் வருஷங்களுக்கு முற்பட்ட ஒரு பழங் காலத்தில் பூமியின் அமைப்பு இப்போது உள்ளதைப்போல் இல்லை. அமெரிக்கா ஐரோப்பாவோடும் ஆப்பிரிக்காவோடும் ஒட்டிய பெரிய நிலப்பரப்பா யிருந்தது. அக் கண்டங்களுக்கிடையே அட்லாண்டிக் மகா சமுத்திரமாக இப்போது இருக்கும் இடை வெளி இல்லை. இதற்கு நேர்மாருக ஆப்பிரிக்காவிலிருந்து தொடங்கிய மிகப் பெரிய நிலப்பரப்பு ஒன்று இந்துமகா சமுத்திரத்தின் பெரும் பகுதியை நிரப்பிப் பசிபிக் மகா சமுத்திரத்தையுங் கடந்து, அமெரிக்காவின் அண்டையிலிருந்து சிறிது தூரம் வரையிலும் வியாபித்துக் கிடந்தது. இந்தியா, மலாய் நாடுகள், ஆஸ்த்ரேலியா, நியூசீலந்து பிலிப்பைன் தீவுகள், கிழக்கிந்தியத் தீவுகள் முதலிய யாவும் இந் நிலப்பரப்பினுள் அடங்கியிருந்தன. மிகவும் விரிந்து பரந்து கிடந்த இந்தப் பிரதேசந்தான் லெமூரியா.

# அதிகாரம் 4.

## தமிழரும் ஆரியரும்

தென்னிந்தியாவில் தோன்றிய மக்கட் கூட்டம் நாளடைவிற் பெருகியதோடு நாகரிகத்தையுமடைந்து மக்கள் தன்மையை நன்ருக வெய்தியது. நாகரிகத்தையு மடைதலுக்கு ஆயிரக்கணக்கான யாண்டுகளாவது பிடித்திருத்தல் வேண்டும். பெருகிய மக்கட் கூட்டம் வட திசையில் நிலங் காணக்காண அத் திசையை நோக் கிச் செல்லலாயிற்று. ஓரிடத்தில் கூட்டம் பெருகிஞல் அவ்விடத்தில் வாழ்க்கைக் கின்றியமையாத பொருள் களுக்குக் குறை வேற்பட்டு, அப் பொருள்கள் கிடைக்கக் கூடிய இடத்தை நோக்கிச் சேரலியல்புதானே?

---

இந்தப் பிரதேசத்தில்தான் முதன் முதலில் சீவராசிகள் தோன்றின. உயிரினங்கள் எப்பொழுது தோன்றினவோ அதே காலத்திலேதான் மனிதனும் படைக்கப்பட்டான். அற்பமான உயிரினங்கள் தோன்றி வளர்ந்து பரிணமித்து வந்தன: வெகு காலத்துக்குப் பின்னரே மனிதன் பரிணமக்கிரமத்தில் தோன்றி ஞன் என்னுங் கொள்கை சரியன்று. லெமூரியாவில் உயிரினங்கள் யாவும் ஏக காலத்திலேதான் உண்டாயின.

பொ. நா. அப்புஸ்வாமி ஐயர், B.A., B.L.

செந்தமிழ்த் தொகுதி 38 பகுதி 1.

வடக்கு நோக்கிச் சென்ற மக்கட் கூட்டம் தந்த தமக்கு விருப்பமான இடங்களில் தங்கிற்று. தங்காது மேலும்மேலுஞ் சென்று கொண்டேயிருந்த கூட்டம் மத்திய ஆசியாவை யடைந்தது. அங்கிருந்து ஐரோப்பா முதலிய பிற கண்டங்களையும் நாடிற்று. மத்திய ஆசியாவிற் பல தலைமுறை தங்கிய கூட்டம் நாளடைவிற் பெருகிற்று. மேலும் அவ்விடத்திற் குளிர் அதிகப்பட்டுக் கொண்டே யிருந்தமையின் அவ்விடம் சரியாக வொத்துக் கொள்ளவும் இல்லை. இதனால் இந்தக் கூட்டம் இந்தியாவிற்கு மீளத் தொடங்கிற்று. குளிர் மிகுந்த அந் நாட்டில் வசித்திருந்த இந்தக் கூட்டம் குளிரால் வெளுத்துப் போயிருந்தது. பல தலைமுறைகளாகி விட்டமையின் பேச்சும் வேறுவிதமாக மாறியிருந்தது. நடையுடை பாவனைகளுந் திரிந்திருந்தன. இவர்களது நிறஞ் செயல் மொழி முதலியவை மாறுபட்டிருப்பதைக் கண்ட இவ்விடத்து மக்கள் அவர்களை வெறுத்தொதுக்கலாயினர். இரு பிரிவினருக்கும் மனக் கசப்பேற்பட்டு அது வளரத் தொடங்கிற்று. தங்களைப் போன்ற நடையுடை பாவனைகளற்றாரைக் கண்டால் வெறுத்தொதுக்குதல் நாளைக்கும் வழக்கமன்றோ? மனக்கசப்புடன் வெறுக்கத் தொடங்கிய தோடமையாது அவர்களை மிக இழிந்தவராகவும் கொண்டு ஆரியரென்று பேருமிட்டனர். இந்த வார்த்தைக்கு உயர்ந்தோரென்றும், குரு மூர்த்திகளென்றும் பல பொருள்களைப் பிற்காலத்தில் ஆரியர் கற்பித்துக் கொண்டனர். 1*

---

(1) * "இந்துமகா சமுத்திரத்தில் மூழ்கிய இடத்திற் றோன்றியிருந்து பல்கிப் பெருகிய மனிதரிலொரு தொகுதி மெசபடோமியாவிற் சென்றிருந்து பெருகிப் பல பகுதிகள்

மக்கட் கூட்டம் இங்கு தோன்றித்தான் உலகம் முழுவதும் பரவிற்றென்பதையும்; இன்னும் அவர்களுடைய மொழியில் தமிழ் மணங்காணப் பெறுகிறதென்பதையும்; ஆராய்ச்சியாளர்களிற் பெரும்பான்மையோர் ஒரே மனதினராக வொப்புக் கொள்ளுகின்றனர். இங்கிருந்து சென்ற மக்கட் கூட்டந்தான் மீண்டு இந்த நாட்டிற்குத் திரும்பிற்றென்பதை அறியாத ஒரு சில ஆராய்ச்சியாளர், தமிழ் மக்கள் வெளிநாட்டிலிருந்தே இந் நாட்டுக்குள் நுழைந்தன ரென்றும், நுழைந்த தமிழர் இவ்விட மிருந்த பழங் குடிகளை விரட்டி யடித்து

---

வெவ்வேறிடங்களிற் செல்ல மற்றொரு பகுதி இலத்தீன், கிரீக்கு, எபிரேயம் பகுதிகளாய்ப் பிரிந்து போக எஞ்சிய வட மொழியாரியர் மத்திய ஆசியா மேற்குப் பகுதியிலுள்ள துருக்கித் தானத்திற் றங்கிப் பின்னர்க் கைபர் கணவாய் வழியாய் இந்தியாவுட் புகுந்தனர்.

அவர் இந்தியாவுக்கு வந்து 5000 ஆண்டுகளாகின்றன வென்று ஆங்கில ஆசிரியர் பலர் கூறுகின்றனர். வேறு சிலர் நூற்றாண்டுகளுயர்த்திக் கூறுகின்றனர். மற்றொருவர் 6000 ஆண்டுகளென்று கணக்கிடுகின்றனர்'' செந்தமிழ் தொகுதி 3 பகுதி 10

விருதை சிவஞான யோகிகள்.

*(2) ''கடல் கோளால் வடக்கு நோக்கித் தள்ளப்பெற்ற தமிழ் மக்கள் மெசெபொடேமியா, வட இந்தியா, நடு ஆசியா முதலிய இடங்களுக்குச் சென்றிருக்க வேண்டும்.................. துருவம் குளிரக் குளிர, வட பகுதி வரை சென்று வாழ்ந்த மக்கள் மீண்டும் தெற்கு நோக்கித் திரும்புவது இயல்பேயன்றோ? அப்போதுதான் ஆரிய இனம் தெற்கு நோக்கி வர நேர்ந்தது.'' குமரிக்கண்டம்

K. அப்பாதுரைப் பிள்ளை M.A.

விட்டனரெனவுந் தம்மனம் போனவாறு ஆராய்ச்சி செய்து, பயனற்ற போலி முடிவுகளை நிலை நாட்ட முயன்றனர். அவர்கள்தம் முடிபு அறிஞர் தம் முடிபுக்கு முன்னில்லாது மறைந்தொழிந்தது. தமிழ் வரலாறெழுதிய தஞ்சை K. S. ஸ்ரீநிவாச பிள்ளை தமது நூலில் அவர் தங் கூற்றைப் பின் வருமாறு மறுத்தொதுக்கினர். 1*

---

*(1) "தமிழர் இந்நாட்டில் குடியேறினவர் என்பவர் கதைகளுக்கு அவர்கள் காட்டும் ஆதாரங்கள், அவர்களது மனோ வியாபாரத்தாற் கற்பிக்கப்பட்டவை யென்பது நுண்ணிய ஆராய்ச்சியுடையார்க்குத் தெள்ளிதின் விளங்கும். சில ஐரோப்பியர்கள் தங்கள் நாட்டு அனுபவத்தைக் கொண்டு ஒவ்வொரு நாட்டிலும் இக் காலத்திலிருக்கும் மக்கள் வேறு நாட்டிலிருந்து குடியேறினவர்கள் என்பதுண்டு. அவர் கொள்கையைப் பின்பற்றுவோர் கூற்றேயாம் இஃதென்பதற்கு ஐயமென்னை? அவர் கூற்றுண்மையாயின், தமிழர் இந் நாடு வருவதற்கு முன், இந் நாட்டிலிருந்த மக்கள் எந் நாட்டிலிருந்தும் இந் நாடு போந்தனர்? அவர் வருவதற்கு முன்னர் இந் நாட்டிலிருந்தோர் எந் நாட்டில் இருந்து இந்நாடு வந்தனர்? என்பனபோன்ற சங்கைகள் உண்டாகி அநவஸ்தா தோஷம் வரும். மேலும் தமிழர் வருவதற்கு முன் இந் நாட்டிலிருந்தோர்க்கு, மதம், பாஷை, ஒழுகலாறு முதலியன தனியே இருந்திருக்கவேண்டும். அவற்றின் அடையாளம் எங்கேயாவது காணப்படுகின்றனவா? இக்காலத்து வழங்கும் மொழி முதலியன அவர்களுடையன வென்றால், தமிழர் மதம் பாஷை முதலியன எவ்வாறாயின? தமிழ் நாடெங்கணும் பல்லூழிகாலங்களாய்த் தமிழ்மொழி ஒன்றுதானே வழங்கி வந்திருப்பதாக அறியப்படுகின்றது. மலை, நாடு, யாறு, ஊர் முதலியவற்றிற்குத் தமிழ்ப்பெயர் மட்டுமே காணப்படுகின்றன. பின் வந்த ஆரியர்களாலேற்படுத்தப் பெற்ற மாறுதல்களைத் தவிரப் பெயர்,

தமிழர் என்பார் தொன்று தொட்டே இந்த நாட்டில் தோன்றி, நாகரிகம் முதலிய யாவற்றிலும் முன்னணியில் நின்று வருவதுடன், உலகம் முழுமைக்கும் மக்கட் படைப்பையு மனுப்பிய மாட்சியுடையவரேயன்றி, வேற்று நாட்டிலிருந்து இந் நாடு புக்கவரல்லரென்பது வெள்ளிடை விளங்கலேயா மென்பதற்கு எட்டுணையுமையமின்று. 1*

---

கொள்கை, பழக்கம், ஒழுக்கம் முதலியன ஒன்ருகவே உள்ளன. மக்களுள் உயர்வு தாழ்வு ஏற்பட்டுப் பல பிரிவுகள் காணப்படுகின்றனவே எனின்; எந் நாட்டில் அவை இல்லை? என்ற வினு, விடையாக வெழுகின்றது. ஒரு நாட்டில் ஒரு சாதியாரே யிருப்பினும் பிரிவுகள் ஏற்பட்டு வேற்றுமை காணப்படுவது இயல்பே. இங்கிலாந்து பிரான்ஸ் முதலிய நாடுகளில் இத்தகைய வேற்றுமையில்லையா?"

*(1) "தமிழர் தொன்மை வாய்ந்தவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அது பற்றி எழுந்துள்ள ஆராய்ச்சிகள் பலப்பல. தமிழர்கள் தொன்மை சரித்திர காலத்தையுங் கடந்து, அதற்கு மேலுந் துருவிச் சென்று நீண்டு போவது. அதை ஒரு கால எல்லைக்குள் கட்டுப்படுத்தல் இயலாது."

தமிழர் யார்? திரு. வி. க.

# அதிகாரம் 5.

## தமிழ்மொழி

தமிழ் என்னுஞ் சொல்லுக்கு இனிமை யென்று நூல்கள் பொருள் கூறுகின்றன. "இனிமையு நீர்மை யுந் தமிழெனலாகும்" என்பது நிகண்டு. தமிழென் னுஞ் சொல் தூய தமிழ்ச் சொல்லே என்று ஆராய்ச்சி யாளர்களனைவரு மொரே மனதாக வொப்புக் கொள்ளு கின்றனர். வடமொழிப் போக்கைப் பற்றிக் கொண்டு திண்டாடும் ஒரு சிலர்தான், இச் சொல் திராவிடம் என்னுஞ் சொல்லின் திரிபென்று நாட்டவந்து, திரா விடம், திரவிடம், திரமிடம், திரமிளம், தமிளம் தமிழ் என மருவிற்றென்று பேசுவது அறிஞரால் ஒப்ப முடியாது.

தமிழ் என்னுஞ் சொல் தூய தமிழ்ச் சொல்லே என்பதற்கும், இனிமையென்று பொருள் தருமென்ப தற்கும் பழந்தமிழ் நூல்களிலே போதிய சான்றுகள் காணப் பெறுகின்றன. இங்ஙனமாகத் தமிழென்னுஞ் சொல் பிறமொழித் திரிபென்பார் தம் பேதமையை என் னென்பது? வேறு சிலர், தமிழ் என்னுஞ் சொல் தமி என்னும் பகுதியடியாகப் பிறந்து தனக்கிணையில்லாத வொரு மொழியெனப் பொருள்தரு மென்றனர். இவர் தங் கூற்றும் போலியே யாகும். பல்லாயிரம் யாண்டுக ளாக நில உலகில் வழங்கிவருவதும், பாரெலா முலா வும் பலவித மொழிகட்குந் தாயாக விளங்குவதுமாகிய

நமது மொழியின் பெயர் வேறொரு மொழியின் வழியாய்த் தோன்றிற்றென்பது எள்ளி நகையாடற் பாலதாம். ஒரு மொழி பெயரில்லாமலிருந்து பிறமொழி மூலம் பெயர்பெற்றதென்பது அறிஞர்களாலெள்ளற் பாலதாமேயன்றிக் கொள்ளற் பாலதாமன்று. தமிழ் என்னுஞ் சொல் இனிமையென்று பொருள் தருதலைப் பின்வருஞ் செய்யுட்களெல்லாம் நன்கு விளக்குகின்றன.

"பொன்பால் பொருவும் விரையல்லி புல்லிப் பொலிந்த
பொலந்தாது,
தன்பால் தழுவுங் குழல் வண்டு **தமிழ்ப்பாட்டிசைக்குந் தாமரையே**
என்பாலில்லையப்பாலோ விருப்பாரல்லர் விருப்புடைய
உன்பாலில்லை யென்றக் காலொளிப்பாரோடு
முறவுண்டோ"

கம்—கிட்—29.

"தமிழ் தழிய சாயலவர் தங்கு மலர்த்தூ நீர்
உமிழ்கரக மேந்த வுரவோனமர்ந்து பூசி
அமிழ்தனைய பஞ்சமுக வாசமமைத்தாய்ந்த
கமழ்திரையுங் காட்டவவை கொண்டு கவுளடுத்தான்"

"கலைபுறஞ் சூழ்ந்த வல்குற் கார்மயிற் சாயலாளும்
மலைபுறங்கண்ட மார்பின் வாங்கு விற்றடக்கையானும்
இலைபுறங்கண்ட கண்ணியின்றமிழியற்கை யின்பம்
நிலைபெற நெறியிற்றுய்த்தார் நிகர்தமக்கிலர்த நீரார்"

சீவக சிந்தாமணி.

"மீனுங் கொடியும் விரிதிணையைந்துந்
தேனுறை தமிழுந் திருவுறை கூடலும்
மணத்தலின் மதிக்குல மன்னவ னாகியும்."

"குழுவு நுண்டொளை வேயினுங்குறி நரம்பெறிவுற்
றெழுவு தண்டமிழ் யாழினும் இனியசொற்கிளியே"

"தமிழ்மென் சாய லவளோடும்"

"தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக்கனியே யென் முத்தமிழே—புத்திக்குள்
உண்ணப்படுந் தேனே யுன்னோடு வந்துரைக்கும்
விண்ணப்ப முண்டு விளம்பக்கேள்."

இப்பாடல்களெல்லாம் தமிழ் என்னும் சொல் இனிமை யென்று பொருள் தருவதைக் காட்டுகின்றன. தமிழ் தழிய சாயலவர் என்னுஞ் சொற்றொடருக்கு "இனிமை தழுவிய சாயலையுடையவர்" என்று நச்சினார்க்கினியர் பொருளெழுதி யிருக்கின்றார். தமிழ் தழிய சாயலவர் என்பதற்குத் தமிழ் மொழி தழுவிய சாயலை யுடையவரென்று பொருள் கொள்ளுதல் பொருந்துமா? மேற்கண்ட செய்யுட்களெல்லாம் பழந்தமிழ் நூல்களி லுள்ளவை. தொல்காப்பியத்திலும் தமிழென்னுஞ் சொல் வந்திருக்கின்றது. இதனால் தமிழ் என்னுஞ் சொல் தூயதமிழ்ச் சொல்லே என்று வலியுறுவதுடன், இனிமை யென்று பொருள் தருதலையும் நன்கு தெளியலாம். எல்லாப் பொருள்களுக்குமே காரணப் பெயரமைத்த நமது முன்னோர் மொழிக்கு மாத்திரம் காரணப்பெய ரமைக்காது விடுவரோ? மொழி தோன்றிய காலத்திற் பெயரேற்படாதிருந்திருக்கலாம். நாளடைவில் இம் மொழியின் விழுமிய இனிமையை யுணர்ந்தார் இம் மொழியின் பெயரைக் குறிப்பிட வேண்டிய காலத்தில் தமிழென்று குறிப்பிட்டிருத்தல் கூடும். இங்ஙனந்தான் நமது மொழி பெயரை யடைந்திருக்குமே தவிரப் பிறிது வழியாலன்று.

'தமிழ் வரலாறு' என்னும் ஆராய்ச்சி நூலெழுதிய பாஷா கவி சேகரர் ஸ்ரீமத் இராகவையங்கார்ச்

சுவாமிகளவர்களும், தமிழாராய்ச்சி நூலாகிய தமது நூலில், “ இனிமை என்னும் பொருள் படும் தமிழ் என்னுஞ் சொல்லே நம் நாட்டு மொழிகளுள், தொன்மையும் முதன்மையும் பெற்ற இத் தென்னாட்டுத் தாய் மொழிக்குப் பெயராய்ப் பண்டைக் காலந் தொடங்கி வந்த தென்பதற்கு, அகச் சான்றுகளும் புறச்சான்றுகளும் பலவுள்ளன ” என்றெழுதியுள்ளார்கள். மேலும் இவர்கள் மேற்படி நூலில் தமிழ் என்னும் ஆராய்ச்சிப் பகுதியில், தமிழ் என்னுஞ் சொல் இனிமைப் பொருளைத் தரும் நமது மொழிச் சொல்தான் என்பதையும் பலப்பட நிலைநாட்டியுள்ளார்கள்.

தமிழ் என்னுஞ் சொல்லில், த—வல்லினம், மி—மெல்லினம், ழ்—இடையினம். மூவினத்திலும் இனத்திற் கோரெழுத்துக் கொண்டாக்கப் பெற்ற இச் சொல், முன் நாம் கூறியபடி முதலில் இனிமைப் பொருளுணர்த்திக் கொண்டிருந்ததா ? அல்லது மொழிப் பெயருணர்த்தத் தோன்றி இனிமைப் பொருளையும் பிறகு உணர்த்தலாயிற்று ? என்பதையும் உறுதிபெறவுரைக்க முடியாது.

தமிழ் என்னுஞ் சொல்லில் ழகரத்தை உச்சரிக்க அறியாத ஆரியரும் பிறருந் தமிழுக்குத் திராவிடப் பெயரையுஞ் சேர்த்தனரென்று சிலர் எண்ணுகின்றனர். இவர் தங்கூற்றினை நாம் ஒருவாறு ஒப்புக் கொள்ளுதலுங் கூடும். எற்றுலெனின் ; ழகரத்தை உச்சரிக்கப் பலர் தடுமாற்றம் அடைதலையும், பலர் ழகரத்திற்குப் பதிலாக ‘ ள ’ கரப் பிரயோகஞ் செய்தலையும் இக் காலத்திலும் காண்கிறோம் அல்லமோ ?

# அதிகாரம் 6.

## தமிழ் மொழியின் பிறப்பு

மக்கள் பூமியிற்றோன்றிப் பல நூற்றாண்டுகள் வரை பேசும் வன்மையைப் பெற்றிருக்கவில்லை. முதலில் மாக்களைப் பார்த்தே ஒலி செய்தல் முதலியவைகளை யுடையவர்களாக விருந்தனர். பின்னர்ச் சைகைகளின் மூலமாகவே ஒருவருக்கொருவர் தங்கள் உள்ளக்கிடக் கைகளை உணர்த்திக் கொண்டனர். பின் நாளாக நாளாக ஒலி செய்தலும் சைகை காட்டலும் வளர்ந்துகொண்டே வந்தன. அறிவு மிகுந்தோறும் மிகுந்தோறும் புதிய புதிய எண்ணங்கள் உள்ளத்தில் தோன்றுதல் இயல்பே யன்றோ? வாயைத் திறந்த மாத்திரத்திலேயே பிறக் கின்ற ஒலிகள் மூலமாகவே அவர்கள் தங்கள் பேச்சு வார்த்தைகளை முதலில் நடத்தி யிருக்கலாம்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என் னும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களுமே மக்கள் பேசுவதற்கு மூலமானவை. மொழிப்பிறப்புத் தொடங் கிய காலத்தில் இந்தப் பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் இருந்திருக்குமென்று நாம் நினைக்க முடியாது. நாளடை வில் தான் பன்னிரண்டாக வளர்ந்து பல்கி யிருக்க வேண்டும். ஆரிய மொழிக்கு மெய்யெழுத்துக்கள் கூட உயிரெழுத்துக்களாக வளர்ந்திருப்பதை எல்லோரும் அறிகிறோமன்றோ?

முதலில் சில உயிரெழுத்துக்களைக் கொண்டு தொடங்கிய மொழி, ஊமைகள் இக்காலத்திற் பேசுகிற தைப் போலத்தான் பேசுவதற்கு முடிந்திருக்கும்.

அறிவு வளர வளர ஒலியும் வளர்ச்சி யடைந்து கொண்டே வந்து மெய் எழுத்துக்களும் உண்டாக்கப் பட்டு ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு குறியீட்டைப் பெற்றிருக்கின்றன. முதன் மக்கள் பொருள்களுக்கு வைத்திருந்த சைகையை ஏதுவாகக் கொண்டு பெயர்க ளிடப் பட்டமையால்தான், உலகத்திலுள்ள பொருள் கள் முழுவதும் காரணப் பெயரைப் பெற்றிருக்கின்றன. சைகைக்குங் காரணத்திற்கும் மிக நெருங்கிய தொடர் புண்டு.

மிளகாய் முதலிய பொருள்களை வைத்துக் குழவி கொண்டு அம்முதலால் அம்மி என்றனர். குடையப் பெற்றிருந்ததைக் குடைகல் என்றனர். அல்லது அதன் மேற்குழவி ஆடிய காரணத்தைக் கொண்டு ஆடுகல் என்றனர். ஆடுகல்லின் குழவி யாகட்டும் அல்லது அம்மியின் குழவி யாகட்டும் மக்கட் குழவியைப் போல் சிறிதாக அமைந்தமையின் குழவி என்றனர். அல்லது மக்கள் பெறுங் குழந்தை, மேற்படி அம்மி ஆடுகல் முத லிய வற்றின் குழவியைப்போலிருந்தமையின் குழவி யென்றனர். மிகச் சிறிதாக விருந்த பொருளைக் குழவி யென்று சில காரணங்களைக் கொண்டே அக் காலத்தில் வழங்கத் தொடங்கி யிருக்கின்றனர். பின்னர் இதன் பொருட்டு "மழவுங் குழவும் இளமைப் பொருள்" என்று தொல்காப்பியராற் சூத்திரமுஞ் செய்து வரை யறை செய்யப்பட்டது. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் அவைகளின் பெயர்களும் இப்படியே. மொழியின் பிறப்புக் காலத்தை யொட்டிய அண்மை யில், இருநூறு முந்நூறு மொழிகளே இருந்திருத்தல் வேண்டும். நாளடைவில் இம்மொழிகளும் வளர்ந்து

பல்கின. இப்பொழுதுள்ள பல்லாயிரக் கணக்கான மொழிகளும் சில நூற்றுக் கணக்கான மொழிகளின் அடியாகவே தோன்றுகின்றனவென்று ஆராய்ச்சி யாளர்களும் கூறுகின்றனர்.

காரண மில்லாமல் எப் பொருள்களுக்கும் பண்டைக் காலத்தினர் பெயர் வைத்ததாகத் தெரியவில்லை. ஆனால் அக் காலத்தில் அவர்கள் எக்காரணத்தைக் கொண்டு பெயர் வைத்தார்க ளென்பதை இக் காலத்தில் அறிய முடியாத காரணத்தால், தற்காலத்தார் இடுகுறிப் பெயரென்று சில இருக்கலாமென்று கற்பனை செய்து கொண்டு, காரணங் கண்டுபிடிக்க முடியாத பெயர்களை யெல்லாம் இடுகுறியின்பாற்படுத்தியதன்றி, வேறு சில பெயர்களையும் கற்பித்து வைக்கலாயினர்.

மொழி தோன்றிய காலத்தில் எழுத்துத் தோன்ற வில்லை. ஒருவருக்கொருவர் தெரியப்படுத்திக்கொள்ள வேண்டிய செய்திகளையும், நினைவில் வைக்கவேண்டிய வைகளையும் ஓவிய வடிவமாக எழுதத் தொடங்கினர். ஓவிய வடிவமுஞ் சைகையோடு சம்பந்த முடையதென் பதை நாம் உரைக்க வேண்டியதில்லை. முதன் முதலில் மரத்தின் பட்டைகளிலும் மடலாக வுள்ளவைகளிலும் ஓவிய வடிவச் செய்திகளை எழுதினர். இந்த ஓவிய வடிவ எழுத்து நீண்ட காலமான பிறகு தான் மாறு பாட்டை யடையத் தொடங்கிற்று. வாணிகம் முதலி யவை விருத்தியடைந்த காலத்தில் தான் எழுத்துக்கள் தோன்றலாயின. இது ஆராய்ச்சியாள ரனைவரும் ஒப்ப முடிந்த தொன்று.1*

---

*(1) "ஒருவன் வாயாற் பேசாமல் தன் மனத்திலுள்ள தைப் பிறன் ஒருவனுக்கு அறிவிப்பதற்காகவோ வேறொரு

முதலில் மக்கள் எழுதத் தொடங்கிய எழுத்தின் வரிவடிவம் வெறுங் கோடுகளாவே காணப் பெறும். அவைகளை நாம் இப்போது பார்ப்போமாயின் இவைகள் எம்மொழி எழுத்துக்களெனக் கேட்போம். அதில் ஒரு எழுத்தைத் தானும் நம்மால் உணர முடியாது கணக்கிலடங்காத மாறுபாடடைந்து விளங்கும் இக் காலத்து வரிவடிவத்திற்கும், பண்டைக் காலத்திய வரிவடிவத்திற்கும் மிகுந்த வேறுபாடுண்டு. இக் காலத்திற் கோயில்களிற் காணப்பெறுகின்ற கல்வெட்டெழுத்துக்களை நம்மாற் படிக்க முடிகின்றதா? அவ் வெழுத்துக்களைப் படிப்பதிற் றேர்ச்சி பெற்றோரன்றோ கண்டு பிடித்துப் படித்துச் சொல்லுகின்றனர். எழுத்து ஒவ்வொரு காலத்திலும் அதிக மாறுபாடுகளையுந் திருத்

---

சமயத்தில் தானே ஞாபகப்படுத்திக் கொள்வதற்காகவோ உபயோகப்படுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டது எழுத்து வித்தை. மொழி எப்படி வளர்ந்ததோ அதைப்போலவே எழுத்து வித்தையும் வளர்ந்தது. அதன் வளர்ச்சியும் ஒரு சரித்திரமாகும். அது விரிப்பிற் பெருகுமாயினும் சுருக்கமாகக் கூறுவோம்.

முதலில் மக்கள் தாங்கள் பிறருக்கு அறிவிக்க வேண்டியவற்றைச் சித்திர ரூபமாகவே எழுதி வந்தார்கள். நாகரிகத்தாலும் அதனால் ஏற்படும் எண்ணங்களாலும் சக்திகளாலும் முன்னேற்றமடையாத அவர்கள் அங்ஙனம் அறிவிக்கும்படி நேரிட்டவை மிகவுஞ் சாதாரணமான செய்திகளாகவே யிருக்கும். அதனால் அவர்கள் எதைக் குறிக்க விரும்பினார்களோ அதை அப்படியே உருவகப்படுத்திச் சித்திர ரூபமாக எழுதிக் காட்டினார்கள். அந்தச் சித்திரங்களைப் பார்த்தால் உருவகப்படுத்தப்பட்ட பொருளே மனத்தில் தோன்றும்."

பண்டைத் தமிழ் எழுத்துக்கள். தி. நா. சுப்பிரமணியன்.

தங்களையும் அடைந்து கொண்டே செல்லுகின்றது. இக் காலத்திற் கூடப் பலபேர் எழுத்துக்களைப் புதிய முறையி லமைத்தற்குப் பெரிதும் முயன்று விடாப்பிடியாக வேலை செய்து வருவதை நாம் கண் கூடாகக் காண்கிறோம் அல்லேமோ?

எழுத்துக்கட்குப் புள்ளிவைக்கும் பழக்கம் சமீப காலத்திலே தான் தோன்றிற்று. "மெய்யெழுத் தெல்லாம் புள்ளியொடு நிலையல்" என்று தொல்காப் பியர் வெகு காலத்திற்கு முன்னரே இலக்கணஞ் செய்து கூட இக்காலத்திலும் சிலர் புள்ளி வைக்காமலே எழுது கின்றனர். அக் காலத்தினர் உயிர் எழுத்தான எகர ஒகரத்திற்கும், உயிர் மெய் எழுத்தான எகர ஒகரத்திற் கும் புள்ளி வைத்தே எழுதினர். இப் புள்ளிகளை நீக்கிக் கொம்பை மேலேயும் வளைத்துத் திருத்தஞ் செய்த பெருமை (எ—ஒ—கெ—கொ—ஙெ—ஙொ, — ஏ— ஓ—கே—கோ.) வீரமா முனிவர் என்னும் கான்ஸ்ட் டன்டின் ஜோஸப் பெஸ்கி துரைக்கு உரிமையாகிறது. இப்போது அச்சுக் கருவி வந்துள்ளமையின் இனி எழுத்துக்கள் அதிக மாறுபாட்டை அடைவதற்கு வழியில்லை.

# அதிகாரம் 7.

## தமிழ் மொழியின் சிறப்பு

எத்திசையும் புகழ் மணக்க இருக்கும் நம் செந்தமி ழணங்கின் சிறப்பு முழுவதும் எவராலும் இயம்புதல் முடியாத காரியமாம். நமது தமிழ் மொழி இனிமை யாகப் பொருளுணர்த்துவதைப் போல வேறெந்த மொழியும் பொருளுணர்த்தமாட்டா படிக்குந்தோறும் இன்பம் பயக்கும் பண்பு பைந்தமிழுக்கே உரியதாம். உலகந் தோன்றியது முதல் தோன்றி, இற்றை ஞான்று வரை நிலைத்திருப்பதாய்க் கண்டாரையுங் கேட்டாரை யுஞ் திகைக்கச் செய்வதாய் ஈடற்றதாய் விளங்குவது நமது இனியதமிழ். ஊன்றிக் கவனிக்குமிடத்து உலகத்தி லுள்ள மொழிகட் கெல்லாம் நந்தமிழ் மொழியே தாய் மொழியா மென்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன.

நமது மொழி தெய்வத்தன்மை பொருந்திய தாகலினன்றே இம் மொழியில் எண்ணற்ற அற்புதங்கள் நிகழலாயின. பிறமொழிகள் எவற்றில் மொழிகள் அற்புதச் செய்கைகட்குக் காரணமாக விருந்ததாக நாம் கேள்விப்படுகிறோம்? தமிழ் மொழியின் பெருஞ் சிறப்பு நோக்கியன்றே அறிஞர்களும் செந்தமிழ், தீந்தமிழ், ஒண்டமிழ், தண்டமிழ், வண்டமிழ், இன்றமிழ், பைந் தமிழ், நற்றமிழ், அந்தமிழ் என்பன முதலிய கணக்கற்ற சிறப்படைகளுங் கொடுக்கலாயினர்.

ஒரு மொழியின் பெருமை அதற்குள்ள அள விறந்த இலக்கண இலக்கியங்களால் இனிது துணி

யப் பெறும். தமிழ்மொழி ஆயிரக் கணக்கான நூல்களைப் பெற்றிருந்தது. அவற்றின் மதிப்புப் பல ஆயிரக் கணக்காகும். தலைச் சங்க மிருந்தாராய்ந்தாரும் இடைச் சங்க மிருந் தாராய்ந்தாரும் பல்லாயிரம் புலவர்களாவர். இவர்களாற் செய்யப்பட்ட நூல்களில் ஏறக்குறைய, ஒன்பது ஆயிரங் கடல் வாய்ப்பட்டிருக்கலா மென்று அறிஞர்கள் எண்ணுகின்றனர். கடல்கோள் நிகழ்வதற்குமுன் இந் நாட்டை யடைந்திருந்த அகத்தியம் பன்னிரு படலம் முதலிய நூல்கள் ஓலைச் சுவடியிலிருந்து பிற்காலத்தில் சிதல் வாய்ப்பட்டிருக்கலாமென்று தெரிகிறது. இந் நூல்கள் மறைந்தொழிந்தமை குறித்துப் பழங்காலத் தறிஞர்களே;

"ஏரண முருவம் யோகம் இசைகணக்கிரதஞ் சாலம்
தாரண மறமே சந்தந்தம்ப நீர் நிலமு லோகம்
மாரணம் பொருளென்றின்னமான நூல் யாவும் வாரி
வாரணங்கொண்ட தந்தோ வழி வழிப் பெயருமாள"

என்று கூறிப் புலம்பி யிருக்கின்றனர்.

தமிழின் வழி மொழிகளாய் உலகில் வழங்கும் பிற மொழிகளைப் போலத் தமிழ்மொழி கரடு முரடான போக்கினையுடையதன்று. வாயில் நுழையப் பெறாத தாய சொற்களும் நமது மொழியில் கிடையாது. பருகுவதற்கினிய பாலைப் போலுங் கனித நீர்மை வாய்ந்தது நமது கன்னித் தமிழ். "பாலைய் தமிழ்," "தமிழெனு மினிய தீஞ்சொல்" என்பன முதலிய சிறப்புக்களை யெய்திய நந்தமிழ், கற்பாருக்குக் களிபேரு வகையளிப்பது. இது கருதியே தமிழ்விடு தூதுடையாரும்,

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" — என்றார்.

தமிழ்க்கடவுள் என்னுந் தனிச் சிறப்பை யுடைய அறுமுகப் பெருமான், தமிழ் மொழியினிடத்தே கழி பெருங்காதலுடையா ரென்பது யாவராலும் ஒப்ப முடிந்த தொன்ரும். தமிழ் மொழியால் தன்னை வைதாரையும் இக் கடவுள் வாழச் செய்வரென்று அருணகிரி நாத அடிகள் தமது கந்த ரலங்காரத்தின் கண்ணே ;

"மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையு மங்கு வாழவைப்போன் வெய்யவாரணம்போல்
கைதானிருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே."

என்று அருளிச் செய்தார். தமிழ்மொழி மீதுள்ள விருப்பத்தால் பொய்யா மொழிப்புலவர் மாட்டுச் சென்று பயமுறுத்திப்பாவும் பெற்ருர். தமிழ் நாடொழிந்த பிற நாடுகளில் நாம் திருமுருகனர் திருக் கோயிலைக் காண்டலருமை.

அறுமுகனரின் மாமனுராய மாலவனும் வண்டமிழிடத்தே வளர் பெருங் காதலுடையாரென்பது ;

"கணி கண்ணன் போகின்ருன் காமருபூங் கச்சி
மணிவண்ணு ! நீகிடக்க வேண்டாம்—துணிவொன்றிச்,
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்ச் சுருட்டிக் கொள்."

என்னும் பாடலைக் கேட்டதும் பைங்கணரவுப் பாயலைச் சுருட்டிப் பக்கத்தி லிடுக்கிக் கொண்டு பயணமாளுரென்னுங் கதையால் அறியப்படும்.

கைலைப் பெருமானும் ஆனந்தக் கூத்தனுய் மிக மிகத் தென்றிசைக்கட் போந்து கூத்துப் பயிலல் தண்டமிழ்ச் சுவையுண்டு மகிழ்தற்கென்றும் மற்றும்

இவ்விறைவனும், முருகனும், இறைவியும் பாண்டிமா நாடு போந்து பாரரசு பண்ணியதும் பைந்தமிழ்ச் சுவையைப் பருகவென்று பாவலர் பலரும் பாடினர். இதனை விளக்கும் பாடல்களிவை.

"கடுக்க வின் பெறு கண்டனுந் தென்றிசை நோக்கி
அடுக்க வந்து வந் தாடுவா னுடலி னிளைப்பு
விடுக்க வாரமென்கால் திருமுகத்திடை வீசி
மடுக்க வுந் தமிழ் திருச்செவி மாந்தவு மன்றோ?"

காஞ்சிப்புராணம்

"தமர நீர்ப் புவனம் முழுதொருங் கீன்றாள்
தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந்ததுவுந் தனிமுத லொரு நீ
சவுந்தர மாறனா னதுவுங்
குமரவேள் வழுதி உக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரங்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்?"

மதுரைக்கலம்பகம்—

......................." அண்ணலார்
தென்பால் உகந்தாடுஞ் செய்தியெலாம் உன்னிடத்தில்
அன்பாலென் றப்பாலும் ஆரறியார்?" தமிழ்விடு தூது.

நந்தமிழ் மொழி இங்ஙனம் தெய்வங்களையும் வசப் படுத்துஞ் சீர்த்திமிக்குடைய தாயிருத்தலின் இதன் பெருமை இயம்புதற் கரிதென்பது எளிதிற் பெறப் படும்.

இம் மொழியாலியம்பப் பெறுஞ் சொற்கள் தம் பயனை ஈந்து விடுகின்றன. வாழ்த்துதற் பயனை வழங்கு வதிலும், தாழ்த்துதற் பயனைத் தருவதிலும் தமிழ்

மொழி தனக்கிணையில்லாதது. இது பற்றியே பொய்யா மொழியாருந் தமது பொது மறையில் ;

“ வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை ”

என வியம்பியதூஉ மாமென்க.

நமது நாட்டுப் புலவர்கள் பலர், தம்மைப் போற்றி ஞரைத் தழையச் செய்தும், தூற்றிஞரைத் தொலையச் செய்தும் உள்ளார்களென்பது அவர்களுடைய இசைப் பாடல்களாலும் வசைப்பாடல்களாலும் எல்லோரும் இனிதறியலாம்.

திருவாதவூரர், திருநாவுக்கரசர், திருநாவலூரர், திருஞான சம்பந்தர் ஆகிய தெய்வப் புலவர் நால்வரும் செந்தமிழ்க் கவிகளால் செப்புதற்குமரிய அற்புதங்கள் செய்துளார்களென்பதைத் தெரியாதவர் எவரே ? பிற மொழிப் பாடல்களால் அம்மொழி வழங்குந்தேய மெதனிலேனு மித்தகைய செயற்கருஞ் செய்கைகள் நிகழ்ந்ததாகக் கேள்விப்படுகின்றேமோ ? இது பற்றி யன்றே திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண நூலுடையாரும் தமது நூலகத்தே ;

“ தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
உண்டபாலனை அழைத்ததும் எலும்புபெண் உருவாக்
கண்டதும் மறைக்கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ ? மறுபுலச் சொற்களோ ? சாற்றீர் ”

“ கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழேனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?”

என்று பாடியருளினர். மற்றும் பலபேர் தமிழ் மொழி யின் சிறப்புக்களைப் பற்றிப் பாடியுள்ளார்கள்.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

தன்பாற் பேரன்புடைய பெத்தான் சாம்பான் என்பவனுக்கு முத்தி கொடுக்கும்படி, கொற்றங்குடி உமாபதி சிவாச் சாரியாருக்குத் தில்லையானந்தக் கூத்தனர் அடியில் வரும் வெண்பாவை எழுதி யனுப் பினரென்றுங் கதை வழங்கும்.

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின் மிசை
பெத்தான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை."

---

# அதிகாரம் 8.

---

## தமிழின் தொன்மை

"முன்னிருந்த பாலி மொழியுங்கீர் வாணமும்
தன்னுங் கருப்பையிலே தோய்வதற்கு—முன்னரே
பண்டைக் காலத்தே பரவைகொண்ட முன்னூழி
மண்டலத்தி லேபேர் வள நாட்டின்—மண்டுநீர்ப்
பேராற் றருகிற் பிறங்கு மணிமலையிற்
சீராற்றுஞ் செங்கோற் றிறற் செங்கோ—நேராற்றும்
பேரவையி லேநூற் பெருமக்கள் சூழ்ந்தேத்தப்
பாரரசு செய்த தமிழ்ப் பைந் தேவி!" தமிழ்விடுதூது

"சது மறையா ரியம்வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ யநாதியென மொழிகுவதும் வியப்பாமோ?
பல்லுயிரும் பல வுலகும் படைத்தளித்துத் துடைக்கினு
மோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்று பல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே."

மனோன்மணீயம்.

படைப்புக் காலத்தே முதன் முதலாக வுண்டாகிய மொழி நமது தமிழ் மொழியேயாகும். தமிழ் மொழியில் நின்றும் எத்தனையோ கிளை மொழிகள் தோன்றின. அந்தக் கிளை மொழிகளில் நின்றும் வேறு எத்தனையோ மொழிகள் பிறந்தன. ஆதியில் தமிழர் உலகமெல்லாம் பரவியிருந்தபோது தமிழ் மொழியும் பரவி நின்றது. பின் காலஞ் செல்லச் செல்ல ஒவ்வோரிடத்திலும் வழங்கிய மொழி திரிந்து வேறு மொழி வடிவத்தை யடைந்தன. ஆனால் இக்கால உலகத்தினர் உலகத்து மொழிகளெல்லாந் தமிழிலிருந்துதான் உண்டாயிற் றென்பதை ஒப்புக்கொள்ளத் தயாராகவில்லை. தென் னிந்தியாவில் வழங்கும் மொழிகள் மாத்திரந்தான் தமிழிலிருந்து உண்டாயின என்று சாதிப்பர்.

ஓரிடத்தில் ஒரு புதுப் பாஷை எவ்வாறு தோன்று கிறது? அவ்விடத்திற் பேசும் மக்கள் வார்த்தைகளைச் சிதைத்துங் குறைத்தும் திரித்தும் தமது மனம்போன படி பேசுவதை நாம் எல்லா விடங்களிலும் பார்க்

என்றோம் அல்லமோ? நாமே பல சமயங்களினும் அரை குறையாகப் பேசி மொழிக் கொலை புரிகின்றோம் அல்லமோ? நாளாக நாளாக இம் மொழிக் கொலை வளருமாயின் பிறிதொரு மொழி பிறப்பதற்கு அதிகக் காலமும் வேண்டுங்கொல்?

மத்திய ஆசியாவரை சென்று வாழ்ந்து திரும்பி, ஆரியரென்னும் பேரடைந்த மக்களின் மொழி, இங்கிருந்து வடக்கு நோக்கிச் செல்லும்போது முழுத் தமிழாகவே யிருந்தது. சில தலை முறையில் திரிந்து வேறு மொழி வடிவத்தை யடைந்தது. ஆரியர் இந்தியாவுக்குத் திரும்பிய காலை எழுதத் தெரியாதவர்களாகவே திரும்பியிருக்க வேண்டுமென்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன. வேதம் என்று சொல்லி அவர்கள் கண்டு பிடித்ததை எழுத முடியாதபடியால் சந்தோ ரூபமாகவே (இசை வடிவம்) நீண்ட காலம் வரை வைத்திருந்தனர். இந் நாடு வந்து சேர்ந்தபின் எழுத்தமைக்கத் தொடங்கினர். முன்னர் அவர்கள் தமிழ் எழுத்தைப் போன்ற ஸம்ஸ்கிருத எழுத்தை யமைத்துப் பிறகே நாகர எழுத்தையும் வகுத்தனரென்று ஊகிக்கவேண்டி யிருக்கிறது. இந்த நாகர வெழுத்தே வடநாட்டு மொழிகட்கெல்லாம் மூலமாதலின் இவ்வெழுத்துத் தோன்றியபின் வடநாட்டில் பாஷை அதிகரிக்கலாயின.

ஆரியர் தமிழெழுத்துக்களைப் பார்த்தே எழுத்தமைக்கத் தொடங்கினர் என்றும் தமிழர் தமது எழுத்துக்களைப் "பிராமி" என்னும் ஒருவகை எழுத்துக்களைக் கொண்டு அமைத்தனரென்றும், அவ்வெழுத்து அக்காலத்தில் இமயம் முதல் குமரி வரை

நிலவி யிருந்ததென்றும் சில ஆராய்ச்சியாளர்க ளெண்ணுகின்றனர். 1*

என்றெழுதியிருப்பதுடன் பழங்காலத்து மக்கள் மேற்கூறிய வட்டெழுத்துக்களைக் கல்லிற் செதுக்கி

---

*(1) "தமிழ் நாட்டில் வழங்கிய வட்டெழுத்துக்களைப் பற்றியும், இவ்விந்திய நாடெங்கும் வழங்கிய அசோக எழுத்துக்களைப் பற்றியும் யாம் இற்றைக்கு இருபத்தோராண்டுகட்கு முன்னமே ஆராய்ந்து, அவ்வாராய்ச்சியைக் கி. பி. ௧௯0௬ ஆம் ஆண்டு வெளிப்போந்த 'பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும்' என்னும் எமது நூலில் வரைந்திட்டாம். அதற்கு எட்டாண்டுகள் கழித்துக் கி. பி. ௧௯௧௪ இல் ஆங்கிலத்தில் வெளியிடப் பட்டதாகிய 'தமிழாராய்ச்சிகள்' (Tamil Studies) என்னும் நூலின் கண் அதன் ஆக்கியோரான சீனிவாச ஐயங்கார் வட்டெழுத்துக்களைப் பற்றிய எமதாராய்ச்சியினை முற்றுந் தழுவி, வட்டெழுத்துக்கள் தமிழர்க் குரியனவேயன்றி வட நாட்டில் வழங்கிய 'பிராமி' எழுத்துக்களின் திரிபாகா வென்றும் இற்றைக்கு மூவாயிரத்தைந்நூறாண்டுகட்கு முன்னமே தமிழரும் பினீசியர் எகுபதியரும் வாணிக வாழ்க்கையிற் கலந்துறவாடினராகலின் எகுபதியரறிந்த எழுத்து முறையைத் தமிழரும் அந்நாளிலேயே அறிந்தவராயிருத்தல் வேண்டுமென்றும் இவ்வெழுத்து முறையைத் தமிழரிடமிருந்தே இந்திய ஆரியர் கற்றுணர்ந்தவராதல் வேண்டுமென்றும், ம—ப—என்னும் எழுத்தின் வடிவங்கள் பிராமி அசோக எழுத்துக்களிலும் வட்டெழுத்துக்களிலும் வேறுபட்டிருத்தலே இதற்குச் சான்றாகுமென்றும், ஆசிரியர் தொல்காப்பியனார் உரைக்குந் தமிழ் எழுத்தின் வடிவங்கள் வட்டெழுத்துக்களின் வடிவோடு ஒத்திருத்தல் போற் பிராமி எழுத்துக்களின் வடிவோடு ஒத்திராமையால் தொல்காப்பியனார் காலத்திற்கு முன்னமே வட்டெழுத்துக்கள் தமிழ் நாட்டின் கண் வழங்கினவாதல் வேண்டுமென்றும் நன்காய்ந்து வலிய சான்றுகள் பல

வையாமைக்குந் தக்க காரணங்களையும் காட்டி யுள்ளார்கள்.

ஆரியர் முதலில் ஸமஸ்க்ருத எழுத்தைச் சிருட்டித்த போது தமிழெழுத்துக்களைவிடத் தமது மொழிக்கு அதிக எழுத்துக்களிருக்கின்றன வென்று உலகத்திற்குக் காட்டவேண்டி ரு, ரூ, லு, அம், அஹ இப்படிப் பல போலியுயிரெழுத்துக்களைப் பிறப்பித்த தன்றிக், கசடதப என்னும் ஐவருக்கத்தையும் மும்மூன்றெழுத்துக்கள் சேர்த்து ஒவ்வொன்றையும் நன்னான்காச் செய்து அவைகளின் ஓசைகளையும் விரித்து,

---

வற்றால் தமிழ் எழுத்துக்களின் பழமையை இனிது விளக்கிக் காட்டி யிருக்கின்றார். அவர் கொண்ட முடிபே எமது முடிபு மாகலானும், இவ்விந்திய நாட்டு எழுத்தின் வடிவங்களை நன்காய்ந்து எழுத்தின் வடிவங்களை நன்காய்ந்து கண்ட 'ரிஸ்டேவிட்ஸ்' 'தாமஸ்' 'பர்னல்' முதலான ஐரோப்பிய ஆசிரியர் நடு நின்றாராய்ந்துரைக்கும் உரையும் எமது முடிபோடு ஒருங்கொத்து நிற்றலானுந் தமிழ் வட்டெழுத்துக்கள் தமிழர்க்கே உரியவாய்த் தொல்காப்பியனார் காலத்துக்கு முன்னே தொட்டு வழங்குந் தனித் தமிழெழுத்துக்களே யல்லாமல், அவை வடவாரியர் வழங்கிய பிராமி எழுத்துக்களினின்றும் வந்தன அல்லவென்பது கடைப்பிடித்துணர்தல் வேண்டும். தமிழ் வட்டெழுத்துக்கள் ஆறாயிர ஆண்டுகளாய் வழங்குவனவாகப், பிராமி யெழுத்துக்களோ இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு உட்பட்ட வழக்கமே யுடையனவாயிருத்தலாற், பிராமி யெழுத்துக்களே தமிழ் வட்டெழுத்துக்களைப் பார்த்துச் செய்யப்பட்டனவாகல் வேண்டுமல்லது, வட்டெழுத்துக்கள் பிராமி யெழுத்துக்களைப் பார்த்துச் செய்யப்பட்டனவாகல் ஒரு சிறிதுஞ் செல்லாதென்க."

மாணிக்கவாசகர் காலம் பக்கம் 587, 588.

மறை மலையடிகள்.

வலித்தல், மெலித்தல், இடைப்பட உச்சரித்தல் என்பவைகளைக் கற்பித்து வேறு பல எழுத்துக்களையுங் கூட்டி அதிகமாக்கிக் காட்டினர். இங்ஙனம் அதிகப் படுத்தியது எற்றுக்கெனின், தங்கள் மொழி ஏராளமான எழுத்துக்களை யுடையதென்றும், மிகப் பெரியதென்றும் உலகத்திற்குணர்த்தவே.

ஒரு மொழி பேச்சு வழக்கற்று விட்டதெனின், அது எத்துணைச் சிறுபான்மையோரால் பேசப்பட்டு உயிர்தாங்கி நின்றதென்பது சொல்லாமலே அமையும். வடமொழியாளர் தங்கள் கொள்கைகளை யெல்லாம் தமிழர் அறியாத அவர்களது பாஷையில் எழுதி வைத்துத் தமிழர்களை மருட்டலாயினர். புராணப் புளுகு மூட்டைகளெல்லாம் இந்த மொழியில் எழுதப் பட்டன. மந்திரமென்றுந் தந்திரமென்றும் பலவற்றை இம் மொழியில் எழுதினர்.1*

---

*(1) "தமிழ் மொழி வரலாறெழுதிய வி. கோ. சூரிய நாராயண சாஸ்த்ரியார் தமது நூலில், "ஆரிய மொழிக்குரிய நெடுங் கணக்குத் தமிழர் முறையைப் பார்த்துச் செய்யப்பட்டதென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. தாங்கள் செல்லுமிடங்கட்குத் தக்கபடி புதிய லிபிகள் ஏற்படுத்திக் கொள்ளும் இயல்புடைய ஆரியர் தமிழ் நாட்டிற்கேற்றபடி தமிழ் லிபியை ஒட்டிக் 'கிரந்தம்' என்னும் பெயரிற் புதியதோர் லிபி வகுத்தனர்." என்றெழுதினர்.

*(2) "ஆரிய மொழியிற் காணப்படும் எழுத்துகளும் பிறவும் அம் மொழிக்கினமாகிய 'இலத்தின்' 'கிரீக்" எபிரேயம் முதலிய மொழிகளில் இல்லாமையால் இந்தியாவை அடைந்த ஆரியர் அங்குறைந்த தொல் குடிகளாகிய தமிழரின் எழுத்து முறைகளைப் பின்பற்றியதுடன் லிபிகளையும் ஆக்கிக் கொண்டார்க

ளென்பது வெள்ளிடை விலங்கல்."

Prof. Rapson bears testimony to the fact that the aboriginal languages in the south of India were associated with a high degree of Culture, and hence it is not surprising to note the presence of the Dravidian element in Sanskrit. It can be easily maintained that much, that is not found in Latin and Greek but peculiar to Sanskrit alone is due to the contact of the Aryans with the Dravidians.

Dravidian India P. 75.

"அகர முதல் ஔகார இறுவாயாகக் கிடந்த பன்னீரெழுத் துக்களுமே உயிரெழுத்துகள் எனப்படுவதற்கும் இவை தமிழ் மொழியின் ஒன்ருக அடைவு படுத்து நிறுத்தப்பட்ட முறையே முறையெனப் படுதற்கும் உரிமையுடையனவாம். இஃது இவ்வாருகவும் வட நூலார் தமிழின் நெடுங் கணக்கைப் பார்த்து உயிரெழுத்து மெய்யெழுத்துக்களை அடைவு படுத்திக்கொண்ட அளவில் அமையாது தமிழிலினும் தமக்கு உயிரெழுத்துக்கள் மிகுதியாய் உண்டென்று காட்டுவதற்குப் புகுந்த பொருந்தாப் பேரவாவால் உயிரெழுத்துக்களல்லாத ரு. ரூ, லு அம், அஃ என்னும் உயிரெழுத்துக்களையும் அவற்ருேடு கலந்து இழுக்கிஞர். இவ்வாறு எழுத்துக்களிற் கலந்த குற்றிய லுகர ஊகாரங்களையும் அகரங்களையும் நீக்கிஞல் எஞ்சி நிற்பன, ர். ல். ம். ஃ என்னும் மெய் யெழுத்துகளும் ஆய்த முமேயாகலின் அவர் உயிரெழுத்துக் களைப் பன்னிரண்டின் மேலாகப் படைத்திட்டுக் கொண்டது வெறும் போலியாமென்க."

"பதினெட்டு மெய்யெழுத்துக்கள் மட்டுமே செவ்வை யாகப் பொருந்தப்பட்ட உறுப்புகளுடைய மக்கள் குறைபாடில்லாத முயற்சியால் தம் வாயாற் பிறப்பிப்பனவாகும். விந்துவினின்றும் மேலெழுந்த விந்து காரணவொலியை தன்னிலையில் நேரே இயங்க விடாது மக்கள் தமது நிறைந்த முயற்சியால் தலை மிடறு

ஆரியர் எவ்வளவு முயன்று புதுப்புது எழுத்துக்களை யுண்டாக்கினும் தமிழ் எழுத்துக்களின் கூறுபாடுகள் ஒரு சிறிதாவது அவற்றில் இல்லாமற் போகவில்லை. அவர்கள் மொழி எழுத்துக்களில் தமிழ் வடிவம் இருப்பதைக் காணலாம். எழுத்துக்களை யெல்லாம் நன்கு ஆராய்ச்சி செய்து "பண்டைத் தமிழ் எழுத்துக்கள்" என்னும் நூலெழுதிய திரு. தி. நா. சுப்பிரமணியன் "இனி அகரத்துக்குத் தமிழ் லிபியில்

---

நெஞ்சு என்னும் மூவிடங்களினும் அதனை நிறுத்திப், பல், நா, மூக்கு, அண்ணம் என்னும் ஐந்துறுப்புகளோடு அதனைப் பல் வேறு படத்திரித்துப் பல ஒலிகளாக வெளியிடுகின்றனர். இவ் விந்து காரணவொலி குறைபாடில்லாத உறுப்புகளாலும் குறை பாடில்லாத முயற்சிகளாலும் இயக்கக் கூடும்வரை இப் பதி னெட்டெழுத்தின் மேற்பட்ட ஒலிகள் தோன்றுதற்குச் சிறிது மிடமேயில்லை. மற்று இவ்வாறின்றிக் குறைபாடுடைய உறுப்பு களும் குறைபாடுடைய முயற்சிகளுமிருந்தால் விந்து காரண வொலி செவ்வனே இயங்கப்படாமற் பலவாறாய் இயங்கி அளவுக் கடங்காப் பல திறவொலிகளை யெல்லாம் தோற்றுவிக்கும்."

"தமிழில் இல்லாமல் வடமொழி நெடுங் கணக்கில் மட்டும் காணப்படும் சில ஒற்றெழுத்துக்கள் அத் துணையும் தமிழின்கண் நிறைந்த முயற்சியாற் பிறப்பிக்கும் ஒற்றெழுத்துக்கள் சிலவற்றைக் குறைந்த முயற்சியால் ஆய்த வொலியைத் தடைப் படாது செல்ல விடுத்துப் பிறப்பிக்கத் தோற்றுவனவே யாகு மல்லாமல் உண்மையாக நோக்குங்கால் அவை தனித்தனி மெய் யெழுத்துக்கள் ஆகமாட்டா வென்பது தெற்றெனப் புலப்படும்."

தமிழில் ஒலி எழுத்துக்கள்.

மறைமலையடிகள்.

உள்ள வடிவத்துக்கும் நாகர லிபியிலுள்ள அ என்னும் வடிவத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. நாகரத்திலுள்ள தலைக்கட்டை நீக்கி விட்டால் இது எளிதில் தெரியவரும்" என எழுதியுள்ளார். இன்னும் இவர் எழுத்துக்களை யெல்லாம் கூடியவரை நன்காராய்ச்சி செய்து, எழுத்துப் பிறப்பைப் பற்றித் தக்க ஆதாரங்களுடன் "உண்மையில் இந்தியா வெங்கும் ஆதியில் உபயோகப்பட்டு வந்த ஒருவகை லிபியைச் சேர்ந்த எழுத்துக்களே பல இடங்களில் பலவிதமாக வளர்ச்சி யடைந்து இப்பொழுதுள்ளன போலப் பல வகை லிபிகளின் எழுத்துக்களாக ஆயின" என்றும் கூறுகிறார். இதனாலும் மேலே நாம் கூறிய உண்மை இனிது நிலை பெறுவதைக் காணலாம். தமிழ் மொழியிலிருந்தே பலவகை மொழிகளும் எழுத்துக்களும் தோன்றின என்று கூறுங் கூற்றுப் பாஷாபிமானங் கொண்டெழுந்ததன்று. நன்கு ஆராய்ச்சி செய்யுமிடத்துக் காணப்படும் உண்மை இதுதான். மேனாட்டாராய்ச்சியாளர் பலருடைய அபிப்பிராயமும் இதுதான். ஆனால் அவர்கள் எக் காரணம் பற்றியோ தங்களது ஆராய்ச்சியை மழுப்பலாக்கி விட்டனர். அறிஞர் பலருடைய உள்ளக் கிடக்கையையும் ஈண்டு தொகுத்துக் காட்டுகின்றேன்.*

---

* (1) "இத் தமிழ் மொழி இயற்சொல்லே பயின்ற அந்தப் பழங்காலத்தே பிறமொழிகளுக்குந் தானே தாய் மொழியாக நின்று விளங்கிற்றென்பதற்குக் காரணங்கள் பலவுள."

தமிழ் வரலாறு.

ரா. ராகவ ஐயங்கார்.

(2) "பிராமி எழுத்துக்கள் தமிழ் மொழிக்கென்றே அமைக்கப்பட்டுப் பின்னர் வடமொழிக்கும் பயன் படும்படி புதிய குறிகள் உண்டாக்கப் பெற்றன."

மொஹெஞ்சொ—தரோ. மா. இராஜமாணிக்கம், B. O. L.

(3) "தமிழ் என்பதைப் பிறர் 'திராவிடம்' என்றனர். தமிழ் மக்கள் அங்கங்கும் போக்கு வரவின்றித் தங்கிய காலத்தில் அவர்கள் தமிழ்மொழியே பல்வேறு வகையான இந்திய மொழிகளாகத் திரிந்து நின்றன. ஒன்றோடொன்று கலந்து பின்னும் பலவாயின. மிகுதியாகத் திரிந்துவிட்டவை வங்காளம் முதலிய வட இந்திய மொழிகள். ஓரளவில் திரிந்தவை தெலுங்கு முதலிய திராவிட மொழிகள். மொழி திரியவே தமிழ் மக்களும் அவ்வம்மொழிக் குரியவராய் வட இந்தியரும் தென் இந்தியருமாகத்தி ரிந்து பல சாதியாராயினர்."

மொஹெஞ்சொ—தரோ. முகவுரை

(4) "பேரறிஞர் போப்பையர், "தமிழ்" ஐரோப்பிய மேலை நாடுகளில் உள்ள கெல்த்திய (Celts) தெயுத்தானிய (Teutons) மொழிகளை ஒத்திருக்கிறது என்கிறார். இவ்விரண்டு இனங்களும் ஆரிய இனத்தின் மிகத் தொலைவுக் கிளைகள் என்பர். இன்னும் ஆப்பிரிக்க, ஆஸ்த்ரேலிய அமெரிக்க மொழிகளும் வியக்கத்தக்க முறையில் தமிழ்க் குழுவை யொத்துள்ளன என்று அறிஞர் கூறுகின்றனர். இதனால் தமிழ்க்குழு உலகம் முழுமையும் உறவுடையது என்பது பெறப்படுகிறது."

குமரிக்கண்டம். K. அப்பாத்துரைப் பிள்ளை. M. A.

(5) "மொழி ஒப்புமையால் நோக்கத் தென்னிந்திய மொழிகள் மட்டுமல்ல, வட இந்திய மொழிகளும் வட மொழியுங் கூடச் சொற்பயன், சொற்றொடர் அமைப்பு முதலியவைகளில் ஒன்றுபோலவே யிருக்கின்றன. இம் மொழிகளில் ஏதாவ தொன்றில் நின்றும் இன்னொன்று மொழிபெயர்க்க வேண்டு

மாயின் அகரவரிசையின் துணை கொண்டு மொழிக்கு மொழி மாற்றினால் போதும்."

**Stone age.** பி. டி. ஸ்ரீநிவாச ஐயங்கார்.

(6) "இவ்வகையில் வட இந்திய மொழிகள் பிற ஆரிய மொழிகள் போலாமை நோக்க, அவற்றின் அடிப்படைச் சட்டம் வடமொழியோ ஆரியமோ அன்று.' பழந்தமிழ் அல்லது திராவிட மூல மொழியே யாகுமென்பது வெள்ளிடைமலை. இன்னுஞ் சற்று நுணுகி நோக்கினால் வட நாட்டார் தம் மூல மொழியெனக் கொண்ட வடமொழிதானும் திராவிடத்தாக்கு உடையதே என்பது தெரிய வரும்."

குமரிக்கண்டம். **K.** அப்பாத்துரைப் பிள்ளை, **M. A.**

**(7)** "தமிழ் மொழி இன்ன காலத்திலேதான் தோன்றிய தென்று எளிதாக வரையறுத்துச் சொல்லக் கூடவில்லை. அம் மொழி அவ்வளவு பழமையானதாக விருக்கின்றது. உலகம் முழுவதிலும் இப்போதுள்ள எல்லா மொழிகளும் தோன்றுவ தற்கு முன்பே, இம் மொழி தோன்றி வழங்கி வந்திருக்கிற தென்று ஆராய்ச்சியாளர் முடிவு கட்டுகின்றனர்."

மனிதப் பிறவி முதன்முதலாகத் தோன்றியபின் பல காலம் வரையில் மொழி தோன்றவில்லை. அதன் பின்பு ஒரு மொழி தோன்றி யிருக்கவேண்டும். முதன்முதலாகத் தோன்றிய மொழி யாதலால் அந்த மொழி வேறொரு மொழியிலிருந்து தோன்றி யிருக்க இடமில்லை. தனித்தே தோன்றியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. பின்பு அதனை வழங்கிய மக்கள் பல வேறிடங் கட்குஞ் செல்ல அதிலிருந்து உலகமெங்கும் பல வேறு மொழி யினங்கள் தோன்றிக் கிளைவாங்கி விரிந்தன. என்பது தெளியப் படும். ஆதலால் பின்பு தோன்றிய மொழிகளோடு முதலில் தோன்றிய தாய்மொழியை நினைத்துப் பார்த்த அறிஞர்கள் அம் முதல் மொழியைத் 'தனித்துத் தோன்றியது' என்னுங் கருத்தில் 'தமிழ்' என்று வழங்கி மகிழ முற்பட்டனர்.

சங்கநூற் கட்டுரைகள். தி. சு. பாலசுந்தரன்.

(7) "தமிழர்களுடைய பழமையை நோக்குங்கால் ஆரியருடைய பழமையானது கணப்பொழுதிற்கு முன் பெற்ற ளுட்டர் தந்திச் செய்தியை ஒக்கும்."

பட்டமளிப்புப் பேச்சு. சென்னைக் கவர்னர் கிராண்டப்.

(8) "ஆரியர் இந்தியாவிற்கு வந்த காலத்தில் அட்சராப்பியாச முடையராயிருந்ததில்லை, இந்தியாவில் அவர்கள் வந்து தங்கிய பன்னெடு நாட்களுக்குப் பின்னுண்டான அவர்கள் வேதமும் எழுதாக் கிளவியாகவே யிருந்தது. ஆரியர் தென்னாட்டுத் தமிழரிடமிருந்துதான் எழுதக் கற்றுக்கொண்டனரோ வென்னும் சந்தேகம் பற்பலருக்கு முண்டு. இச் சந்தேகம் கொண்டவருள் தமிழாராய்ச்சி யெழுதிய ஸ்ரீநிவாசய்யங்காரு மொருவர்."

தமிழ் இலக்கியம். ஞா. சா. துரைசாமிப் பிள்ளை.

(9) "தமிழிற்பளிங்கென விளங்குகின்ற அடிச்சொற்களை யாங்கண்டுபிடித்த பின்னரே, ஆரியமொழிச் சொற்களெல்லாம் இவ்வடிகளினின்று ஒரு காலம் பிறந்து இற்றை ஞான்று உருத் திரிந்து நிற்கின்ற உண்மையை யாமும் ஊகித்து அறியலா மாயினேம்."

"தமிழின் தலையடிகளையாம் நெடுநாள் முயன்று முறைப்படி ஆராய்ந்து கொண்டபின் அவ்வடிகளே தமிழ்ச் சொற்களினுக்கும் வடசொற்களினுக்கும், அவ்வாறு சகல ஆரியமொழிச் சொற்களினுக்கும் தனித்தனி பிறப்பிடமாயின என்றது விளக்கமாயிற்று. வடசொற்களும் தமிழ்ச் சொற்களும் உருவத்திலும் பொருளிலும் ஒரு பெற்றியனவாய் நிற்பவும், தமிழன்று வடமொழியே முந்தியதாதல் வேண்டுமென எழுந்தபடி அறுதியிட்டுக் கூறுவோர் யாதுபற்றி அங்ஙனந் துணிகின்றார்?"

தமிழ்ச் சொற் பிறப்பாராய்ச்சி

நல்லூர். ஞானப்பிரகாசர்.

(10) "இனிச் சாவகம் முதலிய ஐவகைத் தீவிலுள்ள மொழிகளும் இமயமலைச் சார்பில் ஓர்வகைச் சாதியார் பேசுகின்ற மொழியும், விந்தியமலையின் கிழக்கு முனையிலுள்ள சூடிய நாகபுரியில் ஓர்வகைச் சாதியார் பேசுகின்ற மொழியும், அம்மலையின் அம்பரமென்னுஞ் சிகரத்தில் (MT—ABU) வசிப்பவர் தம் மொழியும் திபேத்து நாட்டு மொழியும், பெலுஜிஸ்தான் தேசத்தில் தவுத் புத்திர என்னுஞ் சாதியார் பேசுகின்ற மொழியும், ஐரோப்பாக் கண்டத்துள் ஆஸ்ட்ரியாநாட்டு மொழியும் பிறவும் தமிழின் சிதைவெனச் சரிதவாராய்ச்சியில் வல்ல பெரியோர் கூறுவர். தவுத் புத்ரர் என்பது திராவிட புத்ரர் என்பதன் சிதைவு."

"ஆப்கனிஸ்தான் என்னும் மகமதிய நாட்டில் ஓர் நகருக்குத் **'தமிழக்' என்னும் பெயர் வழங்கி** வருவதோடு அந் நகரில் குடியேறிய-மகம்மதியரும் தமது பாஷையோடு தமிழையுங் கலந்து பேசுகின்றார்கள்."

"பீல் (BOELE) பார் (BAUR) முதலிய ஜெர்மன் தேசத்தாசிரியர், "**டில்லியில் ஆரியம் வளர்ச்சி பெற்றது. ஆரியத்துக்கு முன்னே தமிழுள்ளது. ஆரியத்துக்கு மேலானது தமிழ்**" எனக் கூறுவர்."

"இம்மொழி நூலில் இலக்கணவியலுள் எழுத்தோசை பொருளோசைகளையும், சந்தியெழுத்தையும் சந்தியெழுத்தின் படியே யுண்டான பத சந்திகளையும், மொழி முதல் வருமெழுத்து வராவெழுத்துக்களையும் வகர முதன் மொழி முதலியவற்றையும், பிறப்பிடத்தா லியல்பாக ஒத்துள்ள உடனிலை மெய்ம்மயக்கம் முதலியவற்றையும் நெருப்பின் பெயர் முதலியவற்றையும் உலக வியற்கையையும் நன்கு ஆழ்ந்து நுணுகி ஒருகி ஆராய்ந்துணரின் தமிழ், உலகில் முதல் முதலுண்டான இயற்கை முதன்மொழி யென்பது விளங்குதலாகும். ஆரியத்துக்கு முன் தமிழ் இருந்த தென்பது கடுக்கனுக்கு முன் பொன் இருந்ததென்பது போலக் கொள்ளல் வேண்டும்."

"மணிப்பிரவாள நடை முதலியவற்ருல் தமிழ் ஆரியத்துக்கு முற்பட்டதென்பது அங்கைக்கனிபோல விளங்குகின்றது. தமிழ் ஆரியத்துக்கு முற்பட்டது முற்பட்டது எனக் கூறுவன வெல்லாம் உண்மை கூறவந்ததன்றிக் குறைகூற வந்ததன்று."

"இனிக் கால்டுவெல் துரை முதலோர் தமிழ் ஆரியத்துக்கு முற்பட்ட தென்பர். மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவராகிய ஸ்ரீமான் பாண்டித் துரைத் தேவர் அவர்களும் மொழி ஆராய்ச்சியைப்பற்றி உரையாடுங்கால், தமிழ் ஆரியத்துக்கு முற்பட்டதே என்பர்."

மொழிநூல் மாகறல் கார்த்திகேய முதலியார்.

11. "மக்கள் தோன்றிய காலமுதற் ருேன்றி வளர்ந்து நிலைபெற்றிருந்த தமிழ், மிகச் சீர்தேற்றமடைந்த தலைச் சங்க காலத்தில் அகத்தியர் தம் பெயரால் ஒரு பேரிலக்கண நூலியற்றினர். அக்கருத்தைக் கம்பராமாயணம் அகத்தியப்படலம் "என்றுமுள தென்றமிழியம்பியிசை கொண்டான்" என்ற கவி விளக்குகின்றது. ஆகவே இற்றைக்கு 1,19,000 ஆண்டுகட்கு முன்னரே தமிழ் மிகச் சீர்தேற்ற மடைந்திருந்ததாய்ப் புலப்படுகின்றது. டாக்டர் ஆப்பர்ட் (Dr. Oppert) புரொபஸர், இ. எச். சேஸ் (Prof. E H. Sayce) முதலிய ஆங்கில சரித்திராசிரியர் சின்ன ஆசியாவில் (Asia Minor) எருதூர் (Ur of Erudu). ஆட்சி, கி. மு. 8000 ஆண்டுகட்கு நெடு நாள் முன்னிருந்ததாயும், பின்னர் சாலடியூர் அல்லது சாலடியரூர் (Ur of Chaladea) ஆட்சி இருந்ததாயும், அதன் பின் அங்காடியர் (Accadians) பாபிலோனியர் (Babylonians) ஆட்சிகள் இருந்ததாயும் கூறுகின்றனர். எருதூர் சாலடியூர் என்ற பெயர்கள் தமிழாயிருத்தலானும், சாலடியர் அங்காடியர் மொழிகளில் தமிழ்ச் சொற்கள் மிகக் கலந்திருப்பதாலும், இன்னும் பற்பல ஆதரவுகளாலும் 1,000,00 ஆண்டுகட்கு முன்னரே தமிழ் மொழி மெசபட்டோமியா என்ற சின்ன ஆசியாவிலும் பரவி யிருந்ததாய் உறுதிப்படுகின்றது."

செந்தமிழ். தொகுதி 3. பகுதி 10. விருதை சிவஞான யோகிகள்.

12. "பாரத காலத்துக்குச் சில நூற்றாண்டுகட்கு முன் இராமாயண காலம். அதற்குச் சில நூற்றாண்டுகட்கு முன் திரிபுராதிகள் காலம், என்பதை அறிஞர்கள் அறிவார்கள். சரித வரலாறும் அப்படியே; புராண வரலாறும் அப்படியே. திரிபுராதிகள் காலத்திற்கு முன்னரே "தமிழ்ப்" பாஷையானது சீரும் சிறப்பும் எய்தப் பெற்றுத் தமிழ்ச் சங்கங்களால் வளர்க்கப் பெற்றது என்றால் தமிழ் மொழியின் தொன்மையை அளவிட யாரால் முடியும்?

செந்தமிழ்ச் செல்வி சில 1 பரல் 2 தமிழ்.

து. அ. சிதம்பரனார்.

13. "உலக மக்களது மொழிகளில் காலத்தையிட்டு முதன்மை பெற்றிருப்பது தமிழெனச் சொல்லப்படுகிறது. இது பொருளைப் பற்றி; இரண்டொரு ஆண்டுகட்கு முன் சித்தியடைந்த பரமஹம்ஸர் குஞ்ஞன்பிள்ளைச் சட்டம்பி சுவாமி என்னும் கல்விக் களஞ்சியமான நாயர்குலச் சிரேட்டர், "உலகத்திய மொழிகளில் மிகத் தொன்மை வாய்ந்தது தமிழே" என்று நாட்டப் பல சான்றுகள் சேகரித்து வந்தார். அன்னார் வடமொழியிலும் தென் மொழியிலும் பெரும் புலவர். பல்கலைக் கழகக் கலைவாணர்கள் பலர் அன்னாரது ஒப்புயர்வற்ற புத்தி நுட்பத்தைத் தெரிந்து திகிலடைந்திருக்கின்றனர். அவர் ஓர் துறவியானதால் புகழை விரும்பாமல் பாடுபட்டு வந்தவர். அவரை ஓர் ஞானசமுத்திரம் அல்லது அறிவாழி என்று கூறுவது மிகையாகாது. உலகத்திலுள்ள பற்பல மொழிகளின் நெடுங்கணக்கின் ஒவ்வொரு எழுத்தின் வடிவமானது தமிழ் நெடுங் கணக்கிலிருந்து வந்ததென்று அங்கை நெல்லிக் கனிபோல் அன்னார் அடியேற்கு எடுத்துக் காட்டியுள்ளார். இது விஷயமாய் அவ்வடிகள் நடாத்திய ஆராய்ச்சிகளிற் சிலவற்றை 'நாங்கள் சந்தித்துச் சம்பாஷணை நடத்துங் காலங்களில் அவ்வடிகள் மிக விரிவாக எனக்குப் புகட்டிப் போந்தனர். அவர் அநேகம் குறிப்புகள் தமிழிலேயே எழுதிவைத்திருந்தனர். முத்திபெறுமுன்னே அவைகளை யெல்

இதுகாறும் யாம் எடுத்துக் காட்டிய அறிஞர் பலரின் உரைகளால் தமிழின் தொன்மையும் தனித் தன்மையும் மாண்பும் இனிது விளங்குவனவாகும். இத்தகைய சான்றுகள் பல விருக்கச் சில்லிடத்தில் சின்னாள் வழங்கி வழக்கொழிந்த ஆரியத்தைத் தமிழின் தாயாக்கச் சிலர் முயன்றது பயனற்றதாயிற்று. எல்லா மொழிகட்கும் தமிழே தாயாக விருக்கிறதென்னும் உண்மையைக் கண்டுபிடித்த அறிஞர்களில் பலர் உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தினர். ஒரு சிலரோ வஞ்சகமனத்தினராய் ஆராய்ச்சி முடிபுகளை மறைத்து மழுப்பினர். ஆரியத்திடந் தணியாக்காதல் கொண்ட ஒரு சில தமிழர்கூட ஆரியத்தையே புகழ்ந்து தமிழைத் தாழ்த்திப் பேசுவாராயிருந்தனர், இன்று மிருக்கின்றனர்.

வடமொழியின் இலக்கணங்களும் பெரும்பாலும் தமிழிலக்கணத்தைத் தழுவியே அமைந்திருக்கின்றது. வடமொழி தமிழினின்றுந் தோன்றிய தென்பதைப் பல பழங்காலத்து அறிஞர்களும் நன்கு அறிந்திருந்தன ராயினும், அவர்கள் பெரிதும் மயங்கி வடமொழியி லிருந்துதான் தமிழ் பிறந்திருக்கலாமென்று நினைந்து தடுமாறி இடர்ப்பட்டனர். இக் கூட்டத்தில் இலக் கணக் கொத்துச் செய்த சுவாமிநாத தேசிகர், பிரயோக விவேகம் செய்த சுப்பிரமணிய தீட்சிதர் முதலியவர்

லாஞ் சேர்த்து ஓர் நூலாக அச்சியற்றவேண்டுமென்ற ஆவல் அன்னார்க்கும் அடியேற்குமிருந்தது. ஆனால் அது நிறைவேற இடமாகாமற் போனது தமிழ் மக்களின் தவக்குறைவேயாம்.”

சொற்பொழிவு. R. ஸ்ரீநிவாசன், Science Professor.
St. Josephs School Travancore.

களைச் சேர்க்கலாம். இவர்கள் வட மொழிக்குந் தமிழுக்கும் இலக்கணமொன்றே என்று நாட்ட இலக்கண நூலுஞ் செய்து தாம் மாத்திரம் உண்மையை நன்கு உணராதவர்களாயினர்.

---

# அதிகாரம் 9.

---

## தமிழ்மொழி முன்னர் வழங்கிய இடங்கள்

தமிழகத்தின் பண்டைக்கால எல்லையை வரையறைசெய் துரைத்தல் எவராலும் முடியாத காரியமாகும். பழந்தமிழ் நூலாசிரியர்கள் பலரும் மிகப் பிற்பட்ட காலவெல்லையைத்தான் கூறியுள்ளார்களே தவிர முன்கால எல்லையைக் கூறினார் எவருமில்லை. தமிழ்மொழி பண்டைக்காலத்தில் கடல்கோளுக் குட்பட்ட குமரிக்கண்டத்தின் தெற்குக் கோடிமுதல் இந்திய நாட்டின் வடவெல்லையாகிய இமயம்வரை பன்னூற்றாண்டுகள் வழங்கியிருந்ததென்பதும், வெளிநாடுகளில் தமிழர்கள் குடியேறியிருந்த இடங்களிலெல்லாம் தானுங் குடியேறிப் பரவிநின்றதென்பதும் ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் ஒப்ப முடிந்ததொன்றும்.

தமிழ் தோன்றித் தனிப்பாஷையாய் வழங்கி நின்ற அந்தக் காலத்தில் இவ்வுலகில் அது வழங்காத இடமே இல்லையென்னலாம்.

"சதுமறை யாரியம் வருமுன் சகமுழுது நினதாயின்
முதுமொழிநீ யனாதியென மொழிகுவதும் வியப்பாமோ"

என்று சுந்தரம் பிள்ளையவர்கள் கூறியதும் இக் கூற்றை வலியுறுத்தும்.

மொழிநூலுடையராகிய மாகறல் கார்த்திகேய முதலியார் தமது நூலில்;

"அம்புவி தனக்குள்வளர் செந்தமிழ் வழுத்தியுனை
அன்பொடு துதிக்கமனம் அருள்வாயே".

என்னுந் திருப்புகழை எடுத்துக்காட்டி, ஓர் காலத்தில் தமிழே உலகத்திருந்ததென்பது பெறப்படுகின்றது" என்றெழுதினர். அவர் மேலும் அதே இடத்தில்,

"சனகற்கும் அகத்ய புலத்ய சனற்
குமரர்க்கும் அனுக்ரக மெய்ப்பலகைச்
சதுபத்து நவப்புலவர்க்கும்— விபத்தியில் ஞான
படலத்துறு லக்கண லக்யத்தமிழ்த்
த்ரயமத்திமி லகப்பொருள் விர்த்தியினைப்
பழுதற் றுணர்வித்தருள் வித்தகசற் குருநாதா"

"கொன்றைச் சடையார்க் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழாற் பகர்வோனே."

"வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்திய மாமுனி யிடைக்காடர் கீரனும்
வகுத்த பாவினிற் பொருட் கோலமாய்வரு முருகோனே"

என்பன முதலிய அடிகளையெல்லாம் எடுத்துக் காட்டிப் "புலத்தியர் முதலியோரும் தமிழ் கற்றவ ரென்பது பெறப்படுகின்றது. அயன், மால், சிவன்

முதலோரும் தமிழ் பேசுவர். இந்திரன் குபேரன் முதலோரும், தாருகன் இரணியன் முதலோரும் அன்னர், அகத்தியர், மார்க்கண்டேயர், வான்மீகர், கவுதமர், சுகர், வசிட்டர், காசிபர் முதலிய முனிவர்களும் தமிழ் நூல் செய்தவராவர். சனகர் சனத்குமாரர் முதலோருந் தமிழ்நூல் ஆராய்ந்தவர்" என்றெழுதித் தேவர் முனிவர் முதலிய தெய்வத் திருக்கூட்டத்தையுந் தமிழாகச் செய்தார்.

சேரமான் பெருமாணாயனார் தாம் பாடிய திருக்கைலாய ஞானவுலாவைக் கைலைமலையிற் சிவபெருமான் திருமுன்னர் அரங்கேற்றஞ் செய்ததாகப் புராணங்கள் வாயிலாக அறிகிறோம். இதனாலும் முற்கூறியவைகளாலும் தமிழ்மொழி தெய்வமொழியென்பதும் பெறப்படுகின்றதன்றோ?

ஒருகாலத்தே ஆசியாக் கண்டம் முழுவதும், ஐரோப்பாக் கண்டம் முழுவதும், வடிவம் பலவிதமாக மாறுபட்ட தமிழ் வழங்கி வந்தது. அது நாளடைவில் பல்வேறு மொழிகளாக முடிந்தது. இது முன்னர்க் கூறிய பலவிதமான சான்றுகளாலும் நன்கு துணியப் பெறும். பெகு, பினங்கு, சிங்கப்பூர் முதலிய கீழை நாடுகளிற் காணப்படும் கலிங்கர்களிற் பெரும்பாலோர் தமிழர்களே. மோரீசுக்கும், மேலையிந்தியக் குடியேற்ற நாடுகளுக்குஞ் சென்றுள்ள கூலிமக்களிற் பெரும்பாலோர் தமிழர்களே. சுருங்கக்கூறின் பொருள் திரட்டும் வழியமைந்துள்ள இடங்களிலெல்லாம் தமிழர்களைக் காணலாம். சோம்பேறிகளாய் நகத்தில் அழுக்குப் படாமல் வாழவிரும்புஞ் செல்வர்கள் வசிக்குமிடங்களிலெல்லாம் தமிழர்களை அணியணியாகக் காணலாம்,"

என்று கால்டுவெல் தம் ஒப்பிலக்கணத்திலே கழறினர். இஞ்ஞான்றே உலகம் முழுவதும் தமிழர்கள் பரவி ஆங்காங்கெல்லாந் தமிழ் மொழியைப் பரப்புகின்றனர்.

சிந்துநதிப் பிரதேசத்தில் சிந்துநதியின் வெள்ளத் தாக்கு வண்டல்களாற் பல்லாண்டுகட்கு முன்னர்ப் புதையுண்டு பூமிக்குள் இருந்த ஹரப்பா, மகஞ் சோதரோ, சங்குதாரோ முதலிய நகரங்கள் ஆராய்ச்சிக் காரர்களால் சமீப காலத்திற் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளை நன்கு ஆராய்ச்சி செய்தபோது இங்கு அகப்பட்ட நாணயங்களின் எழுத்துக்கள், வீடுகள், வீதிகள், கோயில்கள், குளங்கள் முதலிய எல்லாம் தமிழருடையவைகளாக இருக்கின்றனவாம். இந்நகரம் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து முற்காலத்தில் இந்தியநாடு முழுவதும் தமிழே பேசி வந்த மக்கள் வாழ்ந்திருந்தனரென்று ஐயத்திற் கிடமில்லாமல் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் இந்தியநாடு முழுவதும் பழந்தமிழ் நாடென்பதற்குப் போதிய ஆதாரங்களிருக்கின்றன.*

---

*(1) "வால்மீகி முனிவரது ஆசிரமம் சித்திரகூடம். இது மத்திய இந்தியாவில் "பண்டில்கண்டு" பிரதேசத்தில் உள்ளதென்பர். இவ்விடங்களில் தமிழ்ப் பாஷை முன்னளில் வழங்கியிருக்கக் கூடுமென்பதற்கேற்ப, இம் மத்திய இந்தியாவிலே பெரும்பான்மையான இடங்களிலும், மத்திய மாகாணங்களிலும், அதன் வடபால் சூடிய நாகபுரிப் பிரதேசங்களிலும் அதற்கு வடக்கேயுள்ள 'ராஜ்மஹால்' மலைப்பக்கத்துமுள்ள அரவணரும் (ORAVANS) மலையரும் (MALARS) பாணியருய (PANIANS தமிழ்ச் சாதியின் சரியான அச்சாக விருக்கிறர் எனப்படுகிறது. இதுவரை மத்திய மாகாணத்தும் சூடிய நாகபுரியிலுமுள்ள

பழைய திராவிட ஜனத்தொகை 1901-ம் ஆண்டு ஜனக் கணிதத்தின்படி 592351 என்றும், இவர் மொழி திராவிட பாஷைகளில் ஏனையவற்றினும் தமிழ் கன்னடங்களுடன் மிக நெருங்கிய சம்பந்த முடையதென்றும் தெரியவருகிறது. இனிக் கங்கைக் கரையின் கண்ணுள்ள 'ராஜ்மஹால்' மலைப் பிரதேசங்களில் வசிக்குந் தமிழ்ச் சாதியார் மலையரெனவும் அவர் பாஷை மலாடு எனவும் வழங்கப் பெறுமென்றும், இம்மக்களின் அக்கணிதப்படி 60777 என்றும், இவர் மேற்கூறிய அரவர்களுடன் தொடர்புடைய ஜாதியாரே எனவுஞ் சொல்லப்படுகின்றன.

தென்னாடும் வான்மீகரும். மு. இராகவையங்கார்.

(2) "அத்தினபுரியை இராசதானியாகக் கொண்ட குரு நாடும்; திருதராட்டிரன், ஆரியனான காந்தார தேசத்தரசன் மகளாகிய காந்தாரியை மணஞ் செய்யுமுன், தமிழ் நாடாகவே யிருந்தது. பிறகு அக் காந்தாரியின் குல மொழியே அரண்மனை மொழியாகி நாளடைவில் வளர்ச்சி பெற்றமையின் அது ஓர் சார் ஆரிய நாடு போல்வதாயிற்று."

மொழி நூல். மாகறல் கார்த்திகேய முதலியார்.

(3) "மத்திய மண்டிலத்திலும் வங்காளத்திலும் வழங்கும் திருந்தா மொழிகளுள் இரண்டிலாவது திராவிடத் தொடர்பு இருக்கிறதென்பது மேற்கூறிப் போந்தவற்றால் இனிது விளங்கும். எனவே திராவிடப் பெருங் குழுவினர் கங்கைக் கரையிலில்லா விட்டாலும் வங்காள மண்டிலம் வரையிலேனும் பரவியிருந்தார்களென்பது போதருகின்றது. முன்னைப் பழங்காலத்தில் திராவிடக் குழுவினர் இந்தியா முழுதுமே பரவியிருந்திருத்தல் வேண்டும் என்ற கொள்கை ஒருவாறு இதனால் வலியுறுத்தப் படுகின்றது."

கால்டுவெல் ஒப்பிலக்கணம். காழி-சிவ-க. B. A.

K. அப்பாதுரைப் பிள்ளை M. A.

(4) "பண்டைத் தமிழ்நாடு ஆதிகாலத்தில் இமயம் முதல், பஃறுளி யாற்றிற்குத் தெற்கேயிருந்த தென்கோடி வரை பரவி யிருந்தது. பண்டைத்தமிழரின் இனத்தார் இந்தியாவிற்கு வெளியே மேலை ஆசியாவிற்குச் சென்று, சீனர் முதலிய மங்கோலிய இனத்தவரோடு கலந்து ருஷியாவில் பல இடங்கட்கும் வட துருவம் வரை சென்று ஆங்காங்கு தங்கினரெனவும், கடல் வழியாகவோ நிலவழியாகவோ மெச்சிகோ முதலிய அமெரிக்க நாடுகட்குச் சென்றனரெனவுங் கருத இடமிருப்பதால், ஒரு காலத்தில் உலகெங்குந் தமிழரின் தொடர்பு இருந்திருப்பதாகத் தெரிகிறது. இக்காரணம் பற்றி "ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழெனு" நமது மொழியை ஆசிரியர் சேக்கிழார் சிறப்பித்தார் போலும்.

பண்டைத் தமிழ் நாடு.

கா. சுப்பிரமணிய பிள்ளை, **M. A., M. L.**

(5) "ஈரூழிகளில் கடல்வாய்ப்பட்ட தமிழ்மக்கள் கால் வழியாகவும் கலனேறியும் பசுந் தீவுவரை பற்பல விடங்களிற் குடியேறி நானாவிதப் பெயர் பெற்று விளங்கின ரென்று முன்னரே கூறியுள்ளோம்; பல நிலங்களில் எட்டிப் பார்த்தல் என்ற தொகுதியில் 'திருவிடம் அல்லது ஹோலிலாண்டு என்று பெயரிட்டு ஜான் பெ (F) னிமோர் எழுதி விடுத்த நூலைப் படித்த திருவாளர் எம். எஸ். இராமசாமி ஐயரவர்கள் தமிழருக்கும் அந் நாட்டாருக்குமுள்ள ஒற்றுமை நயங்களைப் பின்வருமாறு காட்டியுளார். அவை தமிழ் மக்களாற் கவனிக்கற்பாலன. முதலில் உழவர் இல்லம்: கர்நூல், கடப்பையில் குடிசையின் களிமண்ணு லாக்கப்பெற்ற மேற்றரை முகட்டில் புல் முளைத்து வளர்தலைப் போல ஆண்டுங் காணலாம். பாய்விரித்து வருபவர்களைப் பாயிலமருமாறு வரவேற்றலும், இரவில் துயின்ற பின் படுக்கைகளைச் சுருட்டிப் பக்கஞ் சேர்த்தலும் இரு நாட்டின் கண்ணும் வழக்கம். நெல் குலுக்கை ஈண்டுளது போல ஆங்குமுளது. பெண்கள் இருநாட்டிலும்

தீ எரிக்கச் செத்தை, சுள்ளி சேர்க்கத் திரிவார்கள். மதுரைப் பக்கத்திலுள்ள பெண்கள் நீர்க்குடங்களைத் தலையிலேற்றிக் கொண்டு கையிற் செம்பைச் சுமந்து வருதல்போல அந்நாட்டிலுங் காணக்கிடைக்கும். அன்றியும், மாவு திரித்தற்பொருட்டு மாதர் திரிகை எந்திரத்தை வழங்குவதையும் அதைச் சுற்றியிருந்து மாவு திரித்தலையும் படத்திற் பார்க்கலாம்.

புத்தகத்தின் மூன்றும் பகுதியின் முடிவிற் காணப்படும் ‘பெ (F) ல்லா’ என்பவர் இந்தியாவிலுள்ள பள்ளர்கள் என்றே புலப்படுகின்றது. மேலும், துணி துவைப்பதற்கு ஆறு குளங்களுக்குச் செல்லும் வழக்கமும் காணப்படும். குடிகள் வெண்ணெய்யை வழங்காமல் உருக்கி நெய்யாக்கி யுண்ணுதலும் தெரிய வரும். உண்ணு முன் கை கழுவலும், வலது கையாலுண்ணலும் குந்தியிருத்தலும், உண்டபின் கை கழுவலும், தெலுங்கு நாட்டுப் பெண்களைப் போன்று பெண்கள் புகைப் பிடித்தலும், உண்ணுமுன் தெய்வ வழிபாடு கூறலும் பாலெஸ்டினிற் பரக்கக் காணலாம். ஏர், மழைக்காகக் கொடும்பாவி கட்டியிழுத்தல், மரக் கொப்புகளில் குழந்தைகளுக்குத் துணித் தொட்டில் கட்டிப் பிள்ளைகளைத் தூங்க வைத்தல், அறுப்பு, அடிப்பு, சாவி போக்குதல், போரிடுதல் இவையும் தாய்நாட்டிலும் குடியேற்ற நாட்டிலும் இன்றும் வழக்கிலுள. ஆட்டுப்பட்டி குடிலுண்டு. இறைச்சி கிடையாது. ஊர்த்தெருவெல்லாம் புழுதி மயமே. நாய்களைப் பற்றிய விவரமும் இந்நாட்டு நாய்களுக்கே உரியதாய்த் தோன்றுகிறது. வீடுகளில் பலகணிகள் (ஜன்னல்கள்) கிடையா. இருப்பின் மிகச் சிறியனவாகக் காணப்படும். தவிரவும், ஈபுரு என்பது எபிரா, அபிரா, அரபா, என்பவற்றின் திரிபு. கிருஷ்ணன் அரவ=தமிழ் நாட்டான். பாலைக் கொடுத்துத் திருடனை ஏமாற்றிய பிராமணியின் கதை தெரிந்ததே. இவ்வகை யேமாற்றம் அந்நாட்டிலுமுள்ளது. மகன் பிறந்தாற் களிப்பும் பெண் பிறந்தாற் பழிப்பும், பிள்ளையைத் தாய் முதுகிற் சுமத்தலும் வழக்கமாம். குறத்திகள் இன்றும் குழந்தைகளைத் தோளிற் சுமக்கின்றார்கள். கவண் கல்லெறிதலும் பார்வை

(திருஷ்டி)க் குற்றமும், பாணதீர்த்தா அருவிகள் பாணியா என்று அழைக்கப்படுதலும், முதல் நூற்றுண்டில் மரவுரி தரித்த பாணர் என்ற முனிவரைப்பற்றிய ஜோஸிபஸின் கூற்றும் புனிதமாகக் கொள்ளப்படும். ஆற்றங்கரைகளில் நீராடுதலும் நீராடி வருபவர்கள் கொம்புக் குச்சிகளை அடையாளமாகக் கொண்டு வருதலும், கோயில்களைச் சுற்றி ஈரத் துணியுடன் பலமுறை வலம் வருதலும், ஆறுகளில் வீட்டடங்கியவர் துணிகளைத் துவைக்கக்கொண்டு போதலும், இன்னோரன்ன பல நடைகளும் தெற்றெனத் தெளிவுறும். பள்ளிஸ்தானமாகிய அந்நாட்டிற் பெயர்பெற்ற பால் **(St Paul)** குரு என்பவர் பிராமணர் என்றும், புறவொழுக்க முற்றிய (Pharisee) என்ற வகுப்பினர் பிராமணரே என்றும் பிராமணருக்கு எதிரியாகத் தோன்றி அன்னார் புறவொழுக்கத்தைக் கண்டு பிடித்தவர் ஏசு (ஜீஸஸ்) கேசவர் என்றும், ஏசு கிறிஸ்து ஆசாரி மகனென்றும், அவருடைய முன்னோர் பெயர் 'ஆசார்' என்றும் இப் பெயருக்குப் பொருள் மேனாட்டு உரையாளருக்கு, முன் விளங்கவில்லை யென்றும், பால் ஏசுவின் நெறியிலொழுகி ஜாதி வேற்றுமை தீண்டாமையினை ஒழித்தனரென்றும், ஏசு ஆசாரி மகனெனில் தமிழனே என்றும், ஆசாரி நூல் அணிவது வழக்க மாதலின் ஏசுவும் நூலணிந்திருக்க வேண்டுமென்றுங், சந்நியாசியான பின் நூலணிதலை யொழித்திருக்கக் கூடுமென்றும், ஓவியர்களில் ஒரு வகையினரைச் சார்ந்த பெருஜினோ கூட்டத்தவர் ஏசுவின் படமெழுதியதில் நூலிட்டிருக்கின்றனரென்றும், சமய வுண்மைகளை வெளிப்படுத்துங் கூட்டத்தைச் சார்ந்தவர் அவ்வோவியரென்றும், பளாரன்ஸ் நகரத்தில் "யுபிஸினோ" படக்காட்சிச் சாலையில் தொங்கவைத்திருக்கும் "நல்லிடையன் என்ற ஏசுவின் படத்தில் ஏசு நூலணிந்திருப்பதைப் பார்க்கலாமென்றும், 'ஏசுகிறிஸ்து' கேசவ கிருஷ்ணன் என்ற பெயரின் திரிபு என்றும், தம்மினும் மேம்பட்ட ஆராய்ச்சியாளர் இவ்வகை யாராய்ச்சியைச் செவ்வனே செய்யுமாறு தம்மாலியன்றதை எடுத்துதவினரென்றும் ஐயரவர்கள் கூறியுள்ளார். அன்றியும் அரேபியாவே அரவ—

இங்ஙனம் பல ஆராய்ச்சி யாளர்களுடைய முடிபும் பண்டைக் காலத்தில் தமிழ் இந்திய நாடு மட்டு மன்றி இந்த உலகம் முழுவதுமே வழங்கி வந்திருக்க

---

தமிழ் நாடென்றும், முகம்மதுவும் இந்துவாகப் பிறந்து, பின்னர் ஆங்கு குடியேறினவரென்றும்; முதலில், குழந்தை (சிசு) பருவத்தில் தமிழ்ப் பெயரே தாங்கி யிருந்தனரென்றும்; இவர் பரப்பிய மதம் தமிழர் மதச் சீர்திருத்த மென்றும்; இத்தகைய வுண்மைகளை அடுத்தெழுது முறையில் ஆளுவேமென்றும், காவலுதவித் தலைவரையரவர்கள் அருளியுள்ளார்.

தமிழ் நாட்டிற்கும் பாபிலோன், பாலஸ்டீன் முதலான பிற நாடுகட்கும் வணிகம் நிகழ்ந்த விவரம் ஆராய்ச்சியாளர் குறிப்புகளிற் காணலாம். மயிற்றோகை, தேக்கு என்பவற்றை அரசன் சாலமன் வரலாறு கூறும். முக்கிய பட்டணத்தின் பெயர் 'ஊர்' என்று முடிவதைத் தமிழ் நாட்டில் எங்கும் பார்க்கலாம். உறையூர், நாகூர், ஆக்கூர், பாவூர், கருவூர் முதலான பெயர்கள் தமிழ் நாட்டிலுள. பாபிலோனியாவிலும் இத்தகைய பெயருளது. வணிகப் போக்கு வரவு ஏற்பட்டபின் கிரேக்கர் (யவனர்) கைதேர்ந்த தச்சர்களாகவும், மாடமாளிகை, அரண்மனைகளில் காவலாளர்களாகவும் ஊழியஞ் செய்து வந்தன ரென்பதை 'ஐம்பெரும் வீர வரலாறுகளில் காணலாம்."

" பாலெஸ்டின் தமிழ்க்குடிநாடே.

மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை, பி.எ., எல்.டி.

(6) "இனி நடு அமெரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் ஏழாயிரம் ஆண்டுகட்கு முன் உயிர் வாழ்ந்த மக்களுந் தமிழ் நாட்டிலிருந்து சென்றவர்களே என்பதற்கு வேண்டும் சான்றுகள் புலனாய் வருகின்றன."

பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்.

மறை மலையடிகள்.

வேண்டு மென்பதை வலியுறுத்துவனவாயின. மனோன் மணீய நூலாசிரியராகிய காலஞ்சென்ற திருவனந்த புரம் சுந்தரம் பிள்ளையவர்களும், ஆசியாக்கண்டத்திலும் ஐரோப்பாக் கண்டத்திலும் ஆரியம் வருமுன், தமிழ் போன்றதோர் மூலபாஷை பரவி யிருந்த தென்பது மொழியாராய்ச்சியில் வல்ல ஐரோப்பிய பண்டிதர்க்கும் கருத்து என்று அபிப்பிராயப்பட்டனர். அவ்வபிப் பிராயத்தையே தமது மனோன்மணீய நூலிலும், ' சதுமறை யாரியம் வருமுன் சகமுழுது நினதாயின், முதுமொழி நீய னாதியென மொழிகுவதும் வியப்பாமோ" என்று கூறினர் .வடமொழிக்குத் தமிழ் முற்பட்ட தென்பதும், இத்தாலியா தேசத்தில் பல நூற்றாண்டுகட்கு முன்னே தமிழர்கட்குச் சம்பந்தமான சாதியார்களிருந்தார்க ளென்பதும் கால்ட்வெல் முதலியோருக்கு உடன்பாடு. மக்களின் நடையுடை பாவனை நாள்தோறும் வளர்ந்து வேறுபட்டு வருகிறதைக் காண்கிறோம் அல்லவா? அங்ஙனமே பாஷையும் வளர்ந்து பலவிதமாகத் திரிந்து மாறுபட்டுப் போயிற்றென்பதற்கைய மென்னே? " ஒரு மொழி இலக்கிய மொழியாகப் பயிலத் தொடங்கியதும், அஃது அம்மொழியின் பேச்சு நடை மொழியுடன் தொடர்பற்றுப் பிறிதொரு மொழியாய் விடுதல் இந்திய மொழிகளிடைக் காணப்படும் புதுமைகளுள் ஒன்றாகும்" எனக் கால்ட் வெல்லும் அபிப்பிராயப் படுகிறார். இதனால் இந்தியா முழுவதினும் வெளிநாடுகளினும் வழங்கி வந்த தமிழே பலவிதமாகத் திரிந்து இஞ்ஞான்று வழங்குவதுடன் தமிழ்த்தாக்கும் போக்கும் உடையதாகவிருக்கிறதென்பது பெறப்படுகின்றது.

# அதிகாரம் 10.

---

## தமிழ் நாடும் அயல் நாடும்

தமிழர்கள் முதலிற் குமரிக் கண்டத்தில் தோன்றி உலகம் முழுவதும் சென்று மக்கட் கூட்டத்தை யுண்டாக்கினார்களென்று பலவித காரணங்களைக் கொண்டு முன்னரே முடிவு கட்டினோம். இப்போது அந்நாடுகளிலுள்ள சில தமிழ் நாட்டுக் கோயில் முதலியவைகளைப் பற்றிப் பேசுவோம்.

ஐரோப்பாக் கண்டமெல்லாம் போய்ப் பரவிய தமிழர் கூட்டம் நீண்டகாலம் வரை தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்களையே பாதுகாத்து வந்தது. பல தலைமுறைகளுக்குப் பின்னரே கொள்கைகள் வழிபாடுகள் முதலியவை மாறுதலடைந்தன.

எகிப்து நாட்டில் தெறல்பஃறி என்னுமிடத்தில் உள்ள அஷ்தாப் அரசியின் கோவிலில் எழுதப் பெற்றிருக்கும் ஓவிய எழுத்துக் கல்வெட்டுகளில் அந்த எகிப்தியர் தென் கடற் குமரி நாட்டுப் பாண்டி தேசத்திலிருந்து வந்தவர்களென்றும், நீலாற்றங் கரையிற் குடியேறியவர்களெனவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றதாம்.

அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் ஏழாயிரம் யாண்டுகட்கு முன் வாழ்ந்திருந்த மக்களும்

தமிழ் நாட்டிலிருந்து சென்றவர்களே என்பதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைத்து வருகின்றனவாம். (See Prof. Konrod Heabla's article in Harmsworth History of the world).

எகிப்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ள கோயில்களிற் காணப்பெறும் சித்திர வேலைகள், இந்திய நாட்டுக் கோயில்களிற் காணப்பெறும் சித்திர வேலையை ஒத்திருக்கின்றனவாம்.

வட அமெரிக்கர்கள் தங்களுடைய முன்னோர்கள் சூரியன் உதயமாகும் ஒரு தீவினின்று வந்தவர்களென்று இப்போதுஞ் சொல்லிக் கொள்ளுகின்றனராம். மற்றும் பல பழக்க வழக்கங்களும் தமிழருக்கு மிகவும் நெருங்கியவைகளாக விருக்கின்றனவாம்.

பினீசியரது பண்டைக் கடவுள் வழிபாடும் தமிழரது சிவ வழிபாட்டோடு மிகவும் ஒற்றுமை யுடையதாக விருக்கிறதாம். அவர் ஞாயிற்றுக்கு வழங்கும் பெயரும் "எல்" என்னுந் தமிழ்ப் பெயர்தானும். சிவலிங்கம் போன்று தலை குவிந்த கற்களை மலையுச்சிகளில் வைத்து அவர்கள் வணங்கி வந்தனராம்.

கிரேக்கர்கள் ஒலிம்பஸ் என்னும் மலையுச்சியில் வைத்து வணங்கிய சியஸ் என்னும் தெய்வம் சிவனைப் போலத்தானிருக்கிறதாம். எற்றுலெனின் ; அச் " சியஸ் " என்னும் சுவாமிக்குஞ் சடைமுடி, கையில் திரிசூலம் முதலியன விருக்கின்றனவாம். அவர்கள் அமைத்த கோயில்களும் தென்தமிழ் நாட்டிலுள்ள தமிழரது சிவன் கோயில்களைப் போலவே கருங் கற்றூண்

கொடித்தம்பம், பலிபீடம் முதலியவைகளை யுடைத்தா யிருக்கின்றனவாம்.

ரோமருடைய சூபிதர் வழிபாடும் தமிழர்களது சிவ வழிபாட்டையே பெரிதும் ஒத்திருக்கின்றதாம். ஆங்கிலேயரும் சர்மனியரும் முற்காலத்தில் தமிழர் வழிபாட்டைப் போன்ற ஒரு வழிபாட்டைச் செய்தவர்கள்தானும்*

மேலும், அந் நாட்டார் நமது நாட்டார் (கடம்பவனம் தில்லைவனம் மூங்கில்வனம் திருவாலங்காடு) தோப்புகளில் கோயில் அமைத்து வழிபாடு செய்தமையைப் போலத்தான் தோப்புகளிலும் காடுகளிலும் வழிபாடுகள் செய்து வந்தனராம். ஒரு காலத்தில் நமது தமிழ்மொழி உலகம்முழுவதும் பரவியிருந்ததை மானச்

---

* (1) "ரோமருடைய சூபிதர் வழிபாடும் தமிழர்களது சிவ வழிபாட்டையே பெரும்பாலும் ஒத்திருக்கின்றது. "ஆங்கிலர் ஜெர்மானியர் என்னும் இரு திறத்தாருக்கும் முன்னோரான மக்கள் செய்து போந்த தெய்வ வழிபாடும், தமிழ் மக்கள் செய்து போதரும் வழிபாட்டோடு ஒப்புடைத்தாதலும் ஒரு சிறிது ஆராய்ந்துணர்தல் இன்றியமையாதாகின்றது. ஆங்கிலேயர் ஜெர்மனியர்களுக்கு முன்னோர் தீயுதோனியர் (Teutons) இவர் 'Woden' எனப் பெயரிய கடவுளை இறைஞ்சி வந்தனர்......இக் கடவுள், எல்லாக் கடவுளுக்குந் தாயான ஒரு பெண் தெய்வத்தைத் தமது பக்கத்தே வைத்திருப்பவரென்றும், ஞாயிற்றினைக் கண்ணுகை யுடையராயும் உள்ளவரென்றும் சொல்லப்படுகின்றனர்."

தமிழகம்.

ந. சி. கந்தைய பிள்ளை.

சைவ சமயச் சிவ வழிபாடும் பரவி யிருந்ததென்று ஆராய்ச்சியாளர்கள் முடிவு கட்டுகின்றனர்.*

மேற் கூறப்பெற்ற கடவுளர்களெல்லாம் தமிழ் மக்களோடுதான் சென்றவர்களே யன்றிக் காட்சி பார்ப்பதற்காகவோ, அல்லது தாங்கள் காட்சிப் பொருளாக இருப்பதற்காகவோ சென்றவர்களல்ல ரென்று உறுதியாகக் கூறலாம்.

இங்கிலாந்திலுள்ள கிறித்துவ ஆலயங்களையும் மூலை முடுக்குகளையும் கவனிக்கும்போது, அது ஒரு சைவ நாடு அல்ல என்று கருத முடியவில்லையாம்.

---

* (1) "வட ஆப்பிரிக்கா கண்டத்தில் ஈஜிப்ட் தேசத்திலுள்ள மெம்பீஸ் நகரத்தில் நந்திவாகனன் திரிசூலன் சாம்பவாக்ர சர்ப்பாம்பரதாரியான பரமேஸ்வர விக்கிரகமும், பாபிலோன் பட்டணத்தில் 1200 அடி உயரமுள்ள சிவலிங்கமும், ஹைட்டோபோலீஸ் என்னும் பட்டணத்தில் 600 அடியுள்ள சிவலிங்கமும், மெக்காவில் ஸகமக்கேஸ்வர நாமமுள்ள ஒரு சிவலிங்கமும் ஸம் ஸம் என்னும் கிணற்றில் ஒரு சிவலிங்கமும் இருக்கின்றன. ப்ரசில் (பிரேசில்) தேசத்தில் அநேக சிவலிங்கங்களும் விக்நேசுர மூர்த்தங்களும், காரிந்த் பட்டணத்தில் பார்வதி தேவியின் ஆலயமும், கிளாஸ்கோவில் சுவர்ண கவசத்தினுல் போர்க்கப்பட்ட ஒரு சிவலிங்கமும், பிரிஜியன் தேசத்தில் ஏடன் என்னும் சிவலிங்கமும், விஸியா, யகோதி, சிதரால், காபூர், பலக்புகார் முதலான இடங்களில் அநேக சிவலிங்கங்களும் இருக்கின்றன. அங்குள்ள சனங்கள் பஞ்சாட்சர பஞ்ச வீர என்னும் பெயரால் அழைத்தும் அர்ச்சித்தும் வருகின்ருர்கள் என்று 'வீரசைவம் என்னும் மாதாந்தப் பத்திரிகை கூறுகின்றது."

சித்தாந்தம். ம. 3. இ. 3.

லிபியா என்னும் நாட்டிலுள்ள ஒரு சமாதியின் மேலே ஒன்பதடிக் குறுக்களவுள்ள ஒரு சிவலிங்கம் இருக்கிறதாம். இது நமது நாட்டு வழக்கத்தை மேற்கொண்டதென்பதற் கையமென்னை ?

பாபிலோனியாவி லுள்ள கோயில்களில், தமிழ் நாட்டின் கோயில்களிலிருப்பதைப் போலத் தேவதாசிகளிருந்தார்களென்று சரித்திரக்காரர்கள் சாற்றுகின்றனராம்.

வட அமெரிக்காவிலுள்ள மெக்சிகோ நகரத்தில் சந்திர சூரியர்களுக்குக் கோயில்களிருந்தனவாம். மொண்டிசூடா என்ற அரசன் காலத்திலும் அக் கோயிலில் பூசை முதலியன நடந்து வந்ததாம்.

இத்தகைய சான்றுகள் பலவற்றால், நமது தமிழ் மக்கள் உலகமெல்லாம் சென்று குடியேறிய காலத்தில் தங்களுடன் தங்களது மொழி, கடவுள் வழிபாடு முதலியவைகளையுங் கொண்டுபோய், நீண்டகாலம் பாதுகாத்து வந்தனரென்பது சிறிதும் ஐயத்திற்கிடமின்றிப் பெறப்படும்.

---

# அதிகாரம் 11.

---

## தமிழ்நாடும் பிரிவுகளும்

தமிழ்நாட்டைப் பண்டை நாட்புலவர்கள் செந்தமிழ் நாடென்றுங் கொடுந்தமிழ் நாடென்றும் பிரித்திருக்கின்றனர். தமிழ் என்பது பொதுச் சொல், செம்மை யென்பதுங் கொடுமை என்பதும் உயர்வையும் இழிவையு முணர்த்த வருகிற அடைச் சொற்கள்.

செந்தமிழாவது இலக்கணத்துடன் பொருந்திச் சிறப்பாகப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருவது. கொடுந்தமிழாவது இலக்கணம் நன்கு நிரம்பப் பெறுமல் கொச்சைமொழி சேரப் பெற்று "வாருன், போருன்" என்பனபோல் பேசப்பட்டு மக்களின் சோம்பேறித்தனத்தாலும் அசட்டையாலும் அழகு கெட்டுவருவது. மனம் போனபடி பேசப்பட்டும் எழுதப்பட்டும் வரும் கொடுந் தமிழ், அதிகமாகத் திரியத் தொடங்குமாணுல் வேறொரு மொழியாகவே மாறிவிடும். கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகள் இவ்வாறு திரிந்தவைகள்தாம்.

பண்டைத் தமிழ் நூலார் செந்தமிழ் நாடு எது? கொடுந்தமிழ் நாடு எது? என்று வரையறை செய்து வைத்துள்ளார்கள். ஆனுல் மொழியானது காலந்தோறும் மாறுபாட்டையடையும் இயற்கைத் தன்மை பொருந்தியதாகையால், ஒரு காலத்திற் செந்தமிழ் வழங்குமிடம் பிறகு கொடுந்தமிழ் வழங்குமிடமாகவும், கொடுந்தமிழ் வழங்குமிடம் பிறகு செந்தமிழ் வழங்குமிடமாகவும் மாறிவிடுகின்றதென்று முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. செந்தமிழ் நாடு பாண்டி நாடுதான் என்று பகருகிறவர்கள் ;

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சௌந்தர பாண்டியன் எனுந் தமிழ்நாடனும்
சங்கப் புலவரும் தழைத்தினி திருந்த
மங்கலப் பாண்டி வளநா டென்ப."

என்னும் பாட்டை ஆதாரமாக வெடுத்துக் காட்டுகின்றனர் செந்தமிழ்நாடு சோழ நாடுதான் என்று சொல்லுகிறவர்களோ,

"செந்தமிழ் நாடே
மன்றவாணன் மலர்திரு அருளால்
தென் தமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறுஞ் சோழனும்
சைவமா தவருந் தழைத்தினி திருந்த
மையறு சோழ வளநா டென்ப"

என்னும் பாட்டை ஆதாரமாக வெடுத்துக் காட்டு கின்றனர். தங்களுடைய நாடென்று நினைத்து ஒன்றை நாட்ட நினைப்பது நன்கு நிலைபெற மாட்டாது. இந்தப் பாடல்கள் போட்டி காரணமாக ஒன்றிலிருந்து மற்றொன்று முளைத்திருக்க வேண்டுமென்பதிற் சிறிதும் ஐயப்பாடில்லை தொல்காப்பிய உரை யாசிரியர்கள் செந்தமிழ்நாடு "வைகையாற்றின் வடக்கும், மருத யாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்கும்" என்று எல்லை கூறியிருக்கின்றனர். இதனாற் சோழநாடு செந் தமிழ் நாடு என்பது பெறப்படும்.

செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்து பன்னிரண்டு கொடுந் தமிழ் நாடுகள் உள்ளனவாம்; அவைகளை,

"தென் பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன் வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்."

என்னும் வெண்பா விளம்புகிறது. இவ்வெண்பாவுள் சோழநாடும் (புனனாடு) கொடுந்தமிழ் நாடாகக் கூறப் பட்டிருக்கிறது—ன் தென்பாண்டிநாடுஞ் சேர்க்கப்பட் டிருக்கிறது.

சேனாவரையர், "பன்னிரு நிலமாவன பொங்கர் நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை எனச் செந்தமிழ் நாட்டுத் தென்கீழ்பால் முதலாக வடகீழ்பாலிறுதியாக எண்ணிக் கொள்க," என்றெழுதினார்.

ஒவ்வொருவருடைய உரையும் மாறிச் செல்கின்றமையின் யாம் முன்னர்க் கூறியாங்கு காலத்திற் கேற்ப மாறிற்றென்றலே துணிபு.

---

# அதிகாரம் 12.

## தமிழ்நாட்டின் தற்கால எல்லை

தமிழ் நாட்டைச் சூழ்ந்து பதினேழு நாடுகளிருப்பதாகச் சில பாடல்கள் உள்ளன. அப் பாடல்களில் ஒன்று.

"சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுக்குடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் கலிங்கம் வங்கம்
கங்கம் மகதம் கடாரம் கவுடம் கடுங்குசலந்
தங்கும் புகழ்த் தமிழ்சூழ் பதினேழ் புவிதாமிவையே."

இப் பாட்டில் கூறப்பட்ட பல நாடுகள் தமிழ் நாட்டைச் சூழ்ந்தவல்ல என்பதை அனைவரும் நன்கறிவர். ஒருகால் இப்பாடல் மக்கட் படைப்புத் தோன்றி உலகமெல்லாம் பரவிய காலத்ததோ என்னவோ தெரியவில்லை.

### பாண்டிய நாட்டின் எல்லை

பாண்டியநாட்டின் வடக்கெல்லை வெள்ளாறு. மேற்கெல்லை பெருவழி. தெற்கெல்லை குமரி. கிழக்கெல்லை கடல். இதன் பரப்பு ஐம்பத்தாறு காதம். இதனை ;

"வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பெருவழியாம்
தெள்ளாற் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்டகடல் கிழக்காம் ஐம்பத் தாறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி"

என்னும் வெண்பா விளக்குகிறது.

### சோழ நாட்டின் எல்லை

சோழநாட்டின் கிழக்கெல்லை கடல், தெற்கெல்லை வெள்ளாறு, மேற்கெல்லை கோட்டைக்கரை. வடக்கெல்லை முதலில் திருப்பதிவரை யிருந்தது. தொண்டை நாடு பிரிக்கப்பட்ட பின் பெண்ணையாருயிற்று. இதன் பரப்பு இருபத்துநான்கு காதம். இதனை ;

"கடல் கிழக்கு தெற்குக் கரைபொருவெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப் பெண்ணை இருபத்து நாற்காதஞ்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்

என்னும் வெண்பா விளக்குகின்றது.

### சேர நாட்டின் எல்லை

சேரநாட்டின் வடக்கெல்லை பழநி கிழக்கெல்லை தென்காசி. மேற்கெல்லை கள்ளிக்கோட்டை. தெற்கெல்லை கடல். இதன் பரப்பு எண்பது காதம். இதனை ;

"வடக்குத் திசை பழநி வான்கீழ்தென் காசி
குடக்குத் திசை கோழிக் கோடாம்—கடற்கரையின்

ஓரமே தெற்காகும் உள்ளெண் பதின் காதம்
சேரநாட் டெல்லை யெனச் செப்பு

என்னும் பாடல் விளக்குகின்றது.

### தொண்டை நாட்டின் எல்லை

தொண்டை நாட்டின் மேற்கெல்லை பவளமலை. வடக்கெல்லை திருவேங்கடம். கிழக்கெல்லை கடல். தெற்கெல்லை பெண்ணையாறு. இதன் பரப்பு இருபது காதம். இதனை,

"மேற்குப் பவளமலை வேங்கடம் நேர் வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்குப்— பார்க்குளுயர்
தெற்குப் பிணாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு"

என்னும் வெண்பா விளக்குகின்றது. இவ்வெண்பாக்களெல்லாங் கம்பர் செய்தனவாகத் தனிப் பாடல் திரட்டு முதலிய நூல்களில் காணப்படுகின்றன. இக் காலத்தில் சில எல்லைகள் மாறுபாட்டை யடைந் திருத்தலுங் கூடும் மக்கட் படைப்புத் தோன்றி உலகமெல்லாம் பரவிய பழங்காலத்தே உலகமெல்லாமே தமிழ் நிலவி நின்றதென்பதை முன்னர்க் காட்டினோம். தமிழ்மொழி பல மொழியாக மாறுபாட்டையடைந்து சுருங்கிய எல்லைக்குள் வர ஆயிரக்கணக்கான யாண்டுகள் பிடித்திருக்கு மென்பதற்கு யாதும் ஐயமில்லை. சங்க காலத்தில் தமிழ் நாட்டெல்லை கூறத் தொடங்கிய புலவர் கருத்துக்களுள்ளே மாறுபாடில்லை. அவர்கள் கூறிய காலத்திலே அவ்வவ் வெல்லை யிருந்திருத்தல் கூடும். வடக்கே திருவேங்கடமும் தெற்கே குமரியாறும் கிழக்கிலும் மேற்கிலும் கடலும் முதலில்

எல்லைகளாக விருந்தன. நாளடைவில் குமரியாறு கடலில் அமிழ்ந்திவிட்ட படியாலும் சேரநாடு மலையாள மாக மாறியபடியாலும் தமிழ் நாட்டின் எல்லைகளும் மாறலாயின.

"வடதிசை மருங்கில் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட்டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரி................"

என்பது காக்கை பாடினியார் எல்லை.

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ் வரம் பறுத்த தண்புனல் நாடு"

"குமரி வேங்கடம் குணகுட கடலா
மண்டிணி மருங்கிற்றண்டமிழ் வரைப்பில்"

என்பன இளங்கோவடிகளின் எல்லை.

"வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந் நான்கெல்லை தமிழது வழக்கே"

என்பது சிகண்டியார் எல்லை.

"வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து."

என்பது பனம்பாரனார் எல்லை.

"குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனு நான்கெல்லை................"

என்பது பவணந்தியார் எல்லை.

இந்த எல்லைகள் கூறப்படுவதன் சமீப காலத்தில் கூடக் குன்றூர் (குண்டூர்) நெல்லூர் முதலிய ஊர் களும் தமிழ் நாடுகளாக இருந்தன என்பதற்கு இந்த தமிழ்ப் பெயர்களே தக்க சான்றென அறிஞர்கள் சாற்றுகின்றனர்.

# அதிகாரம் 13.

## தமிழ்மொழியும் பிறமொழிகளும்

உலகத்தில் ஆயிரக்கணக்கான மொழிகள் இக்கால மக்களாற் பேசப்பட்டு வருகிறதாகக் கணக்கெடுக்கப் பட்டிருக்கின்றன. இவ்வளவு மொழிகளும் எப்படிப் பெருகின? ஆண் பெண்ணிருவரால் ஆயிரக்கணக்கான மக்கள் சில தலைமுறைக்குட் பெருகி விடுவதைப் போலவே மொழியும் பெருகி வருகிறது. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களுமே வளர்ச்சியை இயற்கைக் குணமாகப் பெற்றுள்ளன. உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும் விரைவாக வளர்ந்து கொண்டு போவதைக் காண்கின்றோம். இங்ஙனமாக மக்களின் முக்கிய கருவியாய மொழி பெருகாது ஒரு படித்தாய் நிற்றல் எங்ஙனம் சாலும்?

இக் காலத்திலும் நாம் பேசுவது ஒரு விதமாகவும் எழுதுவது மற்றொரு விதமாகவும் இருக்கிறதல்லவா? வருகிறேன் என்பதை வாறேன் என்றும், போகிறேன் என்பதைப் போறேன் என்றும், அகப்பட்டுக்கொண்டான் என்பதை ஆப்பிட்டுக்கிட்டான், அம்பிட்டுக்கிட்டான் என்றும், போகிறாயா? வருகிறாயா? என்பவைகளைப் போறையா? வாறையா? என்றும் இப்படிப் பலபடியாக மாற்றிப் பேசப் படுகிறதைக் காண்கிறோம் அன்றோ? இப்படிக் கணக்கற்ற மொழிகள் பேச்சு வழக்கில் மக்களது சோம்பேறித் தனத்தாலும் அசட்டையாலும் மாறுதலையடைந்து விடுகின்றன.

இதனை நாம் இன்றுங் கண்கூடாகக் காண்கிறோம். இங்ஙனம் கொச்சைமொழியைப் பேசுங் கூட்டத்தினர் நாளடைவில் அதிகரித்துவிடின் இக் கொச்சை மொழி பின்னும் அதிக மாறுபாட்டை யடைந்து வேறொரு மொழியாகத் திரிந்து விடுகின்றது. அம் மொழியை இறுகப் பற்றிக்கொண்ட கூட்டத்தினரும் நாளடைவிற் பிறமொழிக்காரர்களாகி விடுகின்றனர். பின்னர்த் தமது மொழிக்கும் இம் மொழியிலிருந்தே சில மாறுபாடு களுடன் எழுத்துண்டாக்கி விடுகின்றனர். எழுத் தமைத்தவுடன் அம் மொழி வேறொரு மொழி போலவே தோற்றமளிக்கத் தொடங்கி விடுகின்றது. ஆழிசூழுலகி லிற்றைஞான் றியங்கிவரு மாயிரக்கணக்கான மொழி களு மிவ்விதந்தான் பிறந்தன.

முதன் முதன் மக்கட்கூட்டம் தோன்றிய இடம் தென்னிந்தியாவில் இப்பொழுதுள்ள இடங்களிற் சிலவாக விருக்கலாமென்று சில ஆராய்ச்சியாளர்களும்; கடல்வாய்ப்பட்ட குமரிக்கண்டமே என்று சில ஆராய்ச்சியாளர்களும், தக்க சான்றுகளுடன் கூறு கின்றன ரென்பதை முன்னர்க் கூறினோம். இங்கு தோன் றிய மக்கட் கூட்டமே உலகம் முழுவதும் பரவிற்றென் பதும் துணிபு. இங்கு தோன்றிய மக்கட் கூட்டத்தினர் பேசத் தொடங்கிய மொழி தமிழேயாகலின் இவர்க ளுடன் சென்ற மொழியுந் தமிழேயாகும். வடதுருவம் வரை சென்று வாழ்ந்த மக்கட் கூட்டம் உலகில் பரவாத இடமே யில்லை. காலஞ் செல்லச் செல்லவும் தலைமுறை மாறவும், இவர்களுடன் சென்ற தமிழ் மொழியும் ஒவ் வொரு சொல்லாக மாறிக்கொண்டே சென்றது. பழக்க வழக்கங்களும் மாறுபடலாயின. மக்களின் நிறமும்

அந் நாட்டுத் தட்பவெப்பத்திற்கும் பூமியின் இயல்புக்கும் தக்கபடி வெளுத்துங் கறுத்துஞ் சிவந்தும் மஞ்சளாகவும் போயின. காலப்போக்கில் இங்ஙனம் மாறுபட்டுத் திரிந்த இந்தியர் சில நூற்றாண்டுகளில் வேற்று நாட்டாராக முடிந்தனர். இங்ஙனம் திரிந்தும் உடலமைப்பு, பாஷை முதலியவைகளில் சில பல கூறுகளை இன்னும் உடையவர்களாக விருக்கின்றனரென்று ஆராய்ச்சியாளர் முடிவு கட்டுகின்றனர்.*

---

1. * "தமிழ் நாட்டிலேயே மக்கட்படைப்பு முதற்கணுற்றதெனத் தக்க பிரமாணங்களால் மேலே நிறுவப்பட்டது. ஆகவே மக்கள் முதலிற் பேசிய மொழி தமிழ் என்பது தானே பெறப்படும். ஒரு மொழியின் அடியாகவே உலகிலுள்ள பல மொழிகள் தோன்றியிருக்கின்றனவென்று மொழியாராய்ச்சிவல்ல பண்டிதர்கள் துணிகின்றனர். மொழி ஆராய்ச்சி வல்ல நல்லூர் REV ஞானப்பிரகாசர், தமிழ்ச் சொற்கள் இந்து ஐரோப்பிய மொழிகளில் திரிந்து வழங்கியிருக்கும் வகையினை யாவரும் எளிதிற் கண்டு மகிழுமாறு பத்திரிகைகள் வாயிலாகவும் புத்தக வாயிலாகவும் விளக்கி யிருக்கின்றனர். சுமேரிய மொழிக்கும் தமிழுக்கும் உற்பத்தித்தானம் ஒன்று என்பது அவர் கருத்து. ஆரியமும் அம் மொழியிலுள்ள நான்மறைகளும் தோன்றுவதன்முன் உலக முழுமையும் தமிழ் மொழி வழங்கியதென்பது Prof. சுந்தரம் பிள்ளை அவர்கள் கருத்து."

தமிழகம். ந. சி. கந்தைய பிள்ளை.

2. "இத் தமிழ் மொழியை வடமொழிச் சிதைவென்றும், அங்ஙனமன்று அவ் வடமொழிக்கு முன்னிலையென்று பிறர் கருதுகின்ற ஒரு பிராகிருதச் சிதைவென்றும், இவை யெல்லாமில்லை காஸ்பியன் கடற்குத் தென்மேல்பாலுள்ள சீதியநாட்டு மொழி வகையைச் சேர்ந்ததென்றும், மற்றும் பிறர் சீனதேயப்

புறத்து மங்கோலிய மொழியைச் சார்ந்ததென்றும், பலபல கூறுவாருளர். இவரெல்லாம் அப் பல மொழிகளிலும் இத் தமிழ்ச் சொல்லில் மிகச் சிலவும், சிறுபான்மை சிற்சில இலக்கண வொற்றுமையும் தமிழ் மொழியோ டொப்புளவாதல் கண்டு அங்ஙனந் துணிந்தனராவர். இவ்வாராய்ச்சி செய்யப்புகின், மேல் அவர் கூறிய தேயமொழிகளில் மட்டு மல்லாமல் பால்வி (PAHLVI) அக்காடியா (Accadia) அஸ்ஸீரியா (ASSYRIA) எகிப்து (EGYPT) அபிசீனியா (ABYSSINIA) (அமெரிக்) ஸோமாலி, ஸ்வாஹிலி (ZANZIBAR) முதலிய பிறதேய மொழிகளிலும், பின்லந்து (FINNISH) முதலிய நெடுஞ் சேய்மையான மொழி களிலும், ஆங்கில மொழியிலும் இத் தமிழ்ச் சொல் வழக்குப் பெரிதும் ஒற்றுமைப்பட்டு ஒலி வடிவில் நிற்பதை இத் தமிழ்ச் சொல்லோடு அப்பிறமொழிகளும் வல்லவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளலாம்."

தமிழ் வரலாறு. ரா. ரா.

3. "இதுகாறும் நாம் நடத்திய ஆராய்ச்சியால் தமிழ்ச் சொற்களானவை அனைத்தும் ஒரு சில அடிச்சொற்களினின்றும் நியதமான கட்டளைகட் கேற்பப் பிறந்தும், சிதைந்தும், பல வேறு வகையிற் பொருள்கோள் பெற்றும் திரிந்து விரிந்து வந்து தமிழ் மொழி யென்னும் பெருந் தொகுதியாய் நிற்றலைக் கண்டுகொண் டனம். இனி ஆரிய மொழிகளுள் முக்கியமானவை யென்று நோக்கப்படுகின்ற சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீனியம், பழஞ் சர்மனியம், பழம் ஆங்கிலம் எனும் இவைகளின் சொற்றொகுதி களும், தமிழ்ச் சொற்கள் எவ்வடிகளினின்று பரிணமித்துப் பிறந் தனவோ அம்முதற் சொற்களினின்றுதான் படிக்கிரமமாய்த் தோன்றியுள்ளன எனும் எங்கொள்கையைச் சுட்டிச் சில சொல்வாம்."

தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி.

நல்லூர் சாமி ஞானப்பிரகாசர்.

மேலே நாமெடுத்துக் காட்டிய அறிஞர் சிலருடைய கொள்கைமட்டுமன்று மொழி யாராய்ச்சியில் வல்ல அனேவோருடைய முடிபுகளும் இதை யொட்டியனவே யாதலின்; தென்னிந்திய மொழிகளான தெலுங்கு,

---

4. "இக் கொள்கையை நிலை நிறுத்த வேறு காரணங்க ளுண்டோவென ஆராய்வோம், மேற்கூறிய யாவா முதலிய தீவுகளில் நடைபெற்றுவரும் மொழிகள் தமிழ் மொழிக்கு அதிக உறவுள்ளனவாகக் காணப்படுகின்றன."

"ஐரோப்பிய பாதிரிமார் தமது கவனத்தை நியூசிலண்டில் செலுத்திய காலத்தில் அவர்களுடைய நாட்டம் 'மே ஓரிஸ்' (MAORIS) என்னும் பண்டுள்ள அத் தேசத்தவரின் மொழியிற் சென்றது. அதை அவர்கள் ஆராய்ந்து பார்த்ததில் அது தமிழுக்கு எவ்வளவோ அடுத்ததாகக் காணப்பட்டது. அது பற்றி (TAYLOR) என்னும் பாதிரியார் முப்பது வருடங்களுக்கு முன்னே வெளியிட்டிருக்கின்றார்.

"...............மேற்கூறிய காரணங்களால் தென்னிந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து நியூசிலண்டு வரைக்கும் பண்டு ஒரே மொழி நடைபெற்று வந்ததாகக் காணப்படுகின்றது. இதில் ஆஸ்த்ரேலியாவும் உட்பட்டிருக்கலாம்."

T. P. M. R. A. S.

5. "உற்று நோக்கும்போது எகிப்தின் பிரதான நதியாகிய நீலநதி, சுமேரிய தலைநகராகிய நிப்பூர், எல், வேல் என்னுங் கடவுட் பெயர்கள் தமிழ் மொழியாக விருக்கின்றன. பின்னும் யவனமொழி எழுத்துக்களின் வடிவம் தமிழ் எழுத்துக்களோடும் தொடர்புடையதாகக் காணப் படுகின்றது."

செந்தமிழ் 20—10

6. "தென்னாட்டுத் திராவிட மொழியிலிருந்து ஜப்பான் மொழி தோன்றியதென்று புங்கி உத்தமர் கூறுகின்றார்."

உலோகோபகாரி. 9 Oct. 1930.

கன்னடம், மலையாளம், துளு, குடகு, துடம், கோதம், கோண்டு, கந்தம், இராஜ்மஹால், ஓராவோன் முதலிய வைகளும், வட இந்திய மொழிகளான சமஸ்கிருதம், இந்துஸ்தானி முதலியவைகளும், மற்றும் உலகெலாம் வழங்கும் பிறமொழிகளும் தமிழிலிருந்துதான் பல்கின வென்பதற்கு எட்டுணையு மையப்பாடின்று. மேலெடுத்துக் காட்டிய அறிஞர்கள் பலரும் ஆராய்ச்சியில் மிக்க வல்லவர்கள். பன்னூல்களிலும் நுணுகி யாராய்ந்த கூரியமதியினர். இவர்களிற் சிலர் எக்காரணத்தை முன்னிட்டோ தமிழ் மொழியினின்றே உலகத்து மொழிகளெல்லாங் கிளைத்தன என்னும் உண்மையைச் சரியானபடி உலகத்தில் நிலைநாட்டத் தவறிவிட்டனர். ஒவ்வொருவரும் தாங் கண்டுபிடித்த உண்மையை ஒரு சிறிதும் அஞ்சாமலும் மறைக்காமலும் வெளியிடுவ தன்றோ ஆராய்ச்சி முறைக்கு அழகும் பயனுமாகும்.

"தென்னிந்திய மொழிகளை எவ்வளவுக் கெவ்வளவு ஆழ்ந்து படிக்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு அவை வடமொழித் தொடர்புடையன வெனவும், இந்து-ஐரோப்பிய மொழியினத்துடன் மிகவும் நெருங்கிய பண்டைத் தொடர்பு உடையனவெனவும் காணலாம்." மேற்கண்டபடி எழுதிய டாக்டர் போப் மேலுஞ் சிறிது ஆராய்ச்சி செய்திருப்பாராயின் தான் கண்டுபிடித்த செய்தியைத் தலைகீழாகப் பார்த்திருப்பார். ஆனால் டாக்டர் போப் ஏனோ அவ்வளவு தூரம் தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தவில்லை. பல மொழிகளின் சொற்கள் தமிழ்ச் சொற்களின் அடியாகப் பிறந்திருந்தலைப் பல அறிஞர்களும் தனித்தனி எடுத்துக் காட்டியிருக்கின்றனர். அவைகளை யெல்லாம் நன்கு ஆராய்ச்சி

செய்வதாலும் மேற்கூறிய உண்மைகள் இனிது புலனுவதாம். தமிழின் முதன்மையை ஒப்புக்கொள்ள உள்ளமில்லாத ஆரியரும், அவர் தம் சீடசிகாமணிகளுமே இவ் வெடுத்துக் காட்டு மொழிகட்கும் ஏதேனும் போலிக்காரணங் கூறிப் பிதற்றுவர்.*

---

* 1. "சம்ஸ்கிருதம்" என்ற சொல்லிற்கு "நன்ருய்ச் செய்யப்பட்டது" என்று பொருள். அதாவது ஆரியர்கள் தமிழ் நாட்டிற்கு வந்த பிற்பாடு தமிழர்களைப் பார்த்துத் தங்களுடைய பாஷையைச் சீர்திருத்தஞ் செய்துகொண்டார்கள் என்றும் எழுத்து முதலியவற்றைக் கற்பித்துக் கொண்டார்கள் என்றும் ஏற்படுகிறது.

இன்ன காலத்தில்தான் ஏற்பட்டது என்று எடுத்துக் கூற இயலாத பாஷைக்கு நேற்று ஏற்பட்ட சம்ஸ்கிருத பாஷையின் சொல்லால் பெயருண்டாயிற்று என்பது எவ்வளவு அழகு! எவ்வளவு பொருத்தம்!! என்பதை நோக்குங்கள். ஆரியர் வருவதற்குமுன் இந்நாட்டு மக்கள் பேசின பாஷைக்குப் பெயரே கிடையாதா? பேரில்லாப் பாஷையாகவா இருந்தது? பிரயோக விவேகத்தைப் பின்பற்றிக் கூறும் புலவர்களே விடை பகர்வார்களாக."

"தமிழ்"

செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 1 பரல் 3.

து. அ. சிதம்பரனூர்.

# அதிகாரம் 14.

## தமிழுங் கொடுந்தமிழும்

இலக்கண விதிகட்குப் பொருத்தமாகும்படி பேசப் பெறுவனவும் எழுதப் பெறுவனவுஞ் செந்தமிழாம். இலக்கண விதிகளைக் காற்றுப் போக்கில் விட்டு விட்டு மனம் போனபடி உளறிக் கொட்டுவது கொடுந்தமிழாம்.

தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு முதலிய மொழிகளெல்லாஞ் செந்தமிழ் திரிந்து கொடுந்தமிழாகிப் பிறகு வேறு மொழிகளாகவே வடிவம் பெற்றனவாம். இம் மொழிகளில் எக்காலத்திலுமே தமிழ்ச் சொற்கள் பல வெளிப்படையாக நிற்றலைக் காணலாம்.

கடைச்சங்க காலத்தில் கொடுந்தமிழ் நாடாக நின்ற மலையாள நாடு, இப்பொழுது முழு மலையாள நாடாகவே நிற்பதைக் காண்கிறோம். தொல்காப்பியர் காலத்தில் கொடுந்தமிழ் என்று ஒன்று இல்லை என்பது பேரறிஞர் பலர் எண்ணம்.

மக்கள் பேசும்போது விரையாமல், கவனித்து நிறுத்திப் பேசுவார்களானால் மொழி திரிவதற்கு இடமிராது. சோம்பேறித்தனமாகவும் வேகமாகவும் பேசுகிறபடியினாலேதான் செந்தமிழ் திரிந்து கொடுந் தமிழாவதுடன், பின்னாளில் வேறு மொழிகளும் தோன்றுவதற்கு இடமேற்படுகிறது.

வருகின்றேன், வருகிறேன், போகின்றேன், போகிறேன் என்பவைகளை வாறேன் போறேன் என்றும்;

போகச் சொல்லுகின்ருன் என்பதைப் போச் சொல்ருன், என்றும் ;

ஒரு படி, இரண்டு படி, மூன்று படி, நான்கு படி, ஐந்து படி, ஆறு படி, ஏழு படி, எட்டுப் படி, ஒன்பது படி, பத்துப் படி முதலிய சொற்களை, ஒருடி, ரண்டுடி, மூணுடி, நாலுடி, ஐஞ்சுடி, ஆறுடி, ஏழுடி, எட்டுடி, ஒன்பதுடி, பத்துடி என்றும் இப்படிப் பல விதமாக வாசகங்களைச் சுருக்கிக் கெடுக்கின்றனர்.

தஞ்சை சில்லாவிற் பலர் எண்பது முதலிய பத்து எண்களையும் எகர வுயிர் மெய்யை விரித்து எம்பளது எம்பளத்தொன்று என்று வழங்குகின்றனர்.

மக்கள் சென்னையிலும் அதை யொட்டிய இடங் களிலும் பேசுங்கால், உயர்வுப் பொருள் உணர்த்தும் கள் விகுதி கொடுத்து, வாருங்கள் போங்கள் இருங்கள் என்று பேசமாட்டார்கள்.

கீரை விற்பவள் முதல் பொது அதிகாரிகள் வரை, வா, போ, இரு, நீ, நான் என்றுதான் பேசுகின்றனர். கள்ளை உபயோகப்படுத்தக்கூடாது என்பது இந் நாட் டாரின் எண்ணம் போலும். மேலும் இவ்விடத்து மக்களிற் பெரும்பாலார் ழகரத்திற்குப் பதில் யகரப் பிரயோகமுஞ் செய்கிருர்கள். வாழைப்பழம், மாம்பழம், வாயப்பயம், மாம்பயம் இழுக்கிருன் இயுக்கிருன்.

தென்பாண்டி நாட்டார்கள் வாயிலும், ஈழ நாட் டார்கள் வாயிலும் ழகரம் ளகரமாக வழங்கும்.

வாளப்பளம், மாம்பளம், இளுக்கிருன்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலிய இடங்களிலே தமிழ் எவ்வாறு வழங்குகின்ற தென்பதைப் பற்றிச் சுவாமி விபுலானந்தரவர்கள் சில பத்திரிகைகளில் எழுதியுள்ளார்கள். சிலவற்றை யீண்டெடுத்துக் காட்டுகின்றேன்.*

யாழ்ப்பாணத்தார் ஒருவர் என்னிடம் "யாழ்ப்பாணத்தில்தான் செந்தமிள் வளங்குகிறது. ஆகையால் எங்கழ் யாள்ப்பாணந்தான் செந்தமிள் நாடு" என்று கூறினார்.

யாழ்ப்பாணம்;

---

*(1) அவனோடு = அவனேடை, எங்களுடைய = எங்கடை, நேரத்திலே = நேரத்திலை, எங்கே கிடக்கிறது = எங்கை கிடக்கு, என்னுடைய அப்பன் = என்றையப்பு, அவனைப்போல் = அவனைப் போலை, அவனால் = அவனாலை, அவனிடத்திலிருந்து = அவனிடத்திலையிருந்து, உங்களைத்தான் (ஐகாரக் குறுக்கம்) = உங்களைத் தான் (ஐகாரம் பூரணவொலி). மட்டக் களப்புத் தமிழில் ஐகாரம் அகரமாய் நடக்கும். மேற்காட்டிய உதாரணச் சொற்கள் முறையே, எங்கட, நேரத்தில், எங்க கிடக்குது, அவனப் பெல (ஓகாரம் எகரமாயினமையும் நோக்குக.) அவனால் அவனிட்டெருந்து, ஒங்ளத்தான் (உகரம் ஒகரமாயினமை நோக்குக).

"நன்னூலார் கூறின "கா" என்னும் அசை நிலை இடைச்சொல் மட்டக் களப்பிலே வழக்கில் உளது. இதனை அதிகமாகப் பெண்கள் வழங்குவார்கள். இதனை அவதானித்த ஒரு புலவன் "ஆடவர் தோளிலுங்கா அரிவையர் நாவிலுங்கா" என்று கூறினான் என்பதாகக் கேள்வி. ஆடவர் பாற் குடங்களை உறியில் வைத்துக் காத்தடியின், இருதலையிலுங் கட்டித் தோளில் எடுத்துச் செல்வர்.

# அதிகாரம் 15.

---

## தமிழும் மலையாளமும்

கடைச்சங்க காலத்திற் கூட மலையாள நாடு தமிழ் நாடாக விளங்கிக்கொண்டிருந்தது. சேர வரசர்கள் மீது பாடப் பெற்ற பதிற்றுப்பத்து அந்நாளில் சேரநாடு தமிழ் நாடாக விளங்கிக் கொண்டிருந்த தென்பதற்குத் தக்க சான்று பகருகிறது. சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகளும், சேரன் செங்குட்டுவனது இளவ

---

மகளிர் உரையாடும்போது, "என்னகா சொல்ரு? எங்கா நீ வரல்லே? எலக்கா இங்கே சத்து வந்திற்றுப்போ" என்று இப்படிக் "கா" அசைத்துப் பேசுவது அந் நாட்டு வழக்கம். "எலக்கா" என்பதிலே கலித்தொகையில் வரும் "எல்லா" திரிந்து நிற்பதை நோக்குக.

மேற்காட்டிய விதிகளோடு ஒரு புடையொத்தும் ஒவ்வாதும் வருகின்ற சில வழக்குகளை உதாரண மூலம் விளக்குவாம். யாழ்ப்பாணத்திலுள்ள சில வழக்குகள் வருமாறு:—அங்கே = பங்க. இங்கே = பிஞ்ச. உங்கள் ஐயா = கொய்யா, உங்கள் ஆச்சி = கோச்சி, மகன் = மோன், மகள் = மோள், மேள், தகப்பன் = தோப்பன்...... .........வீட்டிலே = (யா) வீட்டிலே = (ம) ஊட்டில் ஊட்ட, வயிற்றுக்குள் = (யா) வயித்துக்கை = (ம) வகுத்துக்க. பறஞ்சது என்னும் மலையாள மொழி யாழ்ப்பாணத்து வழக்கில் உண்டு. "எழுஞாயிறு", "படு ஞாயிறு", "எழுவான்" "படுவான்" மட்டக்களப்பு வழக்கில் உண்டு. போதும் = போரும் என்பது தென்னிந்தியப் பிராமணர் வழக்கு."

நான் பிஞ்ச கொடுந்தமிள் எயுதினது போருமா?

சிலப்பதிகார நாளில் கொடுந்தமிழாக வழங்கி நின்ற மலையாளம், பிற்றை ஞான்று தான் தனிப் பெயரைப் பெற்றது. மலையாளந் தமிழினது கிளை மொழியாக விருப்பினும், தமிழினது இலக்கணங்களைக் கொள்ளாமல் வடமொழி இலக்கணத்தைக் கொண்டதுடன்; கணக்கிலடங்காத வடமொழிச் சொற்களையுந் தன்னகத்தே வாரி வைத்துக்கொண்டு தன் வடிவத்தைப் பெரும்பான்மையும் மாற்றி நிற்கின்றது. இம்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கட்குக் கூட, இம் மொழியை நன்கு பயில அதிக அல்லலாகவிருக்கின்றதென்று அம் மொழியாளர் சிலர் சொல்லக் கேட்டுளேம். இதனுடைய இத்தகைய போக்கால் இது தமிழ் மொழியின் கிளைமொழியா? அல்லது தனி மொழியா? என்று கூடப் பலரையும் மயங்கும்படி செய்து கொண்டிருக்கின்றது.

ஏறக்குறைய முந்நூறு யாண்டுகட்கு முன்பிருந்த எழுத்தச்சன் என்பார்தான், இம் மொழிக்கு எழுத்தேற்படுத்தியவரென்று கூறப்படுகின்றது. இதனின் எழுத்துக்களெல்லாம் பெரும்பாலும் கிரந்த மெனப்படும் சமஸ்கிருத எழுத்துக்களை யொட்டியதாகவுள்ளன. மலையாள மொழியில் முதல் முதல் செய்யப்பட்ட இலக்கியம் இராம சரிதம் என்று கூறப்படுகிறது.

இம்மொழி திரிந்து வழங்கத் தொடங்கிய செய்திகளையும் போக்கினையும், து. அ. கோபிநாத ராவ் செந்தமிழ்த் தொகுதி பத்தில் இரண்டாவது பகுதியில் விளக்கமாக வெழுதி யுள்ளார்.*

---

*"காடடர்ந்த மலைகளால் செந்தமிழ் நாட்டினின்றும் பிரிபட்டுத் தன் வழியே மாறிக்கொண்டு வந்த மலை நாட்டுத்

தமிழை இக்காலத்தில் மலையாளமென்று பெயரிட்டழைக்கின்றனர்.

மலையாள பாஷையின் மொழித்தொகையை உற்று நோக்குங்கால் தமிழல்லாத பதங்களைக் காண்பது மிக அரிது.

மலைநாட்டிற் றமிழினும் வேருன ஒரு பாஷை யிருந்திருப்பின், அந்நாட்டு இளங்கோவடிகளும், சேரமான் பெருமாணயனாரும், குலசேகராழ்வாரும், மற்றைய பலருந் தமிழில் கவிதைகளை யியற்றுவானேன்? மலையாளக் கவிதைகளே யென்று மலையாளிகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சிற்சில பாட்டுக்களை நந்தமிழபிமானிகள் படித்து உண்மை யுணரும் பொருட்டுக் கீழே காட்டப்படுகின்றன.

"மன்றில் செல்வம் பெரிய திருவைம் பாடியில் கூடியாடிக்
கன்றில் கூடித் தெளிவொடு களிச்சீடுமென் தம்பிரானெ
கன்றே கொண்டுங்கட மழ தடுத்தாச்சிமார் வீடுதோறும்
சென்றுப்பால் நைபெருகி மருவும் கண்ணனெனக்
கை தொழேண்டும்."

**இதனைக் கீழ்க்கண்டவாறு திருத்தலாம்.**

மன்றிற் செல்வம் பெரிய திருவாயம்பாடியில் கூடியாடிக்
கன்றிற் கூடித் தெளிவோடு களித்திடுமென் தம்பிரானைக்
கன்றே கொண்டுங் கடமழை தடுத்தாய்ச்சிமார் வீடுதோறும்
சென்றுப்பால் நெய் பருகி மருவும் கண்ணனைக் கைத்
தொழவேண்டும்.

"ஊடிக் கூடிக் கனமளிக்குலம் சேர்ந்நபூங்காவு தோறும்
கூடக் கூடத்துடு துட மலர்த்தென்றல் பெய்தொரு நேரம்
ஆடிக் கொண்டல்ப் பெருமழைபி தென்றிங்ஙினே
கல்லியித்வா
வேடக்காலத் தழகொடு மயில் கூட்டமாடீடு மெடம்."

"மலையாள நாட்டில் இதுகாறும் கண்டு பிடிக்கப் பட்ட சாஸனங்களில் சில முழுதும் தமிழாகவும் சில தமிழ் நிறைந்த தாகவும், சில முக்காற் பாகம் தமிழாகவும், கால் பாகம் மலையாள மாகவும் மற்றுஞ் சில தனி மலையாளம் என்று சொல்லக் கூடிய தாகவும் இருக்கின்றன. நாளடைவில் தமிழ் மொழி மலையாள உருவமாக ஆவது இச் சாஸனங்களில் நின்றும் அவற்றின் காலங் களில் நின்றும் தெரியவருகிறது. தமிழ்ப் பாஷை தேச பேதம் கொண்டும் மற்றும் மலையாளமாய்த் தீர்ந்ததென்றும் சிலர் கூறுவ துண்டு."

வெங்கடராம சர்மா.

செந்தமிழ், தொகுதி 21 பகுதி 10.

## தமிழ்ச் சொற்களும் மலையாளச் சொற்களும்

| தமிழ் | மலையாளம் | தமிழ் | மலையாளம் |
|---|---|---|---|
| அவன் | அவன் | மாங்காய் | மாங்ஙா |
| இவன் | இவன் | தேங்காய் | தேங்ஙா |
| அவள் | அவள் | நீங்கள் | நிங்ஙள் |
| அவர் | அவர் | நின்னை | நின்னெ |
| இவர் | இவர் | நாணல் | ஞாணல் |
| அவைகள் | அவகள் | நாவல் | ஞாவல் |
| இவைகள் | இவகள் | நெருங்கு | ஞெருங்ஙு |
| நான் | ஞான் | | |
| நாங்கள் | ஞங்ஙள் | | |

மலையாளி களிடையா யொரு மலையாள மிது தகம்
மலர்கொண் டிவிகுடி கொண்டொரு தரணீஸுர ரருளாம்
மணி ஸம்ஸ்கிருத மணியும் தளிர்மொழியும் பரிமிளிதம்
மலையாள மிதொரு வாணியு முளவாயொரு ஸரஸம்.

இது மலையாளத்தைப் பற்றிய ஒரு பாட்டு.

# அதிகாரம் 16.

---

## தமிழ்ச் சங்கம்.

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்துமென் சிந்தையுள்ளும்,
உறைவானு யர்மதிற் கூடலினாய்ந்தவொண் டீந்தமிழின்,
துறைவாய் நுழைந்தனையோ? வன்றியேழிசைச் சூழல்புக்கோ?
இறைவா! தடவரைத் தோட்கென் கொலாம் புகுந் தெய்தியதே?

### முதற் சங்கம்

கடல் வாய்ப்பட்ட குமரிக் கண்டத்தின் கண்ணிருந்த தென் மதுரையில் முதற் சங்கம் என்னுந் தலைச்சங்கம், காய்சின வழுதியென்னும் மன்னனால் ஏற்படுத்தப்பெற்று, அவன் முதல் கடுங்கோன் என்பவனீறாக எண்பத்தொன்பதின்மரால் புரக்கப் பட்டதாம். தலைச்சங்கத்திலே அகத்தியர், திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள், முருகக் கடவுள், முரஞ்சியூர் முடிநாகராயர், குபேரன் முதலிய ஐந்நூற்று நாற்பத்தொன்பது பேர், நாலாயிரத்து நானூற்று நாற்பது வருடங்கள் தமிழாராய்ந்தார்களாம். இவர்கட்கு இலக்கணம். அகத்தியமாம். இவர்கள் இயற்றிய நூல் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலியனவாம். இச் சங்கம் கிறித்து பிறப்பதற்கு 3740 யாண்டுகட்கு முன்னர்த் தோன்றி 1780 யாண்டுகள் நடைபெற்றதாம்.

## இரண்டாஞ் சங்கம்

மேற்படி தென்மதுரை, கடலுக்கிரையான பின் கபாடபுரத்திலே வெண்டேர்ச் செழியனால், இடைச் சங்கமென்னும் இரண்டாஞ் சங்கம் ஏற்படுத்தப்பெற்று முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மரால் வளர்க்கப்பட்டதாம். இந்த இடைச் சங்கத்திலே, அகத்தியனார், தொல்காப்பியனார், இருந்தையூர்க் கருங் கோழி, மோசி, வெள்ளூர்க்காப்பியன், சிறு பாண்ட ரங்கன், திரையன்மாறன், துவரைக்கோன், கீரந்தை முதலிய ஐம்பத்தொன் பதின்மர் புலவர்களாக விருந் தார்களாம். இவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூறு பேர் தமிழாராய்ந்து பாடினார்களாம். இவர்கள் சங்கம் நடத்தியது மூவாயிரத்தெழுநூறு யாண்டுகளாம். இவர்களாராய்ச்சி செய்த இலக்கண நூல்கள், அகத்தி யம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் ஆகியவைகளாம். இவர்களியற்றியன, கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை யகவல் முதலியனவாம்.

## மூன்றாஞ் சங்கம்

கபாடபுரமுங் கடலுக்கிரையானபின் இப்பொழு துள்ள மதுரையில் மூன்றாஞ் சங்க மென்னுங் கடைச் சங்கம் கடல் கொள்ளப்பட்டு வந்திருந்த முடத்திரு மாறனால் தொடங்கப்பெற்று உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மரால் நடத்தப்பெற்றதாம். இம் மூன்றாஞ் சங்கத்திலே, சிறு மேதாவியார், சேந்தம் பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க் கிழார், இளந்திருமாறன், நல்லந்துவனார், மருதனிள நாகனார்.

நக்கீரனார் முதலிய நாற்பத்தொன்பதின்மர் புலவர் களிருந்தனராம். இவருள்ளிட்டு நானூற்று நாற்பத் தொன்பது பேர் செய்யுள் செய்தனராம். இவர்கள் சங்கம் நடத்தியது ஆயிரத்தெண்ணூற்றைம்பது வருடங்களாம். இவர்கட்கு இலக்கண நூல்கள் அகத் தியமுந் தொல்காப்பியமுமாம். இவர்கள் செய்த நூல்கள், நெடுந் தொகை நானூறு, குறுந் தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை முதலியனவாம். இவ் விவரங்கள் நக்கீரனார் இயற்றிய இறையனாரகப் பொருளுரையில் இலங்குகின்றன.

முதலிரண்டு சங்கங்களைப்பற்றிய செய்திகள் உண்மையாக இருக்கக்கூடுமா வெனப் பலர் ஐயமுறு கின்றனர். திரிபுரமெரித்த கடவுள், முருகன், குபேரன் முதலியோர் சங்கப் புலவர்களாக விருந்தமையும், ஆயிரக்கணக்கான யாண்டுகள் சங்கம் நடந்தமையும், முதல் சங்கத்திலிருந்த அகத்தியர் இடைச் சங்கத்திலு மிருந்தமையும் அவர்கள் ஐயத்திற்குக் காரண மாகும்.

மூன்றாஞ் சங்கச் செய்திகளுண்மை யென்றே அனைவரும் நம்புகின்றனர். கடைச் சங்கப் புலவராக இருந்த நக்கீரனாரே அந்தச் செய்திகளில் ஐயங்கொண்டு "என்ப என்ப" என்று பலமுறை அடுக்கியதுடன், "அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது" என்று குறிப்பிட்டார். அக்காலத்திலிருந்த நக்கீரனாருக்கே ஐயமாமெனின் மற்றையோர்க்கையம் நிகழக் கேட்கவும் வேண்டுமோ?

மூன்றுஞ் சங்க நூல்கள் முழுவது மிருப்பதைப் போல மற்றைச் சங்க நூல்களுமிருந்திருப்பின் கடல் கொண்ட தென்னாட்டைப் பற்றி நாம் பல செய்திகளை யுணரலாம். கடைச்சங்க நூல்கள் பல இருப்பதாலேயே நாம் இந்தச் செய்திகளை யெல்லாம் இவ்வளவாவது அறிய முடிகிறது.

கடைச் சங்கம் இருந்ததற்கான சான்றுகள் பல இன்றும் மதுரையில் காணலாம். சங்கத்தார் கோயில் மதுரைக் கோயிலுக்குள் ளிருப்பதுடன் பல இடங் களில் நக்கீரர் விக்கிரகமுங் காணப்படுகின்றன. உ. வே. சாமிநாதையரவர்கள்; 'சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் என்னும் தமது நூலில் கடைச்சங்கத்தைப் பற்றி;*

---

*(1) "மேற்கூறிய தமிழ்ச் சங்கமே பிற்காலத்தில் பொற்றாமரைக் கரையில் இருந்ததாகவுந் தெரிகிறது. வடமொழி ஹாலாஸ்ய மஹாத்மியத்திலும் திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணத்திலும் இச் சங்கங் கங்கைக்கரையிலிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே கங்கை யென்றதை வடக்கேயுள்ள கங்காநதி யென்று சிலர் எண்ணுகிறார்கள். அது பொருந்தாது. கங்கை யென்றது இத் தலத்திலுள்ள பொற்றாமரை வாவியையே குறிக்கும். சிவ தீர்த்தத்தைக் கங்கையென்று வழங்குதல் மரபு. கும்பகோணம் ஸ்ரீ மகாமக தீர்த்தக் கரையிலுள்ள வீரபத்திரக் கடவுளைக் கங்கை வீரபத்திரரென்றும், குடந்தைக் கீழ்க் கோட்டத்திலுள்ள விநாயகரைக் கங்கை விநாயகரென்றும் வழங்குதலை இக்காலத்தும் கேட்கலாகும். மேற்கூறிய பொற்றாமரைக் கரையில் சங்க மிருந்ததற்கு அறிகுறியாக அவ்வாவியின் கரையிலுள்ள மண்டபக் கற்றூண்களிற் சங்கத்தாருடைய பிம்பங்கள் அமைக்கப் பெற்றுள்ளன." என்று எழுதியுள்ளார்கள்.

அக்காலத்திய தமிழாராய்ச்சிச் சங்கங்களைப் போல இக்காலத்திலே இல்லை. மதுரைத் தமிழ்ச் சங்கம், திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச் சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம் முதலியவைகள் மாணவர் கல்விச் சங்கங்களாக விருக்கின்றன. அரும் பெரும் புலவர்கள் ஒன்று கூடி நூலாராய்ச்சிகள் செய்யவும், புது நூல் எழுதவும், மற்றைப் புலவர்களுடைய நூல்களை யாய்ந்து சீர் தூக்கவும், முச்சங்கங்களைப் போல் இக் காலத்தில் ஒரு சங்கம் நிறுவும் முயற்சியினைத் தமிழுல கத்தில் தக்கார்கள் மேற்கொள்ளல் வேண்டும்.

தலைச்சங்கம் கி. மு. 9990 முதல் 5550 வரையும், இடைச்சங்கம் கி. மு. 5550 முதல் 1850 வரையும், கடைச்சங்கம் கி. மு. 1850 முதல் கி. பி. 10 வரையும் (சிலர் கி. பி. 90 வரையும்) இருந்ததாகக் கூறு கின்றனர்.

---

திருவாதவூரடிகள் முதலிய சமய குரவர்களும் தந்திருப் பாடல்களின் கண்ணே மூன்றுஞ் சங்கத்தைச் சொல்லியுள்ளனர். சங்கத்தைப் பற்றி உள்ளவா றெழுதப்பட்ட செய்திகளொவையும் நமக்குக் கிடைக்காதபடியால் அதிகமான விவரங்களை யூகஞ் செய்தே இக்காலத்தில் கண்டு பிடிக்க வேண்டியதாக விருக்கிறது.

# அதிகாரம் 17.

## தமிழும் அகத்தியரும்

தமிழ் மொழி முற்கூறியவாறு இயற்கையாகவே தோன்றி வளர்ச்சியுற்றதென யாங்கூறியதைக் கேட்டுச் சிலர் மருளலாம். சிலர் அகத்தியரன்றோ தமிழ் மொழியை உண்டாக்கினாரென்று நினைக்கலாம். சிலர் வடமொழியுந் தமிழ்மொழியுஞ் சிவபெருமானாலல்லவோ தோன்றிற்று என்று எண்ணலாம். கடவுள், மொழிகளை (பாஷைகளை) உண்டாக்கினாரென்று கூறுவதைவிட மொழிகள் கடவுளர்களை உண்டாக்கிற்றென்று கூறுவது சாலப் பொருந்தும். புராணேதிகாசங்கள் பாடினோர் மக்கள் மனத்தகத்துப் பத்திப் பயிர் முளைப்பான் எல்லாங் கடவுளால்தான் உண்டாயிற்றென்று கூறுவர். அவர்கள் அங்ஙனம் கூறார்களெனில் அவர்கள் பாடும் புராணக் குவியல்கள் பயனிலவா யொழியும்.

அகத்தியமா முனிவர் வடநாட்டிலிருந்து இந் நாடு போந்தா ரென்பதற்குப் புராணக்காரர்கள் கூறும் கதைகள் தற்கால வுலகிற்குப் பயன்படமாட்டா. அவர் வேறு நாட்டிலிருந்து இந் நாடு போந்தாரென்பதற்குத் தக்க ஆதாரங்களும் இல்லை. அவலோகிதன் என்னும் பௌத்த ஆசிரியரின் பால் தமிழ் மொழியை ஐயமறக் கற்றுணர்ந்தார் என்பது மாத்திரம்;

“ஆயுங் குணத்தவ லோகிதன் பக்க லகத்தி யன்கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமி ழீங்குரைக்க

நீயு முளேயோ வெனிற் கருடன் சென்ற நீள் விசும்பில்
ஈயும் பறக்கு மிதற்கென் கொலோ சொல்லு மேந்தி ழையே''

என்னும் வீரசோழிய அவையடக்கச் செய்யுளால் விளங்கவறியலாம்.

தமிழ் மொழியை அகத்திய முனிவர் ஐயமறக் கற்றுணர்ந்த தோடமையாது 1 தொல்காப்பியர், 2 அதங்கோட்டாசான், 3 துராலிங்கன், 4 செம்பூட்சேய், 5 வையாபிகன், 6 வாய்ப்பியன், 7 பனம் பாரன், 8 கழாரம்பன், 9 அவிநயன், 10 காக்கை பாடினி, 11 நத்தத்தன் 12 வாமனன் என்னும் பன்னிரு மாணவர்க்கும் பண்புறப் போதித்து, அவர்களைக் கொண்டு நாடெலாந் தமிழ் வளங்கொழிக்கச் செய்தார். அவர் காலத்தி லிருந்த இலக்கணம் அனைவர்க்கும் பயன்படாத அரிய போக்கிலிருந்தமையால் தன்னுடைய நுண்ணறிவைப் பயன்படுத்தி ஓரிலக்கண நூலைச் செய்தார். அகத்தியர் செய்த அந் நூலுக்கு அகத்தியமென்று பிறர் பேரிட்டனர்.*

வளர்ப்பாரற்றுக் குன்றி யிருந்த தமிழ் அகத்திய முனிவரால் நன்கு வளர்ந்து சிறப்பினை யெய்திற்று. அகத்தியர் அக்காலத்தில் தமிழுக்குச் செய்த அரும்

---

(1) *"அகஸ்தியர் வருமுன்னும் தண்டக தேசத்திலே தமிழ் வழங்கிற்றென்பதும், அக்காலத்திலே அதற்கு இலக்கணம் குமரவேள் செய்த குமரம் என்னும் நூலென்பதும், அகத்தியர்க்கு அதுவுமோர் ஆதார நூலென்பதும் குமரக் கடவுளிடத்தே அகஸ்தியர் தமிழை ஓதியுணர்ந்தார் என்பதனால் நன்கு துணியப்படும்."

செந்தமிழ் தொகுதி 1 பகுதி 7 ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.

பணியை யறிந்த பின்னோர் அகத்தியரையே தமிழுககுத் தந்தை யென்று உபசார வழக்காகக் கூறினர். ஒரு குழந்தையை ஒருவன் பெறுவிட்டாலும் வளர்ப்பானாயின் அவனே அக் குழந்தைக்குத் தாதை யென்று கூறல் உலக வழக்கன்றோ? இவ் வழக்குப் பற்றியே ;

" பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலேயிருந்து வைகையேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே கிடந்து கற்றோர் நினைவிலே நடந்தோரேன
மருப்பிலே பயின்றபாவை மருங்கிலே வளருகின்றாள் "

" அகத்தியன் பயந்த செஞ்சொ லாரணங் கம்பு யாதன்
முகத்தினில் வாழு மக்த மொய்குழ லருளி னாலே
பகைத்தெதிர் பொருத தெய்வப் பாரத கதையும் முந்நீர்ச்
செகத்தினில் விருத்த யாப்பால் செய்கெனச் செய்த தன்றே."

' வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென் மொழியை உலகமெலாந் தொழு தேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனின்
கடல் வரைப் பிலிதன் பெருமை யாவரே கணித்தறிவார்?"

" இருமொழிக்குங் கண்ணுதலார் முதற் குரவரியல் வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் இசை பரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீ இயினா ரென்றாலிவ்
விருமொழியு நிகரென்னும் இதற்கையமுளதேயோ ?"

என்பன முதலிய செய்யுட்கள் எழுந்தன. கம்பர் தமது இராமாயணத்தில் அகத்தியப் படலத்தில் ;

" நின்றவனை வந்தநெடி யோனடி பணிந்தான்
அன்றவனும் அன்பொடு தழீஇ யழுத கண்ணன்
நன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்று முள தென் தமிழ் இயம்பி யிசை கொண்டான்."

என்று பாடுகிருர். இச் செய்யுளில் என்று முள தென் தமிழ் என்று குறிப்பிடுகிறபடியினுலே கம்பருந் தமிழின் பழமையைப் போற்றுகின்ருர். இயம்பி என்பது மாணவர்கட்குப் பாடஞ் சொல்லி வளர்த்ததை உணர்த்தும். உ. வே. சாமிநாதையர், அவர்கள் சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் என்னுந் தனது சொற் பொழிவு நூலிலே "இவர் வருவதற்கு முன்னரே இந் நாட்டிலிருந்த தமிழையும் அதனிலக்கணத்தையும் இவர் தந்தாரென்று கூறியிருப்பது உபசார வழக்கு" என்ருர்கள்.*

---

*(1) "அகத்தியர் செய்த காரியம்; அகத்தியர் ஏதோ ஒரு காரணத்தால் தென்னுட்டினை யடைந்தவர், தமிழ் வல்ல சான்றினரிடத்து அதனை ஓதியுணர்ந்தார் என்பதே எமக்குத்துணிவு. அகத்தியர் தமிழைத்தாமே படைத்தாரென்பது எவ்வாற்ருனும் பொருந்தாது. ஒரு பாஷையை ஒருவர் உண்டாக்கினுரென்பது பாஷா தத்துவ சாத்திர முடிவுக்கு முற்றும் முரண்பாடாகும். கடவுட் டன்மையை ஒருவற்கேற்றி, அவன் தானுகவே ஒரு பாஷையைச் சிருட்டித்து இலக்கியங்களையும் உண்டாக்கி, பலரும் பயிலச் செய்தான் என்பது பிரகுர்தி விரோதமான அசம்பாவித மேயாகும். "இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பல்" பன்னுட்டிலுள்ள பாவலர்க்கும் நாவலர்க்கும் உடன் பாடாயிருப்ப, அகத்தியர் தாமே இலக்கியங் கற்பித்து இலக்கணமும் இயற்றினுர் என்பது பொருந்துமா? அகத்தியர் காலத்துக்கு முன்னரே தமிழில் இலக்கியங்கள் இல்லாவிட்டால்;

"இலக்கியமின்றி இலக்கண மின்றே
எள்ளின் ருகில் எண்ணெயு மின்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தினின் றெடுபடும் இலக்கணம்"

அகத்தியர் மாணவர் பன்னிருவருந் தனித்தனியே நூல்கள் செய்ததுடன் பன்னிருவருஞ் சேர்ந்து பன்னிரு படலமென்னும் ஒரு நூல் செய்தனரென்னுஞ் செய்தி :

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த

---

எனப் பேரகத்தியங் கூறியதாகக் கூறுவதென்னும்? அகத்தியர் தென்னுடைவதற்கு முன்னரே அங்கே தமிழ் வழங்கியிருந்ததென்பதும், அந்நாளில் அதனை வழங்கினோர் அநாரியரான வேறு மனிதரென்பதும், இராமாயணத்தில் அகத்தியர் இராமருக்குக் கூறிய தட்சிண வரலாற்றிலும் ஸ்காந்த புராணத்திலும் பெறப்படும். இயலும் இசையும் நாடகமுமான இலக்கியச் செறிவையுடைய தாய்ச் செவ்விதான இலக்கணவரை யறை யில்லாமற் கிடந்த தமிழை, அவ்வரையறைப் படுத்திய பெருமை அகத்தியர்க்குரியது. வடநூல் வல்லவராதலின் அப் போக்கைப் பின்பற்றித் தமிழின் இலக்கணங்களை யாராய்ந் தறிந்து, இயலிசை நாடகமென்னும் மூன்றுறுப் படங்கிய பிண்ட மாகப் பேரகத்தியமென்னும் இலக்கண நூலை அருளிச் செய்தனர் என்பதில் எட்டுணையு மையமின்று."

தமிழ் செல்வக்கேசவராய முதலியார்.

தமிழ் இலக்கியம் என்னும் ஆராய்ச்சி நூல் எழுதிய ஞா. சா. துரைசாமிப்பிள்ளை "பாஷை. யென்பது மானிட வர்க்கத்தின் கூட்டுறவின் பயனுய்க் காலக்கிரமத்தில் உற்பத்தியாகிப் பல நூற்றாண்டுகளாக வளர்ந்து மனிதர், நாகரிகம் அறிவு முதலியவற் றில் தேருந்தோறும் உடன் விருத்தியாகிக் கொண்டே போவது. அன்றியும் பாஷை எப்போதும் ஒன்றுபோலிருப்பதுமன்று. புதியன புகுதலும் பழையன கழிதலும் பாஷைகளியற்கை. இங்ஙனமாகவும் பாஷையும் அதன் இலக்கணமும் ஒரே காலத்தில் தானே உண்டா யின வெனக் கூறல் எத்துணை விபரீதம்?" என்றுங் குறிப்பிட்டார்.

துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோன்."

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் சிறப்புப் பாயிரத்தாற் பெறப்படுகின்றது.

சுக்ரீவன் தனது சேனைகளைச் சீதையைத் தேட விட்டபோது ;

"தென் தமிழ் நாட் டகன்பொதியிற்றிரு
முனிவன் தமிழ்ச் சங்கஞ் சேர்கிற்றீரேல்

என்றுமவ னுறைவிடமா மாதலா
லம்மலையை இடத்திட்டேகிப்

பொன்றிணிந்த புனல் பெருகும் பொருநையெனுந்
திருநதி பின் பொழியநாகக்

கன்றுவளர் தடஞ்சாரன் மயேந்திரமா
நெடுவரையுங் கடலுங் காண்டிர்"

என்று கூறியதாகக் கம்பர் பாடுகிறார். இதனால் அகத்திய முனிவர் பொதியப் பொருப்பில் சங்க மொன்றினையும் உண்டாக்கி அதன் வாயிலாகவும் அருந்தமிழ்த் தொண்டு செய்திருத்தல் கூடுமென நாம் ஒருவாறு நினைக்கலாம். அகத்தியர் ஒருவரே யன்றிப் பலரிருந்திருக்கக் கூடுமென்றுஞ் சிலர் எண்ணுகிறார்கள். அந்த அகத்தியர்கள் ஆற்றி முடித்ததாக நமக்கெதுவும் ஆதாரத்துடன் தெரியாதபடியால் அவ் ஆராய்ச்சி ஈண்டு வேண்டற்பாற்றன்று.

# அதிகாரம் 18

## தமிழும் பௌத்தரும்

தமிழ் மொழிக்குத் தொண்டாற்றி நன்கு வளர்த்த வகையிற் பௌத்தர்கள், நமது பாராட்டுக்குரியவ ராவார்கள். ஆங்கிலேயர் எப்படித் தம்முடைய மதத்தைப் பரப்பத் தமிழ்த் தொண்டை ஏதுவாகக் கொண்டனரோ அங்ஙனமே தான் பௌத்தருந் தமிழ்ப் பணியை மேற் கொண்டனர்.

பௌத்த மதத்தைக் கண்டு பிடித்தவர் கௌதம புத்தர். கௌதம புத்தரின் பிள்ளைப் பெயர் சித்தார்த்தர். இவருடைய தந்தை சாக்கியநாட்டு மன்னரான சுத்தோதனர். இவர்கள் இந்து மதத்திற் பிறந்தவர்களே. சித்தார்த்தர் கண்டுபிடித்த கொள்கைதான் பௌத்த மதமாயிற்று. பௌத்த மதம் ஏறக்குறைய கி. மு. மூன்றும் நூற்றூண்டில் தமிழ் நாட்டிற்கு வந்து சேர்ந்தது. அம்மதத்தை இங்கு கொண்டு வந்து நுழைக்கப் பாடு பட்டவர்கள் அசோக மன்னரும் அவருடைய சுற்றத்தினருமாவார்.

பௌத்தர்கள் பல நாடுகட்குஞ் சென்று, அந்நாட்டார் தம் மொழியைக் கற்று ஆங்காங்கெல்லாந் தம்முடைய கோட்பாட்டினைப் பரவச் செய்தாங்கு தமிழ் நாட்டினுந் தங் கொள்கையைப் பரப்புவதற்கு மிக முயன்று வேலை செய்தனர். கல்வி யறிவே எல்லா வற்றிற்குங் காரணமென்பதை யுணர்ந்த அவர்கள்,

தாங்கள் வசித்து வந்த பள்ளிகளின் ஓர இடங்களாகிய கூடங்களில் பலருக்குங் கல்வியறிவு புகட்டத் தொடங்கினர். அவர்கள் தங்கள் பள்ளியின் கூடங்களில் ஏற்படுத்திய கல்விச் சாலைகளின் பெயராகிய பள்ளிக்கூடம் என்பதுதான் இன்றும் நாட்டில் பெயராக வழங்குகின்றது. கல்வி போதிப்பதோடு தங்கள் மதக் கோட்பாடுகளையுஞ் சிறிது சிறிதாகப் போதிக்கலாயினர். இளமை தொடங்கியே மத போதனை செய்தாற்றான் நல்ல பலனேற்படுமென்பதை யவர்கள் நன்குணர்ந்திருந்தனர். பின்னாளில் இந் நாடு போந்த ஆங்கிலேயரும் இவர் தம் சூழ்ச்சியைப் பின்பற்றியே தாங்களும் அறிவுப் பெருக்கத் துறையிலே ஈடுபட்டனர். இரு சாராரும் கல்விச் சாலைகளேற்படுத்திய தோடமையாது மருத்துவ சாலைகளையு மேற்படுத்தி மக்களின் உடற் பிணியையும் நீக்கினர்.

கடைச்சங்க காலத்திலே பல பௌத்தப் புலவர்கள் தமிழ் நாட்டிலே பேரறிஞர்களாக விளங்கி யிருந்தனர். சங்க நூல்களில் வரும் புலவர்களிற் சிலர் பௌத்தர்களென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தமிழன்னையின் சிரணிகளாக விளங்கும் மணிமேகலையைச் செய்த கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனாரும் பௌத்தராவர். மறைந்து போன குண்டலகேசி யென்னும் நூலும் வளையாபதி யென்னும் நூலும் பௌத்த நூல் என்றே துணியப் பெறுகிறது. ஐம்பெருங் காப்பியங்களில் மற்றைய சிந்தாமணியையுஞ் சிலப்பதிகாரத்தையுஞ் செய்தவர்கள் சைனர்களாவர்.

வடமொழி இலக்கணத்தையுந் தழுவி ஐந்திலக்கணங்களும் அமைந்ததாகச் செய்யப்பட்டதும், இக்

காலத்தில் வழக்கிழந்திருப்பதுமாகிய வீர சோழியம் என்னும் இலக்கண நூலை இயற்றிய புத்தமித்திரனார் என்பவரும் இதற்குரை யெழுதிய பெருந் தேவனாரும் பௌத்தர்களாவர். இன்னும் பௌத்தர்கள் பல நூல்கள் செய்திருக்கக் கூடுமென்று சங்க நூல்களின் உரை மேற்கோள்களால் தெரிய வருகிறது. எல்லா வற்றையும் விட ஓர் வியப்பென்னவெனில் இம்மதத் தினராகிய அவலோகிதன் என்னும் புலவரிடத்தில் தான் அகத்திய முனிவர் தமிழ் கற்றாரென்று வீர சோழிய அவையடக்கத்துச் செய்யுளில் கூறப்பட்டிருப் பதுதான். இக் கூற்றெங்ஙனமாயினும் சரி, சங்க காலத்திலே பல பெரிய பௌத்தப் புலவர்கள் தமிழா சிரியர்களாக விருந்து தமிழன்னைக்குத் தக்க தொண்டு செய்தார்க ளென்பதற்கு எட்டுணையு மையமின்று.

---

# அதிகாரம் 19.

---

## தமிழுங் கிறித்தவரும்

சீரிய செந்தமிழ் மொழி தோன்றியதிலிருந்து இன்றுவரை வளர்ந்துகொண்டே வருகின்றது. ஆங்கி லேயர் பிராஞ்சுக்காரர் இத்தாலியர் முதலிய மேல் நாட்டார் நமது தமிழ் மொழிக்குப் பல நன்மைகள் செய்துள்ளனர். கிறித்துவ மதத்தைப் பரப்பவேண்டும் என்ற நோக்கத்தோடு வந்த அவர்கள், தமிழைக் கற்று சிறந்த மொழித் தொண்டுப் செய்தனர்.

வாணிகத்தின் பொருட்டு வந்த மேனுட்டாருக்கு மதத்தைப் பரப்பவேண்டுமென்றும் நாட்டைப் பிடித்தாளவேண்டுமென்றும் ஆசையுண்டாயிற்று. மதத்தைப் பரப்புவதற்கு மக்களோடு பேசுதல் வேண்டும். மக்களோடு பேசுவதற்கு மொழி இடையே தடையாயிற்று. எனவே அவர்கள் தமிழைக் கற்கவேண்டியது அவசியமாயிற்று. தமிழைக் கற்றதோடமையாது கல்வியறிவில்லாத மக்கட்குத் தமிழ் மொழியைக் கற்பிக்கவுந் தொடங்கினர். மக்களின் அறிவு விளக்கமாக விருந்தாலன்றோ மத போதனை முதலியவைகளைச் செய்வதற்கு நன்ருக விருக்கும். நாடெங்கும் கல்விச் சாலைகளை யேற்படுத்தியதுடன் அச்சுப் புத்தகம் முதலியவைகளையும் ஏற்படுத்தலாயினர்.

இத்தாலி தேசத்தைச் சேர்ந்த ராபர்ட் - டி - நொபிலி என்பார் தமிழ் நாட்டிற்கு வந்து தத்துவ போதக சுவாமி யென்று பெயர் தாங்கித் தமிழரைப் போல வேடம் பூண்டு தமிழை நன்கு கற்றுணர்ந்து தமிழ்ப் பணி புரிந்தார். இவரியற்றிய தமிழ் நூல்கள், ஞானேபதேச காண்டம் ஆத்தும நிருணயம் முதலியன.

மேற்படி தேசத்திலே தோன்றிய கான்ஸ்டன்டின் சோசப் பெஸ்கி என்பவருந் தமிழ்நாடு போந்து வீரமா முனிவர் என்னும் பேரினை மேற்கொண்டு தமிழ் மொழி பயின்று தமிழ் மொழிக்குப் பெரிதும் உழைத்தார். இவர் தமிழ் மொழி எழுத்திலேயே திருத்தஞ் செய்த பெருத்த மாண்பினராவார்.

"மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்
எகர ஒகரத் தியற்கையு மற்றே"

தொல்காப்பியம்.

"தொல்லை வடிவின எல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி" நன்னூல்.

என்னுஞ் சூத்திர விதிகளின்படி புள்ளியிட்டெழுதப்பட்ட எகர ஒகரப் புள்ளிகளைப் போக்கி; எ் ஒ். கெ. கொ. இவற்றின் மேலுள்ள புள்ளிகளைப் போக்கி ஏகாரத்திற்கும் ஓகாரத்திற்கும் கீழே யிழுத்தலும் வளைத்தலுஞ் செய்ததுடன் கொம்புகளின் மேலுள்ள புள்ளிகளைக் கொம்புகளுக் குள்ளேயே, கே. கோ. என்று வளைத்துத் திருத்திய பெருமை இவரைத்தான் சேர்ந்ததென்று கூறப்படுகிறது. தொல்காப்பியர் காலத்தில், கெ. இது குற்றெழுத்தாகவும் கெ. இது நெட்டெழுத்தாகவும் வழங்கி நின்றது.

தமிழ் மொழியில் அகராதிப் பழக்கத்தை ஏற்படுத்தியவரும் இந்த வீரமா முனிவர்தான் என்று தெரிகிறது. இவர் தமிழில் தமது மதச்சார்பான நூல்கள் பல செய்தார்.* "தொன்னூல் விளக்கம்" என்னும் இலக்கண நூலும் இவராற் செய்யப்பட்டதே.

சீகன் பால்கு ஐயர் என்பவர் செர்மனி தேசத்தவர். இவரும் மதத் தொண்டு செய்தற் பொருட்டுத் தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ் கற்றுத் தமது மதத் தொண்டு செய்ததுடன் தமிழ்த் தொண்டுஞ் செய்தார். தமிழ் நாட்டில் முதல் முதலாகத் தமிழ் அச்சுக்கூடத்தை யேற்படுத்தித் தமிழ்ப் புத்தகங்களைப் பதிப்பித்து வெளியிட்ட பெருமை யிவரைத்தான் சேர்ந்தது.

---

*தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம் முதலிய இனிய செய்யுள் நூல்களையும், பரமார்த்த குரு கதை, வேதியர் ஒழுக்கம் முதலிய செவ்விய உரைநடை நூல்களையும் இயற்றினர்.

மற்றும் எல்லிஸ் துரை, கால்ட்வெல் முதலாயி ஞேரும் தமிழ்நாடு போந்து தமிழ் கற்றுத் தமிழ்த் தொண்டுந் தமது மதத்தொண்டும் புரிந்ததுடன் மக்க ளுக்குப் பல வழியிலும் நன்மை புரிந்துள்ளனர். இக் காலத்திலும் வெளிநாடுகளில் தமிழுணர்ந்த மேனுட் டார் பலருள்ளனர்.

கிறித்தவர்கள் தமிழுக்குச் செய்த நன்மைகளேக் குறித்து மயிலே-சீனிவேங்கடசாமி என்னும் அறிஞர் கிறித்தவமும் தமிழும் என்ருெரு நூல் எழுதியுள் ளார். அந் நூலேப் பார்ப்பின் கிறித்தவர்கள் தமிழ் மொழிக்குச் செய்த நன்மை முதலியவைகள் இனிது விளங்கும்.

---

# அதிகாரம் 20.

---

## தமிழ் இலக்கணத்தின் சிறப்பு

ஆங்கிலத்தில் ஒருவரைப் பார்த்து Where are you going? என்று கேட்பின் நீ எங்கே போகிருய்? என்ருே அல்லது நீங்கள் எங்கே போகிறீர்கள் என்ருே பொருள்படும். ஆனுல் கேள்வி கேட்கப் பெற்றவர் என்ன பொருளே நினைத்துக் கொள்ளு கிருர் என்பதை நம்மால் உணர முடியாது இது பணி வையுங் காட்டாது செருக்கையுங் காட்டாது. மரி

யாதைக் குறைவாகப் பேசிவிட்டதாகவும் குறை கூற முடியாது. தனிச் சிறப்புகளை யுணர்த்தும் இலக்கணத் தன்மை தமிழ் மொழியைத் தவிர வேறெந்த மொழியின் இலக்கணத்திலும் தக்கபடி அமைய வில்லை. நமது தமிழ் மொழியிலோ கள் விகுதி சேர்த்துப் பேசுதல் நல்ல பணிவுடைமையையும், சேர்க்காது பேசுதல் அதிகார தோரணையையும் தெற்றெனவுணர்த்தும்.

வட மொழியில் ஒரு பொருளையும் இரு பொருளையும் இரண்டின் மிக்கவற்றையும் குறிக்கும் எண்ணுக் குறியீடுகள் வெவ்வேறு உள்ளன. தமிழில் ஒருமை பன்மை ஆகிய இரண்டிலேயே அடங்கி விடுகின்றன. திணையுணர்த்தும் வினை விகுதியும் வடமொழிக்கில்லை. மேலுந் தமிழ் மொழிச் சேர்க்கைக்கட்படும் புணர்ச்சிகளும், பெயர்களும், வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சொற்பாகு பாடுகளும், அகம்புறமென்னும் பொருட்பாகு பாடுகளும் குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகு பாடுகளும் வடமொழியில் இல்லை.

தெலுங்கு மலையாளம் முதலிய தமிழின் வழி மொழிகளும் வடமொழி யிலக்கணத்தையே தழுவி இயங்குகிறபடியால் அவைகளினும் மேற் கூறிஞலன்ன சிறப்பியல்புகள் காணப் பெறமாட்டா. மற்று ஆங்கிலத்திலோ வெனில் அதன் இலக்கணப் பெருமையும் முற்கூறியாங்கு ஒருமை பன்மை விகுதி முதலியன செம்மையாக அமையாது சீர்கெட்டே யுள்ளது. தாய் தகப்பன் ஆகிய இரண்டு தவிர மற்றைய உறவு முறைப் பெயர்களெல்லாம் தொடர் மொழியிலேயே அமைந்து நிற்கின்றன. இன்னும் ஆங்கில இலக்கணத்திற்கும் தமிழிலக்கணத்திற்கும் உள்ள வேறு பாடுகள்

பலவாம். ஒருவரிடம் வணக்கமாகப் பேசும் விகுதிகளும், ஒருவரைப் பன்மையால் உயர்த்திக் கூறும் விகுதிகளும் அமிழ்தினுமினிய தமிழ் மொழிக்குத்தான் சிறப்பாகப் பொருந்தியனவாகும்.

தமிழ் இலக்கணம் சிறப்பியல்புகள் பலவுடையதாயிருப்பதைப் போலத் தமிழ் இலக்கிய நூல்களும் பல சிறப்புத் தன்மைகள் செறிந்ததா யிலங்குதலை எல்லோரும் எளிதிலுணரலாம். வடமொழி அறநூல்கள் குற்றங்களுக்கு ஏற்படுத்துந் தண்டனையை வகுப்புப் பற்றி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக விதிக்கின்றன வென்பதை, மனு முதலானவர்களெழுதிய அற நூல்களைப் பார்த்தால் விளக்கமாக வுணரலாம். தமிழ் நூல்களோ நடுநிலை பிறழாது எல்லோருக்கும் ஒரே விதமான ஒறுத்தலையும் பெருமைப் பாட்டையும் உரைப்பனவாம்.

தமிழ்ப் பாடல்கள் பாடலுக் கின்றியமையாத எதுகை மோனை ஓசைகளை யுடையனவாய்ச் சந்தச் சுவையுந் தளைச்சிறப்பும் பொருந்தி நடைபெறுந் தன்மையனவாம். வடமொழிப் பாக்களிவ்வகையிலுஞ் சிறப்புடையனவல்ல.

தமிழ்ச் சொற்களின் ஒலியும் ஒலிக்குரிய எழுத்தும் எல்லாவிடங்களிலும் ஒற்றுமை பெற்றிருக்கும். வடமொழியிலோ ஒலிக்கு வேற்றுமையான சொற்கள் வரும்.

தமிழிசை, உயர்த்திக் கூறுதல் தாழ்த்திக் கூறுதல் முதலிய ஒலி மாறுபாடுகளால் யாழிசையைப் போல மெல்லிசை யின்பம் பயக்கும். வட மொழியிசையோ கனைத்தல் உரப்பல் முதலிய ஒலிகளால்

அமைந்து பல வாத்தியங்களினெலி போன்று வல்லிசை யின்பம் பயக்கும் தமிழ் மொழியின் மொழிகள் அனைவருடைய நாவினும் இனிமையாக இயங்கும். வடமொழி முதலிய பிறமொழிகளின் மொழிகளோ பலருடைய நாவில் எளிதாக இயங்காமலும் வாயில் நுழையாமலும் அல்லலை யாக்குவனவாம்.

---

# அதிகாரம் 21.

---

## தமிழ் இலக்கண நூல்கள்

இலக்கண மென்பது, ஒரு பொருள் இன்ன தன்மையோடு இருக்கவேண்டு மென்பதை வரையறை செய்வது. தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை மூன்றுஞ் சேர்ந்தது முத்தமிழ் என்று மொழியப் பெறுகின்றது. இயலிசை நாடக மென்னும் மூன்றுந் தனித் தனியே நூல்கள் பெற்றுள்ளன. இலக்கணம் என்னும் வடசொல் இயல் என்று பொருள்படும். இயல் என்பது இயற்கைத் தன்மை. இசை என்பது இனிய ஓசை. நாடகம் என்பது கூத்து.

இயற்றமிழ் எழுத்து சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன.

*அகத்தியம்; இயற்றமிழ் நூல்களில் முதலாவதாகப் பேசப்பெறுவது இதுதான். இதற்கு முதல் நூலாகத் திருமுருகனார் இயற்றிய 'குமரம்' என்னும் இயல் நூல்

ஒன்று இருந்ததெனச் சிலர் எண்ணுகிறார்கள். அந் நூலிலிருந்து சில சூத்திரங்களேனுங் கிடைக்காதவரை அதனைக் கற்பனை நூல் என்றே முடிவு கட்டுதல் வேண்டும். அகத்தியமும் சிற்றகத்தியம் பேரகத்தியம் என இரண்டிருந்த தென்பது சிலர் கொள்கை. இவர்கள் கூறுவது "பேரகத்தியம் 12 ஆயிரம் சூத்திரங்கள் வரை யிருந்தது. அதனைச் சுருக்கிச் செய்ததே சிற்றகத்தியம்" என்பதாம். இந்த நூற் சூத்திரங்களில் சில இங்கொன்று அங்கொன்று காணப்படுவதைத் தவிர நூல் முழுவதை யுங் காண முடியவில்லை. இந் நூல், கடல் கோளால் எண்ணிறந்த நூல்கள் வீடு பேற்றை யடைந்தபோது தானும் அடைந்துவிட்டது போலும். பேரகத்தியத் திரட்டு என்றொரு நூல் வெளி வந்துள்ளது. அந்த நூலைப் பார்த்தால் அகத்தியர் செய்ததாகத் தெரிய வில்லை யென்று பலரும் எண்ணுகின்றனர். இதன் போக்கைப் பார்க்குமிடத்துப் புது அகத்தியர் ஒருவர் பழைய சூத்திரங்களோடு சொந்தச் சரக்கையுஞ் சேர்த் திருக்கலாமென்று எண்ண இட முண்டாகிறது.

தொல்காப்பியம்: இது மேற்கூறிய முனிவர் பெருமானின் முதன் மாணவராகிய தொல்காப்பியரால் இயற்றப்பெற்றது. இவருடைய இயற்பெயர் திரணதூ மாக்கினி என்று சொல்லப்படுகிறது. இந் நூல் தோன்றி இரண்டாயிரம் யாண்டுகளிருக்கலா மென்று சிலரும் இன்னும் அதிகக் காலமிருக்கலாமென்று வேறு பலரும் எண்ணுகின்றனர். இந் நூலில், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தியல்களும் இருக் கின்றன. இந் நூலின் சூத்திரங்கள் 1610 என வரை யறை செய்யப் பட்டிருக்கின்றது. இத் தொல்காப்பியங்

தான் தமிழரின் அழியாச் செல்வமாக விளங்கி வருகின்றது. இதன் மூலத்தை கா. நமசிவாய முதலியார், புன்னைவனநாத முதலியார் முதலியோர் தனித் தனியே அச்சிற் பதிப்பித்து வெளியிட்டனர். இதன் உரை முழுவதையும் ஒருங்கே வெளியிட்ட பெருமை செந்தமிழ்ப் புரவலர் சி. வை. தாமோதரம் பிள்ளை யவர்களைச் சேர்ந்ததாகும். இக்காலத்தில் இதனை அனைவரும் வெளியிட்டு வருகின்றனர்.

இத் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பொருளதிகாரத்தில் பொருள் அணி, யாப்பு என்னும் மூன்றும் அடங்கி யுள்ளன. இதற்குப் பலர் உரை செய்திருக்கின்றனர்.

அகப்பொருள் ; இறையனார் களவியல் என்னும் இதனை யாக்கியோர் மதுரைக் கடவுளே என்று சிலரும், இறையனார் என்னும் பெயருடைய ஒருவரென்று பலரும் உரைக்கின்றனர். இது பொருளிலக்கணம் இரண்டில் ஒன்றாகிய அகப்பொருளைப் பற்றி மாத்திரம் இயற்றப் பெற்றது. இதற்கு நக்கீரனார் உரைசெய்துள்ளார்.

புறப் பொருள் வெண்பா மாலை ; இதனைச் செய்தவர் ஐயனாரிதனார் என்பவர். அகத்தியர் மாணவர் பன்னிருவராலுஞ் செய்யப்பட்ட பன்னிரு படலத்தை முதல் நூலாகக் கொண்டு இது செய்யப்பட்டதென்பது இந்நூல் முகப்பிலுள்ள சிறப்புப் பாயிரத்தால் விளங்கும். பொருளிலக்கணம் இரண்டில் புறப் பொருளில் ஒரு பகுதியை மாத்திரம் இந் நூல் கூறும். இதற்குப் பழைய உரை உண்டு.

அகப்பொருள் விளக்கம்; இதனைச் செய்தவர் நாற்கவிராச நம்பி யென்பவர். அகப்பொருளிலக்கணத்தை மாத்திரம் விளக்கமாகச் செய்துள்ளார். இதற்கு உரையுமுண்டு.

யாப்பருங்கலம்; ஐந்தியல்களில் ஒன்றாகிய யாப்பியலை மாத்திரம் இந்நூல் கூறும். இதனைச் செய்தவர் குணசாகரர் என்னும் ஆசிரியர். இதற்கு மிக விரிவான உரையுண்டு. அதனை யாப்பருங்கல விருத்தி என்பர்.

யாப்பருங்கலக்காரிகை; ஐந்தியல்களில் ஒன்றாகிய யாப்பியலை மாத்திரம் இந்நூல் கட்டளைக் கலித் துறையால் விளக்கமாக வுணர்த்தும். இதனை இயற்றியவர் அமிதசாகரர் என்பவர். இந்நூலுக்குக் குணசாகரர் என்பவர் செய்த விருத்தியுரை யுள்ளது.

நேமிநாதம்; இதனைச் செய்தவர் குணவீர பண்டிதர் என்பவர். இது தொல்காப்பியத்தின் எழுத்துச் சொல் இரண்டின் சுருக்கமாக இயற்றப் பெற்றது. இதற்கு உரை உள்ளது.

வெண்பாப் பாட்டியல்; இதனைச் செய்தவரும் மேற்படி நூலாசிரியரே. செய்யுளின் பொருத்த விதிகளை இந்நூல் வெண்பாப் பாடலால் விளம்பும் உரையுண்டு.

வீரசோழியம்; இதனைச் செய்தார் புத்தமித்திரர். ஐந்தியல்களும் இந் நூலில் உள்ளன. இது பிற்காலத்தெழுந்ததாதலின் வடமொழியியலையுந் தழுவி நிற்கின்றது. இந் நூலுக்குப் பெருந்தேவனார் என்பவர் உரை செய்துள்ளார். இந்நூல் இக்காலத்தில் வழக்காறொழிந்த வரிசைகளிற் சேரும்.

நன்னூல்; இதனை யாக்கினூர் பவணந்தி முனிவர். இதில் எழுத்து சொல் என்னும் இரண்டுதான் இக்காலத்திலுள்ளன. ஐந்தும் அக்காலத்திலிருந்தன என்று சிலரும், செய்யப்பட்டதே இரண்டுதான் என்று பலரும் கூறுகின்றனர். எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் ஆகிய இரண்டையும் விளக்கமாகக் கூறுவதில் இக்காலத்தில் இதற்கு இணையான நூல் வேறு யாதுமில்லை. இதற்கு மயிலை நாதர், இராமாநுஜ கவிராயர், சங்கர நமச்சிவாயர், விசாகப் பெருமாளையர், சடகோப ராமாநுசாசாரியர் முதலிய பலர் உரை செய்திருக்கின்றனர். ஆறுமுக நாவலரால் திருத்தியும், விளக்கியும், கூட்டியும் புதுப்பிக்கப் பெற்ற காண்டிகை உரையும், சிவஞான முனிவராற் றிருத்தப்பெற்ற சங்கர நமச்சிவாயர் விருத்தியுரையுமே இக்காலத்தில் அதிகமாகப் போற்றிக் கற்கப் பெறுகின்றன. ஆரிய வியற் கலப்பு மிதிலுண்டு.

பிரயோக விவேகம்; திருக்குருகூர்ச் சுப்பிரமணிய தீட்சதர். வடமொழி யியலையுந், தென்மொழி யியலையும் ஒன்றுபடுத்திப் பஞ்சாமிர்தம் செய்தற் பொருட்டுப் பாட்டு முரையுமாக இந்நூலைச் செய்தார்.

இலக்கணக் கொத்து; இந்நூலைச் செய்தவர் சுவாமிநாத தேசிகர். மற்றைச் செய்திகள் முன்னதற் குரைக்கப் பட்டாங் குரைத்துக் கொள்க.

தொன்னூல்; முத்துவீரியம்; பன்னிருபடலம்; முதலியன வழக்காற்றில் இல்லை.

இலக்கண விளக்கம்; இது ஐந்தியல்களும் அமையும்படி திருவாரூர் வைத்தியநாத தேசிகர் என்பவ

ரால் திரட்டியும் இயற்றியும் உரையுடன் செய்யப்பட்டது. இந்நூற் போக்குச் சிலவற்றை மறுத்துச் சிவஞான முனிவர் இலக்கண விளக்கச் சூறாவளி என்ற ஒரு சின்னூல் எழுதினர்.

தண்டியலங்காரம்; இந்நூல் தண்டியென்னும் ஆசிரியரால் ஐந்தியலில் ஒன்றாகிய அணியியல் விளக்கமாகச் செய்யப்பட்டது. இதற்கு உரையுண்டு.

மாறனலங்காரம்; இந் நூலைச் செய்தவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர். இதில் அணியியல் மாத்திரம் உண்டு. தென்திருப்பேரைக் காரி இரத்தினக் கவிராயர் என்பவர் இந் நூலுக்கு உரை செய்துள்ளார். தொல்காப்பியர் உவமையொன்றனையே அணியாகக் கொண்டார். இவ்வணியைப் பிற்காலத்தார் பலப்படப் பாரித்துரைக்கத் தொடங்கினர். தண்டியாசிரியர் முப்பத்தைந்தணிகள் மொழிந்தனர். இந் நூல்காரர் அறுபத்து நான்கணிகள் இயம்பினர். தற்காலத்தார் நூறணிகட்குக் குறையாமல் கைக் கொள்ளுகின்றனர். உற்று நோக்குவார்க்கு உவமை யணி யொன்றே தாயணி என்பது நன்கு விளங்கும்.

வாருணப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பன்னிரு பாட்டியல், தத்தாத்திரேயப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல் முதலியன யாப்பியலின் பிரிவாக நின்று செய்யுட் பொருத்த இலக்கணங்களைக் கூறுகின்றன.

இக் காலத்திலே மேற்கூறிய இலக்கண நூல்களின் பொருளைப் பற்றுக் கோடாகக் கொண்டு எண்ணிறந்த உரை நடை இலக்கண நூல்கள் தோன்றி நிலவுகின்றன.

# அதிகாரம் 22.

## தமிழ் இலக்கிய நூல்கள்

### கடைச்சங்க காலம்.

கடைச் சங்க காலத்திலே ஆயிரக் கணக்கான அரும் பெரும் புலவர்களிருந்தார்க ளென்பதும், அவர்கள் சிறியவும் பெரியவுமான அகவற்பாக்களால் அக்காலத்திய புரவலர்களையும் கொடைவள்ளல் களையும் புகழ்ந்து பாடினதுடன் மக்களின் பழக்க வழக்கங்களையும் விளக்கமாகக் கூறினரென்பதும் அனைவருமறிந்ததே.

அக்காலத்தில் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் முதற்பாக்களும் இவற்றின் இனம் சிறு பான்மையுந்தான் புலவர் பெருமக்களாற் பாடப் பட்டன. பெரும்பான்மையோர் தனிப்பாடல்களையே மிகுதியாகப் பாடினார்களென்பதுந் தொகுப்பு நூல்க ளால் நமக்குத் தெரிய வருகின்றது. அக்காலத்திய புலவர்கள் தனி நூல்கள் செய்யவில்லையா அல்லது செய்தவை இறந்துபட்டனவா என்னுஞ் செய்தி நமக்கு விளக்கமாகத் தெரியவில்லை.

சங்க காலத்திய புலவர்கள் பலருடைய பாடல் களையும் அக்காலத்திய அரசர்களும் புலவர்களுங் கோவைப்படுத்தி வைத்தனர். அங்ஙனம் கோவை செய்து வைத்தமையால்தான் இஞ்ஞான்று நாம் பலருடைய அறிவுப்பெருக்கையும் ஒருங்கே கண்டு

மகிழ முடிகின்றது. இத் தொகுப்புகள் ஏற்பட்டிராத வரையில் நாம், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலிய நூல்களைக் காண்டலியலாது.

### எட்டுத்தொகை

பலராலியற்றப் பெற்று ஒன்ருகத் தொகுக்கப் பட்ட தொகை நூல் எட்டு அடங்கப் பெற்றபடியால் எட்டுத் தொகை என்று பெயரினை யெய்தியது. 1. நற்றிணை. 2. குறுந்தொகை. 3. ஐங்குறுநூறு. 4. பதிற்றுப்பத்து. 5. பரிபாடல். 6. கலித்தொகை. 7. அகநானூறு. 8. புறநானூறு என்னு மிவை எட்டுத் தொகை நூல்களென்பதை,

> " நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
> றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
> கற்றறிந்தா ரேத்துங் கலியோ டகம்புறமென்
> றித்திறத்த வெட்டுத் தொகை ".

என்னும் பழைய பாடல் விளக்குகின்றது.

1. நற்றிணை இதனைத் தொகுப்பித்தான் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூறு செய்யுட்களை யுடையது. இவற்றைப் பாடின புலவர் நூற்றெழுபத்தைந்து பேர். இந்நூலாற் பண்டை வழக்கங்கள் பல புலனுகும்.

2. குறுந்தொகை ; நாலடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையுமுடையது. கடவுள் வாழ்த் துட்பட நானூற்றிரண்டு செய்யுட்களை யுடையது. இதனைத் தொகுக்கச் செய்தவன் பூரிக்கோ. இதனைப் பாடின புலவர் இருநூற்றைவர்.

3. ஐங்குறுநூறு; இது கடவுள் வாழ்த்து நீங்கலாக ஐந்நூறு பாடல்களையுடையது. ஐந்திணையையும் பிரித்து ஐந்து புலவர்களால் பாடப்பெற்றது. இதனைத் தொகுத்தவர் கூடலூர் கிழார்.

4. பரிபாடல்; முற்காலத்தில் எழுபது பாடலிலிருந்த இது இக் காலத்தில் 24 பாடல்களாக எஞ்சியுள்ளது. திருமால், முருகன், வையை ஆகிய மூன்றையும் பற்றிப் பாடப் பெற்றுள்ளது.

5. அகநானூறு; பன்னிரண்டடியின் மேற்பட்ட அடிகளையுடையனவாகிய பாடல்களை யுடையது. அகப்பொருளைப் பற்றிக் கூறுவது, இதனைத் தொகுத்தோன் உருத்திர சன்மன். தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. கடவுள் வாழ்த்து நீங்கலாக நானூறு பாடல்களுள்ளன. இவற்றைப் பாடிய புலவர் நூற்றுநாற்பத்தைவர். முதல் நூற்றியிருபது பாடல்கள், களிற்றியானை நிரையென்றும்; நூற்றிருபத்தொன்று முதல் முந்நூறுவரை மணிமிடை பவளமென்றும்; முந்நூற்றொன்று முதல் முடிவுவரை நித்திலக் கோவை என்றும் பெயரை யெய்தியுள்ளன.

6. கலித்தொகை; இந்நூல் கலிப்பாவானியன்றமையான் கலித்தொகை யென்னும் பெயரையடைந்தது. இது நூற்றைம்பது கலிப் பாடல்களைக் கொண்டது. ஐந்திணையையுந் தனித்தனியாகக் கூறுவது. பாலைத்திணை பாடினவர் பெருங்கடுங்கோன். குறிஞ்சித்திணை பாடினவர் கபிலர். மருதத்திணை பாடினவர் மருதனிளநாகனார். முல்லைத்திணை பாடினவர் சோழனல்லுருத்திரன். நெய்தற்றிணை பாடினவர் நல்லந்

துவனுர். இதனைத் தொகுத்தோரும் இவரே. இந் நூலினை நச்சினுர்க்கினியர் உரையுடன் முதலிற் பதிப் பித்துக் காப்பாற்றிய பேருபகாரி செந்தமிழ்ப் புரவலர் சி. வை. தாமோதரம் பிள்ளை யவர்களாவர்.

7, 8 புறநானூறு பதிற்றுப்பத்து இந்த இரண்டு நூல்களும் புறப் பொருளைப் பற்றி புகல்வனவாகும். புறநானூறு கடவுள் வாழ்த்துட்பட நானூறு பாடல் களை யுடையது. இவைகளை இயற்றியோர் நூற்று நாற்பதின்மருக்கு மேற்பட்டவராவர்.

பதிற்றுப்பத்தில் முதற்பத்தும் கடைப்பத்தும் அகப்பட்டிலது. அக்காலப் பழக்க வழக்கங்கள், சேரர் பெருமை, திறம் முதலியவைகளை இந் நூலால் இனிது தெளியலாம்.

### பத்துப்பாட்டு

பத்துப் பாடல் தொகுக்கப் பெற்ற படியால் இந் நூல் பத்துப் பாட்டென்னும் பெயரையடைந்தது. 1. திருமுருகாற்றுப் படை. 2. பொருநராற்றுப்படை. 3. சிறுபாணுற்றுப் படை. 4. பெரும்பாணுற்றுப் படை. 5. முல்லைப் பாட்டு. 6. மதுரைக்காஞ்சி. 7. நெடுநல் வாடை. 8. குறிஞ்சிப்பாட்டு. 9. பட்டினப்பாலை. 10. மலை படுகடாம் என்னுமிவை பத்துப் பாட்டாமென்பதை

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல் குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

என்னும் பழம் பாடல் விளக்குகின்றது.

1. திருமுருகாற்றுப்படை; இது 317 அடிகளை யுடையது. பூதத்தினின்றும் விடுபடுவதற்காக முருகக் கடவுண் மீது நக்கீரனாரால் நவிலப்பெற்றது.

2. பொருநராற்றுப்படை; இது 248 அடிகளை யுடையது. பரிசில் பெற்ற ஒரு இரவலன், பெறுமைய வொரு புலவனைக், கரிகாற் சோழன்பால் ஆற்றுப் படுத்தியதாகப் பாடப்பெற்றது.

3. சிறுபாணாற்றுப்படை; இது 269 அடிகளை யுடையது. ஏறுமாநாட்டு நல்லியக்கோடன் பெருந் தன்மையை வியந்து நத்தத்தனார் இயற்றியது.

4. பெரும்பாணாற்றுப் படை; இது 500 அடிகளை யுடையது. தொண்டைமானிளந்திரையன்பாற் சென்று பரிசில்பெற்றா னொருவன், மிடியால்வருந்தியவொருவனை மேற்படி இளந்திரையன் பால் ஆற்றுப்படுத்தியதாகக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்பவர் பாடியது.

5. முல்லைப்பாட்டு; இது நூற்றுமூன்று அடிகளை யுடையது. தலையாலங்கானத்துச் செருவென்றபாண்டி யனைக் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது.

6. மதுரைக்காஞ்சி; இது எழுநூற்றெண்பத்தி ரண்டடிகளை யுடையது. தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை நல்வழியி லுய்த்தற்பொருட்டு மாங்குடி மருதனார் பாடியது.

7. நெடுநல்வாடை; இது நூற்றெண்பத்து மூன்று அடிகளை யுடையது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

8. குறிஞ்சிப்பாட்டு; இது இருநூற்றறுபத்தொரு அடிகளையுடையது. ஆரியவரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் நயம் உணர்த்தற் பொருட்டுக் கபிலர் பாடியது.

9. பட்டினப்பாலை; இது முந்நூற்ருேரடிகளை உடையது. கரிகாற் சோழனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது.

10. மலைபடுகடாம்; இது ஐந்நூற்றெண்பத்து மூன்று அடிகளையுடையது. பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் மகன் நன்னனை, இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் பாடியது.

### ஐம்பெருங் காப்பியம்

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, என்னும் இவை ஐம்பெருங் காப்பியங்களென்று வழங்கப் பெறுகின்றன.

1. சிந்தாமணி, சீவகனுடைய வரலாற்றைக் கூறுவது. 3145 விருத்தப் பாடல்களாகத் திருத்தக்க தேவரென்னுஞ் சைவமுனிவரா லியற்றப்பெற்றது. நச்சினார்க்கினியருடைய உரையையும் இது பெற்றிருக்கிறது.

2. சிலப்பதிகாரம்; கோவலன் மனைவியாகிய கண்ணகி தன் காற்சிலம்பு காரணமாக நிகழ்ந்த செய்தியைக் கூறுவதாதலின் இப் பெயரை யெய்திற்று. இளங்கோவடிகள் என்னும் மன்னர்குலத் துறவிப் புலவரால் இயற்றப்பெற்றது. முத்தமிழும் விரவி

நிற்பது. இந்நூலின் பெருமை அனைவரும் நன்குணர்ந்ததே.

3. மணிமேகலை; கோவலனுக்கு மாதவியிடம் பிறந்த பெண்ணாகிய மணிமேகலை என்பவளின் வரலாற்றைக்கூறுவது. இதனைச் சிலப்பதிகாரத் தொடர்ச்சியென்றே கூறவேண்டும். இதனை இயற்றியவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவர். உ. வே. சாமிநாதையர் எழுதிய அரும்பதவுரை இதற்குண்டு.

4, 5. வளையாபதி, குண்டலகேசி என்னும் நூல்கள் மறைந்துவிட்டன. இந்த நூலைச் சேர்ந்த செய்யுட்களென்று பல நூல்களிற் சில பாடல்கள் மேற்கோள் காட்டப்பெற்றுள்ளன.

### பதினெண் கீழ்க்கணக்கு

1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இனியவை நாற்பது, 4. இன்னா நாற்பது, 5. கார் நாற்பது, 6. களவழி நாற்பது, 7. திரிகடுகம், 8. ஆசாரக்கோவை, 9. பழமொழி, 10. சிறு பஞ்சமூலம், 11. முதுமொழிக்காஞ்சி, 12. ஏலாதி, 13. ஐந்திணை ஐம்பது, 14. திணைமாலை நூற்றைம்பது, 15. திணைமொழி ஐம்பது, 16. ஐந்திணை எழுபது, 17. திணைமாலை, 18. முப்பால் ஆகிய இவைகள் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களா மென்பது:

“நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.”

என்னும் வெண்பாவாற் பெறப்படும்.

திருக்குறள்

முப்பால் என்பது திருக்குறள் என்று சிலரும், திருக்குறள் அல்லவென்று சிலரும் மாறுபட்ட எண்ணங்கொண்டவர்களாக விருக்கின்றனர். செந்தமிழ்ப் புரவலர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தெய்வத் தமிழ்மறையாகிய திருக்குறளை கீழ்க்கணக்கின் பாற் சேர்க்கப்பட்டது. முப்பால் என்பது ஈண்டுத் திருக்குறள் அன்று என்று மிக விரித்துக் கூறினர். நினைக்கு மிடத்துச் செந்தமிழ் மொழிக்கோர் சீரணியாகவும் தெய்வத்தன்மை யுடையதாகவும், சங்கப் பலகையிலே தழைத்தினி திருந்ததாகவும் நன்னெறி பொதிந்த நடுவுநிலைக் களஞ்சியமாகவும், உலகத்தி லுள்ள பிறமொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப் பெறும் பெற்றியுடையதாகவும் ஆயிரத்து முந்நூற்று முப்பதருங் குறள் செறிந்ததாகவும் விளங்கும் பெரும் புகழ் வாய்ந்த திருக்குறளைச் சிறு நூல்வரிசையிற் சேர்த்தல் பெருந்தவறென்றே தெரிகின்றது. வரிசைப் படுத்திய பெரியார், பெருமை சிறுமை நோக்காத தூய மனத்தராயிருந்து இங்ஙனம் வரிசைப்படுத்தி விட்டனரோ என்று ஐயமேற்படுகிறது. அவ்வரிசையைச் சேர்ந்து நிற்பதால் நந்தமிழ் மறைக்கு வந்திடும் இழுக்கு யாதொன்றுமில்லை. பன்மீன் நடுவண் திங்களிருத்தலால் திங்களுடைய சீர்த்திக்குப் பங்க மியாதேனும் உண்டாங்கொல்? உண்மையறிவுக் களஞ்சியமாகவுள்ள இப் பொதுமறையின் பெருமை ஈண்டெடுத்தியம்பற் கரியது.

(1) நாலடியார் ; சைன முனிவர் பலரால் இயற்றப்பட்டது. நன்னெறிகளைக் கன்னத்தி லடித்தாங்

குணர்த்துவது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என முப்பாலாகப் பிரிக்கப்பட்டது. திருக் குறளுக்கு அடுத்தபடியாக நீதிநூல் வரிசையில் நினைக்கப்படுவது. கல்வியறிவில்லாது நீண்டு வளர்ந்த கீழ் மகன் ஒருவன், நல்லறிவாளரது குழுவிற் புக்கு மெல்ல இருந்தானாயினும், மக்கட் கூட்டத்தில் நாய் புகுந்து உட்கார்ந்ததை ஒக்கும். இருந்தவன் சும்மா இராமல் ஏதேனும் பேசத் தொடங்கினும் நாய் குரைத்தலையே ஒக்கும் ;

"கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
இருப்பினும் நாயிருந்தற்றே இராஅ
துரைப்பினும் நாய்குரைத் தற்று"

(2) நான்மணிக்கடிகை ; விளம்பி நாகனாரால் விளம்பப்பெற்றது. ஒவ்வொரு வெண்பாவிலும் நான்கு பொருள் அடக்கிப் பாடப்பெற்ற நூற்றொரு வெண் பாக்களை யுடையது. நிலத்துக்கழகு நெல்லுங் கரும்பும் விளைதல். குளத்துக்கழகு தாமரை மலர்தல். பெண் ணின் நலத்துக்கழகு நாணம். தனக்கு அழகு, மறு வுடலிற் பயன்றுய்க்க அறம்புரிதல்.

"நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்புங்
குளத்துக் கணியென்ப தாமரை—பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணி
தான்செல் லுலகத் தறம்"

(3) இனியது நாற்பது ; இதனை இயற்றியவர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார். ஒவ்வொரு செய்யுளிலும் இனிய காரியங்கள் மூன்று இயம்பப் பெற்றுள்ளன. நாற்பத்தொரு வெண்பாக் களை யுடையது.

(4) இன்னா நாற்பது; ஒவ்வொரு வெண்பாவிலும் துன்பந்தரும் காரியங்கள் நான்கு நவிலப்பெற்றுள்ளன. நாற்பத்தொரு வெண்பாக்களை யுடையது. இதனை யியற்றியவர் கபிலர்.

(5) கார் நாற்பது; இதனை யியற்றியவர் மதுரைக் கண்ணங் கூத்தனார் என்பவர். கார்காலத்தின் இயற்கை வனப்புகள் பலவற்றை இந்நூலில் இனிது காணலாம். நாற்பது வெண்பாக்களடங்கியது.

(6) களவழி நாற்பது; இதனை யியற்றியவர் பொய்கையார். இந் நூல் நால்வகைச் சேனைகளின் போர்த் திறத்தையும் நன்கு கூறும்.

(7) ஐந்திணை ஐம்பது; இதனை யாக்கினார் மாறன் பொறையனார். இந் நூல் ஐந்திணைக்குரிய ஐந்து ஒழுக்கங்களையும் பத்துப் பத்து வெண்பாக்களால் கூறும்.

(8) திணைமொழி ஐம்பது; செய்தார் சாத்தந்தையார் மகனார் கணஞ்சேந்தனார். ஐந்திணைக்கும் பத்துப் பத்து வெண்பாக்களாகப் பாடப்பட்டது.

(9) ஐந்திணை யெழுபது; இயற்றியவர் மூவாதியார். அகப்பொருள் ஐந்திணைக்கும் முறையே பதினான்கு வெண்பாவாகப் பாடப்பட்டது.

(10) திணைமாலை நூற்றைம்பது; இயற்றியவர் கணி மேதாவியார். ஐந்திணைக்கும் முப்பது முப்பது வெண்பாக்களாகப் பாடப்பட்டது. பல நிலங்களினழகும் நன்கு நவிலப்பட்டுள்ளன.

(11) முப்பால்.

(12) திரிகடுகம் ; செய்தவர் நல்லாதனார். நூறு வெண்பாக்களாக நுவலப்பட்டது. ஒவ்வொரு வெண்பாவிலும் இம்மை மறுமை வாழ்விற்கின்றி யமையாத மும்மூன்று செய்திகள் மொழியப் பட்டுள்ளன.

(13) ஆசாரக்கோவை ; நூல் செய்தவர் பெருவாயின் முள்ளியார். பலவகை வெண்பாக்களும் பரவிய நூறு வெண்பாக்களாலாயது. மக்கள் இன்ன இன்னபடி ஒழுகுக என்னும் ஒழுக்கத்தினை ஒழுங்கு படுத்திக் கூறுவது.

(14) பழமொழி ; இதனை யியற்றியவர் முன்றுரையரையர் நானூறு வெண்பாக்களை யுடையது. ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி விளக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. இந் நூல் கற்பவர்கட்கு அறிவுப் பெருக்கத்தை யளிப்பதாகும்.

(15) சிறு பஞ்சமூலம் ; இதனை யியற்றியவர் காரியாசான். நூற்று நான்கு வெண்பாக்களையுடையது. ஒவ்வொரு வெண்பாவிலும் மானிட வாழ்க்கைக்குறுதியாகிய ஐவ்வைந்து பொருள்கள் கூறப்பட்டுள்ளன.

(16) இன்னிலை ; இதனைச் செய்தார் பொய்கையார். அறத்துப்பால் பத்தும், பொருட்பால் ஒன்பதும், இன்பப்பால் பன்னிரண்டும் வீட்டிலக்கப்பால் பதினன்கும் ஆகிய நாற்பத்தைந்து வெண்பாக்களை யுடையது. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினையும் கூறுவது.

(17) முதுமொழிக்காஞ்சி ; இதனைச் செய்தவர் கூடலூர்கிழார். இந் நூல் குறள் தாழிசையாலாகிய

நூறு அடிகளையுடையது. பலவித நீதிகளையும் பகருவது.

(18) ஏலாதி ; செய்தவர் கணிமேதையார், எண்பத்தொரு வெண்பாக்களானியன்றது. ஏலம் முதலிய ஆறு சரக்குகளாலாகிய ஏலாதிச் சூரணத்தைப் போல் நின்று ; அச் சூரணம் உடற்குறுதி பயப்பதுமான இந் நூல் உயிர்க்குறுதி பயக்குமென்று கூறப்பட்டது. இல்லறம் துறவறம் ஆகிய இரண்டறங்களுக்கும் சாதனமாகிய நூல்களின் பொருள்களை யாராய்ந்து ஞானமாகிய வழியினைக் காட்ட வேண்டிச் செய்யப் பட்டது.

## மறைந்துபோன நூல்கள்

### வளையாபதி

உயிர்க ளோம்புமின் ஊன்விழைந் துண்ணன்மின்
செயிர்கள் நீங்குமின் செற்ற மிகந்தொரீஇக்
கதிகள் நல்லுருக் கண்டனர் கைதொழு
மதிகள் போல மறுவிலர் தோன்றுவீர்.

### குண்டலகேசி

வகையெழில் தோள்கள் என்றும் மணிநிறக் குஞ்சி என்றும்
புகழெழ விகற்பிக் கின்ற பொருளில் காமத்தை மற்றோர்
தொகையெழுங் காதல் தன்னால் துய்த்துயாந் தொடைத்து [மென்பார்
அகையழல் அழுவந் தன்னை நெய்யினால் அவிக்க லாமோ?

### முத்தொள்ளாயிரம்

திறந்திடுமின் தீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதாம் ஏதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பன் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு.

## பெருங்கதை

கொங்கு வேளிர் இயற்றிய பெருங்கதை யென்னும் உதயணன் கதையும், பண்டைக் காலத்துப் பழக்க வழக்கங்களை இனிய நடையில் தெளிவுபெற விளக்கு வது. இந் நூலைப் பெருமுயற்சி யெடுத்துச் சாமி நாதையரவர்கள் கிடைத்த வரையில் அச்சிற் பதிப் பித்து, நூல் முழுவதுமே மறைந்து போகாதபடி செய்த பெருந்தன்மை மிகப் போற்றக் கூடியது. இந் நூலின் கதைப் போக்கு வியக்கத் தக்கது. பந்து விளையாடல் பழைய நாளிலிருந்த பண்பைக் குறித்த பாடலை இந் நூலில் தமிழர் விளையாட்டுப் பகுதியிற் காணலாம்.

## பிற்காலம்

கடைச் சங்கம் மறைந்தபின் புதிதாக வேறு சங்கந் தோன்றவில்லை. புலவர்கள் பலரும் பலவிடங்களிலுந் தோன்றித் தமிழ் வளர்த்தலை மேற்கொண்டு செய்த தொண்டுகள் பல. கடைச்சங்க காலம் கி. பி. மூன்றும் நூற்றாண்டோடு முடிவு பெற்று விட்டதென்பது ஆராய்ச்சியாளர் முடிபு. மூன்றும் நூற்றாண்டில்தான் மாணிக்க வாசகர் தோன்றித் திருவாசகம் திருக்கோவை யார் ஆகிய அருட்பனுவல்களை அருளிச் செய்தார். இக் காலத்திற் பௌத்த சமண மதங்களும் பரவி யிருந்தன.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய சமய குரவர் களும் மாணிக்க வாசகர்க்கு இரண்டொரு நூற்றாண்டு பின்னல் தோன்றித் தேவாரத் திருமுறைகளைப் பாடி யருளினர். சுந்தரர் சமய குரவர் நால்வருக்கும் பிற்

பட்டவரென்பது திருத்தொண்டத் தொகையால் நன்கு தெரியலாம்.

சமயக் குரவர்கட்குச் சில நூற்றுண்டுகள் பிற்பட்டு ஆழ்வார்கள் தோன்றித் தேவார திருவாசகங்களைத் தழுவி நாலாயிர திவ்ய பிரபந்தத்தை எழுதினர். நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தை மேலெழுந்த வாரியாகப் படித்தாலே, இது தேவார திருவாசகத்தின் போக்கென்பது விளக்கமாகத் தெரியும். இக் காலத்தை யொட்டியே திருவிசைப்பா திருப்பல்லாண்டு முதலியவைகளும் எழுந்தன போலும் பல புலவர்களாற் பாடப் பெற்ற பதினேராந் திருமுறை சேக்கிழார் காலத்தில் தொகுக்கப்பட்டது.

காலப் போக்கிற் பல நூல்கள் எழுந்தன; வாமனுச்சாரியா ரென்னுஞ் சமண முனிவர் மேருமந்தர புராணம் பாடினுர். தோலாமொழித் தேவரென்பவர் சூளாமணி பாடினுர். பதினுன்காவது நூற்றுண்டுத் தொடக்கத்திலே இலக்கண நூல்களும் நிகண்டுகளும் எழுந்தன.

சயங்கொண்டா ரென்பவர் கலிங்கத்துப் பரணி பாடினுர். சேக்கிழார் அறுபத்துமூன்றடியார் வரலாற்கிய திருத்தொண்டர் புராணம் பாடினுர். கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணமும் இந்தக் காலத்திலே தோன்றியது. ஒட்டக்கூத்தர் புகழேந்தியார் ஔவையார் இவர்களுடைய தக்கயாகப் பரணி, இராமயண உத்தரகாண்டம், நளவென்பா, சிறிய நீதி நூல்கள் ஆகியனவு மெழுந்தன. பொய்யாமொழிப் புலவர் தஞ்சைவாணன் கோவை பாடினுர். கம்பருடைய இராமாயணமும் தோன்றிற்று.

சைவ சித்தாந்திகள் பலர் சித்தாந்த நூல்கள் செய்தனர். வேதாந்திகள் பலர் வேதாந்த நூல்கள் செய்தனர். பதினைம் நூற்றாண்டில் காளமேகப் புலவர் பாடல், வில்லி பாரதம், அருணகிரி நாதர் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி முதலிய தோத்திர நூல்கள் தோன்றின. இக்காலத்தை யொட்டியே அதிவீரராம பாண்டியனுடைய நைடதம், கூர்ம புராணம், இலிங்கபுராணம், காசி காண்டம் முதலியவைகளும், வரதுங்க பாண்டியனுடைய பிரமோத்தர காண்டம் முதலிவைகளும் தோன்றின. பரஞ்சோதி முனிவருடைய திருவிளையாடற் புராணமும், இக்காலத்ததே.

பதினேழாம் நூற்றாண்டில் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் தோன்றி அஷ்டப் பிரபந்தம் பாடினார். சைவ எல்லப்ப நாவலர் அருணசல புராணம் பாடினார். குமரகுருபர சுவாமிகள், கந்தர் கலி வெண்பா, மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், சிதம்பரச் செய்யுட் கோவை, காசிக் கலம்பகம் முதலிய நூல்களைப் பாடினார். உமறுப்புலவர் என்பவர் சீராப் புராணம் பாடினார். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திருவெங்கைக் கோவை, சோண சைலமாலை, பிரபுலிங்க லீலை பழமலையந்தாதி முதலிய நூல்கள் பாடினார்.

நல்லாப் பிள்ளை யென்பவர் வில்லிபுத்தூரார் பாரதத்தை இடை இடையே புதுப் பாடல் செய்து செருகிப் பதினன்காயிரம் பாட்டுடையதாகச் செய்தார். தாயுமான சுவாமிகள் பாடலும் தோன்றிற்று. இக்

காலத்தில் இன்னும் பல புலவர்கள் தோன்றிப் பல சிறு நூல்களையும் சில பெரு நூல்களையுஞ் செய்து வைத்தனர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் திருவாவடுதுறைச் சிவஞான முனிவர் காஞ்சிப்புராணத்தின் முதற்பகுதி பாடியதுடன் வேறு பல சிறு நூல்களும் செய்தார். இவருடைய முதன்மாணவராகிய கச்சியப்பபண்டாரத் தார், விநாயகபுராணம், காஞ்சிப்புராணத்தின் இரண் டாங் காண்டம், திருத்தணிகைப் புராணம், பூவாளூர்ப் புராணம் திருவானைக்காப் புராணம், திருத்தணிகை யாற்றுப் படை முதலிய நூல்கள் பாடினார். இக்காலத் தில் வேறு பலரும் பல நூல்கள் பாடினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே பல புலவர் சிறிய நூல்களும் ஏராளமான தனிப் பாடல்களும் இயற்றி னார்கள். இராமலிங்க சுவாமிகள் திருவருட்பாவும் இக்காலத்திலே எழுந்தது. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் ஏராளமான புராணங்களும் சிறிய தோத்திர நூல்களும் பாடினார். திருப் புகழ்ச் சுவாமிகள் முருகதாச சுவாமிகள் என்னுஞ் சிறப்புப் பெயர்களையுடைய மஹான் வண்ணச்சரபந் தண்டபாணி சுவாமிகள் ; புலவர் புராணம், தில்லைத் திருவாயிரம், பழநித் திருவாயிரம், திருச்செந்திற் கோவை, கௌமாரவிசயம் மயிலாசலக் கலம்பகம், தமிழலங்காரம், வேலலங்காரம், ஆறெழுத்தலங்காரம், முருகானந்தலகரி முதலிய எண்ணற்ற நூல்களைப் பாடியுள்ளார்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலே நூல்கள் கணக்கு வழக்கின்றி பெருகிக்கொண்டே இருக்கின்றன. அவை

களை யெல்லாம் எடுத்துரைத்தல் அருமையான காரியம். பல்லாவரம் மறைமலையடிகள் மாணிக்க வாசகர் வரலாறுங் காலவாராய்ச்சியும், மக்கள் நூறாண்டு உயிர்வாழ்வதெப்படி, திருவாசக விரிவுரை முதலிய பல அரிய நூல்கள் எழுதி வெளியிட்டிருப்ப துடன், இன்னும் நூல்கள் எழுதிக்கொண்டிருக்கின் றார்கள்.

திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் பல அரும் பெரும் உரைநடை நூல்களும், செய்யுள் நூல்களுஞ் செய்து வெளியிட்டிருப்பதுடன், மேலும் நூலெழுதுந் திருப்பணியிலேதான் காலத்தைச் செல விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

திருநெல்வேலி மணிவாசக மன்றத் தலைவர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், தமிழிலக்கிய வரலாறு சமயகுரவர்கள் சரித்திரம் முதலியன வெழுதி நற் றமிழ்த் தொண்டு நன்கு புரிகின்றதுடன், அண்ணாமலைச் சர்வகலாசாலையின் தமிழ்ப் பிரிவுத் தலைமைச் சொற் பொழிவாளராகவுமிருந்து, பெருந் தொண்டு செய் கின்றார்கள்.

தனவணிக குலத்தில் தோன்றியவராகிய பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், வடமொழி தென்மொழி என்னும் இருமொழியிலும் பெரும் புலமை யடைந்து சுக்கிர நீதி சுலோசனை, மண்ணியற் சிறுதேர் உரை நடைக்கோவை முதலிய பல நூல்களெழுதி யிருப்பதுடன் அண்ணாமலைச் சர்வ கலாசாலையிலும் நற்றமிழ்த் தொண்டு புரிந்து வருகின்றார்கள்.

செகவீர பாண்டிய கவிராச பண்டிதரவர்கள்; திருக்குறளின் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்

களுக்கும், எடுத்துக் காட்டுக் கதைகளமைத்து நேரிசை வெண்பாவாக முடித்து, மிகச் சிறந்த விரிவுரையுடன் ஏறக்குறைய ஐயாயிரம் பக்கங்கொண்ட ஐந்து பெரும் புத்தகங்களாக வெளியிட்டதுடன்; இராமாயண ஆராய்ச்சி வடிவான புலவர் உலகமென்னும் மாதப் புத்தகத்தையும் வெளியிட்டு வருகிறார்கள். இவர்களுடைய நூல் விரைவிற் சீர்த்திபெறும். தருமதீபிகை முதலிய வேறு பல நூல்களும் இவர்களாற் செய்யப் பெற்றுள்ளன. இவைகளிற் சில இன்னும் அச்சிற் பதிப்பிக்கப் பெறவில்லை.

---

# அதிகாரம் 23.

---

## தமிழ்நூற் கடவுளர்கள்

தமிழ் நூல்களிலே மிகப் பழமையானவற்றில் கடவுள் வாழ்த்துப் பாடப் பெறவில்லை. பிற்காலத்திலே பல நூல்களின் முகப்பிலும் கடவுள் வாழ்த்தைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிச் சேர்த்தார். தற்கால வுலகின்கண்ணே பல மதங்களைப் பார்க்கின்றோம். இந்து மதம், பௌத்த மதம், சைன மதம், முகம்மதிய மதம், கிறிஸ்துவ மதம், முதலியன பெயரெடுத்த பெரிய மதங்களாம். இந்த மதங்களிலும் அநேக பிரிவுகளிருக்கின்றன.

மதங்கள் பற்பலவாக மல்குவதற்குக் காரணம் மக்களின் மதமே தவிர மற்றியாதுமில்லை. படைப்புக் காலத்திய மொழி ஒன்றே நாளடைவில் பலவிதமொழிக

ளாகப் பல்கியதைப் போலவே மதமும் பல்கி யிருக்கின்றது.

படைப்புக் காலத்திய மக்கள் சீர்திருந்தி வர வரத் தமது வாழ்க்கையினை ஒரு ஒழுங்கு செய்து கொண்டார்கள். ஓரளவுக்கு வந்து வாழத் தொடங்கிய மக்கள் தங்களுக்கு மேலான பொருள் யாதென்று எண்ணத் தொடங்கினர். ஞாயிற்று மண்டிலம் திங்கள் மண்டிலம் தீ ஆகியவைகளே அவர்கட்கு இறும்பூதை யளித்தன. இப்பொருளினை யவர்கள் தங்கட்கு மேலே சிறந்த பொருளென வெண்ணி வழிபடலாயினர்.*

"கொடி நிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே."

—தொல்காப்பியம்.

கொடிநிலை - ஞாயிறு, வள்ளி - திங்கள், கந்தழி - தீ. இச் சூத்திரந் தோன்றிய காலத்தே பிற கடவுள் வழிபாடும் நாட்டிலே மிகுந்து விட்டமையின் கடவுள் வாழ்த்தொடு என்றார்.

---

*இனித் தொல்காப்பியம் ஆக்கப்பட்ட காலத்தில் முத்தீ வழிபாடும், அம்முத்தீக் கண்ணும் முனைத்து விளங்கும் இறைவன் சிவந்த மேனியனாய்ச் 'சேயோன்' என நிற்பானென்னுங் கோட்பாடும் மிக்கு வழங்கினவாயினும், 'சிவன்' என்னும் பெயரா லாதல் முக்கண்ணன் என்னும் பெயராலாதல் இறைவனை வணங்கும் வணக்கம் அஞ்ஞான்று உளதாயிற்றில்லை. 'முக்கண்ணன்' 'சிவன்' என்னுஞ் சொற்கள் தொல்காப்பியத்தில் ஓரிடத்தாயினுங் காணப்படவில்லை. இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகட்கு முன் இயற்றப்பட்ட காரிகிழாரது, செய்யுளிற் காணப்படும் 'முக்கண்ணன்' என்னுஞ் சொல் தொல்காப்பியத்தில் காணப்படாமையை உற்று நோக்குங்கால், தொல்காப்பியங் காரிகிழாரது காலத்திற்

"திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதுங்
கொங்கலர் தார்ச் சென்னிக் குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்தலான்"

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதுங்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித்தலான்" —சிலப்பதிகாரம்.

இவை மிகப் பிற்காலத்தன.

"பலர்புகழ் ஞாயிறு" —திருமுருகாற்றுப்படை.

"முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி
யேமுற விளங்கிய சுடர்" —நற்றிணை.

"ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென் மாலை" —அகநானூறு.

காலப் போக்கில் உயர் பொருளுணர்ச்சி அவர்கட்கு வளர்ந்துகொண்டு வந்தது. உயர்பொருளை ஓரிடத்தில் வழிபடுதல் வேண்டுமென்று முடிவு செய்து, உயர்ந்த பொருளை வணங்க உயர்ந்த மலைகளே தக்க இடமென முடிவு செய்தனர். உயர் பொருளின் தன்மையை நோக்கிக் கடவுள் என்னும் பெயரையும் இட்டுப் பண்பினையும் கற்பித்தனர். எக்காலத்தும் மாறற்கரிய இளந்தன்மை, பேரழகுடைமை, சீரருளுடைமை தம்மைப் போன்ற வடிவமுடைமை ஆகியவற்றை அக்கடவுளுக் கேற்றினர். இக்கடவுள்தான்

---

கும் பன்னூற்றாண்டு முற்பட்டு இயற்றப் பட்டதென்பது தெளியப்படும். படவே, தொல்காப்பியனார் காலத்தில் வணங்கப்பட்ட தெய்வங்கள் முருகக்கடவுளும், அக் கடவுள் முனைத்து விளங்கும் ஞாயிறு திங்கள் தீ என்னும் முத்தீயும் மாயோனுமேயாம்."

—மாணிக்கவாசகர் காலம் 532-பக். மறைமலை யடிகள்.

பழங்காலத்துத் தமிழ் மக்கள் கண்டுபிடித்த திருமுருகக் கடவுளாம். இவ் வழகிய கடவுள் ஏறி யுலாவுவதற்கு அழகில் சிறந்த மஞ்ஞையையினையும் ஊர்தி யென்றனர். என்னே பழந் தமிழரின் பரந்த பேரறிவுடைமை? இக் கடவுளுக்கு முன்னர் வணங்கிய ஞாயிறு திங்கள் தீ யாகிய மூன்று பொருள்களையும் முக்கண்களாகக் கூறினர்.*

நாளடைவில் மக்கள் நிலப்பாகுபாடுண்டாக்கினர். ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு கடவுளைக் காரணங் கருதி அமைத்தனர். கடல் கொண்ட தென்னாட்டி லிருந்து பன்னாட்டினுஞ் சென்று திரிந்து பல தலைமுறை வதிந்து நிறம் வெளுத்ததே யன்றிப் பேசிய மொழியுந் திரிந்து ஆரிய ரென்னும் மாறு பெயருடன் இந்தியா வுக்கு வந்து சேர்ந்த பழந் தமிழர்கள் தெற்குக் கோடி வரை பரவினர்.

இந்த ஆரியர்கள் வெறுங் கையினராக வரவில்லை. புராணேதிகாசக் கதைகளையும் விநாயகர், சிவபெருமான் தட்சணாமூர்த்தி நடராசர் முதலிய தெய்வங்களை

---

* இனி ஒருநாட் காலையிற் கீழ்பால் எழூஉம் ஞாயிறு புதிய இளமைச் செவ்வி வாய்ந்ததாய் இருத்தலானும், கீழ் கடலின் எல்லைப் புறத்தினின்றும் எழுந்து ஞாயிறுமேல் இவருங்கால் அக் கடல் நீரின் மேற்பரப்பெல்லாம் மயிலின் நிறம்போல் நீலமும் பசுமையுங் கலந்து ஒளிருதலானும், அவ்விடியற்காலை ஞாயிற்றின் கண் விளங்கித் தோன்றும் இறைவற்கு 'இளையோன்' என்று பொருள்படும் முருகன் என்னும் பெயரை வைத்து அஞ்ஞாயிற் றின்கீழ்ப் பச்சென்று காணப்படுங் கடற்பரப்பினை அவன் ஊர்ந்து செல்லும் மயிலாக வழங்குவாராயினர்."

—மா. காலம் பக்கம் 529 மறைமலை யடிகள்.

யும் இன்னும் பல வேடிக்கைகளையுங் கொண்டு வந்திருந்தனர். தமது உயர்வைக் கருதியும் வாழ்க்கைப் போக்கைக் கருதியும் கொணர்ந்து புகுத்திய கொள்கைகள் பல இடம் பெறலாயிற்று. இக் கொள்கை சைவ சமயத்திற்கு விரோதமாகப் போகுமென அஞ்சுகிற சிலர், இதனை ஒப்பாது சிவபெருமான் முற்காலத்திலேயே இங்கு வணங்கப் பட்டார் என்று நாட்ட முற்படுவர். சிவனுருக்குரிய பெயர் முழுவதும் ஆரியமாகவே யிருத்தலும், சங்ககாலத்து நூல்களிலே அக் கடவுள் போதிய அளவு போற்றப் படாமையுமே சிவ வணக்கம் பிற்காலத்த தென்னும் கொள்கையை வலியுறுத்தும். வெளி நாடுகளிலே ஆரியர் வசித்திருந்த இடங்கள் பலவற்றில் சிவ வணக்க மிருந்ததென்னுஞ் செய்தியும், "தமிழ் நாடும் அயல் நாடும்" என்னுந் தலைப்பிற் காணலாம்.*

ஆரியர் சுவர்க்க நரகங்களைக்கூடச் சிருட்டித்துக் கொண்டுவந்து தமிழ் மக்களுக்குக் காட்டி மருட்டினர்.

---

* "கடைச்சங்க காலத்திலே தமிழ் மக்கள் வட நாட்டிலிருந்து ஆரியராற் கொண்டுவரப்பட்ட பிறதெய்வங்களின் வழிபாட்டையுங் கைக் கொண்டனர். புத்தம் முதலிய பிற சமயங்களுக்கும் தங்கள் நாட்டில் இடங்கொடுத்துச் சமயப் பொறுமையை மேற் கொண்டனர். இராமாயண பாரதக் கதைகள் தென்னாட்டிற் பரவின." இலக்கிய வரலாறு. —கா. சுப்பிரமணிய பிள்ளை M. A. M. L.

2. திருமூலர் திருமந்திரத்திலும், அவர்க்கு முற்பட்ட மாணிக்கவாசகர் திருவாசகந் திருக்கோவையாரிலும், அவர்க்கு முற்பட்ட சங்கத் தமிழ் நூல்களிலும் யானைமுகக் கடவுளாகிய பிள்ளையாரைப் பற்றிய குறிப்பாதல், வணக்கமாதல் எங்கும் எட்டுணையுங் காணப்படாமையின், அந்நூல்கள் தோன்றிய காலங்

இவர்தங் கோட்பாடு தீமையைப் பயவாதென அறிந்த தமிழர் அவற்றை மேற்கொள்ளலாயினர். ஆரிய மொழிச் சொற்களும் தமிழ் மொழிச் சொற்களும் கலந்தன. தெய்வங்களும் ஓரே குடும்பமாகத் தாய் தகப்பன் பிள்ளை முறையில் மாறின. முருகக் கடவுளுக்குப்பின் வந்த விநாயகர் முருகக் கடவுளுக்கு எப்படியோ அண்ணனாகி விட்டார். எல்லாவற்றையும் விட ஓர் இறும்பூதானகாரிய மென்னவென்றால்; மணமில்லாதிருந்த பழந்தமிழ்க் கடவுளான முருகக் கடவுளுக்கு இரு திருமணம் ஆனதுதான். இத் திருமணம் சங்ககாலத்துக்கு முன்னரே நடந்துவிட்டது. நக்கீரனாரும் திருமுருகாற்றுப் படையில் ஆரிய முறையை ஒட்டியே,

"மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி!
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!
செருவில் ஒருவ பொருவிறன் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொன்மலை!
மங்கையர் கணவ மைந்தர் ஏறே!."

என்று பாடினார்.

---

களிற் பிள்ளையார் வணக்கம் இத் தமிழ் நாட்டின் கண் உண்டாக வில்லை யென்பது தெளியப்படும். அப்பர் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரங்களிற் பிள்ளையாரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுதலின், கி. பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியி லிருந்தே யானைமுகக் கடவுள் வழிபாடு இத் தென்றமிழ் நாட்டின் கண் உளதாயிற்றென்று துணிக."

—மாணிக்கவாசகர் காலம் பக்கம் 190 மறைமலையடிகள்

மற்றுஞ் சங்க நூல்களில் கடவுளரைப் பற்றிய செய்திகள் ;

"நீலமணி மிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே." —புறநானூறு 91.

"நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாய்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீறு." —மணிமேகலை.

"பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுந்
திருவடியுங் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார் தங்கண்ணென்ன கண்ணே.'
மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே"
—சிலப்பதிகாரம்.

"ஓரினெய்தல் கறங்க வோரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைதலுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்
இன்னா தம்ம விவ்வுலகம்
இனிய காண்கிதனியல் புணர்ந் தோரே." —புற 194.

"சிந்தா தேவி செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி" —மணிமேகலை.

என்னுஞ் செய்யுள்களிலும் பிற செய்யுட்களிலும் காணப்பெறுகின்றன.

இங்கு காணப்பட்ட, ஞாயிறு, திங்கள், தீ, முருகிறை, சிவன், திருமால், பிரமன், கலைமகள், மலைமகள், முதலிய கடவுளர்களுடன், அலைமகள், காமன், ராமன் விண்ணவர்கோன், கொற்றவை முதலிய கடவுளர்களும் ஆங்காங்கு சங்க நூல்களில் காணப்படுகின்றனர். விநாயகர் எந்த இடத்திலுங் காணப்படவில்லை. இதனால் இவர் ஆரியக் குழந்தையாய்ச் சங்க காலத்திற்குக் கூடப் பின்னாளில் இந் நாடு வந்தவரோ என்று எண்ண வேண்டியதாக விருக்கிறது.

இக் காலத்திலோ கடவுட் கூட்டம் தமிழ்நாட்டில் ஏராளமாகப் பெருகிவிட்டது. உப்புக் கல்லுக்குக் கூடப் பயனற்ற நொண்டி, சாமுண்டி, சின்னான், பெரியான், கறுப்பன், வெளுப்பன், சங்கிலி வீரன், மதுரை வீரன், ஆகாச மாரியம்மன், பாதாள மாரியம்மன், காளியம்மன், கூளியம்மன், அங்காளம்மன், பங்காரம்மன், துரோபதையம்மன், சக்கம்மாள், சொக்கம்மாள், அய்யனார், பொய்யனார், வழிமறிச்சான், முடிச்சவித்தான் முதலிய சில்லறைத் தெய்வப் பெருக்குத் தினந்தினம் பெருகி வருகிறது. ஒவ்வொரு பொருளும் வளர்வதியற்கையாதலின் இந்தத் தெய்வக் கூட்டமும் இப்படி வளர்ந்து கொண்டு வருகிறது போலும்.

---

# அதிகாரம் 24.

---

## தமிழர் மதமும் பிறர் மதமும்

மொழி ஒன்று பலவாகத் திரிவதைப் போல, மதமும் மக்களின் மதத்தால் ஒன்று பலவாகத் திரிகின்றது. "பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல காலவகையினானே" என்பதற்கேற்பக் காலஞ் செல்லச் செல்ல எல்லாம் மாறுபாட்டை யடைகின்றன. பழையவற்றை நீக்கிப் புதியவற்றை மேற்கொள்ள வேண்டுமென்னும் அவா மக்க ளுள்ளத்தின்கண்ணே தோன்றுகின்றது. பழமையை வெறுத்துப் புதுமையை விரும்பாதார் யார்?

ஒருவிதமான மதத்தையே நீண்ட காலம் மேற்கொண்டு அலுத்துப்போன மக்கள் நாளடைவிற் புதிய புதிய வழக்கத்தை மேற்கொள்ளலாயினர். இதனால் மதம் அதிகரிக்கலாயிற்று. புதுப் புதுச் சீர்திருத்தங்கட்குப் புதுப் புதுப் பெயர்களிட்டனர். உலகில் ஆயிரக்கணக்கான மத வேறுபாடுக ளிருப்பினும், அனைத்தும் ஒரு பெருங் கடவுளையே முதலாக வுடையதாம். எல்லாக் கொள்கைகளும் ஒன்றிலிருந்து கிளைத்தற்கேற்ப இறுதியில் ஒன்றிலேயே போய்ச் சேர்கின்றது. எவர் தம் சமயக் கோட்பாடுகளையும் நாம் இழிவாக எண்ணுதல் கண்ணியமானதன்று. ஒரு மதத்திலிருந்தே பல மதங் கிளைக்கின்றதாகலின் ஒரு மதத்தை இழிவாக வெண்ணுகின்றவன் தன் மதத்தையே இழிவாக எண்ணியவனாகின்றான்.

மதம் எங்ஙனம் விரிந்து பரவுகின்றது என்பதை ஒரு சிறிது ஆராய்வாம். பழந் தமிழ் மக்களின் முழு முதற் கடவுள் பண்டைக் காலத்தில் பரிதிவானவனெனப் பகர்ந்தாம். சூரியனென்னும் ஆரியமொழிப் பெயருடைய தாய்ப் பாரிருள் நீக்கும் ஞாயிறு, 'எல்' என்றும் எல்லா மக்களானும் ஏத்தப்பெறும்;

"முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்தல் ஊதி 'எல்' படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்."

என்பது திருமுருகாற்றுப் படை. வெளி நாட்டிற் குடியேறிய பண்டைக்காலத் தமிழரின் பழங் கொள்கை வெகு காலத்திற்குப் பின்புதான் திரியலாயிற்று. ஒரே கொள்கையை அனுசரித்த மக்கள் ஊக்கமிழந்து கொண்டிருந்தனர். இதனைக் கண்ட அக்கால அறிஞர்கள் அவர்களது ஊக்கத்தை ஆக்கற் பொருட்டு, மதக் கோட்பாடுகளில் மாறுபாட்டை உண்டாக்கினர். இறைவனொருவன் உண்டென்னும் அடிப்படைக் கொள்கை அப்படியே யிருக்க, வடிவம் வணக்கம் முதலியவைகளைப் புதிதாக வகுத்தனர். இதுவே புது மதமாயிற்று. காலந்தோறும் இடங்கள்தோறும் புதுப் புதுக் கொள்கைகள் தோன்றியபடியால் பலவிதச் சமயங்கள் பாரிலே பல்கின.

இந்தியாவிற் கிளைத்த பௌத்த மதம், சைன மதம் முதலியவைகளின் வரலாறுகள் அனைவரும் நன்குணர்ந்ததே. சமயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் அறிஞர்கள் தாங்கள் கண்டு பிடித்த சமய வுண்மைகளை வெளியிடுகின்றனர்.*

---

*" அல்லா " என்னுஞ் சொல் '**எல்**' என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபேயாகுமென இதனுண்மையை ஆராய்ந்து கண்டார் கூறுகின்றனர்."

கிறிஸ்துவ மறையின் முதற் புத்தகத்தில் எல்லாம் வல்ல முழு முதற் கடவுளுக்கு, 'எல்லோகிம்' என்னும் பெயரே நனி சிறந்த தாய்ச் சாலப்பழையதாய் எடுத்தாளப் பட்டிருக்கின்றது, இச்சொல் '**எல்**' என்னும் சொல்லிலிருந்து வந்ததெனக் கிறிஸ்து வேத ஆராய்ச்சிவல்ல புலவோர் உரைகூறுகின்றனர். கிறிஸ்து சமயத்துக்கு முன்னோரும் முதல்வனை '**எல்**' என்றும் எலோகிம் என்றும்

சமயங்கள் பற்றிய செய்திகள் சில இந்நூலில் வேறிடங்களிலும் வந்துள்ளன. சமய உண்மைகளை நன்கு ஆராய்ச்சி செய்யின் உண்மை இனிது விளங்கும்.

மதங்கொண்டு மதவாதஞ் செய்வார்க்கு இறைவனது உண்மை நிலை விளங்கமாட்டாது. இறைவன் வாதமிடுஞ் சமய நெறிக்கு அப்பாற்பட்டவன். இக்காலத்திலும் பல தத்துவ ஞானிகள் பல சமய ஆராய்ச்சி செய்து உண்மை நிலை கண்டோராக உள்ளனர். உண்மைத் தத்துவ நிலையை உணர்ந்தோர் சமய பேத உணர்ச்சியில் மனந் திரிதற்குச் சிறிதும் இடங்கொடார். உயிர்களிடத்துக் கருணை பாராட்டுவதை உயர்நோக்கமாகக் கொண்ட எந்த மதமும் மிகவுயர்ந்த மதமாம். நதிகள் பலவுங் கடலை நாடிச் செல்வதைப் போலவேதான் சமயங்கள் பலவுங் கடவுளை நாடிச் செல்லுகின்றன. பலவிதச் சமயங்களும் பாரினில் இனிது வாழ்வதாக.

---

எல்சடையன் என்றும் ஓரோ விடங்களில் எல் எலியன் என்றும் வழங்கி வந்தமையினை உற்று நோக்குங்கால் அவருங் கடவுளை ஒளி வடிவினன் என்றே கருதி வழிபட்டமை புலனாகா நிற்கும்......... ஈண்டு காட்டிய இவ் வரலாற்றில் ' எல் சடை ' என்னும் பெயரிற் கண்ட சடையென்னுஞ் சொல்லுஞ் சிவபெருமாற்குச் சிறப்புப் பெயராகத் தமிழ்நாட்டில் வழங்கும் சடையன் என்னுஞ் சொல்லும் ஒன்றா யிருத்தல் பெரிதும் நினைவு கூறற்பாலதாம்."

..................ஆராய்ந்து பார்க்கும் நடுநிலையாளரெல்லாம் கிறித்துவ சமயத்தினர் தம் முன்னோர் செய்து போந்த கடவுள் வழிபாடும் தமிழ்நாட்டினர் செய்து போதரும் சிவவழிபாடும் ஒன்றேயாமென்பதும் உணராமற் போவரோ ?

சிவஞானபோத ஆராய்ச்சி. மறைமலையடிகள்

# அதிகாரம் 25

## தமிழ்மொழியும் பழமொழியும்

நமது தமிழ்மொழி தோன்றி வழங்கிச் சீர்திருத்தத்தை யெய்தியதும், அரிய சொற்றொடர்கள் பல தோன்றலாயின. ஆழ்ந்து கவனிக்குமிடத்து இச் சொற்றொடர்களே நாளடைவில் வளர்ச்சியடைந்து, பாடல்களாக வடிவங்கொண்டன வென்று கோடல் பொருந்தும். நல்ல பொருட் செறிவும் ஆழ்ந்த கருத்துமுடைய சொற்றொடர்கள் நாளிதுவரை தொடர்ந்து நின்று பழமொழிகள் என்னும் குறியுடன் வழங்கி வருகின்றன. தமிழ் மொழியிலே வழங்கும் பழமொழிகளுக்கு ஒரு கணக்கு வழக்கில்லை. அவை பல்லாயிரத்திற்கு மேற்பட்டனவாம். அவற்றுள் சிலவற்றை எடுத்துக்காட்டாக ஈண்டுத் தருகின்றோம்.

1. அச்சாணி யில்லாத தேர் முச்சாணும் ஓடாது.
2. அடங்காத மாட்டிற்கு மூங்கில் தடி ராசா.
3. அன்பற்ற மாமியைக் கும்பிட்டாலும் குற்றம்.
4. ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்குத் தொக்கு.
5. ஓட்டைச் சட்டியானாலுங் கொழுக்கட்டை வெந்தாற் சரி.
6. கம்பளி விற்ற பணத்திற்கு மயிர் முளைத்திருக்குமா?
7. தன்னூருக்கு ஆனை அயலூருக்குப் பூனை.
8. வேண்டாப் பெண்டாட்டி கால் பட்டாலுங் குற்றம் கை பட்டாலுங் குற்றம்.
9. நண்டு கொழுத்தால் வளையிற் கிடக்குமா?
10. தண்டச் சோற்றுக்காரா குண்டுபோட்டால் வாடா.
11. பெண்டாட்டி கால்கட்டு பிள்ளை வாய்க்கட்டு.

12. மக்காவுக்குப் போய்க் கொக்குப் பிடித்தது போல.
13. நபாபத்தனை ஏழை புலியத்தனை சாது.
14. துலுக்கத் தெருவிலே தேவாரம் ஓதினது போல.
15. நாயைக் கண்டாற் கல்லைக் காணோம் கல்லைக் கண்டால் நாயைக் காணோம்.
16. நடந்தவர்கள் காலிலே சீதேவி இருந்தவர்கள் காலிலே மூதேவி.

---

# அதிகாரம் 26

---

## தமிழ்மொழியின் பண்டைக் கால உரை நடை

தமிழ்மொழிக்கண் பண்டைக் காலத்தே உரை நடை இல்லையென்றும், ஆரியந் தோன்றிய பின்னரே ஆரியர்களால் வசனமென்னும் பெயரோடு உரைநடை தொடங்கப்பெற்று வளர்ச்சியுற்ற தென்றும் ஒரு சிலர் உன்னுகின்றனர். இவ்வெண்ணம் பிழை பாடுடைய தென்பதற்குச் சிறிதும் ஐயமின்று. எம்மொழியாயி னுஞ் சரி அம்மொழியில் முன்னர் உரை நடை தோன்றுமே தவிரச் செய்யுள் தோன்றமாட்டாது. இது அறிஞரனைவருக்கும் ஒப்ப முடிந்ததொன்று. ஒரு மொழியில் மக்கள் பேசத்தொடங்கிய பிறகன்றோ அம் மொழி வளர்ச்சி யடைந்து இலக்கண இலக்கியங்களை யடைந்து பாக்களைப் பயத்தல் சாலும். இங்ஙனமாக மொழிப் பண்பிருக்குங்கால ஒரு மொழி உரை நடையை முதலிற் பெறாதொழிதல் எங்ஙன மியையும்? முதலிற் பாட்டே தோன்றிற்றெனின் அதனை எவரே ஒப்புவர்?

பழங்காலத்திற் புத்தக வழக்குகள் ஓலைச் சுவடிகளாக விருந்தமையானும், அவைகளி லெழுதுதல் அல்லலாகலானும், முக்கியமானதும் அருமையானதுமான பாட்டின் பொருள் நடைகளைத்தவிரத் தனி உரை நடைகள் எழுதிவைக்கப் பெறவில்லை. சங்க காலந் தொடங்கி உரை நடைகளெவ்வா றிருந்து வளர்ந்து சிறப்பை யடைந்த தென்பதை எல்லோரும் நன்குணர்வதற்குச் சில உரையாசிரியர்களின் உரை நடைகளை எடுத்துக்காட்டாக ஈண்டுத் தருகின்றோம் :—

ஹென்ரி ஹார்க்னெஸ் துரை என்பவராலும். திரு. வேங்கடாசல முதலியார் என்பவராலும் இயற்றப்பெற்று 1827-ம் ஆண்டு, சென்னைக் கல்விச் சங்கத்து அச்சிற் பதிப்பிக்கப்பெற்ற ஹரிச்சுவடி என்னும் நூலிற் கீழ்க்கண்ட உரைநடைகள் காணப் பெறுகின்றன.

"ஒரு நசுக்கான் பையன்-எனக்கு தோள்மட்டுக்கும் வருவான் உசத்தியிலே—அவனை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்கள் அவன் அப்பனும் அம்மாளும். அன்றைய விடியற்காலம் வெகு வேடிக்கை உள்ளதாய் இருந்தது-சூரிய பகவான் குளிர்ந்து பிரகாசித்தான்-மரங்களின்பேரில் பக்ஷிகள் பாடினதுகள். அப்புறம் இச் சிறு பையன் தான் சுவடியை விரும்ப இல்லை-ஏனென்றால் அவன் கூர்மையேள இல்லாத ஒரு சின்ன பையன்-மேலே நான் சொன்னபடிக்கு. நான் பாவிக்கிறேன் அவன் ஒரு பெரிய பையன் ஆயிருந்தால்-அவன் அதிக புத்திசாலி ஆயிருப்பான் என்று-ஆனால் அவனுக்கு ஒரு பெரிய மனசு இருந்தது பள்ளிக்குப் போகாமல் விளையாட."

" அது கேட்டுக் கடலை அகழாகவுடைய இலங்கா புரத்துக் கயவாகு வென்று பெயர் கூறப்பட்ட அரசன் நங்கைக்கு அங்ஙனம் நாடோறும் பலி கொள்ளுதலை யுடைய பலி பீடத்தை முந்தச் செய்து பின்பு கோட்டமு மமைத்து முற்கூறிய துன்பங்களைக் கெடுத்து நமக்கு வேண்டும் வரங்களை இவள் தருமென்று துணிந்து ஆடித் திங்களிடத்தே ஆட்டை விழாவாகத் தன்னகர வீதி தோறும் உலாச் செய்விக்க மழை குறைவின்றி நிலைபெறுதலானே அன்றே பொய் யாது விளையும் விளைவினை யுடைய நாடாயிற்று அவனாடு."

சிலப்பதிகாரம் — அடியார்க்கு நல்லாருரை.

" மங்கலத்திசை யாதலின், வடக்கு முன் கூறப் பட்டது. கடல் கொள்வதன் முன்பு பிறநாடும் உண்மையின், தெற்கும் எல்லை கூறப்பட்டது. கிழக்கும் மேற்கும் பிற நாடு இன்மையின், கூறப்படா வாயின. பிற இரண்டெல்லை கூறாது இம் மலையும் ஆறும் கூறியது, அவை தீர்த்தமாகலானும் கேடில வாதலானும் எல்லாரானும் அறியப்படுதலானு மென் பது. இவை அகப்பாட்டெல்லை."

எழுத்ததிகாரம் (தொல்) — இளம்பூரணருரை.

" வழூக்களைந்து சொற்களை யாக்கிக் கொண்டமை யான், இவ்வோத்துக் கிளவி யாக்கமாயிற்று. ஆக்கம் அமைத்துக்கோடல், நொய்யு நுறுங்குங் களைந்து அரிசியமைத்தாரை அரிசியாக்கினா ரென்பவாகலின். சொற்கள் பொருள்கண் மேலாமா றுணர்த்தினமை

யாற் கிளவியாக்கமாயிற் றெனினு மமையும். பொது வகையாற் கிளவியென்றமையால், தனிமொழியுந் தொடர்மொழியுங் கொள்ளப்படும். கிளவி, சொல், மொழி என்னுந் தொடக்கத்தன வெல்லாம் ஒரு பொருட் கிளவி."

சொல்லதிகாரம் (தொல்) சேனாவரையருரை.

"குரங்கு ஆடப்பட்ட துறை யாதொரூரில் உண்டு, அவ்வூர் 'குரங்காடு துறை' எனவும், மயில்கள் ஆடப் பட்ட துறை யாதொரூரில் உண்டு, அவ்வூர் 'மயிலாடு துறை' எனவும் சொல்வது, பன்மொழியைத் தொகுத்தலால் பன்மொழித் தொகை.

வீரசோழியம் பெருந்தேவனாருரை

"இனிமை தழுவிய சாயலையுடையவர் மலர் தங்குந் தூநீரை உமிழுங் கரகத்தை யேந்த உரவோன் பூசி ஐந்து வகைப்பட்ட முகவாசத்தைக் கூட்டி ஆய்ந்த வெற்றிலையையுங் காட்ட, அவற்றை வாங்கிக்கொண்டு கவுளடுத்தானென்க."

சிந்தாமணி நச்சினார்க் கினியருரை.

"கருங்குன்ற வெண்ணிறமென்பது பாடமாயின் நுண்களபத் தொளி பரப்ப அவ்வொளி நும்மூர்க் கருங்குன்றத்திற் கிட்ட வெண்ணிறக் கஞ்சுகத்தோ டொக்குமென்றுரைக்க. ஈண்டுரைத்தவாற்றால், தலைமகன் மிக்கோனாதல் வேண்டும், வேண்டவே ஒப்பு என்னை பொருந்துமாறெனின், "மிக்கோனாயினுங் கடிவரையின்றே" என்பதோத் தாகலிற் பொருந்து

மென்க. வற்புறுத்தி — வலியுறுத்தி இடமணித் தென்றலே வற்புறுத்தலாக வுரைப்பினு மமையும். மெய்ப்பாடு பெருமிதம். பயன் இடமணித் தென்று வற்புறுத்தல்."

திருக்கோவையார். பேராசிரியருரை.

"இனிப் புகழ் பொருள் நட்பு அறனென்னும் நான்கினையும் பயக்கும் இது வல்லவனுக: என்னை? கற்றுவல்லன் என்பதனின் மிக்க புகழ் இல்லை, உலகத் தாரானும் சமயத்தாரானும் ஒருங்கு புகழப்படுமாக லான் என்பது. இனிப் பொருளும் பயக்கும் என்னை? பொருளுடையாரும் பொருள் கொடுத்துக் கற்பவாக லின் என்பது. இனி நட்பும் பயக்கும் என்னை? 'கற் றுரைச் சார்ந்து ஒழுகவே நமக்கும் அறிவு பெருகும்' என்று பலரும் சார்ந்து ஒழுகலின் என்பது. இனி அறனும் பயக்கும்: என்னை? ஞானத்தின் மிக்க கொடை இன்மையான் என்பது. இது பயன்.

இறையனு ரகப்பொருள் நக்கீரருரை.

"தத்தம் வருணத்திற்கும் நிலைக்குமுரிய ஒழுக்கங் களை வழுவா தொழுக அறம் வளரும். அறம் வளரப் பாவந் தேயும். பாவந்தேய அறியாமை நீங்கும். அறியாமை நீங்க நித்த வநித்தங்களது வேறுபாட் டுணர்வும் அழிதன் மாலையவாய இம்மை மறுமை யின்பங்களி னுவர்ப்பும் பிறவித் துன்பங்களும் தோன்றும். அவை தோன்ற வீட்டின்க ணாசையுண் டாம். அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரண மாகிய யோக முயற்சியுண்டாம்.

பரிமேலழகருரை

# அதிகாரம் 27.

## தமிழிற் பிறமொழிச் சொற்கள்

மொழிகள் பலவகைப்பட்டுப் பல்வேறிடங்களி லும் வழங்கத் தொடங்கிய காலை, மக்கள் ஒரு நாட்டி லிருந்து பிறிதொரு நாட்டிற்குச் செல்லுவார்களாயின் இருநாட்டினரும் ஒன்றுபடுவதைப்போல அவர்கள் பேசும் மொழிகளும் கலப்புறுவதியற்கை. வாணிகம் கைத்தொழில் முதலியவைகளில் ஈடுபட்டு மக்கள் பிறநாடு செல்லுங் காலங்களில் கலக்கத் தொடங்கினும் ஒரு மொழியின் சொற்கள் மற்றொரு மொழியில் அவ்வளவாக நுழைந்து கொள்ளப்பெறா. ஒரு நாட் டினர் மற்றொரு நாட்டிற் குடியேறும்போதுதான் பல சொற்கள் கலக்குந் தன்மை யேற்படுகிறது. ஆரியர் நமது நாட்டில் குடியேறிய பின்னரே தமிழில் வட மொழிச் சொற்கள் கலப்புறத் தொடங்கியதுடன் அவர்கள் தம் மொழியும் பேச்சு வழக்கற்றொழிந்தது என்பதனை யறியாதார் யாவரே ?

மிகப் பழமையான நூல்களில் வடசொற்கள் கிடையா. காலப்போக்கில் பிற்காலத்தில் தோன்றிய நூல்களில் ஒன்றிரண்டாக நுழையத் தொடங்கி இஞ்ஞான்று கணக்கின்றி நுழைந்து கொண்டன. வடமொழிச் சொற்கள்தான் தமிழ் நூலில் மிகுதியாக இடம்பெற்றனவே யன்றிப் பிறமொழிச் சொற்கள்

விரல் விட்டெண்ணக்கூடிய வெகு சிலவே. தமிழ் நூல்களில் வடமொழிச் சொற்கள் எவ்வளவுக் கெவ்வளவு குறைவாக விருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அந்நூலின் பழமையும் நன்கு விளங்கும்.

வடமொழி பேசிய ஆரியர் நமது நாட்டிற் குடியேறிப் பன்னூறாண்டுகளாயினமையின் அவர்களுந் தமிழரேயானார்களாயினும் அவர்களின் முன்னோர்கள் கொணர்ந்த சொற்கள் மட்டும் இன்றும் ஆரியமாகவே இருக்கின்றன.

அகந்தை, அகாலம், அசிரணம், அபத்தம், அடயம் அவசியம், அவமானம், ஆகாரம், ஆகாயம், ஆசை, ஆலோசனை, இச்சை, இயமன், இரதம், இரத்தம், இலவணம், இலாபம், ஈசன், ஈநம், உசிதம், உச்சி, உபகாரம், கடினம், கணபதி, கருணை, கர்வம், கவி, காயம், கிராமம், கீர்த்தி, குணம், குமரி, கேலி, கோரம், சகாயம், சகுனம், சங்கடம், சந்திரன், சமயம், சமாதானம், சமீபம், சம்மதம், சாதம், சாதாரணம், சாமான், சாமி, சிசு, சிநேகம், சீக்கிரம், சுகம், சூரியன், தண்டனை, தயவு, தருமம், தாகம், திரவியம், தூதர், தேசம், நயம், நாசி, நாவிதன், நிசம், நிதி, பசு, பத்திரிகை, பயம், பலன், பாதை, பிரியம், புண்ணியம், பூமி, போகம், மச்சம், மது, மரணம், மார்க்கம், முக்தி, மூடர், யாதவன், வர்ணம், விதம், வித்துவான், வியாதி, விரோதம், விவாகம், வீதி, வைத்தியம், வைராக்கியம், இவை முதலான சொற்கள் வடமொழிச் சொற்களாவனவாம். இவை வடமொழிச் சொற்களென்று பொது மக்களிற் பெரும்பாலாரறிய மாட்டார்கள். புலவர்களிலேயே பலர் இச்சொற்களிற் பலவற்றைத் தமி

மென்றே நினைத்திருக்கின்றனரெனிற் பொது மக்களைப் பற்றிக் கேட்பானேன்? இவைகளெல்லாந் தமிழென்று நினைக்கும்படியாகத் தாமுந் தமிழோடு தமிழாக வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

வடமொழியைத் தவிர வேறு மொழிச் சொற்கள் சிலவுந் தமிழ்நாட்டிற்குப் பிரயாணம் வந்து இவ்விடத்திலேயே தங்கியிருக்கின்றன.

ஜன்னல், சாவி, அலமாரி முதலிய சொற்கள் போர்த்துகேசிய மொழியிலிருந்து வந்தன.

ஜமீன், சிபார்சு, சிப்பந்தி, சிபாய், சுமார், தஸ்தாவேஜு, பக்கிரி, பந்தோபஸ்து, மேஜை, ரஸ்தா முதலிய சொற்கள் பாரசீக மொழியிலிருந்து வந்தன.

அமைத்து, ஆஜர், ஆசாமி, இலாகா, கஜானா, ஜலாம், ஜப்தி, நகல், நபர், பிராது, மாமூல், முனிசீப், வசூல் இவை முதலியன அரேபிய மொழியிலிருந்து வந்தன.

அசல், அந்தஸ்து, அபின், ஆயத்தம், இலகான், இஸ்திரீ, உஷார், கிஸ்தி, குடஸ்தா, குல்லா, சடுதி, சமுக்காளம், ஜாப்தா, ஜல்தி, ஜோடு, சால்வை, தபால், தமாஷ், டாணா, தர்பார், துப்பட்டா, நபர், பஞ்சாயத், பக்கா, பங்காளா, பைசல், மாகாணம், மாசூல், ருசு, லட்டு, தொப்பி, பாரா, ஜவாப், ஜவாரி, சபாஷ், ஜவான், மசாலை இவை முதலியன இந்துஸ்தானி மொழியிலிருந்து வந்தன.

எச்சரிக்கை, ஜோலி முதலியன தெலுங்குச் சொற்கள்.

ஆராமம், பிக்ஷு, பிக்ஷுணி, வேதி, வேதிகை முதலியன பாலி மொழியிலிருந்து வந்தன.

மேற்கூறிய சொற்களில் வடமொழி தவிர மற்றவை பெரும்பாலும் பேச்சுவழக்கிலேதா னிருக்கின்றன. செய்யுள் வழக்கிலே ஒரு சிலதான் நுழைந்துள்ளன.

# அதிகாரம் 28.

## தமிழ் மாதர் கற்பு

எந்நாட்டு மாதரினும் தமிழ்நாட்டு மாதரார் பண்டைக்காலந் தொட்டே, கற்பு நெறியில் பொற்புமிக்குடையாராய்ப் புகழுடன் சிறந்து வருகின்றன ரென்பதைப் பழந் தமிழ்நூல்களில் பரக்கக் காணலாம். கற்பு நெறி நமது பாரத கண்டத்திலும் தென்னிந்தியாவிலும் சிறந்து விளங்குவதைப்போல வேறெந்நாட்டிலும் விளங்குவதைக் காண்டலரிது. மற்றை நாட்டு மடவார் கற்பு நெறியைத் தக்காங்கு போற்றுதலிலர்.

பண்டைக் காலத்துத் தமிழ்மாதர் இந்நாள் மாதரைக் காட்டிலும் அற்புதமான கற்பினையுடையரா யிருந்தனர். தமது தலைவனுயிர் உடலைவிட்டகன்ற பிற்றை ஞான்று உயிர்வாழ்ந்திருப்பதை வெறுத்துத் தாமுங் கணவனுடன் இறந்துபட்டனர். தலையாய கற்புடையார்க்குத் தலைவனிறந்த அதே அமயத்தில்உயிரை யொழித்தலும் மிக எளிதாக விருந்தது. உயிர் இயல்

பாகவே நீங்கப்பெறுதார் உடன் கட்டை ஏறி மாய்ந்த னர். உடன் கட்டை யேறும் வழக்கம் மிகச் சமீப காலத்தில்தான் ஒழிந்த தென்பதையும் பலரும் உணர்ந் திருக்கலாம்.

கற்புடைய மகளிர் கணவனுடன் வீதலையே பெரும்பேருக வெண்ணித் தமதுயிரை யொழித்துக் கொண்டனர். கணவனுடன் கற்புடை மகளிரும் உடன்மாண் டொழிந்ததை அக்காலத்துப் பேரறிஞர் மூதானந்த மென்றனர். கணவனெடு மிறந்துபடாத சில மகளிர் கடுமையான விரதவொழுக்கங்களை மேற் கொண்டு உடலை வாட்டித் தவம்புரிவாராயினர். பண் டைத் தமிழ் மாதர் கணவனிறந்து பட்டபின் உயிர் வாழாமல் அல்லது கடுந்தவ வாழ்வினை மேற்கொண் டமை கருதியே பெரியோரும் "பொற்றுலியோடெ வையும் போம்" என்றனர் போலும்.

சங்ககாலத்துப் பெண்மணிகளிலே பூதப்பாண்டி யன் தேவியார் பொன்றுப் புகழ்படைத்தவர். புலமை நலங்கனிந்து திகழ்ந்தவர். தன் நாயகனுன பூதப் பாண்டியனது பூதவுடல் மறைந்ததும் தம்முடலையும் போக்க வெண்ணிக் கணவனோடு தீயிற் பாயத் தொடங் கினுர். சில முதியோர் தடுக்கத் தொடங்கினர். அது போழ்து :

"பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் செல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்

வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே" —புறநானூறு.

என்னுஞ் செய்யுளால் விடையிறுத்தனர். இதனாற் கைம்மை நோன்பைக் காட்டிலும் தீப்பாய்தல் நன்றெனக் கூறினர். கணவனைத் தணந்து வாழும் வெம்மையைப் பார்க்கப் பண்டைத் தமிழ் மாதர்க்குத் தீத் தண்மையாயிற்று.

கற்புடைப் பெண்டிர் வாழும் நாடு எல்லா நலங்களாலும் இனிது சிறந்து விளங்குமென்பதற்கும், அந்நாட்டில் வாழ்வார்க்கு யாதொரு அல்லலு முண்டாக மாட்டாதென்பதற்கும் பழந் தமிழ் நூல்களிலே பல பாடல்களைப் பார்க்கிறோம்.

"கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்டவித் தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்
வானம் பெய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு"

—சிலப்பதிகாரம்.

" நண்ணு கற்புடை நங்கையர் சீறடி
மண்ணி னெவ்விடந் தோயினு மற்றஃ
தெண்ணு கின்ற தலங்க ளெவற்றினும்
புண்ணியத்தல மென்று புகல்வரால்."

—காசிகாண்டம்.

சீதை, தமயந்தி, நளாயனி முதலியோருடைய கற்பின் சிறப்பும் நூல்களில் காணப்பெறுகின்றன. சிலப்பதிகாரக் கதைத் தலைவியாங் கண்ணகியின் ஊரான காவிரிப்பூம் பட்டினத்திலும், கற்புமிக்க கனங்குழையார் பலர் வாழ்ந்திருந்த செய்தி சிலப்பதிகாரத்தில் தெரிவிக்கப்படுகிறது.

மன்னவன் கொடுங்கோலால் மணாளன் கொலையுண்டதை யறிந்த கண்ணகி, நெடுஞ் செழியனென்னுங் கொடுஞ் செழியன் முன்புதோன்றி யுண்மையை நிலை நிறுத்தினள். அப்போதே பாண்டியன் உயிர் விட்டான். கோவலன் மனைவியைக் கோப்பெருந்தேவி குறையிரந்தாள். அப்போது தன்னை யின்னளென வுணர்த்தப்புக்க கண்ணகி, தன்னாட்டிலிருந்த கற்புடையார் பலரையுங் கூறத்தொடங்கி, வன்னிமரம் கிணறு இலிங்கம் முதலியவைகளைக் கற்பின் திறத்தால் கரி கொண்டு வந்தவளும், மணற்பாவை மணாளனென்று மற்றையோர் கூறியதைக் கேட்டு அது தன்னைப் பாதுக் காத்து நின்றவளும், ஆழி அலையில் அலைக்கழிந்த அண்ணலைக் கற்பின் திறத்தாற் கரையேற்றித் தழுவிச் சென்றவளாய ஆதி மந்தியும், பொருளீட்டற்கயல் நாடுபோன தலைவன் வரும்வரை கல்லுருவத்தைக் கற்பின் பொற்பா லெய்தியிருந்த காரிகை நல்லாளும், மாற்றாள் குழந்தை கிணற்றில் தவறிவிழத் தன் குழந்

தையையுந் தள்ளிக்கரை கொணர்ந்த தையல் நல்லாளும், தலைவன் ஊரிலில்லாத காலத்தே காமக்குறிப்பொடு தன்னை யொருவன் நோக்கியதைப் பொறாது தலைவன் திரும்புங் காலமளவும் குரங்குமுகமெய்தி யிருந்த கோதறுகற்பாளும், விளையாட்டுக் காலத்தே தன் தாய் தன்னைப், பிறப்பதற்கு முன்னரே பிறவாத வொருவனுக்குத்தர வுடன்பட்டிருந்ததை யறிந்து அவனைச் சென்று மணந்தவளும், ஆகிய பல பத்தினிப் பெண்டிர் பிறந்து சிறந்திருந்த காவிரிப்பூம் பட்டினத்தாளெனக் கழறிக் கோப்பெருந்தேவியிடம் வஞ்சினங் கூறி, மதுரைமா நகரில் மாபெருந் தீ மண்டச் செய்தாள். இச் செய்தி சிலப்பதிகாரம் மதுரைக் காண்டம் வஞ்சினமாலையில் இளங்கோவடிகளால் ;

"வன்னி மரமும் மடைப்பளியுஞ் சான்றாக
முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள் பொன்னிக்
கரையின் மணற்பாவை நின்கணவ னாமென்று
உரைசெய்த மாதரொடும் போகார் திரைவந்து
அழியாது சூழ்போக ஆங்குந்தி நின்ற
வரியார் அகலல்குல் மாதர் உரைசான்ற
மன்னன் கரிகால் வளவன் மகன் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கன்னவில் தோளாயோ என்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக் கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள் மன்னி
மணன்மலி பூங்கானல் வருகலன்கள் நோக்கிக்
கணவன்வரக் கல்லுருவம் நீத்தாள் இணையாய
மாற்றாள் குழவி விழத் தன்குழவி யுங்கிணற்று
வீழ்த்தேற்றுக் கொண்டெடுத்த வேற்கண்ணாள் வேற்

[றொருவன்

நீனைக்கண் கண்டு நிறைமதி வாண்முகத்தைத்
தானோர் குரக்குமுகம் ஆகென்று போன
கொழுநன் வரவே குரக்குமுகம் நீத்த
பழுமணி யல்குற்பூம் பாவை விழுமிய
பெண்ணறி வென்பது பேதமைத்தே யென்றுரைத்த
நுண்ணறிவி னோர்நோக்க நோக்காதே எண்ணிலேன்
வண்டலயர் விடத் தியானோர் மகட்பெற்றால்
ஒண்டொடி நீயோர் மகற்பெறிற் கொண்ட
கொழுநன் அவளுக்கென் றியானுரைத்த மாற்றம்
கெழுமி யவளுரைப்பக் கேட்ட விழுமத்தால்
சிந்தைநோய் கூருந் திருவிலேற் கென்றெடுத்துத்
தந்தைக்குத் தாயுரைப்பக் கேட்டாளாய் முந்தியோர்
கோடிக் கலிங்கம் உடுத்துக் குழல்கட்டி
நாடித் தலையை வணங்கித் தலைசுமந்த
ஆடகப்பூம் பாவை அவள்போல்வார் நீடிய
மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கி யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேனரசோ டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையுங் காண்குறுவாய் நீயென்னவிட்டகலா.''

என்று கூறப்பட்டுள்ளது.

சாதுவனென்பான் வாணிகத்தின் பொருட்டு மரக்கலமேறி வேற்றுநாடு செல்லுங்கால் மரக்கல முடைந்தது. அனைவரும் ஆழியில் வீழ்ந்து பலவித மாகத் தப்பிப் பிழைத்துக் கரை சேர்ந்து ஊரை யடைந்தனர். சாதுவனென்பானும் ஒடிந்த மரத் துண்டொன்றைப்பற்றிக் காற்றின் வழியே போய் நாகர் மலையை நண்ணித் தங்கியிருந்தனன். ஊரினை யுற்றோர், ஒழிந்தோருடன் சாதுவனு மழிந்தானெனத்

தவருன செய்தியைச் சாற்றினர். அக்காலை, சாதுவன் மனையாளாய ஆதிரை பெரிதும் வருந்தி ;

"ஊரி ரேயோ ஒள்ளழ லீமம்
தாரீ ரோவெனச் சாற்றினள் கழறிச்
சுடலைக் கானில் தொடுகுழிப் படுத்து
முடலை விறகின் முளியெரி பொத்தி
மிக்கவென் கணவன் வினைப்பய னுய்ப்பப்
புக்குழிப் புகுவே னென்றவள் புகுதலும்."

என்னுஞ் செய்தியும் மணிமேகலையில் இனிது கூறப் பட்டுள்ளது. கற்புத்தன்மையைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர் மாதவியின் கூற்ருக ;

"காதலர் இறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா(து)
இன்னுயிர் ஈவர் ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்
நளியெரிபுகா அர் ஆயின் அன்பரோ(டு)
உடனுறை வாழ்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத்து."

என்று கூறியுள்ளார். இதனுல் முன்னுள் தமிழ் மாதரின் கற்பின் பொற்பை நாம் நன்குணரலாம். இத்தகைய மாதரின் மாண்புகண்டு தெய்வமும் மகிழு மென்றல் வெற்றுரையாமோ ?

"தெய்வந் தொழா அள் கொழுநற் றெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

என்று நந்தந் தெய்வப் புலவர் தமது தமிழ் மறையின் கண்ணே சாற்றியது வெறும் புகழுரையாமோ ? தமிழ் நூல்களில் இன்னும் பல பத்தினிப் பெண்டிரைக் காணலாம்.

கற்பு மேய கனங்குழை மாதரைப்
பெற்று ளோர்தம் மரபும் பெருந்தவக்
கற்பி னுட்கொண்டகாதல னுருயிர்ச்
சுற்றம் யாவுந் துறக்கத்தி னெய்துமால்.

---

# அதிகாரம் 29.

---

## தமிழர் நாகரிகம்

நகரச் சம்பந்தமுடையது நாகரிகம் என்று சொல்லப் பெறும். தமிழர்கள் பல்லாயிரக் கணக்கான யாண்டு கட்கு முன்னரே நாகரிகத்தின் முடியிலேறி விட்டனர். நிலப் பகுப்புத் திணைப்பகுப்பு முதலியவைகளை முதலில் ஏற்படுத்தியவர் தமிழரே. ஒரு சிலர் ஆங்கிலேயர் நமது நாட்டுக்கு வந்த பின்னர்த் தான் இந்தியர் நாகரிக மடைந்தன ரென்னுந் தவருன எண்ணமுடையவர்க ளாக விருக்கின்றனர். தற்கால உலகினருக்கு நாகரிக குருமூர்த்திகளாக விளங்கும் மேல்நாட்டார், உடைகளை இன்னதென்றே அறிந்திராத அந்த நாளையிலேயே தமிழர்கள் நாகரிகத்தில் தலைசிறந்தவர்களாக விளங் கினர்.*

திருவனந்தபுரத்துப் பேரறிஞர் ஒருவர் தமிழும் மாணவர்களும் என்னுந் தனது சொற்பொழிவிலே

---

* "தமிழரது நாகரிகம் மிகமிகப் பழமை வாய்ந்தது. உலக சரித்திரத்திலே தமிழரே முதன்முதல் நாகரிக வாழ்க்கை எய்திய சாதியா ரென்பதற்கும், கடல்கடந்து சென்று தமது நாகரிகத் தைப் பலப்பல நாடுகளிலும் பரப்பினுர் என்பதற்கும், வாணிகத்

"தற்பொழுது நாகரிகத்தின் உச்சியில் அமர்ந்திருப்போரென்று உலகம் கொண்டாடும். மேல்நாட்டார், விலங்கினங்களைப் போன்று காடுகளிலும் மலைகளிலும் திரிந்த நாட்களில் தமிழர்கள் கல்வியறிவு ஒழுக்கங்களில் சிறந்து மிக உயரிய நாகரிக நிலையில் நின்றனர்" என்று கூறினர்.*

---

துறையிலும், கணித நூல் வான நூல் முதலிய நூற்றுறைகளிலும் வல்லுநராயிருந்தா ரென்பதற்கும் பல சான்றுகள் கிடைத்திருக்கின்றன. இவை தம்மைச் சுருக்கமாக ஆராய்ந்து கூறுதலே 'உலக புராணம்' என்னும் இப் பொருளுரையின் நோக்கமாகும்."

செந்தமிழ் தொகுதி 39 பகுதி, 1 சுவாமி விபுலாநந்தர்.

* "குமரிக் கண்டத்திலே வாழ்ந்த பழந்தமிழ்க் குடிகளே முதல் முதல் சீர்திருந்தி நாகரிக நிலையடைந்து வாழ்ந்த மக்களென அறிஞர் கூறுப. இக்காலத்தில் ஆராய்ச்சி வல்லோரின் துணிவுகளாலும் வலியுறுத்தப்படுகிறது. மொகஞ்சதாரோ அரப்பா என்னும் நகரங்களைத் தோண்டியறிந்தோர் அந் நகரங்களில் வாழ்ந்தோருடைய கலன்களையும், சித்திரங்களையும் சிலைகளையும் பார்த்து அந் நகரத்தோர் மிக நாகரிகமடைந்த சாதியினரெனவும் அவர் இலிங்க வழிபாடு செய்தவரெனவும் அவர்கள் ஆரியரல்லர் திராவிடராதல் கூடுமெனவும் சுமேரிய பாபிலோனியருக்கு முன்னரே சீர்திருந்தினரெனவும் துணிகின்றனர். பண்டைக் காலத்துத் தமிழர் யாவருக்கும் முன் எழுதவும், கணக்கிடவும், கமஞ் செய்யவும், வணிகஞ் செய்யவும், நூல் கற்கவும், கப்பல்கள் கட்டவும் அறிந்திருந்தனர் என்பதற்கு ஐயமில்லை. தமிழருடைய பழைய இலக்கணமாகிய தொல்காப்பியம் கிறிஸ்துவுக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டது. தமிழ்மொழியுண்டாகி, இலக்கணம் தோற்றுதற்கு முன் சீர்திருந்திய மொழியாகப் பேசப்பட்டிருக்கவேண்டும். கி. மு. 5000 ஆண்டுகட்கு

இந்நாளில் மேல் நாட்டிலிருந்து வரும் பொருள்கள் எவையும் நமக்கு அரும்பொருள்களல்ல. எல்லாப் புதுமைகளும் தமிழ் மொழி திரிந்து பல்வேறு நவீன மொழியாகத் தோற்றமளிக்குங் காட்சியைப் போல, இந் நாட்டிலே யிருந்து சென்று வேறு விதமாக வளர்ச்சி யடைந்து திரும்புபவைகள்தான். தமிழர்கள் அந்நாளி லேயே ஓவியம், சிற்பம், வான ஆராய்ச்சி, முதலியவை களிலே சிறந்திருந்தனர்.

இக் காலத்தில் வான வழியில் விரைந்து செல்லும் விமான மென்ன? பெரிய பெரிய நகரங்களை யெல்லாம் பெரிய பெரிய குட்டிச் சுவர்களாக மாற்றும் வெடிக் குண்டுகள் என்ன? இவை யாவும் இந்நாட்டிற் பிறந்து வெளிநாடு சென்று வளர்ந்து திரும்பியவைகள்தான்.

ஆகாய விமானம் முதலிய அற்புதப் பொறிகளைச் செய்யும் அரிய வித்தையைப் பழந் தமிழர் நன்குணர்ந் திருந்தனர். ஆனல் அவைகளை விருத்தியாக்கவில்லை. மேனுட்டார் இந் நாட்டுக்கு வந்ததும் அவைகளைத் தாங் கற்றுக் கொண்டு போய்த் தந் நாட்டிற் செய்து புதுமையாக இந் நாட்டுக்குக் கொணர்ந்து நமக்கே

---

முன்னமே தமிழர் தத்துவஞானம் உணர்ந்து சிவனை வழிபட்டன ராயின், அவர் தம் நாகரிகத்தின் சிறப்பை எடுத்துரைத்தல் மிகையாகும். தமிழ் மொழியும் தமிழ் நாகரிகமும் மிகச் சிறந்தவை யாதலாற்றுன் ஏனை பண்டைய மொழிகளும் நாகரிகங்களும் இறந்து ஒழிந்தபோதிலும் தமிழ்மொழியும் தமிழருடைய நாகரிகமும் இறவாது இருக்கின்றன. தமிழ்நாட்டில் பாழா யிருக்கும் பண்டைய நகரங்களைத் தோண்டிப் பார்த்தால் இவ்வுண்மைகள் எல்லாம் வலியுறும்.''

செந்தமிழ் பகுதி 38 தொகுதி, 1 த. ரா. B. A.

வேடிக்கை காட்டலாயினர். ஆகாய விமானங்களிற் பறந்து சென்ற இந் நாட்டரசர்கள் முன்னுளிலிருந்தனர். குமரிக் கண்டத்தில் வாழ்ந்த மக்களும் ஆகாய விமானஞ் செய்து அதிற் பறந்ததாகத் தெரிகிறது.

போகர் தன்னுடைய சத்தகாண்டம் என்னும் நூலில் கோழிமுட்டை பறப்பதற்கு வழி கூறுகின்றார். ஒரு கோழி முட்டையில் ஊசியாற் குத்தி ஒரு துவாரஞ் செய்து அத் துவாரத்தின் வழியே கருவை யெல்லாம் வெளிப்படுத்திவிட்டு, இரவிற் புல் களில் தங்கும் பனி நீரைப் பிடித்து முட்டைக்குட் செலுத்தித் துளைவாயை மூடிவிட்டு ஞாயிற்றின் முன்னே வைப்பின், சூடு தாக்கத் தாக்க முட்டை கதிரோனை நோக்கிப் பறக்கத் தொடங்கிவிடும். இதனைப் பார்ப்போர், இது ஏதோ இந்திரசால மகேந்திரசால வித்தை யென எண்ணுவர். பனிக்கும் பகலவனுக்கும் பகையாதலின் சூடு தாக்கவே முட்டை விண்ணிலியங்குகின்றது. இச் செய்தியைக் கொண்டு நீராவியாலியங்கும் பொறிகள் எத்தனையையோ கண்டு பிடிக்கலாம்.

சீவக சிந்தாமணி, பெருங்கதை முதலிய நூல் களிலே விண்ணிலியங்கிய விமானச் செய்திகள் பல காணப் பெறுகின்றன. சீவகனின் தாதையாகிய சச்சந்தன் தன் மனைவியின் மோக வெள்ளத்திலே வேகமாக அழுந்தி நின்றான். கட்டியங்கார னென்னுங் கபடநாடக அமைச்சன்பாற் காணியாட்சியைப் பேணுதியென நாணிலாது விட்டிருந்தான். நாளடைவில் கட்டியங்காரன் அரசனை யொழிக்க மந்தணமாகவே தந்திரம் பல செய்தான். காரியம் மிஞ்சிவிட்டது.

உண்மை மிக்க வோரமைச்சன் மேல் நிகழப் போகும் வெவ்வினையை நன்குணர்ந்து வேந்தனுக் குணர்த்தினன். அதுகாலை அரசன் மனைவி விசையை சூலியாக விருந்தாள். அவளை மட்டுமேனும் தப்புவிக்க வெண்ணி அரசனிடங் கூறி ஒரு விமானஞ் செய் வித்தான். அவ் விமானத்தை இயக்கவும் விசையைக்குப் பழக்கி வைக்கப்பட்டது. தொல்லை வந்த காலை இவ் விமானத்தின் மூலம் விசையை வெளியேற்றப்பட்டாள். இதன் உண்மை அடியில் வருஞ் சிந்தாமணிச் செய்யுட்க ளால் நன்கு தெரியலாம்.

"காதிவேல் மன்னர் தங்கள் கண்ணென வைக்கப்பட்ட
நீதிமேற் சேறல் தேற்றாய் நெறியலா நெறியைச் சேர்ந்து
கோதியல் காமமென்னும் மதுவினிற் குளித்த ஞான்றே
ஓதிய பொறியற் றாயோ ரரும்பொறி புனைவி யென்றான்

வேறு

அந்தரத் தார்மய னேயென வையுறும்
தந்திரத் தால்தம நூல்கரை கண்டவன்
வெந்திறலான் பெருந் தச்சனைக் கூவியோர்
எந்திர வூர்தியி யற்றுமி னென்றான்
பல்கிழி யும்பயினுந்துகில் நூலொடு
நல்லரக் கும்மெழு குந்நலஞ் சான்றன
வல்லன வும்மமைத் தாங்கெழு நாளிடைச்
செல்வதோர் மாமயில் செய்தனனன்றே
ஆடியன் மாமயி லூர்தியை யவ்வழி
மாடமுங் காவும டுத்தொர்சின் னாள்செலப்
பாடலின் மேன்மேற் பயப்பத் தான்றுரந்
தோடமு றுக்கியு ணர்த்தவு ணர்ந்தாள்

வேறு

பண்டவழ் விரலிற்பாவை பொறிவலந்திரிப்பப் பொங்கி
விண்டவழ் மேகம்போழ்ந்து விசும்பிடைப் பறக்கும் வெய்ய
புண்டவழ் வேற்கட்பாவை பொறியிடந் திரிப்பத்தோகை
கண்டவர் மருளவீழ்ந்து கால்குவித் திருக்குமன்றே.

என்புநெக் குருகியுள்ள மொழுகுபு சோரயாத்த
அன்புமிக் கவலித் தாற்ரு வாருயிர்க் கிழத்தி தன்னை
இன்பமிக் குடைய சீர்த்தி இறைவனதாணைகூறி
துன்பமில் பறவையூர்தி சேர்த்தினன்றுணைவி சேர்ந்தாள்.

இப்பாடல்களால் மேற்கூறிய உண்மை தெளிவாம். இவ்விமானம் இக்காலத்திய விமானங்களைப் போலன்றி மயில் வடிவாகச் செய்யப்பட்ட தென்பதும் நன்குணரப்படுகிறது. பாரதத்தில் வசு என்னும் அரசன் இந்திரன் கொடுத்த விமானத்திற் பறந்து சென்ற செய்தியும்;

" வாசவனளித்த விமானமீ தொருவன்
வசுவெனுஞ் சேதிமாமரபோன்
கேசர னெனப்போம் விசும்பிடை மனையாள்
கிரிகையை நினைந்துடல்கெழுமி
நேசமோ டிதய முருகுமக் கணத்தில் நினைவற
விழுந்தவீ ரியமெய்த்
தேசவ னளித்த நதியிடைத் தரளத் திரளெனச்
சிந்தியதொரு பால்

என்னும் வில்லி பாரதச் செய்யுளால் தெரிய வருகின்றது.

" திரள் விமானமது வான்மிசை யுயர்த்தவவனும் "

என்பது கலிங்கத்துப் பரணி.

பழந் தமிழரசர்கள் இக்காலத்திய அரசர்களைவிட நகரப் பாதுகாப்புக்குப் பல விசித்திர வேலைப்பாடமைந்த பொறிகளை யெல்லாம் செய்து வைத்திருந்தனர். மதிலுக்கு உள்ளும் புறம்பும் ஆழமான அகழிகள் அமைந்திருந்தன. தானே வளைந்து எய்யும் வில், குரங்கு யந்திரம், கல்லடிக் குங்கவண், அகழிலிறங்குவாரைச் சிக்கச் செய்திழுக்கும் தூண்டில், கிட்டியவர்களைக் கட்டியிழுக்குஞ் சங்கிலி, ஆண்டலை யடுப்பு, கதவையணுகாதபடி அம்பு வைத்தெய்யும் ஐயவித்துலாம், மதிலிலே யேறினல் திருப்பித் தள்ளும் கவை, கழு, கை பெயர் ஊசி, எரிசிரல், பன்றி, பனை, எழு, சீப்பு, கணையம், கோல், குந்தம், வேல், சதக்னி, தள்ளிவெட்டி, களிற்றுப்பொறி, இவுளிப்பொறி, விழுங்கும் பொறி, கழுகுப் பொறி, தகர்ப் பொறி, அரிநூற் பொறி, ஞாயில், பிண்டிபாலம், எழு, மழு, வாள், கவசம், தோமரம், கதை, தண்டம் நாராசம், இருப்பு முள், கழு முள், கூன்வாள், சிறுவாள், கொடுவாள், அரிவாள், பெருவாள், சுழல் படை, ஈர்வாள், கைவாள், கணையம், கோடாரி, தோட்டி, வேல், வச்சிரம், குறுந்தடி, ஈட்டி முதலிய பலவித ஆயுதங்களை மதிலில் அமைத்திருந்ததுடன், வேறு பல கொடிய ஆயுதங்களையும் வைத்திருந்தனர். இச்செய்தி;

மழுக்கள் வீசுவன நஞ்சு பூசுமுனை
வாள்கள் வீசுவன முத்தலைக்

கழுக்கள் வீசுவன குந்த நேமியெரி
காலவீசுவன காலனேர்

எழுக்கள் வீசுவன கப்பணங்கள்விட
மென்ன வீசுவனவன் னெடுங்

கொழுக்கள் வீசுவன கற்கவண் கயிறு
    கோர்த்து வீசுவன ஆர்த்தரோ.

நஞ்சு பில்குதுளை வாளெயிற்றரவு
    நாசியிர்த் தெறியு மலையரா
வெஞ்சினங் கொண்முழை வாய்திறந்துபொரு
    வாரை விக்கிட விழுங்குமால்
குஞ்சரங் கொடிய முசலம் வீசியெதிர்
    குறுகுவார் தலைகள் சிதறுமால்
அஞ்சுவெம் பொறி விசைப்பி னுங்கடுகி
    யடுபுலிப் பொறி யமுக்குமால்.

எள்ளி யேறுநரை யிவுளி மார்பிற
    எறிந்து குண்டகழி யிடைவிழத்
தள்ளி மீளுமுருள் கல்வி ருப்புமுளை
    தந்து வீசியுடல் சிந்துமால்
கொள்ளி வாயலகை வாய்திறந்து கனல்
    கொப்புளிப்ப வுடல் குப்புறத்
துள்ளி யாடுவன கைகள் கொட்டுவன
    தோள் புடைப்ப சில கூளியே.

துவக்கு சங்கிலி யெறிந்திழுக்குமரி
    தொடர் பிடித்தகை யறுக்கவிட்
டுவக்கு மொன்னலர்க டலைகளைத் திருகி
    யுடனெருக்கு மரகிலைகளாற்
கவைக் கொழுந்தழல் கொளுத்தி வீசுமெதிர்
    கல்லு ருட்டியடு மொல்லெனக்
குவைக் கடுங்கன்மழை பெய்யு மட்டமணல்
    கொட்டும் மேவலர்கள் கிட்டவே.

உருக்கி யீயமழை பெய்யுமாலய
    வுருக்கு வட்டுருகு செம்பினீர்

பெருக்கி வீசும்விடு படையெலாமெதிர்
பிடித்து விட்டவர் தமைத்தெறச்
செருக்கி வீசுநடை கற்றமாடமொடு
சென்று சென்று துடிமுரசொடும்
பெருக்கி மீளுநடைவையமேநடவி
யெய்யும் வாளிமழை பெய்யுமால்.

"மிளையும் கிடங்கும் வளைவில் பொறியும்
கருவிரல் ஊகமும் கல்உமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் உலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை அடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவும் சீப்பும் முழுவிறல் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்."

என்னும் திருவிளையாடல், சிலப்பதிகாரம் முதலிய நூற் பாடல்களால் நாம் அறியக் கிடக்கின்றது. இப் பொறி வேலைகளை யெல்லாம் யவனர் செய்துள்ளமை யின், அக்காலத்திலவர் இத் தொழிலில் சீர்த்திவாய்ந் திருந்ததை ஒருவாறு யூகிக்கலாம்.

மற்றும் பண்டைக்காலத் தமிழ் மக்கள் எல்லா விதமான துறைகளிலும் முன்னேறி, நாகரிகமடைந் திருந்தனரென்றே மொழியவேண்டும். உழவுத் தொழில் முதலிய கைத்தொழில்களிலே மிகத் தேர்ச்சி பெற்றவர்க ளாக விருந்தனர். விதம் விதமான ஆடைகளை நெய்வதிலோ மிக்கோராக விளங்கினர். பழந் தமிழ்ப் பெண்கள் பருத்திப் பஞ்சிலிருந்து கண்ணுக்

குத் தெரியாத நுண்ணிழைகளை நூற்றனர். ஆடவர் ஆடை நெய்ததுடன், ஆட்டுமயிர்க் கம்பளம் எலி மயிர்க் கம்பளம் முதலியனவும் நேர்த்தியானதாக நெய்தனர். அக்காலத்திலே அவர்கள் ஆடைகளுக்கு அகலமான அழகிய கரைகளைப் போட்டு அற்புதமாக நெய்தனர்.

அக்காலத்திய பொற் கொல்லர்கள், அணிகளமைப்பதில் கைதேர்ந்தவர்கள். பலவிதமான பணிகளைப் பசும்பொன்னாற் குயிற்றினர். அவ்வணிகளைக் கொண்டு அருந்தமிழணங்குகள் தம்மைத் திருந்த வலங்கரித்துக் கொண்டனர். அக்காலத்திய அற்புத வணிகள் நமக்கிக் காலத்தில் காண்டற்குத் தானும் அருமையாம். காற்சிலம்பு முதல் முடிமயிரில் அணியும் அணிவரை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக உருற்றப்பட்டன.

மற்றும் அந் நாட்டமிழர் அறியாத தொன்றுமில்லை. யானை யேற்றம், குதிரை யேற்றம், தேரேற்றம் முதலியவைகளையும் நன்கு பழகியிருந்தனர்.

பழந்தமிழ் மக்களின் நாகரிகத்தைப்பற்றிப் பல்லாவரம் மறைமலையடிகள், தமது "பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்" என்னும் நூலில், இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன் இயற்றப்பட்ட விவிலிய நூற்பகுதியில், மயிற்றோகை, 'அகில்' முதலான செந்தமிழ்ச் சொற்கள் காணப்படுதல் கொண்டும், ஆரிய மொழி யிருக்கு வேதத்தும் பழந்தமிழ் மொழித் தொல்காப்பியத்துங் காணப்படும் குறிப்புகள் கொண்டும் நம் பண்டைத் தமிழ்மக்கள், இன்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகளின் முன்னரேயே நாகரிக வாழ்க்

கையில் தலைசிறந்து நின்றார்களென்பதும், அத் தமிழ் மக்களின் வழித்தோன்றிச் சாலடி, எகுபதி முதலான மேனாடுகட்குச் சென்று ஆங்காங்குத் தமது நாகரிக வாழ்வினை நாட்டிய தமிழ் வழிமக்களே சாலடியரும் எகுபதியரும் அவர்க்கு இனமான ஏனை மேனாட்டு மக்களும் ஆவரென்பதும் நன்கறியப்படும்" என்றெழுதினர். இதனால் தமிழ் மக்கள் உலக நாகரிகத்திற்கே அடிகோலினரென்பது நன்குணரப்படுகின்றதன்றோ?

நாகரிகம் தமிழ்மக்களிடையே இக்காலத்தைக் காட்டிலும் அக்காலத்தில் மிக அதிகமாகத் தலையெடுத்து நின்றது. மேலும் செம்பு வேலை செய்வோர் மரவேலை செய்வோர், இரத்தினவேலை செய்வோர், தையற்காரர், வாடாமாலை பொய்க்கொண்டை முதலியவற்றைச் செய்யுந் தொழிலினர், தோற் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, ஆகியவைகளால் பாட்டிசைக்கும் பாணர்கள், சோதிடத்திலே மாதிடமுள்ளார், வருத்தும் நோய் தீர்க்கும் மருத்துவர், யானைப் பாகர், குதிரைப் பாகர், தேர்ச் சாரதிகள் ஆகியோர் மலிந்திருந்தனர். மேலும் பல நாகரிகச் செய்திகள் சங்க நூல்களிலே விரிவாகக் காணப்படுகின்றன.

"மரங்கொல் தச்சருங் கருங்கைக் கொல்லருங்
கண்ணுள் வினைஞரு மண்ணீட் டாளரும்
பொன் செய் கொல்லரு நன்கலந் தருநரும்
துன்ன காரருந் தோலின் துன்னரும்
கிழியினுங் கிடையினுந் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்
குழலினும் யாழினும் குரல் முதலேழும்

வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்
அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கு மருவூர்ப் பாக்கமும்
கோலியன் வீதியுங் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வாணிகர்
மாட மறுகு மறையோ ரிருக்கையும்
வீழ்குடி யுழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதருங் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையும்
திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொ
டணிவளை போழுந ரகன்பெரு வீதியும்
சூதர் மாகதர் வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்
காவற் கணிகைய ராடற் கூத்தியர்
பூவிலை மடந்தைய ரேவற் சிலதியர்
பயில்தொழிற் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி யிருக்கையும்
கடும்பரி கடவுநர் களிற்றினர் பாகர்
நெடுந்தே ரூருநர் கடுங்கண் மறவர்
இருந்து புறஞ்சுற்றிய பெரும்பா யிருக்கையும்
பீடுகெழு சிறப்பிற் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கமும்''

என்னும் சிலப்பதிகாரம் ஈண்டு கவனிக்கத் தக்கது. இன்னும் மணிமேகலை முதலிய சங்க நூல்களிலும் நாகரிகச் செய்திகள் பல நன்கு காணலாம்.

# அதிகாரம் 30.

## தமிழர் வாணிகம்

மக்கள் நாகரிகம் அடையாத அந்தக் காலத்தில், அதிகப்படியாகவுள்ள தானியம் முதலிய விளை பொருளைப் பிறருக்குக் கொடுத்துத் தம்மிட மில்லாதவைகளைப் பெற்றுக்கொள்வர். நாகரிகத்தையடையாத இளம் பருவத்தில் இதற்குமேல் யாதுஞ் செய்ய அவர்கட்கு வழியில்லை. பொருளைக் கொடுத்துப் பொருளை வாங்கும் முறையைப் பண்ட மாற்றெனப் பண்டைக் காலத்துப் பெரியோர் பகர்ந்தனர். காலம் செல்லச் செல்லத்தான் நாணய முதலியவை தோன்றலாயின. பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள் வாணிகத்துறையிலே இக்காலத்தாரைக் காட்டிலும் பன்மடங்கு சிறந்திருந்தன ரென்று பழந்தமிழ் நூல்களால் நன்கறியலாம். பண்டைக்கால வாணிகத் தொழிலினர் நேரிய முறையில் தமவும் பிறவு மொப்ப நாடிக்

> கொள்வதூஉ மிகைகொளாது
> கொடுப்பதூஉங் குறைகொடாது

பல் பண்டங்களையும் வாணிகஞ் செய்தனர். அக்கால மக்களும் இக்கால மக்களைப்போலவே உண்ணாட்டு வாணிகத்தோ டமையாது கடல் கடந்து மரக்கலங்களினுஞ் சென்று பொருளீட்டினர். அங்ஙனஞ் சென்று ஈட்டாமலிருந்தாரைக் குறித்தே "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்னும் முதுமொழி எழுந்ததாதல் வேண்டும்.

சுமார் ஐயாயிரம் யாண்டுகட்கு முன்னரேயே தமிழ் மக்கள் பிற நாட்டாரோடு வாணிகந் தொடங்கி நடத்தி யிருக்கின்றனர். ஐரோப்பிய தேசத்தினர் நமது தேசத்துப் பொருளை விரும்பி வாங்கி யிருக்கின்றனர். மேலை நாட்டார் பண்டைக் காலத்தில் நமது நாட்டுக்கு ஈயம், கண்ணாடி, மது முதலிய பொருள்களைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, மிளகு, யானைமருப்பு, வயிரம், பவழம், வெற்றிலை, பட்டாடை முதலியவற்றை வாங்கிச் சென்றனரென்று தெரிகிறது. இதுவுமன்றி மயிற்றோகை, மயிர், நெய் முதலிய பொருள்களையும்; குரங்கு, கடுவாய், யானை முதலிய விலங்குகளையும் மயில், கிளி முதலிய பறவைகளையும் இங்கிருந்து கொண்டுபோயினரென்றுந் தெரிகிறது. அக்கால மக்கள் வாணிகத்தின் பொருட்டு இக்காலத்தார் கேட்டுமிராத தேயங்கட் கெல்லாஞ் சென்றிருக்கின்றனர். இக்காலத்திலோ மேனாட்டாரின் ஆட்சி முறையால் நமது நாட்டு வாணிகந் தட்டுக்கெட்டுத் தடுமாறி நிற்கின்றது. பண்டைக் காலத் தமிழர் எல்லாத் துறைகளிலும் பொருளீட்டுவதற்கு முயன்றிருக்கின்றனரென்பது "காலிற் சேறலுங் கலத்திற் சேறலும் ஊர்தியிற் சேறலும் நீதியாகும்" என்னும் அகப்பொருட் சூத்திரத்தால் நன்கு பெறப்படுகின்றது.

இக்காலத்திலே ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு கடை பெரிய நகரங்களிலே யிருப்பதைப் பார்க்கிறோம். சவுளிக்கடை, அரிசிக்கடை, காய்கறிக்கடை, பலசரக்குக்கடை இப்படிப் பலவிதமான கடைகள் தனித்தனியே இருப்பதைப்போலவே அந்நாளிலும், கூலக்கடை, அறுவைக்கடை, பொன்கடை, மணிக்

கடை என்று பலவிதமான கடைகளிருந்தன. மணிமேகலை பாடிய சீத்தலைச் சாத்தனார், கூலவாணிகனென்னு மடைமொழியுடன் வழங்கப் பெறுகிறார். இதனால் இவர் தானிய வியாபாரம் செய்தவ ரென்பது தானே போதரும். இளவேட்டனார் என்பவர்; அறுவை வாணிகனென்னு மடைமொழியுட னழைக்கப் பெறுகிறார். இதனால் இவர் ஆடை வியாபாரஞ் செய்தவரென்பது நன்கு அறியப்படும். இக்காலத்திலும் பலர் தாங்கள் செய்யும் வியாபாரப்பொருளை அடைமொழியாகப் பெற்று வழங்கப்படுவதை நாம் நன்கறிகிறோமல்லேமோ?

முதல் முதல் தமிழர்கள் கடலில் மிதக்கும்படி மரத்தினாற் கலஞ்செய்து மாகடலி லியங்கும் வழியைக் கண்டுபிடித்தனர். இக் கப்பல்களிலேறி யிவர்கள் ஐரோப்பா முதலிய வெளிநாடு சென்று வாணிகம் புரிந்தனரென்பதற்கியாதும் ஐயப்பாடே யிலது. கடல் கடக்கும் கப்பலை முதலிற் கண்டுபிடித்தவருந் தமிழரேயென்னுஞ் செய்தியை மரக்கலம் என்னும் பெயரே வலியுறுத்தும். மரக்கலம் போய் இரும்புக் கலம் வரினும் பெயர்மட்டுமாவது வழக்கா யெஞ்சியுளது. தமிழர்களது துறைமுகம் கீழைக்கடலோரத் துறைகளாகிய நாகை, தொண்டி, கொற்கை, கோடிக்கரை, புகார் முதலியனவாம்.

அக்காலத்திலே கடற் றுறையை யடுத்து விளங்கும் பட்டினங்களின் கடைத் தெருக்கள் மிகுந்த பொருள்வளங் கொழித்து விளங்கின. காவிரிப்பூம் பட்டினத்துச் சிறப்பைச் சொல்லுமிடத்து இளங்கோவடிகள் :

"கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும்
வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையு மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினு மயிரினும் பருத்தி நூலினும்
மட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்து கடையறியார்
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு"

என்றார்.

கடியலூர் உருத்திரங் கண்ணனார் சோழன் கரி காற் பெருவளத்தானைப் பாடிய பட்டினப் பாலையில் இதே காவிரிப்பூம் பட்டினத்தை;

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவு நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு"

என்று பாடினர்.

இவ்விதமே சங்க நூல்கள் அனைத்தும் வாணிகத் தையும் வளத்தையும் மிகக் கூறுகின்றன.

அக்காலத்தே பாண்டிநாட்டுத் துறைமுகங்களில் முத்துக் குளிக்கப்பட்டன. இந்தியாவிலிருந்து அக்

காலத்தில் உரோம் தேசத்துக்கு ஏற்றப்பட்ட சரக்கு களின் மதிப்பு ரூ. 75,00000 எனப் பிளினி என்பவர் கி. பி. எழுபத்தேழாம் யாண்டில் எழுதியிருக்கிறார். உரோம ராஜ்யத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் அக் காலத்தே வியாபாரம் நடந்து வந்த தென்பதை இக் காலத்திற் பல விடங்களிற் கண்டெடுக்கப்படும் உரோம நாணயங்கள் உறுதிப் படுத்துகின்றனவாம். அக்காலத்தே தமிழ் மக்கள் பலர் பெரிய பெரிய வாணிகர்களாக விருந்தார்களென்பதைச் சரித்திர ஆசிரியர்கள் பலர் எழுதியிருக்குஞ் செய்திகளாலுஞ் சங்கநூல்களாலும் நன்குணரலாம். உள்நாட்டு வாணி கம் மிகுதியாக நடந்தது. அங்கங்கே சுங்கச் சாவடிகள் ஏற்படுத்தித் தீர்வை வாங்கினர். மேருமலைப் பொன், குடகுமலை மிளகு, பொதியமலைச் சந்தனம், கீழ்கடல் முத்து, சங்கு, கங்கைக் கரையிலுள்ள பிறவிளைவுகள் முதலியன முக்கிய உள்நாட்டு வியாபாரச் சரக்குக ளாக விருந்தன. கடைத் தெருக்களில் உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரச் சரக்குகள் மலைபோலக் குவிந்து கிடந்தன. இக்காலத்திற் பெரிய நகரங்களின் கடைத் தெருவில் நாம் பார்க்கும் குவியல்கள் புதுமை யானதன்று. அக்காலத்துக் குவியல்களே இறும்பூதை விளைப்பனவாம்.

மேனாட்டிலிருந்து ஏராளமான குதிரைகள் தமிழ் நாட்டுத் துறைமுகங்களில் வந்திறங்கின. இலங்கையி லிருந்தும், பர்மாவிலிருந்தும் உண் பொருள்கள் வந்தன. சீனம் முதலிய கீழைத் தேசங்களிலிருந்து, கற்பூரம், பனிநீர், குங்குமம் முதலியவைகளும் மேனாட்டிலிருந்து பலவிதமான மதுபான வகைகளும் இறக்குமதியாயின.

தமிழ் நாட்டிலிருந்தோ பலவிதமான வாசனைச் சரக்குகள், மிளகு, வெல்லம், மெல்லிய ஆடைகள் முதலிய அரும்பொருள்கள் அனுப்பப்பட்டன. தமிழ்நாட்டு முக்கிய துறைமுகங்களில் நமது நாட்டு மரக்கலங்களும் வெளிநாட்டிலிருந்து வந்த மரக்கலங்களும் கணக்கின்றி நின்று கொண்டிருந்தன. இக் காலத்தை விட அக் காலத்தே வாணிகம் மிகச் செழிப்புற்றிருந்ததென்பதற்கு ஐயம் யாதும் இல்லை.

---

# அதிகாரம் 31.

---

## தமிழர் நகைச்சுவை

நகையென்பது சிரிப்பு. சுவையென்பது இனிமை. எனவே நகைக்சுவை யென்பது சிரிப்பினாலாகிய இனிமை யென்று பொருள்படும். நகைத்தல், சிரித்தல், மகிழ்தல், களித்தல் முதலிய சொற்கள் சிறிது மாறுபாட்டுடன் ஒரு பொருளையே தருவனவாம். நகைச் சுவையை வடமொழியாளர் ஹாஸ்ய ரசமென்பர்.

கண்ணாற் பார்த்தாலும் காதாற் கேட்டாலும் மக்களுடைய மனவுணர்ச்சி பலவிதமாக மாறுபாட்டை யடையும். அப்பொழுது உடலின் தோற்றமும் வேறுபாட்டை யடையும். இதனை இலக்கண நூலார் மெய்ப்பாடென்பர். இம்மெய்ப்பாடு ;

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்
றப்பா லெட்டே மெய்ப்பாடென்ப"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால், நகைப்பதாலும், அழுகையாலும், இழிக்கப்படுகையாலும், மருட்சியாலும், அச்சத்தாலும், பெருமிதத்தாலும், வெகுளியாலும், உவகையாலும் ஏற்படுகின்றதென்று அறியலாம். இவற்றுள் ஒவ்வொன்றும் நான்கு நான்காகப் பெருகி முப்பத்திரண்டு வகைப்படும். இவற்றுள் நகைப்பானது ;

"எள்ளல் இளமை பேதமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப"

என்னும் சூத்திரத்தால், இகழ்ச்சி, இளமை, அறிவின்மை, மடமை ஆகிய நான்கினும் தோன்றுமென்பதை நன்கறிந்து கொள்ளலாம்.

மெய்ப்பாடு தோன்றுவதற்கு மனமாறுபாடு இன்றியமையாததாகும். மனத்தின்கண் மாறுபாடில்லாமல் உண்டாகும் சிரிப்புப் போலிச் சிரிப்பாகும். (பொருளற்ற சிரிப்பென்பதும் இதுதான்.) ஒரு தலைவன் பொருள் தேடுவதன் நிமித்தம் தலைவியை விட்டுப் பிரிய எண்ணினான். தலைவியோ தலைவன் தன்னைப் பிரிந்துவிடாது பாதுகாத்து நின்றாள். ஒருநாள் தலைவன் அவளை ஏமாற்றிச் சிறிது தூரஞ் சென்றுவிட்டான். செய்தி யுணர்ந்த தலைவி பெரிதும் வருந்திப் புன்முறுவலோடு அவன் முன்பு சென்று நின்றாள். இந்த நிலைமையைப் பாலைபாடிய பெருங்கடுங்கோ"

"அளிநிலை பொறாஅ தமரிய முகத்தள்
விளிநிலை கொள்ளாள் தமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்"

என்று வருணிக்கின்றார். ஈண்டு இத்தலைவி கொண்ட முறுவல் போலியாம். கள்ளுண்பார் மதுவெறியில் நகைக்கும் நகையும் போலி நகையாம்.

ஒருவனுடைய உள்ளம் இனிய உணர்ச்சியால் மாறுபாட்டை யடைந்து பூரித்து நிற்கும் நிலைமையை உவகை அல்லது மகிழ்ச்சியென்று உரைக்கலாம். உள்ளத்துட்டோன்றிய அம் மகிழ்ச்சி ஒரு சிறிது வெளிப்பட்டு உதடுவரை வருமாயின் அதனை முறுவலென்று கூறலாம்.

வானுற வளர்ந்து உயர்ந்து நின்ற கோபுரவாசல் வழியாக உள்ளே சென்ற கூனர்களும், குறளர்களும், கோபுரவாசல் தலைமேல் முட்டிவிடுமென்று பயந்து நிமிர்ந்து மேலே பார்த்துவிட்டுப் பிறகு குனிந்து கொண்டு சென்றார்கள். கோபுரவாசல் முட்டிவிடு மென்று பயந்து குனிந்துசென்ற கூனர் குறளர்களின் போக்குக் கண்டவர்களுக்குப் புன்முறுவலை உண்டாக்கிற்று. இதனை ;

"வானுற நிமிர்ந்த கோபுரத்து வாயிலிற்
கூனருங் குறளருந் தலைநி மிர்ந்துமேற்
கூனலாக் கண்கொடு நோக்கிக் கூனியே
போனது கண்டுளார் முறுவல் பூத்தனர்."

என்னும் செய்யுள் உணர்த்துகின்றது. இம் முறுவல் பின்னுஞ் சிறிது வெளிப்படுமாயின் புன்சிரிப்பாகும்.

"கழிமடம் நாணம் அச்சம் பயிர்ப்பெனுங் காவல் வேலை
அழிதர ஆசை வெள்ளம் அகத்திடை அடங்கா தாகி
வழிவதே போல இன்பம் வடிவெடுத் தனைய நங்கை
பொழிகதிர் நிலவு நாணப் புன்னகை கோட்டினாளே."

புன்சிரிப்புப் பின்னுங் கொஞ்சம் அதிகமானால் மெல்லச் சிரித்தலாகும். மெல்லச் சிரித்தல் பின்னுங் கொஞ்சம் அதிகமானால் பொதுவான சிரிப்பாகும்.

தன்னை மணந்துகொள்ள வேண்டுமென்று சூர்ப்பநகை இராமனிடம் மிகவும் மன்றாடினாள். ஒன்றும் பலிக்கவில்லை. தன்னை மணந்துகொண்டால் இராவணனுடைய தண்ணளி முதலியவைகளுண்டாவதுடன், பெருஞ் செல்வமும் எய்தலாமென்று மேலும் பிதற்றினாள். இராமனுக்கு அவள் கூறியவை நகைப்பையுண்டாக்கிற்று. அப்போது இராமன் சூர்ப்பநகையைப் பார்த்து;

"இருதர்தம் அருளும் பெற்றேன் நின்னலம் பெற்றேன் [நின்னோ
டொருவருஞ் செல்வத் தியாண்டும் உறையவும் பெற்றே [னென்றே
திருநகர் தீர்ந்த பின்னர்ச் செய்தவம் பயந்த தென்னா
வரிசிலை வடித்த தோளான் வாளெயி றிலங்க நக்கான்."

இந்த நகை இன்னுஞ் சிறிது அதிகப்படுமானால் பெருகச் சிரித்தலாகும். இந்தப் பெருகச் சிரித்தல் பின்னும் அதிகப்பட்டுக் கைதட்டல், பேரொலி செய்தல் முதலியவைகளோடு விழுந்து விழுந்து சிரித்தால் இதுதான் ஆரவாரத்தோடு சிரிக்கும் பெருஞ் சிரிப்பாகும்.

பேராரவாரஞ்செய்து நகைக்கும் போது, சிரிப்பவர்களுடைய முகங் கோணலாக மாறுபாட்டையடையும். புருவம் நெளியும். விலாப்புறம் வெடித்து விடுகிறமாதிரி புடைக்கும். இதனால்தான், விலா

வெடிக்கச் சிரித்தான் என்றும் உலக வழக்கில் வழங்கி வருகிறது. சிரிக்குங்கால் ஏற்படும் அவிநயங்களை ;

“ நகையின் அவிநயம் நாட்டுங்காலை
மிகைபடு நகையது பிறர் நகை யுடையது
கோட்டிய முகத்தது..................
விட்டுமுரி புருவமொடு விலாவுறுப் புடையது
செய்வது பிறிதாய் வேறுசே திப்பதென்
றையமில் புலவ ராய்ந்தன வென்ப ”

என்னுஞ் சிலப்பதிகாரவுரை மேற்கோள் செய்யுள் உணர்த்துகின்றது. மேற்கூறியபடி சிரிப்பின் வரிசை முறையைப் பார்த்தால் இந் நகைக்கு மனநிலையே அடிப்படையான ஆதார மென்பது நன்கு விளங்கும். மெய்ப்பாடுகள் முழுவதுமே மன நிலையைத்தான் ஏது வாகக் கொண்டன. கண்ணினுஞ் செவியினுந் திண்ணி தினுணரும் மக்கட்கல்லது மற்றைய உயிர்த் தொகுதி கட்கு, நகை முதலிய சுவையின் நயம் தெரிய முடியா தென்று தொல்காப்பியரும் மனநிலையின் அவசியத்தை வற்புறுத்தி யிருக்கின்றார். இயற்கைக் குணங்களிற் சிரிப்பும் ஒன்றாகும். பச்சைக் குழந்தைகள் கூடச் சிரிப் பதைப் பார்க்கின்றோ மாதலின் இது பழக்கத்தா லேற்படுவதல்லவென்று துணியலாம்.

அவரவர்களுடைய மன நிலைக்குத் தக்கபடி நகைச் சுவையும் மாறுபடும். சில பேர் நன்றாகச் சிரிக்க மாட்டார்கள். இவர்கள் சிரிக்க முயன்றாலும் சிரிக்க முடியாது. இவர்கள் தங்கள் முகத்தை எப்போதுங் கோணலாகவே வைத்துக்கொண்டிருப்பார்கள். இவர்க ளுடைய முகம் இஞ்சிதின்ற குரங்கு முகம்போலிருப் பதைக் கண்டு பிறர் பரிகசிப்பார்கள். இந்த அழு

மூஞ்சிகள் முன்னிலையில் எவ்வளவு வேடிக்கை காட்டி ஞலும் எள்ளளவு கூடச் சிரிக்கமாட்டார்கள். சிரிப்ப தற்குப் பதிலாக என்னிடமா நையாண்டி பண்ணுகின்ற யென்று மிகுந்த கோபத்தைத்தான் அடைவார்கள். எத்தனையோ பேர் பிறருக்குச் சிரிப்பு மூட்டப் போய்க் கோபத்தை மூட்டி விட்டார்கள். சந்தோஷம்பிள்ளை, ஆனந்தமுதலியார், பரமானந்த செட்டியார் இப்படி யான பெயருள்ள சிலர் சந்தோஷப்படுவதையோ சிரிப்பதையோ நம்மாற் காணமுடிகிறதில்லை.

சிரிப்பு உடல் நலத்திற்கு ஒரு நல்ல மருந்து. இதனை இந் நாட்டறிஞரும் மேனுட்டறிஞரும் ஒரே மனதாக ஒப்புக் கொள்ளுகிறுர்கள். ஒரு சிலர் எப்பொழுது பார்த்தாலுஞ் சிரிப்பதும் பல்லைக்காட்டு வதுமே தங்கள் மணியமாக விருக்கிறுர்கள். சிரிக்காம லிருப்பவர்கட்கு அழுமூஞ்சி என்று பெயர் கிடைப்பது போல இவர்கட்கு இளிச்சவாயர் என்று பெயர் கிடைக் கிறது. ஆனுல் இவர்கள் இந்தப் பட்டத்தை ஒரு பொரு ளாக மதியாமல் இதற்கும் ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டுப் போய்விடுவார்கள். எடுத்ததற்கெல்லாஞ் சிரிப்பதால் நன்மைதான் ஏற்படுகிறதே தவிரத் தீமை யொன்று மில்லை. பெரிய தீமைக ளேற்பட்டாலும் அதையுஞ் சிரித்துச் சமாளித்து விடுகிற ஆற்றல் இவர்கட்குண்டு.

நகைச்சுவையற்றவர்கள் மனக் கவலையாலும் துக்கத்தாலும் பீடிக்கப்படுவார்களாயின் சின்னுளில் மெலிந்து போவதைப் பார்க்கிறேம்.

வருகிற துன்பத்திற்குச் சரியான மருந்து நகைப் புத்தான் என்பதைத் திருவள்ளுவர்;

" இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்."

என்னுங் குறளால் தெரியப்படுத்தி யிருப்பதுடன்,

" நகையும் உவகையும் கொல்லுஞ் சினத்திற்
பகையும் உளவோ பிற "

என்னுங் குறளால், ஒருவனது சிரிப்பையும் மகிழ்ச்சியையுங் கொலை செய்யுங் கோபத்தைவிட வேறு பகைவரில்லை யென்றும் பகர்ந்துள்ளார். இதனால் முன்னர்க் கூறிய உரைகள் உண்மை யென்பதை நன்குணரலாம். திருவள்ளுவர் தமது திருக்குறளிலேயும் பல விடங்களில் நகைச்சுவையைச் செம்பொருளிற் செறித்துள்ளார். சங்ககாலத்து நூல்களிலே பற்பல விடங்களில் நகைச்சுவை ஆழ்ந்த பொருளில் விளங்குவதை நன்கு அறியலாம்.

ஒரு தலைவன் தான் சிறியவனாயிருந்த காலத்தில் சிறியவளாயிருந்த தன் தலைவி யமைத்து விளையாடிய மணல் வீட்டைக் காலால் அழித்துவிட்டு, அவளணிந்திருந்த மலர் மாலையையுஞ் சிதைத்து விட்டு, அவளுடைய பந்தையும் எடுத்துக் கொண்டு ஓடி விடுகிறான். பின்னர் இவன் பெரியவனான பின்பு ஒருநாள் தலைவியின் வீட்டிற்குச் சென்று, உண்ணுதற்குச் சிறிது தண்ணீர் வேண்டுமென்கின்றான். தலைவியின் தாய் தண்ணீர் கொடுத்து வாவென்று தன் மகளை யனுப்புகிறாள். தன் காதலியைத் தனிமையிற் சந்தித்த காதலன் அவளுடைய கையைப் பிடித்து இழுக்கின்றான். தலைவி பயந்து அன்னாய்! இவன் செய்ததைப் பாரென்று ஓலமிடுகிறாள். உள்ளே யிருந்த தாய் உடல் பதற ஓடி வருகிறாள். தன் தவறை யுணர்ந்த தலைவி நீருண்ணும்

பிற்காலத்திலும் நகைச்சுவை நிறைந்த அநேக பாடல்களும் பாடப்பெற்றன.

முதலிற் பரமார்த்த குரு கதை தமிழ் மொழியில் நகைச்சுவை மிக்கதாய்த் தோன்றிற்று. இதைத் தழுவி அவிவேக பூரணகுரு கதை தோன்றிற்று. இக்கதைகளில் வரும் குதிரை முட்டை வாங்கப்போன செய்தி, குதிரை பிடிக்கத் தூண்டில் போட்ட செய்தி முதலியவைகளைப் படித்தவர்கள் ஒருநாளும் மறக்கமாட்டார்கள். கமலாம்பாள் சரித்திரம், பிரதாப முதலியார் சரித்திரம், சபாபதி நாடகம், பஞ்சலட்சணத் திருமுக விலாசம் முதலியவைகளும் நகைச்சுவை மிக்கவைகள்தான். பிரதாப முதலியார் சரித்திரம் நகைச்சுவைக் களஞ்சியமென்றே நவிலவேண்டும். பிரதாப முதலியாரின் பாட்டனார் உபகாரஞ் செய்து கன்னத்தில் அறைவாங்கிய செய்தியும், பிறவாக் குழந்தையைச் சுவீகாரங் கேட்டுப் பிரமாதமாகச் சண்டைபோடுஞ் செய்தியும் நகைச்சுவை மிக்கன.

சி. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் பாடியுள்ள நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மிய மென்னும் நூலும் நகைச்சுவையுடையதாக விருக்கிறது.

“எழுதப் பீஸு சொல்லப் பீஸு
எழுதிய தாளை எடுக்கப் பீஸு
நிற்கப் பீஸு இருக்கப் பீஸு
நீட்டின கையை மடக்கப் பீஸு
....................................
அந்தப் பீஸு இந்தப் பீஸு
ஆனைப் பீஸு பூனைப் பீஸு
ஏறப் பீஸு இறங்கப் பீஸு.”

என்பன முதலியவாக வருங்கோர்ட்டுச் செய்தி அடிகளைப் படிக்கும்போது யாருஞ் சிரிக்காமலிருக்க முடியாது.

சிலருக்கு நகைச்சுவை பிறவிக் குணமாக அமைந்திருக்கிறது. இவர்களுக்குப் பிள்ளைப் பருவத்திலேயே நகைச்சுவையுடன் பேசவுங் காரியங்களைச் செய்யவும் இயற்கையாற்றல் அமைந்திருக்கின்றது. இவர்கள் செய்யுங் காரியங்களெல்லாம் வேடிக்கையாகக் காணப்பெறும். ஆனால் இவர்களது நகைச்சுவையை நன்கு அனுபவிக்கத் தெரியாத சில அழுமூஞ்சிகள், இவர்களுக்குக் குறும்புக்காரர்கள் என்று பேர் வைத்து விடுகின்றனர்.

ஒரு பக்தர் "பஜகோவிந்தம் பஜகோவிந்தம் பஜகோவிந்தம்" என்று தெருவிற் பாடிக்கொண்டு சென்றார். ஒரு பையன் அவரிடம் சென்று, "பசை கோவிந்தத்தில் ஏது? கருவைக்கோந்து முதலிய பிசின்களிலல்லவோ பசை யிருக்கும்" என்று கேட்டான். அவனுடைய நகைச்சுவையை நாம் நன்கு அனுபவிக்கத் தெரியாமல் அவனைப் போக்கிரி என்று கூறிவிடலாமா?

ஊருக்குப் புதியவரான ஒரு சந்நியாசி ஒரு பையனைப் பார்த்துத் தபாலாபீஸுக்கு வழி எது? என்று விசாரித்தார். அந்தப் பையன் அவருக்குத் தபாலாபீசுக்குப் போகிற வழியைக் கூறிவிட்டு, "நீங்கள் இந்த வூருக்குப் புதிதுபோலத் தெரிகிறதே. இங்கே எப்பொழுது வந்தீர்? என்ன செய்து கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டான். அவர் கொஞ்சம் பெருமையுடனேயே பையனைப் பார்த்து "நான் மக்கள் மோட்சலோகத்திற்குப் போக வழிகாட்டிக்

கொண்டிருக்கிறேன். நாளைக்கு நீயும் நமது மடத்திற்கு வா. உனக்கும் வழி காட்டுகிறேன்" என்று கூறினர். உடனே அந்தப் பையன் அவரைப் பார்த்துத் "தபா லாபீசுக்கு வழி தெரியாத நீர்தானு மோட்ச லோகத் திற்கு வழிகாட்டப் போகிறீர்?" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே சென்ருன். பையனுடைய நகைச் சுவை போற்றக் கூடியதல்லவா?

புலவர்களிற் பலர் நகைச்சுவையுடன் பேசிப் பிறரைச் சிரிக்கச் செய்திருக்கின்றனர். அவர்களுடைய நகைச்சுவை புலவர்களாலேதான் இனிதுணர்ந்து போற்றக் கூடியதாக விருக்கிறது.

கொல்லச் சாதிப் புலவர் ஒருவரைக் கண்ட ஒரு துறவி, அவர் சாதியைச் சுட்டிக் காட்ட நினைத்து "வாரும் இரும் படியும் புலவரே!" என்று கூறினர். இவ் வாக்கியம் "வாரும் இரும்படியும்" என்றும் பிரிகிறது. உடனே புலவர், "மடத்தடிகளே! அப்படியே செய்கிறேன்" என்ருர். இவ் வாக்கியம் "மடத்து அடிகளே" என்று பிரிவதுடன், "மடத்தடிகளே" என்றும் பிரிகிறது.

புலிக்குட்டிக் கவிராயர் என்பவர் ஒரு சமீன் தாரைக் காணச் சென்று, வாசல் காப்பவனைப் பார்த்துப் "புலி வந்திருக்கிறது." என்று சமீன்தாரிடம் போய்ச் சொல்" என்ருர். அவனும் அப்படியே சென்று, புலவர் கூறியபடி கூறினன். செய்தியைத் தெரிந்து கொண்டார் சமீன்தார். அவர் அப்பொழுது வேலுக் கவிராயர் என்பவரோடு பேசிக்கொண்டிருந்தார். அவர் வாசற் காப்பவனைப் பார்த்து "இங்கு வேலிருக்கிறது வரலா மென்று சொல்" என்று சொல்லி யனுப்பினர்.

அதிகக் கர்வமுள்ள ஒரு புலவருக்கு ஒரு கண் குருடு. அவர் ஒரு சமயம் தமிழ்க் கலாசாலைக்குள் நுழைந்து ஒரு பையனைப் பார்த்துக் "குற்றியலுகர ஒற்றுக்கள் வேற்றுமையில் இரட்டிக்கும் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்" என்று வெகு தருக்குடன் கேட்டார். உடனே அந்தக் கொலைகாரப் பையன் "குருடு-கண், குருட்டுக் கண்," என்று உதாரணங் கூறினான். ஆசிரியருட்பட அனைவருஞ் சிரித்தனர். குருட்டுப் புலவர் அவமானமடைந்து வெளியே சென்று விட்டார்.

பள்ளிக்கூடத்தில் மக்காக இருந்த ஒரு பையன் தினசரி வகுப்புக்குக் கடைசியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஒரு நாள் உபாத்தியாயர் அவனைப் பார்த்து "நீ என்ன சாதி? என்று கேட்டார். அவன் "செட்டி" என்று பதில் கூறினான். அதனால்தான் நீ தினமுங் கடையில் உட்கார்ந்து கொள்ளுகிறாயா? என்று கேட்டார் உபாத்தியாயர்.

ஒரு தட்டாரச் சாதிப் புலவரும், பிள்ளைமார் வகுப்புப் புலவரும், தெருவிற் சென்றுகொண்டிருக்கும் போது சில தட்டாரப் பூச்சிகளும் அவற்றின் பிள்ளைகளும் பறந்து கொண்டிருந்தன. பிள்ளைமார் வகுப்புப் புலவர், தட்டாரப் புலவரைக் கேலி செய்ய நினைத்து "அதோ தட்டான் பறக்கிறான் பாரும்" என்றார். உடனே தட்டாரப் புலவர் "பிள்ளையும் கூடப் பறக்கிறதைப் பாரும்" என்றார்.

நகைச்சுவை பொருந்திய பிற்காலப் பாடல்கள் சிலவற்றைப் பார்ப்போம். இசை பாடுதல் வசை

பாடுதல், சுவை பாடுதல் ஆகிய மூன்றிலுஞ் சிறந்த அவ்வையார் பாண்டியன் திருமணத்திற்குச் சென்றார். சாப்பாட்டு வேளையில் விருந்து நடக்குமிடத்திற்குச் செல்ல முயன்றார். நான்கு பக்கங்களிலுமிருந்த கூட்டம் அவ்வையாரை நெருக்கித் தள்ளிற்று. அவ்வையார் கூட்டத்தை விட்டுத் தனியே வந்து ஓரிடத்தில் நின்றார். அப்பொழுது ஒருவர் அவ்வையாரைப் பார்த்துப் "பாட்டி! சாப்பாடாய் விட்டதா? விருந்து எப்படி யிருக்கிறதென்று கேட்டார். உடனே அவ்வையார்,

"வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்கம் உரைக்கக் கேள்—அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியி னாலே
சுருக்குண்டேன் சோறுண்டிலேன்."

என்று நகைச்சுவை ததும்பிய பாடலால் பதிலளித்தார். பசியின்போது கூட அவ்வையாருக்கு நகைச்சுவை குறையவில்லை.

"வசைபாடக் காளமேக" மென்று இசை பெற்ற காளமேகப் புலவர் திருமலைராயன் பட்டினத்துக்குச் சென்றிருந்த போது இராச சபைக்குச் சென்று அங்கிருந்த அதிமதுர கவி முதலிய புலவர்களைப் பார்த்து "நீங்கள் யார்? என்று கேட்டார். இவரது வரிசையை அறியாத அப் புலவர்கள், வெகு அகங்காரத் துடன் "நாங்கள் கவிராயர்கள்" என்று பதில் கூறினார்கள். கவி என்பதற்குக் குரங்கு என்றும் அர்த்த மிருக்குஞ் செய்தி நம்மிற்பல ரறிந்ததுதானே. உடனே காளமேகப் புலவரும் குரங்கென்றே அவர்கள் தங் களைக் குறிப்பிட்டதாகப் பொருள் முடிவு செய்து,

"வாலெங்கே? நீண்ட வயிறெங்கே? முன்னிரண்டு
காலெங்கே? உட்குழிந்த கண்ணெங்கே? சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள்! நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்."

என்று நகைச்சுவை ததும்பிய பாடல் ஒன்றை அவர்களிடம் பாடினார். இதனைக் கேட்ட கவிராயர்கள் நாணத்தால் தலை கவிழ்ந்தனர். மற்றையரோ நகைத்தனர்.

ஒரு முதலியார் ஒரு காளைமாடு வாங்கினார். அது நன்றாகத் திண்டி தின்றுவிட்டுச் சண்டித்தனம் செய்ததே யொழிய வண்டியிற் பூட்ட இணங்கி வரவில்லை. இதனைப் பார்த்த ஒரு புலவர்,

'இட்டமுடன் முதலியார் வாங்கிவந்த
காளைதினம் இரு போர்தின்னும்
சட்டமுடன் கொள்ளுண்ணும் புல்லுண்ணும்
அதைப் பண்டிதன்னிற் பூட்டக்
கிட்டவரின் முட்டவருந் தொட்டவர்மே
லேகழியும் கீழே வீழும்
எட்டாள்கள் தூக்கிடினுந் தடிகொண்டு
தாக்கிடினும் எழுந்திராதே.'

என்று சிரிப்புச் சுவை ததும்ப ஒரு செய்யுள் பாடினார்.

கைலாசத்தில் ஒரு நாள் நகைச்சுவை மிக்க ஒரு வேடிக்கை நடந்தது. அஃது என்னவெனின், விநாயகக் கடவுளது துதிக்கை எத்தனை முழநீள மிருக்கிற தென்று முருகக் கடவுள் தம்முடைய கையைப் போட்டு அளந்து பார்த்தார். உடனே விநாயகர் சினமடைந்து, முருகக் கடவுளுக்கு எத்தனை கண்களிருக்கின்றன வென்று எண்ணத் தொடங்கினார். இதனால் முருகக் கடவுளுஞ் சினமடைந்து விநாயகருடைய

காதைப் பிடித்து இழுத்துக் கிள்ளி விட்டார். விநாயகக் கடவுள் சிவபிரானிடத்திற் சென்று, ஐயா! என் செவியை ஆறுமுகன் கிள்ளிவிட்டான் என்று அழுதார். உடனே சிவபிரான் முருகக் கடவுளைக் கூப்பிட்டு விசாரணை செய்தார். இரண்டு பக்கத்திலுங் குற்றங் காணப்பட்டது. பார்வதியைக் கூப்பிட்டு "உன்னுடைய இரண்டு பிள்ளைகளின் இலட்சணத்தையும் பார்" என்று கூறினர். விநாயகக் கடவுளைப் பார்வதி சமீபத்தி லழைத்துத் தழுவி முத்தமிட்டு மகிழ்ந்தாள். இதனைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்,

"அரனவன் இடத்திலே ஐங்கரன் வந்துதான்
ஐய! என் செவியை மிகவும்—
அறுமுகன் கிள்ளினன் என்றே சிணுங்கிடவும்
அத்தன் வேலவனை நோக்கி,
விரைவுடன் வினவவே அண்ணன் என் சென்னியில்
விளங்குகண் எண்ணினன் என—
வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து நீ அப்படி
விகடமேன் செய்தாய் என,
மருவும்என் கைந்நீளம் முழமளந் தானென்ன
மயிலவன் நகைத்து நிற்க—
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாராய் எனக்,
கருதரிய கடல் ஆடை உலகுபல அண்டம்
கருப்பமாய்ப் பெற்ற கன்னி—
கணபதியை அருகழைத் தகமகிழ்வு கொண்டனள்
களிப்புடன் உமைக் காக்கவே."

என்று நகைச்சுவை ததும்பப் பாடியுள்ளார்.

வெறி மங்கைக் கவிராயர் என்னும் புலவருக்குக் குதிரைச் சவாரி செய்யவேண்டு மென்று வெறி யுண்டாகிவிட்டது. அதற்கொரு சூழ்ச்சி செய்தார். தாம் சிவனரிடத்திலே போய் ஒரு மட்டக் குதிரை கேட்டு தாகவும், அதற்குச் சிவபிரான், "நமது வீட்டிலே நம் முடைய மூத்த மகன் விநாயகன் பெருச்சாளியிலே ஏறித் திரிகிறான். முருகன் காட்டு மயிலிலே ஏறிச் சுற்றுகிறான். வயிரவன் எதன் மேலே ஏறித் திரிகிறான் என்பதை நீயே கண்ணாற் பார்த்துக்கொள்" என்று கூறி விட்டார் என்று பொருளமைத்து, இரகுநாத வுடை யான் என்னுஞ் செல்வன் மீது,

"நாட்டிலே புகழ்படைத்த ஆவுடையான்
பெற்ற ரகுநாத! கேண்மோ
மாட்டிலே ஏறுகின்ற சிவனரைப்
போய்க்குதிரை மட்டங் கேட்டேன்
வீட்டிலே மூத்தமகன் பெருச்சாளி
ஏறுகின்றான் வேலன் புன்செய்க்
காட்டுமயில் ஏறுகின்றான் வயிரவனைப்
பாரெனக் கண் காட்டினரே."

என்றொரு செய்யுளைச் செய்து கொண்டு சென்றார். புலவரின் குதிரை வெறி தீர்ந்ததோ இல்லையோ? பாட்டில் நகைச்சுவைக்கு மட்டும் பஞ்சமில்லை.

எல்லோரையும் விட ஒரு புலவர் நகைச்சுவையின் சிகரத்தைப் போய்ப் பிடித்துவிட்டார். பாட்டென்றாலே ஓட்டமெடுக்கும் பான்மையும், இராக்கப்பபூபதி என்னும் பெயரும் வாய்ந்த ஒரு கஞ்சக் கனவானுக்கு, இந்தப் புலவர் செய்யுள் சில எழுதிக்கொண்டு சென்றார்.

ராக்கப்ப பூபதியோ தான் பொய்ப்பொருள் பொருந்திய எந்தப் பாட்டையுங் கேட்கவே முடியாதென்று கூறி விட்டார். பிறகு புலவர் பொய்யில்லாதபடி உண்மைப் பொருளமைத்துச் சில செய்யுட்கள் செய்து கொண்டு போய்ப் படித்துக் காட்டினர். அந்தப் பாடல்கள்,

“ அண்ணன் என்பவன் தம்பிக்கு மூத்தவன்
வெண்ணெய் என்பது பாலில் விளைவது
திண்ணை என்பது தெருவில் உயர்ந்தது
கண்ணன் என்பவன் கண் இரண் டுள்ளவன்.
பாக்கென்பது கமுகின் பழம் பருப்பென்பது துவரை
நாற்காதமும் முக்காதமும் நடந்தால் எழுகாதம்
மேற்கே நின்று பார்த்தால் கிழக்கது தெரியும்
ராக்கா உண்மையைச் சொன்னேன் ரட்சிப்பாயே.”

என்பவைகள்தான். இப் பாடல்களைக் கேட்ட இராக் கப்ப பூபதி துள்ளிக் குதித்தார். ஆ! ஆ!! என்ன அற்புதம்!!! பாடல்கள் என்றால் இப்படியன்றோ இருக்க வேண்டும். பொய்யும் புளுகும் நிறைத்து இந்திர னென்றுஞ் சந்திரனென்றும் வீணாக எழுதும் பாடல்க ளால் ஏதாவது பயனுண்டா? இப் பாட்டிற் பொய் யிருப்பதாக யாராவது கூறமுடியுமா? என்று பெரிதும் பாராட்டியதுடன் புலவருக்குக் கனகாபிஷேகஞ் செய்து அவரைத் தமது சமூக வித்துவானாகவும் ஆக்கி விட்டார். இது நகைச்சுவையால் விளைந்த பயனல்லவா?

நகைச்சுவையைப்போல் மக்களுக்கு இன்பமளிக்கக் கூடியது வேறெதுவும் இல்லை. ஆகையால்தான் மக்களுக்கு மனமகிழ்ச்சியை உண்டாக்கக்கூடிய கருவிக ளாக நாடகம், படக்காட்சி, ரேடியோ இவைகளும் இவைகளில் நகைச்சுவைப் பகுதிகளும் ஏற்பட்டுள்ளன.

நமது நாட்டில் நகைச்சுவையை வளர்ப்பதற்குப் பல பத்திரிகைகளும் வெளிவந்துலாவுகின்றன. நாம் நகைச் சுவையை நன்கு அனுபவித்து நீண்ட வாழ் நாளையும் இன்பத்தையும் அடைவோமாக.

---

# அதிகாரம் 32.

---

## தமிழர் விளையாட்டு

காலம் முழுவதையும் மக்கள் காரியங்களிலேயே கழிப்பார்களானால் உள்ளத்தின் ஊக்கமானது ஓய்ந்து போகும். அங்ஙனம் ஓய்ந்து போனால் உள்ளத்தின் நலங் கெட்டு உடலுக்குங் கேடு சூழும். இங்ஙன மேற்படாது தடுக்கவும் உடலின் பாகங்கள் உரம் பெறவும் முற்காலத்திலிருந்தே விளையாட்டுக்கள் பல வற்றை மேலோர் விதித்திருக்கின்றனர். மனிதன் மனக் கிளர்ச்சியற்று அழுமூஞ்சியாக அமர்ந்திருப்பானாயின், அவனைப் பிணிக் கூட்டம் விரைவிற் சூழ்ந்து விடு மென்பது அனைவரும் அறிந்ததொன்று.

இக்காலப் பொழுதுபோக்குகள் எல்லோரும் நன் கறிந்ததே. பழைய நூற்களைப் பார்க்குமிடத்துப் பழந் தமிழர் விளையாட்டுப் பல மறைந்து வருவ தாகவே தோன்றுகின்றது.

சேவற் சண்டை, கடாச் சண்டை முதலிய தீய விளையாட்டுகள் மிகக் கொடியன என்பதை யுணர்ந்து

ஆங்கில அரசாங்கத்தார் தடை செய்திருக்கின்றனர். தடை செய்திருப்பினும் எல்லா விடங்களிலும் மறை முகமாக நடந்துகொண்டுதானிருக்கிறது. ஆனால் அந்தக் காலத்திலோ கேள்விமுறையற்று நடந்து வந்திருக்கிறதென்பது ;

"கறுவொடு மொன்றோ டொன்று காரணமின்றிச் சீறிப்
பொறியுடைக் குறும்பூழ் தம்மிற் போர்செயப் பொருத்து
மோதை
செறிமயிர்த் தகர்கள் தம்மில் தீயெழத் தாக்கனேக்கி
அறைகழல் வீரரார்க்கும் அமலையை அவிக்கு மன்றே."

"பூத்தலை வாரணப் போர்த்தொழில் இளையவர்
நாத்தலை மடிவிளிக் கூத்தொடு குயிறாக்
காய்த்துறு தமனியத்துகளொடு கடிகமழ்
பூத்துகள் கழுமிய பொலிவின தொருபால்"

"கோட்டிளந் தகர்களுங் கொய்மலர தொன்றிபோற்
சூட்டுடைய சேவலுந் தோணிக்கோழி யாதியா
வேட்டவற்றி னூறுளார் வெருளி மாந்தர் போர்க்கொளீ இக்
காட்டியார்க்குங் கௌவையுங் கடியுங்கௌவை கௌவையே"

"மறப்போர்க் கோழி மரபிற் பொருத்தும்
விறற்போ ராடவர் விரும்பிய கண்ணும்"

என்னும் பாடல்களால் பெறப்படுகிறது. விளையாட்டுகள் சிறுவர் விளையாட்டு, சிறுமியர் விளையாட்டு, ஆடவர் விளையாட்டு, பெண்டிர் விளையாட்டு எனப் பல விதமாகவுள்ளன.

சிறுர்கள் சிறுதேர் உருட்டல், சிறு பறையடித்தல் கண்ணூமூச்சி விடுதல் முதலிய பல ஆடல்கள் புரிந்தனர். சிறுமியர்கள் சிறு வீடுகட்டல், மணற் சோறடுதல் முதலியவைகளை இக்காலத்தும் யாண்டுங் காண்

கிறோம். இனி மங்கைப் பருவமகளிர், கழங்காடுதல், பந்தாடுதல், அம்மானையாடுதல், ஊசலாடுதல், நீராடுதல், தெள்ளேனங்கொட்டல், தோணுக்கமாடல், பூக்கொய்தல், உந்தியாடல், கும்மியடித்தல் முதலிய பலவித விளையாடல்களைப் புரிந்திருக்கின்றனர். இவ்விளையாடல்களிலே சில இக்காலத்தில் மறைந்துவிட்டன. ஒரு சிலவே வழக்காற்றி லிருக்கின்றன. பந்தாடுதல் பெண்பாலுக்கேயுரியது. ஆனால் இக்காலத்தில் இதனை ஆடவர் கவர்ந்திருக்கின்றனர். கவர்ந்தனராயினும் பயனில்லா வீச்சு விளையாட்டாகவே வைத்திருக்கின்றனரன்றிப் பழந்தமிழ்ப் பாவையரைப் போல ஆடுவார் எவருமிலர். உதயணன் கதையிலே மங்கையர் பலர் பந்தாடுகின்றார்கள். பதுமையின் தோழியாகிய இராசனை யென்பவள் ஏழு பந்துகளை இரு கைகளிலுமெடுத்து ஆயிரங்கை மாறி மாறியடித்தாள். பின்னர்க் காஞ்சனமாலை யென்பவள் ஏழு கந்துகங்களையு மிருகையிலேந்தி ஆயிரத்திருநூறு கைகளடித்து நிறுத்தினாள். அதன்பின் ஐராபதியென்பவள் ஆடத்தொடங்கி ஏழு பந்துகளையுந் தாங்கி ஈராயிரம் அடிகள் சாடினாள். வாசவதத்தையின் தோழியாகிய விச்சுவலேகையென்பாள் ஏழு பந்தையும் வாங்கி ஈராயிரத்தைந் நூறடிகள் கொடுத்தாள். அப்பால் பதுமையின் உயிர்த்தோழி ஆரியை யென்னும் பேரினாள், ஏழு பந்துகளையு மிருகையிலேந்தி மூவாயிரம் அடிகள் வீசினாள். பின்னர் அவைகளைக் கைக்கொண்டடிப்பதற்கு யாரும் முன் வரவில்லை. அப்போது வாசவதத்தைக்கு நேசமுடன் பணிபுரிபவளாகிய மானனீகையென்பவள் முன் வந்தாள். தனக்கு

முன்னாடினாரது ஆட்டங்களை யெல்லாம் இகழ்ந்தாள். இருபத்தொரு பந்துகளை இருகையிலும் வாரினாள்.

" சுழன்றன தாமம் குழன்றது கூந்தல்
அழன்றது மேனி அவிழ்ந்தது மேகலை
எழுந்தது குறுவியர் இழிந்தது சாந்தம்
ஓடின தடங்கண் கூடின புருவம்
அங்கையின் ஏற்றும் புறங்கையின் ஓட்டியும்
தங்குற வளைத்துத் தான்புரிந் தடித்தும்
இடையிடை இருகால் தெரிதர மடித்தும்
நித்திலக் குறுவியர் பத்தியில் துடைத்தும்
பற்றிய கந்துகம் சுற்றுமுறை யுரைத்தும்
தொடையும் கண்ணியும் முறைமுறை இயற்றியும்
அடிமுதல் முடிவரை இழைபல திருத்தியும்
படிந்தவண் டெழுப்பியும் கிடந்தபந் தெண்ணியும்
தேமலர்த் தொடையல் திறத்திறம் பிணைத்தும்
பந்துவரல் நோக்கியும் பாணிவர நொடித்தும்
சிம்புளித் தடித்தும் கம்பிதம் பாடியும்
ஆழியென உருட்டியும் தோழியொடு பேசியும்
சாரிபல ஓட்டியும் வாழியென வாழ்த்தியும்
அந்தளிர்க் கண்ணி அவந்திகை வெல்கெனப்
பைந்தொடி மாதர் பற்பல வகையால்
எண்ணா யிரங்கை ஏற்றினள்..."

இவளது ஆட்டத்தைக் கண்டு ஆண்டுக் குழுமி யிருந்தாரனைவரும் பெருவியப்பும் பெருந் திகிலுமடைந்தனர். இத்தகைய ஆடல்கள் அந்நாளிலேயே மறைந்து விட்டனபோலும்.

சிறு பெண்கள் சிற்றிலமைக்குஞ் செய்தி ;

" சுடர்த்தொடீஇ ! கேளாய் தெருவில்யாம் ஆடும்
மணற்சிற்றில் காலின் சிதையா அடைச்சிய

கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி...''

என்பதாலும், சிறுவர் சிறுதேருருட்டல்,

"தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்தின் புறூஉம் இளையோர் போல''

என்பதாலும் அறியலாம். மற்றும் ஆடவர் பெண்டிர் இருசாராரும் புனல்விளையாடல் பூக்கொய்தல் முதலிய பலவிதமான ஆடல்களும் புரிதல் நூல்களிலே காணப்பெறுகின்றன.

**கந்துகவரி**

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைக ளார்ப்பவார்ப்ப வெங்கணுந்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந்த டித்துமே
தேவரார மார்பன் வாழ்க வென்றுபந்த டித்துமே

பின்னுமுன்னு மெங்கணும் பெயர்ந்துவந் தெழுந்துலாய்
மின்னுமின்னி ளங்கொடி வியனிலத்தி ழிந்தெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந்த டித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந்த டித்துமே

துன்னிவந்து கைத்தலத்தி ருந்ததில்லை நீணிலந்
தன்னினின்று மந்தரத்தெ ழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந்த டித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந்த டித்துமே.

ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட வாடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி யாடாமோ ஊசல்.

# அதிகாரம் 33.

---

## தமிழர் இசை

எழுத்தை நீட்டி இனிமையுண்டாகும்படி அள பெடுத்தலே இசையாகும். இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழுள் இசையை நடுநாயகமாக வியம்பி யிருத்தலானே முன்னதற்கும் பின்னதற்கும் இசை இன்றியமையாததா மென்பது கூறுமலே யமையும்.

கேட்பார்தஞ் செவியில் இனிமையாகப் புகுந்து, உள்ளத்தின்கட் கிளர்ச்சியுண்டாக்கி அவ்வுள்ளத் தினைத் தன் வசமாக்குந் தன்மையுடையது தான் இசையே தவிரக் காக்கையுங் கழுதையுங் கத்தியாங்கு பெருங்குரலெடுத்துத் தொண்டைகிழியக் கத்திக் கேட் பார் தஞ்செவி செவிடுபடும்படியாகச் செய்வது இசை யன்று.

இசை எல்லோருக்கும் இனிமையானதாக அமைந்து விடமாட்டாது. பழம் புண்ணியமுடைய ஒரு சிலருக் குத்தான் நல்ல தொண்டையும் இசையும் வாய்க்கும். இசையின் ஆற்றல் இவ்வளவு அவ்வளவு எனக் கூறற் கமைவதன்று. இசை எல்லாப் பிராணிகளையுந் தன் வசமாக்குந் தன்மை பொருந்தியது. உள்ளத்தைப் பிணித்துத் தன் வசஞ் செய்யாதது இசையன்று. இசை யைக் கேட்டு அசையும் பொருளன்றி அசையாப் பொருள்கூடத் தன்மை மாறுவதாக நூல்கள் கூறு கின்றன.

அகத்தியர் இராவணனை இசையால் வழிப்படுத்தித் தென்னாட்டில் இராவணம் போக்கினரென நூல்களியம்புகின்றன. அகத்தியர் இசை பாடியபோது இராவணன் தனது யாழைக் கருங்கன் மீது வைத்திருந்தனனும். இசையாற் கல்லுருகி யாழினைப் பிணைத்துக் கொண்டதாம். அகத்தியர் இசையை நிறுத்திய பின் கல் பழமைபோ லிறுகிவிட்டதாம். பிறகு இராவணன் யாழை எடுக்க முயன்று முடியாமல், பிறகு அகத்தியருடைய யாழையே வாங்கி எவ்வளவோ கதறிப் பார்த்தும் யாழை எடுக்க முடியவில்லையாம். பின் அகத்தியரே இசை பாடி அவ் வியாழினை மீட்டுக் கொடுத்த தன்றித் தென்னாட்டை விட்டு விரட்டியடித்தனராம். இதனால் இசையின் இசையினை நாம் ஒருவாறு உணரலாம். இசைக்கு இசையாத பொருள்களே இல்லை. பாம்புகளும் பாம்பாட்டிகளின் குழலிசை கேட்டவுடன் ஆடத் தொடங்கி விடுகின்றன. எத்தனையோ இடங்களில் பாம்புகள் கிராமபோன் பிளேட், ரேடியோ சங்கீதம் முதலியவற்றைக் கேட்டுக்கொண் டிருப்பதாகச் செய்தித் தாள்களில் செய்தி வருகின்றன.

உயிர்களை யெல்லாம் ஆக்கியளிக்கும் இறைவனே எக்காலமும் இசை பாடிக்கொண் டிருப்பதுடன், கந்தருவரிருவரைக் குண்டலமாக்கிக் காதிலணிந்து அவர்கள் இடை விடாது பாடும் இசையைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருப்பதாகப் புராணங்கள் சொல்லுகின்றன. சீவகசிந்தாமணியில் சீவகன் இசை பாடி ஒரு பெண்ணை வசப்படுத்தி மணந்தான். பெருங் கதையில் உதயணன் யாழ் வாசித்து மதம் பிடித்த யானையின் மதத்தை யடக்கி யதன்மீது இவர்ந்தான். " பட்டமரமுந்

தழைக்கச் சுட்ட வெலும்பும் பிழைக்க, நட்ட கல்லுந் தலை .'யசைக்கப் பாட்டுச் செனிக்குதே பேரின்பமாக இனிக்குதே" என்று சில அடிகள் பழந் தமிழ் நூல் களிலே காணப்படுகின்றன.

இசைப் புலவர் பலர் இக் காலத்தில் இனிமை யுடன் பாடும் இசையைக் கேட்டு மனமுருகிச் சிலர், கல்லுப் பிள்ளையாரைப் போல அசையாம லமர்ந்திருப் பதையுஞ் சிலர் கை தட்டிப் பேராரவாரஞ் செய்து மகிழ்தலையும் பார்க்கின்றோம்.

மதுரை யிறைவனுகிய மாதொரு பாகன், தன் னன்பனுகிய பாணபத்திரன் பொருட்டு விறகுத் தலைய ஞக மேவி,

"விரைசார் மலரோ னறியா விகிர்தன்
அரைசாய் மதுரை அமர்ந்தா னென்னே
அரசாய் மதுரை அமர்ந்தானவனென்
புரைசார் மனனும் புகுந்தா னென்னே."

"பாடன் மறையுந் தெளியாப் பரமன்
கூடல் கோயில் கொண்டா னென்னே
கூடல் போலக் கொடியே னகமும்
ஆட லரங்கா யமர்ந்தா னென்னே."

"நீல வண்ணன் தேரு நிமலன்
ஆல வாயி லமர்ந்தா னென்னே
ஆல வாயா னலரில் வாசம்
போலென் னுளமும் புகுந்தா னென்னே."

என்று இசை பாடியபோது, உலகத்திலிருந்த அசையும் பொருள் அசையாப் பொருள் முதலிய அனைத்துமே அசைவற்று நின்றன. இவ் விசையைக் கேட்ட தேவர்

கோமான், திருமாமலரோன், திருமகள் கொழுநன் முதலிய தேவரெல்லாம் இன்பக் கடலுள் இனிது திளைத்தனரெனவும்; இசைவலான் தானே யென்று இறுமாப்புடனிருந்த ஏமநாதனும் ஏமாற்றத்துடன் போனதிசை யறியாதோடிப் போனானெனவுந் திருவிளையாடற் புராணத்துட் படிக்கின்றோம். அன்றியும் பாணபத்திரன் மனைவி இசைவாது செய்து,

" குடங்கைநீரும் பச்சிலையும் இடுவார்க்
    கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுந்
    தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையுந்
    தருவாய் கையிற்படு தலைகொண்
டிடங்கடோறு மிரப்பா யென்
    றேசுவார்க்கென் பேசுவனே.
தேனார் மொழியார் விழிவழியே
    செல்லாதவர்க்கே வீடென்று
நானுவேதப் பொருளுரைத்தாய்
    நீயேமதுரை நம்பரனே
நானு வேதப் பொருளுரைத்தாய்
    நீயே பாதி நாரியுரு
ஆனுயென்று பிறர்பழித்தா
    லடியேன் விடையே தறைவேனே.
வரதனுகி யெவ்வுயிர்க்கு
    மாயா விருத்தி வலியடக்கிச்
சரத மான வீட்டின்பந்
    தருவாய் மதுரைத் தனிமுதலே

சரதமான வீட்டின்பந்
 தருவாய் வீடு பெறுவார் போல்
விரதயோக நிலையடைந்தா
 யென்பார்க் கென்ஞன் விளம்புவனே.

என்று இசை பாடிய காலத்தில், இவளது இசையை ஆலவா யண்ணலே அற்புதம் அற்புதம் என்று பாராட்டிச் சென்றார். இசைத் தமிழால் எல்லோ ரையும் இன்பக் கடலுள் அமிழ்த்தலாம். ஆதலின் அனைவருக்கும் இசை வேண்டியது இன்றியமையாத தாகும். யானை முதலிய காட்டு மிருகங்களும் இசையில் வழிப்பட்டு விடுகின்றன. தினைக் கொல்லையைக் காலி செய்ய வந்த வொரு கைம்மா, தினைக் கொல்லையைக் காத்துக் கொண்டிருந்த வொரு தெரிவை பாடிய குறிஞ்சிப் பண்ணைக் கேட்டுக்கொண்டு அசையாது நின்றுவிட்டதென்னுஞ் செய்தியும்,

"ஒளியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றோய்யென
மரபுகண் மழகளி றுறங்கும் நாடன்"

என்னும் செய்யுளடிகளாற் றெரிகின்றது. அசுணம் என்பது பறவை இயல்பும் மிருக இயல்பு மொருங்கே வாய்ந்தது. வேகமாக வோடக் கூடியது. இசையில் நசை மிகவுடையது. இது இசையினலேயே தனக்கு இறுதியையுந் தேடிக் கொள்கிறது. எவ்வா றெனின், இதனைப் பிடிக்க வெண்ணியோர் இது வசிக்குமிடங்களிற் சென்று இனிய இசை பாடுவர். அஃது இசையைக் கேட்டு இன்பமடைந்திருக்கும். அந்

நிலை பார்த்து அசுணம் பிடிப்போர் வெகு கொடூரமாகப் பறையினை யடிப்பர். இனிய வோசைகேட் டின்புற் றிருந்த வசுணம் அக் கொடூர ஒலியைக் கேட்டு மயங்கி விழும். உடனே பிடித்துக் கொள்ளுவர். கம்பர் அவையடக்கங் கூற வந்த விடத்து, நல்ல புலவர்களின் அரிய பாடல்களைப் பார்த்து இன்பமடைந்துள்ள புலவர்கட்கு என் புன் கவி துன்பத்தை யளிப்பதா மென்று, இவ் வசுணத்தையே யெடுத்துக்காட்டி,

> " துறையடுத்த விருத்தத் தொகைக்கவிக்
> குறையடுத்த செவிகளுக் கோதில்யாழ்
> நறையடுத்த வசுணநன் மாச்செவிப்
> பறையடித்தது போலுமென் பாவரோ "

என்று பாடினர்.

மேகராகக் குறிஞ்சி பாடினால் மழை பெய்யுமாம். சிலர் இவ்விசையைப் பாடி மழை பெய்யச் செய்திருக்கிறார்களாம். சங்க காலத்திலிருந்த பாணர்களெல்லாம் பண் பாடுவதே தொழிலாக விருந்தனர். இப் பாணர்கள் அக் கால மக்களால் நன்கு போற்றப்பட்டன ரென்னுஞ் செய்தி சங்க நூல்களில் காணப்படுகின்றன.

சங்கப் புலவர்களில் இசைத் தமிழை மாத்திரம் நன்கு பயின்றோர் பலரிருந்தனரென்று தெரிகின்றது. கண்ணகனார், கண்ணன் நாகனார், கேசவனார், நான்முகனார், நல்லச் சுதனார், நாகனார், பித்தா மத்தர். பெட்டகனார், மருத்துவன் நல்லச்சுதனார் முதலிய புலவர்கள் இசைத் தமிழ்ப் புலவர்கள்.

இசைத் தமிழ் நூல்கள் பல இறந்துவிட்டன, இக்காலத்தில் இசையைப் பற்றிய செய்திகள் பலவற்

றைச் சுவாமி விபுலானந்தர் முதலிய சில பேரறிஞர்கள் மாதப். பத்திரிகைகள் முதலியவற்றின் வாயிலாக மக்கட்குணர்த்தி வருகின்றனர்.

தாள சமுத்திரம், பெருநாரை, பெருங்குருகு. பஞ்சபாரதீயம், இசை நுணுக்கம், பஞ்சமரபு, சச்ச புட வெண்பா, இந்திரகாளியம், பதிறுை படலம், தாளவகை யோத்து, இசைத் தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவை முதலிய நூல்கள் இசைத் தமிழை மாத்திரம் உணர்த்துவன வென்றும், இவை மறைந்துவிட்டன வென்றும் தெரிகிறது.

தற்காலத்திலே பலர் தமிழிசையை வளர்க்கப் பெரும் முயற்சிகள் செய்கின்றனர். ஆங்காங்கு தமிழிசைக் கழகங்கள் அமைக்கப்படுகின்றன. தமி ழிசை மன்றங்களில் தமிழ்ப் பாடல்களையே பாட வேண்டுமென்னுங் கிளர்ச்சியும் வலுக்கிறது. தமி ழிசைக்கு நல்ல காலம் வெகு விரைவில் வருவதாக.

---

# அதிகாரம் 34.

---

## தமிழர் சீட்டுக் கவி

நூலாகச் செய்யாது தனிப்பாடல்களாக, வள் ளல்கள் மீதும் மன்னர்கள் மீதும் மற்றையோர் மீதும் பாடப்படுபவை சீட்டுக்கவி என்று கூறப்பெறும். பெயரொடு அதாவது தொண்ணூற்ருறுவகைப் பெயரி லேதாவது ஒரு பெயருடன் பாடப் பெறுவது பிரபந்த

மெனப் பெறும். தாளிலும் ஓலையிலும் தனிப் பாடல்களெழுதப்பெற்ற காரணத்தாற் சீட்டுக்கவி என்று பெயர் பெற்றது.

வரையாது கொடுக்கும் வள்ளல்களாயினோர் மீது சீட்டுக்கவி செய்துகொண்டு போய்ப் பரிசு பெறுதல் சங்க காலத்திலிருந்தே வழக்கத்திலிருக்கின்றது. உரை நடையாக வுரைப்பதைவிடச் சொன்னயம் பொருணயம் சிறக்கும்படி பாடல்களாகச் செய்து கொண்டு போய்ச் செய்தியைக் கூறுதல் மிக அழகுடைத்தாதலோடு, நீண்ட காலத்திற்குப் பாட்டுடைத் தலைவனுக்கு இன்ப மளித்துக் கொண்டிருக்கவேண்டுமென்னும் நோக்கத்துடன்தான் புலவர் பெருமக்களால் ஏற்படுத்தப் பெற்றது.

சீட்டுக்கவி பாடுந் தொழிலைச் சிவபிரானே மேற்கொண்டிருந்தாரெனின் அதன் சிறப்பைப் பற்றிச் செப்பவும் வேண்டுமோ? மதுரைச் சொக்கநாதப் பெருமான், தன் அன்பனாகப் பாடிக்கொண்டிருந்த பாணபத்திரனுக்குப் பாண்டியன் பொருளைத் திருடியளித்துக் கொண்டிருந்தார். பிறகு தன் அடியவராகிய சேரமான் பெருமாள் நாயனாருக்கு ஒரு சீட்டுக்கவி பாடி அதனைப் பாணனாரிடம் கொடுத்தனுப்பினார். அக்கவியாவது,

“ மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிந்திடு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
கொருமையி னுரிமையி னுதவி யணிதிகழ்

குருமா மணிதிகழ் குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்பா லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே."

இதனால் பாணபத்திரருக்குத் தக்கபடி பரிசு கிடைத்தது. மேலுந் தில்லையிலாடும் ஆநந்தக்கூத்தனார், பெத்தான் சாம்பான் என்பவனுக்கு முத்தி கொடுக்கும்படி தன்னடியவராகிய கொற்றங்குடி உமாபதி சிவாச்சாரியாருக்கு,

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை."

என்றொரு சீட்டுக்கவியுங் கொடுத்தனுப்பினா ரென்று அறிகிறோம்,

சங்ககாலத்துப் புலவர்கள் அவ்வக் காலங்களிலிருந்த அரசர்கள் மீதும் வள்ளல்கள் மீதும் பல பாடல்கள் பாடிப் பரிசு பெற்றனர்.

அக்காலத்தில் புலவர்தந் தகுதியறிந்து கொடுக்கும் வள்ளல்களும் பலரிருந்தனர். பாரியை அறியாதார் யாருமில்லை. சமய குரவர்கள் அருணகிரிநாதர் முதலிய தெய்வத் திருவருள் பெற்ற பெரியார்கள் கூடப் பாரியின் கொடையை வியந்துள்ளனர். பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் வறுமைக் கொடுமையால் வதங்கி,

" ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பி
ளாம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பா அ லின்மையிற் றோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
வென்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரிய
ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே"

என்னும் பாடலைச் செய்து காட்டிலிருந்த குமண னிடம் சென்றனர். நாடிழந்து காடுறைந்திருக்கும் மன்னவன் அப் பாடலின் பொருட்டுத் தனது தலையை அறுத்துக் கொண்டுபோய்த், தலை கொணர்வார்க்குப் பரிசளிப்பதாய்ப் பறையறைந்திருக்குந் தன்னிளவலிடம் பரிசு பெற்றுக்கொள்ளுமாறு வாளினைக் கொடுத்தான். இதனால் அக்கால மன்னர்கள் சீட்டுக் கவியை எவ்வளவு தூரம் போற்றி யிருக்கின்றன ரென்பது இனிது துணி யப்படும். இச் சீட்டுக்கவி பாடுதல் நாளடைவில் வளர்ந்து கொண்டே யிருக்கின்றது. சங்க காலத்திற்குப் பிற்காலப் புலவர்கள் பலர் பாடல் தனிச் செய்யுட் சிந்தா மணி முதலிய பெயருடன் தொகுக்கப்பட்டுள்ளன. பாண்டி நாட்டில் ஏறக்குறைய 150 யாண்டுகட்கு முன்ன ரிருந்த அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராய ரென்பவர் சீட்டுக் கவிகள் பாடுவதில் மிக வல்லவர். அவர் கவி யொன்றைக் கூறி இதனை முடிப்போம்.

மகபதி நராதிபதி நீதிபதி சேதுபதி
வாசற்பிர சண்ட வாக்கி
வடிதமிழ்ச் சோமசுந் தரகுருசு வாமியடி
மைக்குமடி மைக்குமடிமை—
மயில்வா கனக்கடவு ளருளினு லுபயசா
மரவிருது கொண்ட துல்யன்
மலையாள ராசனருள் தந்தபல் லக்குவெகு
மதிபெற்ற சார்வ பூமன்,
உகமெலா மகிமைபெறு தஞ்சைமக ராசனையொ
ரேழடி யழைத்த நிபுணன்
உசிதனச ரதுநபா பிருகையாற் றருவரிசை
ஒருகையால் வாங்கு கவிஞன்—
உற்றசிவ கங்கையிற் கவுரிவல் லவராசன்
உதவுவள நாடு பெற்ருேன்
உயரிலங் கைப்பூமி ராசசமு கத்தினிலும்
ஒருகோடி வரிசை கொண்டோன்,
கக்னமூ தண்டவே தண்டபிர் மாண்டங்
கவிப்புகழ் படைத்த வுரவோன்
காசிமுத லாகரா மேச்சுர வரைக்குங்
கவித்துவச நாட்டு விசயன்—
கற்றுச் சொலிக்கும்வரு தானு பதிக்குமிரு
கனகதண் டிகைகொ டுத்தோன்
கவிமதக் குஞ்சரஞ் சரவணப் பெருமாட்
கவிச்சக்ர வர்த்தி யோலை,
புகழ்மேவு சிங்கநகர் வளருங் குமாரவேற்
பூபனெதிர் கொண்டு காண்க
பொரவரா வேங்கைகை பாராத தாதுசெம்
புக்குளமை யாத சாமி—

புவியிலிரு ளாவேம மேய்ந்துவள ராமாடு
பொங்கிவே காத காணம்
பூண்டொடி படாவத்த மறுபடர் வுடலேழு
பொதிதந்து நீவாழி யே.

---

# அதிகாரம் 35.

---

## தமிழர் வெகுளி

வெகுளி, சினம், கோபம் முதலியன ஒரு பொருள் குறிப்பன. வெகுளியாவது பண்பல்லாத செயல்களைத் தம்மாட்டுச் செய்தார்மேல் ஒருவருக்கெழும் உள்ளக் கொதிப்பு, வெகுளி எட்டுவித மெய்ப்பாடுகளி லொன் ருகுமென்பது ;

" நகையே அழுகை இளிவரன் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்
றப்பா லெட்டே மெய்ப்பாடென்ப. "

என்னுந் தொல்காப்பிய மெய்ப்பாட்டியற் சூத்திரத் தாற் பெறப்படும். வெகுளி யுண்டாகும்போது உதடு பல்லாற் கடிபடும். புருவந் துடிக்கும். கை ஒன்ருே டொன்று புடைபடும். வேறு சில மாறுபாடுகளும் உண் டாகும். இதனை,

" வெகுண்டோன் அபிநயம் விளம்புங்காலை
மடித்தவாயும் மலர்ந்த மார்பும்
துடித்த புருவமும் சுட்டிய விரலும்

கன்றின உள்ளமொடு கைபுடைத் திடுதலும்
அன்ன நோக்கமோ டாய்ந்தனர் கொளலே.”

என்னும் சூத்திரம் விளக்கும்.

மெய்ப்பாட்டுக் குணங்களெல்லாம் மக்கட் படைப்புக் காலத்தேதானே மக்கட் கமைந்தனவாம். முழுமுதற் கடவுளுக்கும் வெகுளி வருமென்பது நூல்களால் அறியலாம். ஆலவாய்க் கடவுள் நக்கீரனார் மீது வெகுண்டு தொல்லை யுண்டாக்கிய செய்தியும் காணப்படுகின்றது.

வெகுளிக் குணம் மிகத் தீயதென்பதையும் அதனை ஒருவரும் கொள்ளக்கூடா தென்பதையும் இலக்கிய நூல்கள் மிக வற்புறுத்திக் கூறுகின்றன. திருவள்ளுவர் வெகுளாமை என்றோர் அதிகாரம் வகுத்து; 1 தன் சினம் செல்லக்கூடிய இடத்திலே செல்லாமற்றடுத்து விடுகிறவனே சினத்தைக் காப்பவனாவான்; தன் சினம் செல்லாத விடத்திலே அதனைக் காத்தாலென்ன? காவாது விட்டால் என்ன? 2 தன் சினம் செல்லா விடத்திலே ஒருவன் அதனைச் செலுத்துதல் தீமை பயக்கும்; மற்றுச் செல்லக்கூடிய இடத்திலோ இன்னும் அதிகமான தீமையைப் பயக்கும். 3 யாரிடத்திலேயும் வெகுளி செலுத்துதலை மறந்து விடுங்கள் தீமை பிறத்தலெல்லாம் அதனானே உளவாம். 4 சிரிப்பையும் உவகையையும் கொலை புரியுஞ் சினத்தைவிட ஒருவனுக்கு வேறு பகையுமுண்டோ? 5 ஒருவன் தன்னைப் பாதுகாத்தொழுக விரும்பினானாயின் தன் வெகுளியைப் பாதுகாத்தொழுகக் கடவன், காவானேல் வெகுளி அவனையே கொன்றுவிடும். 6 - வெகுளி யென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி, சுற்றமென்னும் பாதுகாப்புத்

தெப்பத்தையும் சுட்டழித்து விடும். 7 வெகுளியைத் தனது பொருளென்று கொண்டவன் கேடுறுதல், நிலத் தறைந்தவன் கை தப்பாததைப் போலும். 8 மிகுந்த தீயைப் போல் சுடுவதாய துன்பத்தை யொருவன் தன்கட் செய்தானாயினும் கூடுமானால் வெகுளாதிருத் தல் நன்று. 9 மனத்தில் ஒருவன் வெகுளியை நினைக்க மாட்டானாயின் அவன் நினைத்ததெல்லாங் கைகூடும். 10 வெகுளியை மிகுதியாக மேற்கொண்டவர்கள் இறந்தவர்களோ டொப்பர். அதனை விட்டவர்களோ துறந்தவர்களோ டொப்பர். என்னும் பொருள்களமை யக் கோபமென்னும் வெகுளியின் கொடுந் தன்மையைக் கூறியுள்ளார்.

வெகுளியால் முனிவரர் பலர் தங்கள் தவத்தை அவமாக்கியுள்ளனர். சங்கப் புலவர் சிலருடைய பாடல் களில் வெகுளியைக் காணலாம். தன்னை அடா! யென்று மறை பொருளாக அழைத்த கம்பரை அல்லது ஒட்டக் கூத்தரை நோக்கி ஔவைப் பிராட்டியார்,

“எட்டேகால் லட்சணமே! எமனே றும்பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே!—முட்டமேற்
கூரையில்லா வீடே; குலராமன் தூதுவனே!
ஆரையடா சொன்னயடா”.

என்று பாடிய பாடலில் முழு வெகுளியையும் பார்க்க லாம்.

வெகுளியானது உயர்ந்தோர் தாழ்ந்தோர் சமமான நிலையிலுள்ளார் ஆகிய எவரிடத்துஞ் செலுத்தத் தக்க தன்றென்பதை,

“வலியரைச் சினப்போர் வரையினின்மோது மட்கலமென வுடைந்தழிவார், பொலிவுறத்தமை

யொப்பவர்களைச் சினப்போர் புலி யிரண்டொன்றை யொன்றடித்து, மெலிவொடு மிரண்டுங் கெடுவபோற் கெடுவார் மெலியரை வெகுளுவோர் வேங்கை, எலியினை யெதிர்த்த தன்மைபோலிழிவுற்றெரி நரகிடை யமிழ்ந்துவரே" என்னும் நீதிநூற் பாடலால் அறியலாம்.

உலகில் நிகழும் பாவங்களனைத்திற்கும் வெகுளியே காரணமாக விருக்கின்றது. வெகுளியானது ஒருவனை விட்டு நீங்கிவிடுமாயின் அவன் முற்றத் துறந்த தத்வ ஞானியாகின்றான். கடவுளர் முதல் எறும்பீறான சகல உயிர்த் தொகுதிகளையும் ஆட்டி அலைக் கழித்து அல்லற் படுத்தும். இவ் வெகுளி மக்களால் வெறுக்கத்தக்கது.

"ஆதியும் அந்தமுமில்லாமல் ஒரு அரும்பெருஞ் சோதி எப்படி யிருக்கும்?" என்று கேட்டதற்காகச் சாந்தமூர்த்தியாகிய மாணிக்கவாசகரே ஆநந்தக் கூத்தர் திருத்தலையிற் பட்டென்று குட்டிவிட்டா ரெனில் மற்றவர்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ?

செந்தமிழ் மறை செய்த நந்திரு வள்ளுவரும், தம் மனைவியை வைதானைப் பிடித்து நன்கு புடைத்துவிட்டு, அதற்குமொரு குறள் வெண்பாவைக் காட்டி அனுப்பி விட்டா ரென்னுஞ் செய்தியும் வழங்கி வருகின்றது.

ஒரு சிலருடைய வெகுளியை ஈண்டுக் காட்டுவாம்:-

"வாயி லோயே! வாயி லோயே!
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே!
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்

கணவனை இழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப் பாயே யறிவிப் பாயே. ”

என்பது கண்ணகியின் துக்கங் கலந்த கோபம்.

“ என்றலுங் கடவுட் டிங்கள் இருங்குல மிழித்துக் கூறல்
நன்றுநன் றென்னைக்கு நாமவேல் வழுதி சீறி
உன்றலை துணிப்ப னென்ன வொளிறுவா ளுறையி னீக்கிக்
குன்றெறி வயிரவொள் வாட் குரிசின்மேற் கனன்று
[சென்றான். ”

என்பது பாண்டியன் ஒருவன் கோபம்.

“ மன்மத னென்னுங் காளை மணியொலிப் புரவித்தேர்மேல்
வின்மழை சொரிந்து கூற்றிற் றெழித்தனன் தலைப்பெய்
[தார்ப்பக்
கொன்மலி மார்பன் பொற்றேர்க் கொடுஞ்சிலை யறுப்பச் சீறிப்
பொன்வரைப் புலியிற் பாய்ந்து பூமிமேற் ரேன்றினனே ”

என்பது சீவக சிந்தாமணியில் மன்மதன் என்னும் ஒருவனுடைய கோபம்.

“ என்று கொல்குரங் கன்ன திவ் வலியுள திலங்கை
நின்று வெந்து மா நீறெழு கின்றது நெருப்புத்
தின்று தேக்கிடு கின்றது தேவர்கள் சிரிப்பார்
நன்று நன்று போர் வலியென இராவணன் நக்கான், ”

என்பது இராவணனுடைய கோபம்.

# அதிகாரம் 36.

---

## தமிழர் வசை கவி

வசைபாடுதலெனினும் அறம்பாடுதலெனினும் அங்கதம்பாடுதல் எனினும் பொருளொன்றே. வசை என்பது பழிப்பு. புலவராயினுர் தமக்கு யாரேனும் தீமை செய்தவிடத்துச் சினமடைந்தாராயின் அவரது பழிபடு செயல்களைப் பாவிலமைத்துக் கூறுதலுண்டு. ஒருவரை நையாண்டி பண்ணிப் பழிக்கப்படும் இவ்வங்கதப் பாக்களாலே பாட்டுடைத் தலைவருக்குத் தீமை மிக உண்டாகும். இதைக் கருதிக் குணமென்னுங் குன்றேறி நிற்கும் மாபெரும் புலவர்கள் யார் மீதும் வசை பாடார். சிலரோ சினமடைந்த வுடனே வசை பாடிவிடுவர். இவ்வசைகவி விடத்தினுங் கொடியது.

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனுர்,

> " வில்லேருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
> சொல்லே ருழவர் பகை. "

என்று திருக்குறளிலே கூறியுள்ளார். இதன் பொருள் வில்லைக்கொண்டு போர்செய்யும் யுத்தவீரரது பகையை ஒருவர் தேடிக்கொள்ளினும் சொல்லைக்கொண்டு போர் செய்யும் அறிஞரது பகையை ஒருவர் தேடிக் கொள்ளக் கூடா தென்பதாம். கொளினும் என்னும் உம்மையால் அவரிடத்தும் பகை கொள்ளக் கூடாது என்பது நன்கு பெறப்படும்.

கல்வியின் பயன் அறிவு. அறிவே கடவுள் என்பதை அறியாதார் எவருமிலர். எவர்மாட்டு அறிவு அதிகம் விளங்குகின்றதோ அவர் தம்பெருமையும் உலகில் அதிகரித்து விளங்குதலை அனைவருங் கண்கூடாகக் காண்கிறோம், அறிவு கடவுளாக விருத்தலாலே தான் இவ்விதம் பெருமை யுண்டாகின்றது. அறிவிலாதாரை உலகில் யாவர் மதிக்கின்றனர்? ஒருவருமில்லையன்றோ? கற்றுவல்லார் வாயிலிருந்து புறப்படுஞ் சொற்கள் நல்லவையோ அன்றித் தீயவையோ அவை தமது பயனை அளித்தே தீரும். இதற்கியாதும் ஐயமே வேண்டியதில்லை, இது கருதியன்றே தெய்வப் புலவர்,

" குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தலரிது."

என்று கூறி யருளினார்.

வில்லைக்கொண்டு யுத்தஞ் செய்யும் போர் வீரர் தம் முன்னர் நிற்பவர்களைமட்டும் அழிக்கும் ஆற்றலுடையவர். சொல்லைக்கொண்டு யுத்தஞ்செய்யும் சொல்லேருழவரோ, தன்னுடன் எதிர்த்தான் ஒருவனையே அல்லாமல் அவனது வமிச பரம்பரையையும் அழிக்கும் ஆற்றல் வாய்ந்தவராவர். பாவர்ணரது கொடுந்தன்மையாகிய இவ்வசைபாடுங் குணத்தைக் கண்டே சோழனும்,

" போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடில்
தூற்றினும் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர் வன்கணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடியராவரே.

என்று கூறினன். ஔவையார் திருக்கோயிலூரை யடைந்தகாலை அங்கவை சங்கவை என்னும் மங்கை யரிருவர் திருமணத்தைப்பற்றி மன்னர்கட்கு மண வோலை எழுதவேண்டிய வேலை ஏற்பட்டது. இவ் வேலைக்கு யாரைப்பிடிக்கலா மென்று அவ்வையார் யோசனை செய்தார். பாரதமெழுதிய பண்ணவனாகிய ஆனை முகத்தன் நினைவிற்கு வந்தான். உடனே அவ் வையார்,

"ஒருகொம் பிருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரியுருவைக் கங்காளன் காளாய்—பரிவுடனே
கண்ணால வோலை கடிதெழுத வாராயேல்
தன்னாண்மை தீர்ப்பன் சபித்து."

என்றொரு வெண்பாவால் விநாயகனைப் பயமுறுத்திக் கூப்பிடுகிறார். விரைவில் வராமற் போவையாகில் சாபங் கொடுத்து உன் ஆண்மையைத் தொலைத்துவிடுவேன் என்று ஆனைமுகத்தனையே அச்சுறுத்த அவ்வையா ருக்கு எவ்வளவு அற்புத சக்தியிருத்தல் வேண்டுமென் பதை எண்ணிப் பாருங்கள்.

கம்பருக்குஞ் சோழனுக்கும் வம்பு மூண்டது. கம்பர், மகன் அம்பிகாபதியை அரசன் கொன்றதனாற் சீற்றங் கொண்டிருந்தார். யானை ஒன்று மதங்கொண்டு வீதியிற் சென்றவர்களை யெல்லாம் விரட்டிற்று. தெரு விற் சென்றுகொண்டிருந்த சோழன் மகன் பயந்து ஓடி வந்து கம்பரது வீட்டிற்குள் நுழைந்தான். புத்திர சோகத்தால் வருந்திச் சோழன்மீது பெருங்கோபங் கொண்டிருந்த கம்பர் பழிதீர்க்க நல்ல சமயம் வாய்த்த தென்று, எழுத்தாணியை எடுத்து அரசிளங் குமரனைக் குத்திக் கொலை புரிந்தார். இதனையறிந்த அரசன்

கம்பர்மீது பெரும்பகை கொண்டு அம்பை யெய்தான். அவ்வம்பு தம்மீது வந்து தைத்த காலை கம்பர்,

“வில்லம்பு சொல்லம்பு மேதினியில் ரெண்டுண்டு
வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம்—வில்லம்பு
பட்டதடா என்மார்பிற் பார்வேந்தா நின் குலத்தைச்
சுட்டதடா என்வாயிற் சொல்.”

என்று வசை பாடிக்கொண்டே கீழே வீழ்ந்தாராம். (இதனால் தான் போலும் சோழவம்சம் இருந்தவிடம் தெரியாமல் மறைந்தொழிந்தது.)

வெகுளி ஏற்படுவதனால் வசை பாடுதல் ஏற்படுகின்றது. வெகுளி ஏற்படுவது மெய்ப் பாட்டியல் பாதலால் மக்கட்படைப்புப் பூவுலகில் உண்டாகிய காலந் தொடங்கியே வெகுளியும் உண்டு. அங்கதம் பாடும் இந்த அரிய வேலையை முதல் முதல் செய்யத் தொடங்கியது யாரென்று நம்மால் உறுதிபெற அறுதியிட்டுக் கூற முடியாது. சங்க நூல்கள் பலவற்றிலும் வசை காணப்படுகின்றனவாதலின் அக்காலந் தொடங்கியே வசையும் வழங்கிக் கொண்டு வருகிறது. திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் நக்கீரனுமே ஒருவருக்கொருவர் வசைபாடிக் கொண்டன ரென்று பழங் கதைகள் வழங்குகின்றன.

தமது பாடலுக்குத் தவறு கற்பித்த நக்கீரனைப் பார்த்து மதுரைக் கடவுள்,

“அங்கம் வளர்க்க அரிவாளில் நெய்தடவிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச்—சங்கதனைக்
கீருகீ ரென்றறுக்கும் கீரனோ என்கவியைப்
பாரிற் பழுதென்பவன்.”

என்று ஒருவசை பாடினார். உடனே நக்கீரரும்

> “ சங்கறுப்ப தெங்கள்குலம் சங்கரார்க்கங் கேதுகுலம்
> பங்கமுறச் சொன்னாற் பழுதாமோ?—சங்கை
> அரிந்துண்டு வாழ்வோம் அரனேபின் போல
> இரந்துண்டு வாழ்வதில்லை. ”

என்றொரு எதிர்வசையை அக்கடவுண்மீது பாடினார். கடவுளையும் எதிர்த்து வசைபாடிய நக்கீரனார் பெருமை பெரிதும் வியக்கத்தக்கதல்லவா?

நக்கீரர் சங்கத்தில் வீற்றிருக்கும்போது குயக் கொண்டான் என்னும் ஒரு வடமொழிப் பிரியன், சங்கப்புலவர்கள் சபைக்கு வந்து தமிழைத் தாழ்த்தியும் வடமொழியை உயர்த்தியும் பேசினான். நக்கீரர் வெகுண்டு,

> “ முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
> பரண கபிலரும் வாழி—அரணிலா
> ஆனந்த வேட்கையான் வேட்கோக்குயக் கொண்டான்
> ஆனந்தஞ் சேர்கசுவா கா.”

என்று அங்கதப் பாட்டொன்று பாடினார். அப் பொழுதே அக்குயக்கொண்டான் கீழே வீழ்ந்து இறந்து தொலைந்தான். இதைச் சங்கப் புலவர்கள் கண்டு வருந் தினர். மீண்டும் அவனை உயிர்ப்பித்து விடும்படி வேண்டிக் கொண்டனர். நக்கீரரும் நன்றென்று,

> “ ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
> காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
> அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையால்
> செந்தமிழே தீர்க்கசுவா கா.”

என்று பாடினார். குயக்கொண்டானும் பிழைத் தெழுந்து தமிழைப் பாராட்டிச் சென்றான்.

பாண்டி நாட்டில் உள்ள ஓட்டப்பிடாரம் என்னும் ஊரில் வைகுந்தநாதன் என்பார் ஒருவர் இருந்தார். இவர் மகன் வசைகவியாண்டான் கவிராயர் என்பவர் வசையே வடிவங்கொண்டு வந்து பிறந்தாற் போன்றவர், இவர் சிறு பிள்ளையாய் இருக்கும்போது தெய்வானுக்கிரகத்தால் ஒரு பெரியவர் தோன்றி இவருக்குக் காளிமந்திரத்தை உபதேசித்து அதனை நன்கு உருவேற்றும்படி உரைத்துப் போயினார். இவரும் அவ்விதமே செய்தார். காளி தேவியுந் தோன்றி "உனக்கு இசைவேண்டுமோ? வசை வேண்டுமோ?" என்று கேட்டனள். இவர் வசையே வேண்டுமென்றார். உடனே அக் காளி, ஒரு வேப்பிலையின் ஈர்க்கால் இவர் நாவில் தனது மூலமந்திரத்தை எழுதிவிட்டு மறைந்து விட்டனள். உடனே இவர் நாவில் நின்றும் வசைகவி வெள்ளம் புறப்பட்டது. தமக்குப் பேரருள் புரிந்த அந்தக் காளிகாதேவியின் கொங்கைகளிரண்டும் அறுந்து விழும்படி ஒரு வசைகவி பாடினார். உடனே அப்படியே நிகழ்ந்தது.

கோயில் வாயிலில் போடப்பட்டிருந்த பந்தலில் தீப்பிடித்து எரியுமாறு ஒரு கவிபாடினார். அப் பந்தலும் அங்ஙனமே எரிந்தொழிந்தது. இவைகள் நிகழ்வதற்கு முன்னரே இவரைக் கல்விச்சாலையில் விட்டிருந்தனர். இவர் கல்விக்கூடத்தைக் கொலைக்கூடமாக நினைத்து அங்கு செல்லாது திரிந்த சமயத்தில் தான் மேற்கூறியவாறு அருள்பெற்றார். காளியின் அருள்பெற்றபின் இவர் தமது பிரியம்போல் சுற்றிக்கொண்டு திரிந்தார். நிகழ்ந்ததை அறியாத கணக்காயர் இவரைக் கல்விக் கூடத்திற்குப் பிடித்து வரும்படி சில சிறுவர்களை ஏவி

ஞர். அவர்கள் அங்ஙனமே வந்து, நல்ல பாம்பைப் பிடித்துக்கொண்டுபோய் விடுவதைப் போல இவரைப் பிடித்துக்கொண்டுபோய்க் கணக்காயர் முன்னர் விட்ட னர். அக் கணக்காயர் இவர் தம் செய்தி யொன்றும் அறியாராதலின், இவரை அடித்து வைது கோதண்டந் தூக்கல் முதலிய கொடுந்தண்டங்களை யெல்லாம் இவ ருக்குச் செய்தார். இவர் மிக வெகுளிகொண்டு அக் கணக்காயர் இறந்து படுமாறு ஒரு கொடிய வசையைப் பாடினர். அப்பொழுதே அக் கணக்காயர் தலைபிளந்து கீழ் வீழ்ந்து இறந்தொழிந்தார். இந் நிகழ்ச்சியைப் புலவர் புராணமுடையார் தமது நூலகத்தே ;

“ கூலியீந்தனன் குறைத்திலன் படித்திலன் கொடிய
கோலிலங்கை வாத்தியான் கொண்டபெண் டாட்டி
தாலி யற்றிடும் படிவரந் தாடியென் றொருபாட்
டாலிமேகத்தி னிடித்தொனி யாமென வறைந்தான்.”

என்று கூறியுள்ளார். இங்ஙனம் தமக்கு அருள்புரிந்த காளிதேவிக்கும் கல்வி கற்பித்த கணக்காயருக்கும் எமனாகத் தோன்றிய இவரை ஊராரனைவருந், தீட்டிய மரத்தில் கூர்மை பார்ப்பவரெனச் செப்பலா னார்கள். ஆண்டானது இத்தகைய கொடுமைகளைக் கண்டவரெல்லாம் திகிலடைந்து பய பக்தியுடன் பெரிதும் வந்தனை வழிபாடு செய்யலானார்கள். வசை கவியாண்டான் கவிராயரோ கட்டவிழ்ந்த காளை யாய்த் தமக்கு எதிர் ஒருவருமில்லை யென்று மனம் போனபோக்கின்படி காரியங்களைச் செய்து கொண்டு சுற்றலானார்.

வசைகவி யாண்டான் கவிராயர் பாடல்களெல் லாம் மிக அசங்கியம் உள்ளவை ; ஆகையால்தான் அவர்

பாடியபாடல்களை அப்படியே இங்கு எழுதமுடியவில்லை மாதிரிக்கு இரண்டொன்று காட்டுகிறேன். இவருடைய வீட்டின் வாசலிலே நெல்லிக்காய் ஊறுகாய் காய வைக்கப்பட்டிருந்தது. அதிற் சிறிதைச் சில பெண்கள் திருடிக்கொண்டு போனார்கள். அதைக் கண்ட வசை கவியாண்டான் கவிராயர்,

"பாடுபட்டுத் தேடி பலகாரம் உப்பமைத்தே
ஓடு வட்டமாக வுடைத்தடுத்து—வேடுகட்டும்
நெல்லிக்கா யைத்திருடு நீலிகா ளுங்களிடை
..........................."

என்றொரு பாடலை வீசினார். எட்டிகுள மென்னும் ஊருக்கு இவர் சென்றார். அங்கு குட்டிச் செட்டி என்பானொருவன் இருந்தான். அவன் பலசரக்கு வியாபாரம் செய்து கொண்டிருந்தான். வசைகவி யாண்டானது தன்மை அவனுக்குத் தெரியாது. சிறிது கல்வி யறிவு பெற்றவன். அவன் வசைகவி யாண் டானைக் கண்டு நீ யார்? என்றான். வசைகவி யாண்டான் கவிராயர் "நான் ஒரு கவிராயன்" என்றார். அங்ஙன மாயின்,

"ஆயிரம் யானை எழுநூறு கூன்பகடு
பாயும் பகடெண்பத் தைந்து"

இதை இறுதி இரண்டடியாகக் கொண்டு என் மேல் ஒரு வெண்பா இயற்றுக. என் பெயர் குட்டிச் செட்டி யென்றான். உடனே கவிராயர்,

"எட்டி குளத்தில் இருந்து சரக்கு விற்கும்
..............................................
ஆயிரம் யானை எழுநூறு கூன்பகடு
பாயும் பகடெண்பத் தைந்து"

என்று பாட்டை முடித்தார். குட்டிச் செட்டி வெட்கங்கெட்டவனாக வருந்தினான். குட்டிச் செட்டியின் மகள் அன்று முதற் சொப்பனத்தில், அப்பாட்டில் கூறியவைகளெல்லாம் தன்னைச் சேர வருவதைப்போற் கண்டு பயந்து சில நாளில் இறந்தாள்.

வசைகவி வாணராய வசைகவி யாண்டான் கவிராயர் மதுரைக்குச் சென்றார். இவரைக் கண்டு ஒரு விலை மகள் திடீரென்று எழுந்திருக்கவில்லை. உடனே கவிராயர் பெருங் கோபங் கொண்டு மிக அசங்கியமான ஒரு கவியைப் பாடி வெகு விரைவில் அவளை விண்ணுலகுக்கனுப்பினார். கவிராயர் ஒரு திருமணத்திற்குச் சென்றார். இவருக்குத் தக்கபடி அங்கு மரியாதை நடக்கவில்லை: மணமகனைப் பிணமகனாக்கி யெமபுர மனுப்பி விட்டு மணப் பறையையும் பிணப் பறையாகச் செய்து மண விழாவைப் பிணவிழாவாகச் செய்தார். ஒரு வெற்றிலைத் தோட்டக்காரன் தமக்கு வேண்டிய வெற்றிலை கொடுக்காதபடியால் வெற்றிலைக் காலெல்லாம் எரியும்படி செய்தார்.

இத்தகைய பயங்கரத் தன்மை பொருந்திய நமது வசை கவியாண்டான் கவிராயர் ஒரு முறை கேரள மன்னனைப் போய்ப் பார்த்துவர விரும்பினார். சிலருடன் புறப்பட்டு நாஞ்சில் நாடு என்னும் நாட்டை அடைந்தார். இவர் வருகையைக் கேரள மன்னன் கேள்வியுற்றான். நடுநடுங்கி அமைச்சனை யழைத்தான். "நீ அப் புலவனிடம் சென்று வசை யெதுவும் பாடாமல் எப்படியாவது திருப்பி அனுப்பிவிடு. அவர் எது விரும்பினாலும் அப்படியே செய்கிறேன்" என்று கூறினான். அரசன் உத்திரவுப்படி அமைச்சன் வெகு

தூரத்திலேயே எதிர் சென்று வணங்கித் "தங்கட்கு யாங்கள் செய்ய வேண்டியது யாது? கூறினல் செய்கிறோம். தயவு செய்து எங்கள் மீது எதுவும் வசை பாடாமல் இருக்கவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். கவிராயர் 'சரி. மாதம் ஒரு பாரம் சர்க்கரை ஒட்டப்பிடாரத்திற்கு அனுப்ப வேண்டியது" என்று உத்திரவு செய்துவிட்டுக் கேரளத்திற்குப் போகாமலே, திரும்பி விட்டார். இதனைப் புலவர் புராணமுடையார் தமது நூலில்,

அக்கணமாங் கவனடுங்கி முதலமைச்சன்
தனையேவி ஐய நீயிங், (கு)
எக்கடமை விதித்தாலும் செய்கின்றேம்
எம்மிறை வற் (கு) எதிர்வாராமல்
மெய்க்கவி யொன்றும் பகராதே குகெனப் பணிந்து
மிக வேண்டச் செய்தான்
சர்க்கரையோர் பாரம் மதிதோறு மனுப்
புதிரெனுஞ் சொல் சாற்றிப் போனன்

என்று கூறியுள்ளார். கேரள மன்னனும் பிழைத்தோம் பிழைத்தோம் என்று சந்தோஷப்பட்டான். பின் வசை கவியாண்டான் கவிராயர் உத்திரவுப் பிரகாரம் ஒவ்வொரு மாதமுதலிலேயும் கேரளத்தினின்றும் ஒவ்வொரு பாரஞ் சர்க்கரை வரத் தொடங்கிற்று. வில் யுத்தத்தில் எவ்வளவு பேர் எதிர்ப்பினும் அஞ்சாத அரசன் கூட வசை கவிவாணருக்கு இங்ஙனம் பயந்து நடு நடுங்கலானன்.

கேரளத்து நின்றும் வந்த சர்க்கரையைக் கவிராயா பலருக்குங் கொடுத்தார். இவருடைய தந்தையாகிய வைகுந்தநாதனென்பார் ஒரு நாள் பலதரம் "சர்க்

கரை கொடு, சர்க்கரை கொடு" என்று கேட்டார். கவிராயர் சினந்து,

" நக்க வரி சித்தவிடோ டுடுப்பதற்குத்
துணியுமின்றி நாட்டிலுள்ளோர்
ஒக்கவருந் திடும் பஞ்ச காலத்திற்
சிறிதேனும் உணர்வில்லாமல்
சர்க்கரை சர்க்கரை என்றே
சிணுங்குதற்குத் தலைப்பட்டாய்.....

என்று கவிபாடத் தொடங்கினுர். "தலைப் பட்டாய்" என்று சொன்ன மாத்திரத்தில் தலை வெடித்தது. படீரென்று வசை கவியாரின் தந்தை வைகுந்தநாதன் வைகுண்ட யாத்திரை போய்விட்டார். எதிர்பாராத இந் நிகழ்ச்சியைக் கண்ட வசை கவி வாணர் பெரிதும் வருந்தினுர். காரியந் தீர்ந்த பின் கவலுவதிற் பயனேது?

கவிராயர் நிலத்தை ஊர்க் கணக்கன் அளக்க வந்தான். அவனது கையிலே பாம்பு கடிக்கும்படியாக ஒரு பாட்டுப் பாடினுர். எங்கிருந்தோ பாம்புந் தோன்றிக் கணக்கனைக் கடித்தது. அக்கணக்கன் பாம்பு கடித்ததை இலட்சியம் செய்யாமல், பாம்பு கடித்த விரலை அப் படியே துண்டித்து எறிந்து விட்டு உயிரோடிருந்தான். இதைக் கேள்வியுற்ற கவிராயர் அப்படியா சமாச்சாரம் என்று ஆத்திரமடைந்து, காளிமடல் என்று ஒரு மடல் பாடி அக் கணக்கனை ஒழித்துவிட்டே உட்கார்ந்தார்.

ஒரு சமயம் வண்ணம் பாடுவதில் சிறந்த வண்ணக் களஞ்சியம் என்னும் ஒரு புலவன் ஆண்டான். ஊருக்கு வந்தான். சிலர் நமது கவிராயரிடம் வந்து.

வண்ணக் களஞ்சியப் புலவரின் பெருமைகளை யெல்லாம் கூறி அவனைப் போய்ப் பார்த்து வாருமென்று அனுப்பினார்கள். நமது கவிராயர் சரி என்று சொல்லி விட்டுக் கையில் ஒரு தேங்காயை எடுத்துக்கொண்டு அப் புலவனிடம் சென்றார். அவனைச் சிறிதும் மதியாது, அவனைப் போலத் தாமும் ஒரு திண்டின்மீது சாய்ந்துகொண்டு உட்கார்ந்தார். வண்ணக் களஞ்சியப் புலவன் வசைக் களஞ்சியப் புலவனை நோக்கி, "நீ என்னைப்போல வண்ணங்கள் பாட வல்லையா?" என்று வினவினான். வசை கவிராயர் தாம் கொண்டு போயிருந்த தேங்காயை அப் புலவனுக்கு முன்னே வைத்துத் துண்டு துண்டு துண்டு துண்டு என்று அடுக்கொலிச் சொல் சில சொன்னார். அக்கணமே அத் தேங்காய் அவர் கூறிய அத்தனை துண்டுகளாகச் சிதறிற்று. உடனே வசை கவிராயர் வண்ணக் கவிராயரை நோக்கிப் "பார்த்தனையா! தேங்காய் பட்ட பாட்டை; இதைப்போல் சில சொற்களால் நின் தலையையும் உடைக்க வல்லேன். நீயும் இப்படிச் செய்வையா?" என்று கேட்டார். உடனே வண்ணக் களஞ்சியப் புலவன் பயங்கொண்டு, என்னை ஒன்றுஞ் செய்யாதே உனக்குக் கோடி நமஸ்காரம் செய்கிறேன் என்று கும்பிட்டுக் கொண்டே, தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென்று வந்த வழியே ஓட்டம் பிடித்தான்.

வசைகவி யாண்டான் கவிராயர் வாழ்ந்திருந்த அக்கிரகாரத்தில், ஒரு விதவை கன்றுக்குப் பால்விடாது கறந்து கன்றைக் கொன்றுவிட்டாள். அவளது அக்கிரமத்தைக் குறித்துத் தனிப்புராண மொன்று பல கற்பனைகளமைத்துப் பாடினார்.

இவர் ஒரு சமயம் கயத்தாறு என்னும் ஊருக்குச் சென்றபோது, இரவில் அங்குள்ள பெருமாள் கோவிலுக்குச் சென்றார். அப்பொழுது அங்கு திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. இவரையும் ஒரு பக்தர் என்று நினைத்துத் திருவடி தாங்கியவர்களோடு தாங்கச் செய்தனர். இவர் வெகு நேரம் தூக்கினார். தோள்வலி யெடுத்து விட்டது. அதனால் மிகுந்த கோபமடைந்து,

“பாளைமணங் கமழுகின்ற கயத்தாற்றுப்
பெருமாளே! பழிகாரா! கேள்!
வேளையென்று விராவேளை பதினாறு
நாழிகைக்கு மேலா யிற்றே
தோளை முறித் ததுமன்றி நம்பியா
னையுங்கூடச் சுமக்கச் செய்தாய்
நாளையினி யார்சுமப்பார் எந்நாளு
முன் கோயில் நாசந் தானே.”

என்றொரு செய்யுளைப் பாடினார். அந் நாளிலிருந்து அக் கோயில் பாழடைந்து இன்றும் பாழாகவே கிடக்கிறது.

ஒரு சமயம் சேஷி என்பவள் வீட்டிற்கு இவர் சாப்பிடச் சென்றார். அவள் இவரைச் சரியாக உபசரியாது, இவரது கோபத்தைத் தேடிக் கொண்டாள். உடனே இவர்,

“வாயெரியக் கையெரிய வயிறெரியச்
சட்டிவைத்து வறுத்துக் கொட்டிக்,
காயெரியக் கடினமுடன் அரை வயிற்றுக்
கன்னமிட்ட கடினக் காரி
தாயெரிய மகளெரியச் சேஷியெனும்
மொட்டை முண்டை தலைமேற் பற்றித்

தீயெரியக் கண்டக்கால் என்னுடைய
வயிற்றெரிச்சல் தீருந்தானே:"

என்றொரு செய்யுளைப் பாடித் தீர்த்தார்.

இங்ஙனம் பலருயிர்க்கு நமனுக விருந்த வசை கவி யாண்டான் கவிராயர் இறுதிக் காலத்தில் தன்னிடம் நெருங்கி வந்து வேண்டியன செய்வாரற்றுக் காலமாயின ரென்பர்.

"கலம்பகத்திற் கிரட்டையர்" களென்று புகழ்ந்து பேசப் பெற்ற இரட்டைப் புலவர்கள் கவி பாடுதலில் மிக்க ஆற்றல் நிரம்பப் பெற்றவர்களாவர். ஒரு புலவர், பாட்டின் முதல் இரண்டடியை வினுவாகப் பாடுவார். மற்றவர் மற்றிரண்டடிகளையும் விடையாகக் கூறுவார். இப் புலவர்கள் இருவரும் திருவண்ணுமலைக்குச் சென்றனர். ஆண்டு, சம்பந்தாண்டான் என்பானைச் சென்று பார்த்தனர். அப்பொழுது அவன் தனக்கு க்ஷவரம் பண்ணுவித்துக் கொண்டிருந்தான். ஆணவம் பிடித்த அவன் இவர்களைத் தக்கபடி உபசரித்து வரவேற்கவில்லை. இவர்கள் இன்னுரென்பதை யறிந்தும் மிக அலட்சியமாக அவர்களை மதித்து "இந்த ஸ்தலப் பெயரும் என் பெயரும் வரும்படி ஒரு வெண்பா, மன் என்று எடுத்து மலுக்கு, என்று முடியும்படியாகப் பாடுங்க" ளென்று உத்திரவிட்டான். உடனே அப் புலவர்களில் ஒருவர்,

"மன்னுதிரு வண்ணு மலைச்சம்பந் தாண்டாற்குப்
பன்னுந் தலைச்சவரம் பண்ணுவதேன்" என்றார்.

உடனே மற்றொரு புலவர்,

—மின்னின்,

இளைத்த இடைமாதர் இவன் குடுமிபற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு."

என்று பாடி முடிவு செய்தனர். இப் பாடலைக் கேட்டு சம்பந்தாண்டான் அவமான மடைந்தான்.

மற்றொரு சமயம் இப் புலவர்கள் காவித் தண்டலம் என்னும் ஊரையடைந்து, அங்கு செல்வந்தனு யிருந்த ஓமளநாதன் என்பவனிடம் சென்றார்கள். பெரும் பணக்காரனான அவன் இவர்களைச் சிறிதும் மதியாது "ஓடுங்கள் வெளியே" என்று துரத்தினன். அவன் அண்டை வீட்டுக்காரனும், அவனது கம்பத்தம் பார்ப்பவனுமாகிய அறிவிலியும் மதியாது சீறித் துரத்தினன். உடனே இப் புலவர்களில் ஒருவர்,

"ஒருகாவித் தண்டலம் வாழ் ஓமளநா தன்வீ
டிருகாலம் பற்றி யெரிக" என்றார்.

உடனே மற்றொருவர்.

—"அருகாருங்

கம்பத்தான் வீடுங் கலந்தெரிக
மற்றிவர்கள் சம்பத்தெல் லாமொழியத் தான்."

என்று பாடிப் பாட்டைப் பூர்த்தி செய்தார். அப்படியே அவர்களது வீடு அக்கினிக்கு இரையாயிற்று.

ஒரு செல்வனிடம் செய்யுள் செய்து கொண்டு சென்று அரங்கேற்றினார்கள். அவன் பாட்டைக் கேட்டு விட்டுச் "சரி, உங்கட்கு யாதுங் கொடுக்க முடியாது. போய் வாருங்கள்" என்றான். அப்போது ஒரு புலவர்,

"மூடர் முன்னே பாடல் மொழிந்தா லறிவரோ
ஆடெடுத்த தென்புலியூ ரம்பலவா" என்றார்.

உடனே மற்றைப் புலவர்,

—"ஆடகப்பொற்

செந்திருவைப் போலணங்கைச்
சிங்காரித் தென்ன பயன் அந்தகனே நாயகனுனல்."

என்று பாட்டை முடிவு செய்தார்.

இவர்களிருவரும் ஒரு சமயம் பாண்டியன் அவைக்குச் சென்றார்கள். அரசன் "இவர்கட்குத் தக்க சன்மானஞ் செய்யுங்களென்று உத்திரவிட்டான். பாண்டியன் மந்திரி "செய்யவேண்டா" மென்று தடுத்தான். உடனே இருவரும் கோபங் கொண்டார்கள். ஒருவர்,

புராதனமான தமிழ்ப்புலவீ ரிந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்கு வந்ததென்னே ?

என்று பாடினர் உடனே மற்றவர்,

—வகை கேட்டிலையோ ?

தராதலம் வென்ற தமிழ்மா றனையுந்தன் தம்பியையும்
இராகவ னென்றும் இலக்குவ னென்று மிருந்ததுவே.

என்று மற்றிரண்டடிகளையும் பாடிப் பூர்த்தி செய்தார். பின்னொருக்கால் திருவேங்கடத்தான் என்று பெயருடைய ஒரு செல்வனிடம் பரிசு பெறச் சென்றார்கள். அந்தத் திருவேங்கடத்தான் தாராள நோக்கமுடையவன். ஆனால் அவன் தம்பியோ மிகுந்த கஞ்சன். அவனுடைய பெயர் கண்ணுக்கினியான். தன் அண்ணன் புலவர்கட்குப் பரிசு கொடுப்பதைப் பொறுமை கொண்டு தடுத்தான். உடனே ஒருவர்,

"தேன்பொழிந்த வாயான் திருவேங் கடத்துடனே
ஏன் பிறந்தான் கண்ணுக்கினியானே ?" என்றார்
உடனே மற்றைப் புலவர்,

—வான்சிறந்த

சீதேவி யாருடனே செய்யதிருப் பாற்கடலில்
மூதேவி யேன் பிறந்தாள் முன் ?''

என்று பாட்டை முடிவு செய்தார்.

கவிராசராகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் உண்மைத் துறவொழுக்கத்தைக் கொண்டவர். இவர் ஒரு காலத்தில் விருத்தாசலத்திற்குச் சென்று தங்கியிருந்தார். ஓர் தினம் மணிமுத்தா நதிக்குச் சென்று நீராடிவிட்டு ஒரு மாஞ்சோலை வழியே வந்தார். ஒரு மாங்கனி விழுந்து கிடந்தது. அக் கனியைக் கண்ட அடிகளார் அது சிவபூசைக்காகு மெனத் துணிந்து, கீழே குனிந்து அக் கனியைத் தம் கையிலே எடுத்தார். உடனே அத் தோட்டத்தைக் காவல் காத்திருந்த ஓர் பேதை விரைந்தோடி வந்து, அடிகளின் மடியைப் பிடித்துக் கொண்டு நீ 'மாங்கனியை ஏன் திருடினாய்' என்று வம்பு செய்தான். சுவாமிகள் மனம் மிகுந்த வருத்தத்தை யடைந்தது. உடனே,

"அடுத்துவருந் தொண்டனுக்கா அந்தகனைத் தாளால்
அடர்த்ததுவுஞ் சத்தியமே ஆனால்—எடுத்தவொரு
மாங்கனிக்கா என்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா தித்தன்வரத் தான்.''

என வொரு செய்யுளைப் பாடிச் சென்றார். அப் பேதை மகனும் சின்னாளில் இறந்து தொலைந்தான்.

புலிக்குட்டி இராமலிங்கத் தம்பிரான் என்பவர், திருவாவடுதுறை ஆதீனத் தம்பிரான்களில் ஒருவர்; நல்ல புலவர். இசையும் வசையும் பாடுபவர். மடத்து ஓதுவார் ஒருவருக்கும் இவருக்கும் ஒரு சமயம் பகை யுண்டாயிற்று. அதனால் வாய்ச் சண்டை பலமாக மூண்டது. ஓதுவார் தம்பிரானைப் பார்த்து "சரிதான்

திருவாயை மூட்டும்" என்று ஏளனமாகச் சொன்னார். உடனே தம்பிரான்,

"செந்தமிழ்பா டும்வாய் திருவாய்மற் றெவ்வாயும்
நிந்தைமலஞ் சொரிவாய் நீர்சொரிவாய்—முந்தவே
நாறும்வாய் யாரும் நகைக்கும்வாய் மூடனே
தேறுவாய் இச்சங்க தி."

என்றொரு செய்யுளைப் பாடி இகழ்ந்தார். இத் தம்பிரானுக்கும் முத்துக் கறுப்பன் என்னும் பெயருடைய இன்னொருவருக்கும் ஒரு சமயம் விரோத முண்டாயிற்று. அப்போது தம்பிரான்,

"முத்துக் கறுப்பனென்று முன்னுனக்குப் பேரமைத்த
பித்தனா ரென்னிடத்திற் பேசுவாய்—முத்துக்
கறுக்குமா மூடாநீ கற்றிருந்தும் பேரைத்
திருத்திவைக்க லாகாதோ சீ."

என்றொரு செய்யுளைப் பாடிப் பரிகசித்தார்.

வெண்பாப் புலிக் கவிராயர் என்பவர் சேது நாட்டைச் சேர்ந்தவர். வசை கவிவாணர். வாக்குப் பலிதமுள்ளவர்; இவருடைய பகையை வீராச்சாமி என்பா னொருவன் ஒரு சமயந் தேடிக்கொண்டான். பகை முற்றிவிட்டது. வெண்பாப் புலிக் கவிராயர் வெகுண்டு,

"கந்தனே நீயானால் கற்றவனே நானானால்
இந்த வருடம்போய் எதிராண்டில்—வந்தவினை
தீரா வினையாய்த் திரும்பா வியாதியாய்
வீராச்சா மிக்கே விதி."

என்றொரு வெண்பாவை முருகக் கடவுளை நோக்கிப் பாடி, அந்த வீராச்சாமிக்கு வியாதியை வருவித்து மகிழ்ந்தார்.

மேற்படி சேதுநாட்டைச் சேர்ந்த முத்துக் குட்டிப் புலவர் என்பவரும் வாக்குப் பலிதமுள்ள வசைகவி. இவரது காலத்திலே நாட்டரசன் கோட்டையிலே, நல்லதம்பி யென்று பெயருடைய பொல்லாதவ னொருவன் பலருக்கும் அல்லலை விளைத்துக் கொண்டிருந்தான். இவன் செய்யும் அக்கிரமங்கள் சகிக்கக் கூடாதனவாக விருந்தன. பலரும் இந்தப் புலவரிடம் அந்த நல்லதம்பியின் பொல்லாத வேலைகளை யெல்லாம் புகன்று, அவனைத் தொலைக்க வேண்டு மென்று வேண்டினர். புலவர் இவன் இறந்தொழிந்தாலும் நல்லதென்று,

“ பட்ட விளக்கு மாற்றினுக்கோர்
பட்டுக் கயிறு தரித்தாற்போல்
இட்ட பெயரே நல்லதம்பி
என்றே நினைக்கிட்(டு) இசைத்தவரார் ?
எட்டிப்பழமே ! பழஞ் செருப்பே !
எள்ளத்தனையு நாணமிலா
மட்டிப் பயலே ! நல்ல தம்பி !
மடவோய் சாகாய் வாழ்வாயோ ?”

என்றொரு கவி பாடினார். இக் கவி பாடிய சில தினங்களுக்குள் அவன் இறந்துபோனான் என்று புலவருக்கு ஓலை வந்தது. புலவர் அவ் வோலையை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு,

“ நல்லதம்பி என்றொருவன்
நாட்டரசன் கோட்டையிலே
அல்லனென்று போனானென்(று)
ஆள்வந்தான் அம்மானை

அல்லனென்று போனுனென்(று)
ஆள்வந்தா னுமாயிற்
சொல்லவந்த தூதுவனுந்
தோட்டிகாண் அம்மானே
தோட்டியலன் கூடநின்று
சுட்டவன்காண் அம்மானே."

என்று ஒரு அம்மானை பாடினுர்.

வீரபாண்டியப் புலவர் என்பவர் பாண்டி நாட்டிலிருந்தவர். வாக்குப் பலிதமுள்ள கவிகளில் ஒருவர். தெய்வத் திருவருளை நன்கு பெற்றவர். வசை பாடி யாருக்குந் தீமை செய்ததில்லை. இவர் ஒரு சமயம் ஆற்றூர் என்னும் ஒரு ஊரில் வந்திருந்த, துலுக்க மந்திரி ஒருவனைச் சென்று சந்தித்தார். அவன் இவரைச் சிறிதும் மதியாது நீ யார் என்று கேட்டான். இவர் தாமொரு புலவரெனவும், தெய்வத் திருவருளால் எத்தகைய அற்புதங்களையுஞ் செய்ய முடியும் என்றுங் கூறினுர். இவர் கூறியதைக் கேட்ட அந்தத் துருக்க மந்திரியானவன், "அப்படியாயின் நீ இப் புளியமரத்தின் கிளையொன்றை உனது வாக்கு வல்லமையால் ஒடிக்க வேண்டும். இன்றேல் யான் உன்னைக் கடுமையாகத் தண்டிப்பேன்" என்று சொன்ஞன். புலவர் சரி என்று ஒப்புக்கொண்டு, அவன்கூறிய ஒரு கிளையில் அவன் காட்டிய இடத்தில் சுண்ணும்பைக் கொண்டு அடையாளஞ் செய்வித்துவிட்டு முருகக்கடவுளை நோக்கி,

எப்படியுஞ் செந்தூர்க் கிறையவா! இப்புளியங்
கொப்பொடிய வேண்டும் குருபரா!—செப்பனைய
கொங்கைக் குறத்தி கொழுநா! நந்தெய்வானை
மங்கைக் கிசைந்தகண வா!

என்றொரு வெண்பாப் பாடினர். அக் கணமே அப் புளியங்கிளை, மடமடவென்று முறிந்து விழுந்தது. இதைக் கண்ட அந்த மந்திரியானவன் பயந்து, தன் ஆபரண முதலிய விலையுயர்ந்த பொருட்களை யெல்லாம் புலவருக்களித்து, 'என்னை ஏதுஞ் செய்துவிடாதீர்' என்று பிரார்த்தனை செய்துகொண்டே ஓட்டம் பிடித்தான்.

"கல்வியிற் பெரியவன் கம்பன்" என்று பழமொழி பெற்ற கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர், தம் ஆசிரியரின் கம்பங் கொல்லைக் காவலுக்காகச் சென்று வயலில் இருந்த ஒரு மர நிழலிற் படுத்து வெய்யிற் கொடுமையால் நன்ருக உறங்கினர் அப்போது அவருக்கு ஒரு சொப்பனம் உண்டாயிற்று. காளிங்கராயன் என்பவனது குதிரை வந்து கம்புப் பயிர்களை யெல்லாங் கடித்தருந்துவதாகக் கண்டு விழித்தெழுந்து பார்த்தார். உண்மையாகவே குதிரை வந்து மேய்ந்துகொண்டிருந்தது. எழுந்து ஒரு கோலை யெடுத்துக் கொண்டோடி அவ் வசுவத்தை அடித்து விரட்டத் தொடங்கினர். அவ்வசுவம் அகலவில்லை. அப்படியே மேய்ந்து கொண்டு நின்றது. கம்பருக்கு யாது செய்வதென்று விளங்கவில்லை. எல்லோரைப் போலவே கம்பரும் அச் சமயத்தில் கடவுள் உதவியை நாடினர். பக்கத்திலிருந்த காளி கோயில் கம்பருக்குத் தெரிந்தது. அக்காளியின் அருளால் விரட்டி விடலா மென்று காளியைப் பிரார்த்தித்தார். கம்பர் வாக்கினின்றும் ஒரு கவி பீறிட்டுக் கொண்டு கிளம்பிற்று. உடனே,

"வாய்த்த வயிரபுர மாகாளி யம்மே! கேள்
ஆய்த்த மணலில் அணிவரையிற்—காய்த்த

கதிரை மாளத்தின்னுங் காளிங்க ராயன்
குதிரை மாளக் கொண்டு போ"

என்ருரு வெண்பாவைப் பாடினர். உடனே அக் குதிரை கீழே விழுந்து இறந்தொழிந்தது. பின்னர் "இவ்வடியின் ஈற்றடியைச் சிறிது மாற்றிக் "குதிரை மீளக் கொண்டுவா" என்று பாடியதுங் குதிரையும் பிழைத்தெழுந்தது.

கம்பருக்கு ஒருகால் ஒரு விலைமகள்மீது எக்காரணத்தாலோ கோபமுண்டாயிற்று. உடனே,

"கந்த மலர்ப்பிரமன் கன்னிமட வார்க்கெலாம்
அந்தஇள நீரைமுலை ஆக்கினன்—சுந்தரம்சேர்
தோற்றமிகு வல்லிக்குத் தோற்பைமுலை யாக்கினன்
ஏற்றமிதில் யாதோ இயம்பு."

என்ருரு வெண்பாவால் அவளைப் பழித்தார்.

இவர் ஒருகால் கொங்கு நாட்டிற்குச் சென்ருர், கல்வியிற் பெரியவராகிய இவருக்குத் தக்க மரியாதை அங்கு நடக்கவில்லை. சிலர் கம்பரை யிகழவுஞ் செய்தார்கள். கம்பர்,

"நீரெலாஞ் சேற்று நாற்றம்
நிலமெலாங் கல்லும் முள்ளும்
ஊரெலாம் பட்டி தொட்டி
உண்பதோ கம்பஞ் சோறு
பேரெலாம் பொம்மன் திம்மன்
பெண்களோ நாயும் பேயும்
காருலாங் கொங்கு நாட்டைக்
கனவிலும் நினைக்கொணுதே.

என்று பழித்துப் பாடிச் சென்ருர்.

இஞ்சிகுடி யென்னும் ஒரு ஊருக்கு இவர் சென்ருர். அங்கிருந்த கலைச்சி என்னும் விலைமகள் ஒருத்தி இவரைக் கண்டு எழுந்து மரியாதை செய்யவில்லை. இதனுல் வெகுண்ட கம்பர் அவளை நிந்தித்து,

" எய்ந்த தனங்க ளிரண்டுமிரு பாகற்காய்
வாய்ந்தவிடை செக்குலக்கை மாத்திரமே—தேய்ந்தகுழல்
முக்கலச்சிக் குப்பிடிக்கு மூதேவி யாள்கமலைக்
குக்கலிச்சிக் குரங்கலைச்சிக் கு ".

என்ருெரு வெண்பாப் பாடினர்.

பூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டிய மூவேந்தர்களும் ஒரு கால் பாவேந்தராகிய ஏகம்பவாணரது இல்லுக்குச் சென்று, அவர் இல்லக்கிழத்தியைக் கண்டு, புலவர் எங்கே என்று உசாவினர். அவர் வயலுக்குச் சென்றுள்ளாரென்று அம் மாதரசி அறிவித்தாள். மூவேந்தரும் வறிதே மீளாது, " புலவர் வயலுக்கு முடி நடப் போயினரோ?" என்று கேலியாகச் சொல்லிக் கொண்டு மீண்டனர். இதைக் காதிலேற்ற ஏகம்ப வாணர் மனைவி மிகக் கோபமடைந்தாள். அவளுங் கவியரசி. எனது நாயகராகிய புலவர் பயிர் முடியையா நடுவர்? மூவேந்தரின் மணி முடியை அன்ருே நடுவ ரெனச் சினந்து,

" சேனை தழையாக்கிச் செங்குருதி நீர் தேக்கி
ஆனை மிதித்த அருஞ்சேற்றில்—மானபரன்
மாவேந்தர் வேந்தன் பறித்து நட்டான் ஏகம்பன்
மூவேந்தர் தங்கண் முடி."

என்ருெரு வெண்பாக் கூறினுள். பின்னர் ஏகம்ப வாணர் இல்லத்தை யடைந்ததும், அவர் இல்லாத

காலையில் நிகழ்ந்ததைக் கேள்விப்பட்டார். மூவேந்தர் கட்கும் பல அல்லல்களை யுண்டாக்கினர்.

பாண்டிநாட்டில் திருநெல்வேலி சில்லாவைச் சேர்ந்த அவிநாசிப் புலவரென்பவர் வாக்குப் பலித முள்ள ஒரு வசை கவி. ஒருவரை வாழச் செய்யவும் தாழச் செய்யவும் வல்லவர். இவர் ஒருபோது உதவியை நாடி ஒரு செல்வனிடம் சென்றார். அவன் எவ்வளவுக் கெவ்வளவு பணம் உடையவனே அதற்குத்தக உலுத்த குணமும் உடையவன். முழு மூடனாய அப்பேதை இப் புலவருடன் இனிமையாகப் பேசிக் கொண்டிருந்தான். உணவு வேளையும் வந்தது. இவருக்கு யாதும் கொடா மலே போய் வாருமென்று கூறினன். பசிக்கு உணவு கூடப் படைத்திலன். தான் மட்டும் உண்ணுவதற்குச் சென்றான். பசியோடிருந்த பாவலருக்குப் பெரிய வெகுளி மூண்டது. உடனே அவர் ;

" சீவனுள்ளளவுமே நட்டுவக்காலியும்
தேளுஞ் சினந்துகொட்டத்

திருதிரெனு முண்டவிழியிற் குளவிகொட்டவது
செங்குருதி யாறுகொட்டப்,

பாவிமகனே! யுனதுவாசலிற் சாம்பிணப்
பறைகள் மிகவந்து கொட்டப்

பந்தரடி மாரடித்(து) (உ)றவினர்கள் வாய்க்கரிசி
படிநெற் கொணர்ந்து கொட்ட,

ஆவலொடு கால்மாட்டில் உனதுபெண் டாட்டிகண்
அருவியொரு கோட்டைகொட்ட

ஐயையோ என்செய்வேன்? என்றுமகன் நீர்மாலை
அதனைக் கொணர்ந்து கொட்டச்

சாவடியில் அறுதலிகள் கூடியழ நீவந்து
சப்பாணி கொட்டியருளே
சண்டிக்குலாமகனே ! வெங்கட்ட ராமனே !
சப்பாணி கொட்டியருளே."

என்னும் பயங்கரமான வசைப்பாட்டைப் பாடி அவ்வூரார்களிட மெல்லாங் கூறிவிட்டுச் சென்றார். சின்னாளில் அவ் வெங்கட்டராம னென்னும் வெங்கொடியோன் சின்னாபின்னமாகச் சிதறி யழிந்தான்.

"வசைபாடக் காளமேக" மென்று இசை மிகப் படைத்த காளமேகப் புலவர், அங்கதம் பாடுதலில் இங்கிதமுடையவர். இவர் ஆனைக்காவில் மேய அகிலாண்டநாயகியின் திருவருள் பெருகப் பெற்றவர். இவர் பல விடங்களிலும் பிரயாணஞ் செய்துகொண்டு திருமலைராயன் பட்டினத்தை யடைந்தார். அங்கிருந்த மதுரகவி முதலிய புலவர்கள் இவரை யெதிர்த்துப் பல கேள்விகள் கேட்கலாயினர். அவற்றிற் கெல்லாம் இவர் தக்கபடி விடையளித்தனர். மன்னன் தனது புலவர் பக்கச் சார்பாக விருந்துகொண்டு அழிவழக்குப் பேசினான். காளமேகப் புலவருக்கு நீளமான வெகுளி யுண்டாயிற்று. உடனே,

"கோளர் இருக்குமூர் கோள்கரவு கற்றவூர்
காளைகளாய் நின்று கதறுமூர்—நாளையே
விண்மாரியற்று வெளுத்துமிகக் கறுத்து
மண்மாரி பெய்கவிந்த வான்."

"செய்யாத செய்த திருமலைரா யன்வரையில்
அய்யா ! அரனே ! அரைநொடியில்—வெய்யதழற்
கண்மாரி யால்மதனைக் கட்டழித்தாற் போற்றீயோர்
மண்மாரி யாலழிய வாட்டு."

என்று வசைபாடி அவ்வூரில் மண் மாரி பெய்யச் செய் தார். அப் பட்டினம் இருந்தவிடந் தெரியாது அழிந்து தொலேந்தது.

இப் புலவர் ஒரு அமயம் கும்பகோணத்தில் ஒரு பந்தியிலிருந்து உணவருந்திக்கொண் டிருந்தார். பக்கத் தில் ஒரு சோழியப் பார்ப்பான் இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவன் குடுமி அவிழ்ந்து அவனது இலேயில் விழுந்தது. அதனை யெடுத்துப் பக்கத்தே உதறினன். அதிலிருந்த சோற்றுப் பருக்கைகள் சில காளமேகப் புலவரின் இலேயில் வீழ்ந்தன. இவருக்கு உடனே சினம் பொங்கிற்று.

“ சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா ! சோற்றுப்
பொருக்குலர்ந்தவாயா ! புலேயா !—திருக்குடந்தைக்
கோட்டானே ! நாயே ! குரங்கே யுனேயொருத்தி
போட்டாளே வேலேயற்றுப்போய். ”

என்றெரு செய்யுள் பாடிப் பழித்தார். இவர் நாகைக் குச் சென்றார். அங்கு காத்தான் என்பவனது சத் திரத்திற்குச் சாப்பாட்டுக்குச் சென்று வெகு நேரங் காத்திருந்தார். அது காத்தானது சத்திரமாதலின், வெகு நேரத்திற்குப் பிறகு சமையல் செய்து உண விட்டனர். அச் சத்திரத்தைக் குறித்து,

“ கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி
உலேயிலிட ஊருறங்கும் ஓரகப்பை அன்னம்
இலேயிலிட வெள்ளி எழும். ”

என்றெரு செய்யுள் செய்தார். இதற்கு இசையாக வும் பொருள் கூறலாம். ஒரு ஊருக்கு இவர் சென் ருர். அவ்வூரார் இவரை நன்கு கவனித்து உபசரிக்க

வில்லை. அவ்வூரார்மீது இவருக்கு வெகுளியுண்டா யிற்று. இவ் வூரார் உண்டு வாழ்ந்தாலும் சரி உண் ணாது தாழ்ந்தாலுஞ் சரி என்னும் முடிபுக்கு வந்து,

"கலங்கல் துறையதனில் காராளர் போதத்
தெலுங்கப்ப நாரணன் தெண்டிக்கச்—சலம்பெருகி
நட்டாறு கொண்டுகரை நன்ருயுடைந்துநீர்
கட்டா தொழிதல் கடன்."

என்னு மொரு வசை வெண்பாவால் அவ் வூருக்கு ஆதாரமான ஏரியை யுடைத்துவிட்டு அவ் வூராரை நிராதாரமாக்கி விட்டுச் சென்ருர். பெருமை பொருந் திய இப் புலவர் ஓரமயம் கண்ணுக்கு நன்ருகக் காணப் படாத் தோற்றத்தோடு அதாவது பார்ப்பதற்கு அவ லட்சணமான தோற்றத்துடன் ஓரூரிற் சென்றுகொண் டிருந்தார். அங்கு நின்றிருந்த ஒரு சிறிய குழந்தை இவரைக் கண்டு பயந்து அலறிற்று. அக் குழந்தையின் தாயானவள் இவர் இத் தன்மையரென்றறியாமல் "உன்னைக் கொடுப்பேனே" என்று கூறினுள். இதனைக் காதிற் கேட்ட புலவர் வெகுண்டு,

"என்னைக் கொடுத்தால் இரக்கமுனக் குண்டாமோ?
வன்னைக் கமலமுக வல்லியே—துன்னுமதக்
காட்டானைக் கோட்டுமுலைக் காரிகையே நீபயந்த
கோட்டானைச் சாகக் கொடு."

என்ருெரு வசை வெண்பாப்பாடி அவளது குழந் தையை நமனுலகுக் கனுப்பிவிட்டு அப்பாற் சென்ருர்.

தொண்டை நாட்டில் ஒரு கிழத்தாசி ஏதோ ஒரு காரணங்கொண்டு இப் புலவர் பெருமானை நிந்தித் தாள். அவள் எதிலுந் தேர்ச்சி பெற்றவளல்லள். அவளைக் குறித்து,

"இந்து முடிக்குஞ் சடையாள ரிருக்குந்
தொண்டை வளநாட்டிற்

சிந்து படிக்கக் கவி படிக்கத்
தெரியா மடவா யுன்றனக்குக்

கெந்தப் பொடியேன் பூமுடியேன் கிழமாய்
நரைத்து முகந் திரைந்தும்

இந்த முறுக்கேன் வீறுப்பே னெடுப்பே
னுன்னைக் கெடுப்பேனே."

என்றொரு கவிபாடித் தீர்த்தார். இவர் பாடிய வசை கவிகள் இன்னும் பல.

ஒரு புலவர், நமச்சிவாயனென்று பெயருடைய ஒரு செல்வன்மீது கவிபாடிச் சென்றார். அச் செல்வன் பெருந்தீனிக்காரன். அவன் எப்பொழுதும் ஏதாவது பலகாரங்களைக் கண்டபடி யுண்டுகொண்டே யிருப்பான். இவன் புலவர்க்கு யாதும் பரிசு கொடுக்கவில்லை. ஒன்றுமில்லை யென்றுரைத்து விரட்டினான். அப் புலவர் அவனதியல்பினை,

"புட்டவல்பட் டாணி பொரிதேங் குழலப்பம்
மட்டவிழுந் தோசை வடையுடனே—சட்டமுடன்
ஓயாமற் சோறுகறி உண்டை உண்டையா யடைக்கும்
வாயா நமச்சி வாயா."

என்றொரு வெண்பாப் பாட்டால் விளம்பினார்.

மற்றுமொரு புலவர் தம் விரோதி யொருவன்மீது,

"சேய்க்கறியுண்ட சிவன்மே
லன்பற்றவன் சீசீயவன்

வாய்க்கறியாத விடக்கானது
மில்லை மரக்கறியும்

காய்க்கறி யென்பதும்
வேண்டான் சம்பாரங்க னக்கவிட்ட
நாய்க்கறியும் புசிப்பான்
கொழுமூர் முத்து நாகப்பனே"

என்றொரு வசை பாடினர். இத்தகைய வசை பாடினர் இன்னும் பலர். விரிப்பிற் பெருகுமாதலின் இத்துடன் விடுப்பாம்.

---

# அதிகாரம் 37.

---

## தமிழர் கையறு நிலை

கை யென்பது செய்கை. அறு என்பது அற்ற, நிலை என்பது தன்மை. கையறு நிலை யென்பது எதுவுஞ் செய்ய முடியாத நிலைமை என்று பொருள்படும். ஒரு உயிர்தான் முகந்து நின்ற யாக்கையினை இகந்து இன்னொரு யாக்கையினை நாடிச் சென்று விடுகிறது. அவ்வுயிர் வாழ்ந்து நின்ற வுடலின் உற்றார் உறவினரும், நட்டார் முதலிய மற்றையரும் எதுவுஞ் செய்ய முடியாத நிலைமையிலிருக்கின்றனர். அப்போதவர்களுள்ளத்தின்கண் துன்பம் மிகுதியும் தோன்றுகின்றது. யாதுஞ் செய்ய வியலாத நிலைமையிலிருக்கும் இவர்கள் மறைந்தாரின் குண நலன்களைக் கூறிப் புலம்புகின்றனர்.

பாவாணராயுள்ளோர் தம்மைப் பாதுகாத்தாரையும் பெருங்கொடை வள்ளல்களையும் அருங்குண

நண்பர்களையு நினைந்து அரிய பாடல்கள் பாடி அவலித் தரற்றுவர். இதுவே கையறு நிலைப்பாடலெனப்படும். கையறு நிலை யெனினும் இரங்கற்பாவெனினு மொக்கும். இதனை வடமொழியாளர் சரம கவி யென்பார்.

படைப்புக்காலந் தொட்டே மக்கள், இறந்தாரைக் குறித்து அவலித்தரற்றி யிருக்கின்றனரென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. ஆனால் அந்தக்கால மக்கள் இந்தக் கால மக்களைப்போல் அளவு கடந்து அழுது வழிந்த தாகக் கூற முடியாது. காலஞ் செல்லச் செல்லத்தான் இறந்தாரை நோக்கி வருந்து மிந்தச் செய்கை விருத்தி யடைந்திருக்கிறது.

சங்க காலத்திலே இது நல்ல வளர்ச்சி பெற்று விட்டது. சங்கப் புலவர்கள் பலர், தம்மைப் புரந்த அரசர்கள், அரிய நண்பர்கள் முதலானோர் இறந்து பட்டபோது பாடிய கையறு நிலைப் பாக்கள் பல சங்க நூல்களிற் காணப் பெறுகின்றன. பாரியை மூவேந் தரும் வஞ்சித்துக் கொன்று தீர்த்தபின் அவனுடைய மக்களாகிய மகளிரிருவரும்,

“ அற்றைத்திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே ”

—புறம் 112.

என்று இரங்கிப் பாடி யிருப்பது அறிஞரனைவரது நெஞ்சினையும் உருக்குவதொன்றும்.

“ ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டாம்

நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
எமக்கென் னென்றிட் டுண்டிரும்"

என்று உலகத்தாரைப் பார்த்து உரைத்துத் தேற்றி யருளிய அவ்வையாரே, அதியமான் நெடுமான் அஞ்சி மாண்டொழிந்தபோது பெரிதும் வருந்தி,

"சிறியகள் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகள் பெறினே
யாம்பாடத்தான் மகிழ்ந்துண்ணு மன்னே
சிறுசோற்றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம்
எமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாம்
தானிற்கு மன்னே
நரந்த நாறும் தன் கையால்
புலவுநாறும் என்தலை தைவரு மன்னே
அருந்தலை யிரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவ னருநிறத்தியங்கிய வேலே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநரும் இல்லை பாடுநர்க்
கொன்றீ குநரு மில்லை
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்(று)
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே." —புறம் 235.

என்று கையறு நிலை பாடினார். இங்ஙனம் கையறு நிலை பாடினார் சங்க காலத்திற் பலராவர். சிலப்பதி

காரக் கதாநாயகனாகிய கோவலன் மதுரையில் வெட்டுப் பட்டிறந்தபோது மதுரை நகரத்தார் அனைவருமே கண்ணகியின் துயர் கண்டு வருந்தினர். கண்ணகி புலம்பிய நிலைமையை இளங்கோவடிகள்,

இன்புறு தங்கணவர் இடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை அலர் தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ
நறைமலி வியன்மார்பின் நண்பனை இழந்தேங்கித்
துறைபல திறமூழ்கித் துயருறு மகளிரைப் போல்
மறனொடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப
அறனெனும் மடவோய் ! யான் அவலங்கொண் டழிவலோ
தம்முறு பெருங்கணவன் தழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்கும் கவலைய மகளிரைப்போல்
செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறிழைப்ப
அறனெனும் மடவோய்! யான் அவலங்கொண் டழிவலோ!

என்று சிலப்பதிகாரத்தின் கண் சுவைபடப் பாடியுள்ளார். இரங்கற் பாடல்களைப் பாடுதற்கு விளரிப்பண் உரியதென்பர். சங்க காலத்திய இப் போக்கைப் பின்பற்றி இக் காலத்திலே இரங்கற்பாக்கள் ஏராளமாகப் பெருகிவிட்டன. இராமாயணம் பாரதம் முதலிய இதி காசங்களிலும் ஏராளமான இரங்கற்பாடல்களைக் காணலாம்.

# அதிகாரம் 38.

## தமிழ்நாடுந் தற்காலமும்

தமிழறிஞர்கள் பல யாண்டுகளாகவே தமிழ் மொழியின் முன்னேற்றங் கருதி இடைவிடா முயற்சியுடன் உழைத்து வருகின்றனர். நாட்டின் பல விடங்களிலும் தமிழ் வளர்ச்சிக்கான மன்றங்களும் செய்கைகளும் மலியலாயின. தமிழ்த் தாயின் மக்கள் உண்மையாகவே தமிழின் உயர்வினை உணரலாயினர். நந்தமிழ் மொழிக்கணுள்ள இனிமையை வேறெம்மொழியிலுங் காண்டலரி தென்பதனையுந் தமிழர்கள் நன்குணர்ந்து கொண்டனர். நாட்டிலே சர்வகலாசாலைகள் பல தோன்றி வடமொழி, தெலுங்கு, மலையாளம் முதலியவைகளைக் கற்பிக்க முயலினும் ஆங்கிலத்தையுந் தமிழையுந் தவிரப் பிறமொழியைப் பேணிக் கற்பார் அரிதினும் அரிதாயினர்.

கவிச் சக்கரவர்த்தியாகிய தேசீய கவி சுப்பிரமணிய பாரதியாரின் இனிய எளிய தேசீய கீதங்கள், எல்லா விடங்களினும் மக்களாற் பெரிதும் போற்றிக் கற்கப் படுகின்றன. தற்காலத்தில் மேலும் பல கவி வாணர்கள் தோன்றி மிக வெளிய பாடல்களை யியற்றித் தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பி வருகின்றனர். கதைகளெழுதும் பலர் தோன்றி நல்ல கதைகளை எழுதிக் குவிக்கின்றனர். பலருடைய கதைகள், பலருடைய கட்டுரைகள் முதலியன, தனித்தனியேயும், ஒன்றாகச் சேர்த்தும் புத்தகங்களாக வெளிப்படுத்தப் படுகின்றன.

இத்தகைய பாடல்களாலும் கதைகளாலுந் தமிழ் மக்கள் பெரிதுங் கவரப்பட்டுத் தமிழ்ப் பற்றுடையார்களாக மாறி வருகின்றனர். நகைச்சுவை ததும்பிய கதைகளுங் கட்டுரைகளும் மக்களாற் பேரார்வத்துடனிக் காலத்திற் போற்றப்படுகிறதற்கேற்ப, அவைகளும் அழகிய வடிவில் வெளி வருகின்றன.

தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் நோக்கத்தைக் கொண்ட பலர் கழகங்களமைத்து நூல் வெளியிடும் அருந்திருப்பணியிலும் ஈடுபட்டிருக்கின்றனர். இதனாற் புத்தகங்கள் கணக்கு வழக்கின்றி நாள் தோறும் பல்கிக் கொண்டே யிருக்கின்றன. தமிழ் மொழியின் சீரையுஞ் சிறப்பையும் உள்ளவாறுணர்ந்த பல நல்லறிவாளர்கள், தமிழ் மொழியை நன்கு கற்கவும் பாவாணர்களாகிப் பாடலியற்றவும் பேரவாக்கொண்டவர்களாக விருக்கின்றனர். இவர்கள் தம் எண்ணத்தை நிறைவேற்றுதற்குத் தமிழ் நூல் கற்பிப்பதிலே வல்லவராயுள்ள பல்லோர் இக்கால வுலகிற்குத் தேவையாம்.

தமிழறிஞர்களனைவரும் பிறருக்குக் கற்பிப்பதிலே வல்லவர்களாகிவிட மாட்டார்கள். பலர் தாங்கள் கற்றுள கல்வியைப் பிறருக்குணர்த்தும் ஆற்றலற்றவர்களாக வுள்ளனர். கற்பிக்கும் ஆற்றல் பெற்றவர்களிற் பலர் செய்யுளியற்ற வல்லமை யற்றவர்களாகவும் இருக்கின்றனர். செய்யுளியற்றுதலோடு கல்வியைப் பிறருக்கு எளிதாகப் புகட்டுவோர் தான் மிகவும் வேண்டற் கூடியவர்களாவர்.

தற்கால வுலகம் தமிழ் மொழியைப் போற்றுவதிற் கொண்டுள்ள தன்மை இன்னுமொரு மட்மடங் குடு

மதிகப்படின் தமிழின் பெரும் புகழ் தாரணியில் தலைதூக்கிவிடும். தற்கால வுலகில் அகவை முதிர்ந்தவர்களிற் கூடப் பலர் தமிழன்பு கொண்டு கற்க முற்படுவதைப் பார்த்தால், தமிழ் மொழி உறக்கத்திலிருந்து கிளம்புகிற காலம் மிக அண்மையில் வந்துவிட்டதென்றே கூறுதல் வேண்டும்.

---

# அதிகாரம் 39.

---

## தமிழரும் மறுமைக் கொள்கையும்

பண்டைநாள் தொட்டே பழந்தமிழ் மக்கள் மறுமைக் கொள்கையில் மிகுந்த உறுதிப்பாடான நம்பிக்கையை உடையவர்களாக விருந்து வருகின்றனர். " இவ்வுடலிலிருந்து வெளிப்படும் உயிர், தான் முகந்து நின்ற உடலிற் புரிந்துள்ள நல்வினை தீவினைகட்கேற்ப வேறொரு உடலைச் சென்றடையும். இன்பதுன்பங்களைத் துய்க்கும்" என்பதே மறுமைக் கொள்கை. இம் மறுமைக் கொள்கை இந்திய மக்கட்கு மிக உறுதியானது. கடவுளுண்மையை அறியாத மக்களே நல்வினை தீவினைகளையும் அவைகளின் பயன்களையும் பொருட்படுத்தாது, " மறுபிறப் பென்பது கிறுகிறுப்பு " என்று வாய்மதம் பேசி வாணாள் வீணாக்குவர். இவ்வுடலோடு உயிரும் அழிந்து போகுமென்னுங் கொள்கையை ஒரு சிலர் உடையவர்களாக விருக்கின்றனர். இக் கொள்கை இறைவனுண்மையை நம்புவார்க்கு ஏற்றதன்று.

மணிமேகலையிற் சாதுவனென்பான் தன்னைக் கோறல் புரியவந்த நாகர்கட்கு நல்வினை இம்மை மறுமைகளை இனிதுணர்த்தி அவர்களாற் போற்றப் பெற்றான்.

நல்வினை தீவினைப் பயன்களை மக்கள் அதே உடலிலும் அடுத்துவரும் உடலிலும் துய்ப்பார்களென்பது தமிழ் நூல்களின் முடிபாகும். வடக்கு நோக்கிச் சென்ற தமிழர்களில் ஆரியராகத் திரும்பிய கூட்டத்தினர் பல கதைகளை எழுதி வந்தனர். பல யாண்டுகள் குளிர் மிகுந்த நாட்டிற்கிடந்து வெளுத்து வடிவுநிறந் திரிந்ததோடு மொழியுந் திரியப்பெற்றுத் திரும்பிய அன்னோர் ஈண்டேயிருந்தமக்களை யேய்த்தற்கு இயைந்தவைகளை யெல்லாம் புரிந்தனர். தாங்களுயர்ந்தவர்களெனவும், தாங்கள் பேசும் மொழி கடவுள் பேசும் மொழி யென்றும், தாங்கள் பூவுலகக் கடவுளர்களென்றும் தமக்குத் தான தருமங்களை யளித்து வழிபாடு செய்வோர் தேவ பதவி பெறுவார்களென்றும், தம்மை வழிபட்டுத் தான தருமங்களை யளியாதவர்களென்றும், தம்மை வழிபட்டுத் தானதருமங்களை யளியாதவர்கள் மிகப் பயங்கரமான கொடிய நரகங்கட்குப் போவார்களென்றும் பழந் தமிழர்களறியாத தங்கள் புது மொழியில் பாட்டு வடிவமாகப் பல கட்டுக் கதைகளைக் கட்டி. அவற்றைக் கள்ளங் கபடற்ற வெள்ளையுள்ளத்தராகிய தமிழர்கட்குக் காட்டி மருட்டலாயினர். தமிழர்களும் மருண்டு அவர் தம் புரட்டினை உண்மையென வெண்ணினர். இன்றைக்கும் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆரியர் கூறிய அண்டப்புளுகை நம்பிய தமிழர் அவர்களைப் பிறப்பு முதல் இறப்பு வரை

தம்மில்லத்தில் நிகழும் புதுமைகட்கெல்லாம் அழைத்து அவர்களைக் கொண்டே எல்லாவற்றையுஞ் செய்யச் செய்து அவர்களைப் போற்றுகின்றனர்.*

எமனையும் அவனுடைய தூதர்களையுங்கூடச், சுவர்க்க நரகங்களை ஏற்படுத்திய இவ் ஆரியர்கள்தான் உண்டாக்கிக் கொண்டு வந்தனர். தமிழர்கள் ஒருடம்பி லிருந்து வெளிப்படுமுயிர் உடனே இன்னொரு உடலிற் சென்று யாக்கையினை யெய்துகிற தென்பதனை நன் குணர்ந்து நம்பினர்.

---

*அற்றேல் அஃதாக, ஆரியமொழி நூல்களாகிய ' இருக்கு, எசுர் முதலியவற்றில் தமிழ்ச் சான்றோர் தங்கோட்பாடுகள் புகுந்தவாறு என்னையெனிற் கூறுதும்: ஆரியர் நல்லுணவும் நல்லுறைவிடமும் பெறுதற்குத் தேடி யலைந்து தமிழ் நிலமாகிய இப்பரத நாட்டிற் புகுந்த காலத்துப் பெரும்பாலும் போர்மேற் கொண்டே போந்தனர். அப்போது தமிழர்கள் நாகரிகத்தின் மிக்காராய், ஆங்காங்கு நகரங்களும், அந் நகரங்களில் அரசியல் களும் அமைத்துப் பொருள் வலியும் போர் வலியும் மிகப் படைத்த வர்களாய் வாழ்ந்து வந்தமையின், பசித்துவந்த வறியராகிய ஆரியர் பண்டைத் தமிழ் மக்களை எதிர்த்து வெல்லுதல் இயலாதாயிற்று. இயலாதாகவே, பல வகையாலுந் தமிழர் தம் நட்பையும் உறவை யும் பெறுதற்குச் சூழ்ச்சி செய்து, தாம் ' உத்தரகுரு வென்னுந் தேவநாட்டிலிருந்து வந்த தேவர்களே யென்றுந், தாம் பேசும் மொழி தேவமொழியே யென்றுந், தம்மைப் பகைத்தலுந் தமக்கு இடர் செய்தலும் அங்ஙனஞ் செய்வாரை மீளாநரகிற்கு ஆளாக்கு மென்றுந், தம்மை வணங்கித் தாம் ஏவிய செய்தொழுகு வார்க்கு இம்மையில் எல்லா நலங்களும் பெருகுவதன்றி மறுமை யிலும் பிதிரர்களால் உவந்தேற்று உயர்ந்த இன்ப உலகங்களில் வைக்கப்படுவதுங் கூடுமென்றுஞ் சொல்லித் தமிழரிற் பெரும்பா லாரை ஆரியர் தம் வயப்படுத்திவிட்டார். அஞ்ஞான்றை ஆரியர்

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

என்னுங் குறள்களை நோக்குக. உறங்குவதைப்போல் இறப்பும் உறங்கி விழிப்பதைப்போற் பிறப்புமென்றால் நல்வினை தீவினைப் பயனாய் இன்பங்களைத் துய்த்தல் யாண்டையது? ஈண்டையதுதான் என்பதற்கைய மென்னை? பழந் தமிழ் மக்கள் சுவர்க்க நரகங்களை இவ்வுலகத்தின் கண்ணதாகத்தான் நம்பினர். அனுமான் கூற்றாகக் கம்பர்,

"மாண்டதோர் நலத்திற் றமென் றுணர்த்துதல்
வாய்மைத் தன்றால்
வேண்டிய வேண்டி னெய்தி வெறுப்பின்றி
விழைந்த துய்க்கும்
ஈண்டரும் போக வின்பம் ஈறில
தியாண்டுக் கண்டாம்
ஆண்டது துறக்க மன்றே அருமறைத்
துணிவு மம்மா."

என்று சுந்தரகாண்டத்திற் பாடுகிறார். வேண்டிய வேண்டியாங்கெய்தி வீறுடன் நலந்துய்க்குமிடமே சுவர்க்க மென்று சொல்லப்பெறுந் தேவருலகமாம்.

---

பெரும்பாலார் வடக்கே பனி மிகுந்த நாடுகளிலிருந்து வந்தவர்களாதலின் அழகிய வெண்ணிறமுள்ள உடம்பும் நீலவிழிகளும் வாய்ந்தவர்களா யிருந்தனர்.

மாணிக்க வாசகர் காலம் பக்கம் 516. மறைமலையடிகள்.

மிக வறிஞராய்ப் பிறந்து நாளெல்லாம் உடல் வருந்தி மாடென வுழைத்துத் தொல்லைப்படுவாரும், பிணியாதிகளால் பெருந் துன்பப்படுவாரும், காவற் கூடத்திற் பலவிதமான கொடிய அல்லலனுபவிப்பாரும் நரக வாசிகளாம். இவைகளை வேறுலகங்கட்கு ஆரியர் மாற்றியபடியால் விளைந்தபயன், அவர்களுடைய பொழுதுபோக்கு இனிமையாக முடிந்ததுடன் பிழைப்பும் நன்கு நடக்க வழி தேடிக் கொண்டதுதான். எமன் என்று நூல்களிற் கூறப்படுபவன் கடல் கொண்ட தென்னாடாகிய குமரிக் கண்டத்திலிருந்து அரசு புரிந்த ஒரு அரசன் என்று நூல்கள் கூறுகின்றன. இதனால் தான் எமலோகம் தெற்கிலிருக்கிறதென்று பேச்சு வழக்கிலும் நூல் வழக்கிலும் ஏற்பட்டுவிட்டது.

இறந்தவர்களின் பொருட்டு நாம் திதிகளையும் கருமாதிகளையும் புரிய வேண்டியது அவசியமான ஒரு கருமமன்று. இவைகளெல்லாம் தங்கள் வயிற்றுப் பாட்டைக் கருதி நீண்டகாலத்திற்கு முன்னரேயே ஆரியர்களால் வழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்ட ஒரு போலிச் செய்கையாம். பிறருக்குக் கொடுப்பது அறமே. ஏழை எளியவர்க் கீந்தால் அவர்கள் வயிற்றுப் பசியையும் போக்கியதேயாகும். ஆதலின் அறத்தை எளியோர்களெல்லோருக்குமே செய்யலாம்.

மிக அதிகமான நல்வினை புரிந்து இறைவனை பழிபட்டோர் உயிர் மீண்டு உடலையடையாது விடுதலை பெற்று இன்ப வடிவமாக இலங்கிக் கொண்டிருக்கும். உயிர், உடலெடுப்பதை நீங்கி விடுதலை பெறுவதுதான் வீடுபேறு. உயிரும் உடலும் ஒன்று

படாமற் போய்விடின் துன்பத்திற் கிடமில்லை. மணி மேகலையிற் கூலவாணிகன்சீத்தலைச் சாத்தனார்,

“பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்”

என்று கூறினார். ஆதலின் ஒவ்வொருவரும் உட லெடுக்காமல் வீடுபேற்றை யடைவதற்கு முயலுவோ மாக.

நாடும் உயர்பதந்தான் நற்புகழ்சேர் இவ்வுலகில்
வீடுபே றாகும் விளம்பு.

---

# அதிகாரம் 40.

---

## தமிழும் இஸ்லாமும்

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இஸ்லாமியர் ஆற்றியதும் ஆற்றி வருவதுமான பங்கு பணி பெரிதும் போற்றுதற்குரியது.

சர்க்கரைப் புலவரும் சவ்வாதுப் புலவரும் நெருங்கிய உறவினரான இஸ்லாமிய இரட்டைப் புலவர்கள். இவர்களுள் சர்க்கரைப் புலவர் சைவப் புலவரே என்று ஆசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை கருதி யுரைத்தனர். சைவராயிருந்த சர்க்கரைப் புலவர் இஸ்லாமியத்தைத் தழுவியர் ஆதல் வேண்டும். இவர் சைவராயிருந்த காலத்து திருச்செந்தூர்க் கோவை பாடியிருத்தல் வேண்டும். மகமதியரான பின்னர் மெடினா நகரைச் சிறப்பித்து அந்தாதி பாடியதாகக் கொள்ள வேண்டும்.

ஆண்டவன் பிள்ளைத் தமிழ் என்பது சவ்வாதுப் புலவரால் பாடப்பெற்ற பைந்தமிழ்ப் பாமாலை. இது முகையதீன் ஆண்டவன் பிள்ளைத்தமிழ் என்று பெயர் பெறும்.

வண்ணக் கவிகள் பாடுவதில் வல்லமை பெற்ற மகமதியப் புலவர் மதுரையை அடுத்த மீசல் என்ற நகரில் வாழ்ந்தவர் ஆவர். இவர் தமிழ், சமஸ்கிருதம், மலையாளம் ஆகிய மும்மொழி வல்லுநர். இவர் செய்த நூல்களுள் முகைதீன் புராணம் என்பது முக்கியமானது.

உமறுப் புலவர் பிரசித்தி பெற்ற பாவலர். இவர் கீழக்கரை என்ற ஊரினர். அவுரங்கசீபின் காலத்தவர். இவர் 12,000 செய்யுட்களையுடைய சீராப் புராணம் என்ற நூலைப்பாடி சீதக்காதியின் அமைச்சராகிய அப்துல்காசி என்பவரின் முன்னிலையில் அரங்கேற்றினர்.

மிதிறுசாநா என்ற காவியத்தை மதகறு சாகிபு என்ற புலவரும் இந்திராயன் படைப்போர் இபுனி ஆண்டான் படைப்போர் என்ற நூல்களை அலியார் என்ற புலவரும் பெண்புத்திமாலை என்ற குறள் நூலை மகமது உசெயின் என்ற புலவரும் இயற்றித் தமிழ்ச் செல்வம் செழிக்கச் செய்தனர். நயினுமுகமதுப் புலவர் என்பவர் 'முன்கிரின் மாலை' என்னும் நூலை இயற்றினர்.

மஸ்தான் சாகிபு என்பவர் திருச்சிராப்பள்ளியில் உறைந்த அத்தர் வணிகர். இவர்தம் பாக்கள் இன்சுவையும் பொருள் ஆழமும் நிறைந்தவை. அகத்தீசர் சதகம் நந்தீசர் சதகம் என்பன இவரியற்றிய சிறு நூல்கள்

மஸ்தான் சாகிபு பாடல்கள் என்ற பெயரால் வெளி வந்துள்ள தனிப்பாடல்கள், தாயுமானவர் சுவாமிகளின் பாடல்களைப் போன்று பந்த பாசங்களை அறுக்க வெழுந்த பாசுரங்கள். பெண்வழிச் சேரும் பேதமை, யை புலவர் புலப்படுத்துவது தனித்தன்மையுடன் சோபிக்கின்றது.

சமீப காலத்து இஸ்லாமியத் தமிழ்ப் புலவர் களிலே தலைசிறந்தவர் திருச்சிராப்பள்ளி பிச்சை இபுருகீம் புலவரும் நாகர்கோவில் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்களும் ஆவர். பிச்சை இபுருகீம் புலவர் அவர்கள் திருச்சி ஈபெல் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கித் தமிழ் வளர்த்த பெருந்தகையார். இவரியற்றிய நூல்களில் திருமதீனத் துக் கலம்பகம் மிகச் சிறந்து விளங்குகின்றது. செய்குதம்பிப் பாவலரவர்கள் காவியப் பிரசங்க விற் பன்னராக மொழித்தொண்டு செய்தவர்.

# அதிகாரம் 41.

## தமிழும் சமணரும்

வட நாட்டில் ஜைன சமயமென வழங்கப்பெற்ற மதத்தில் இல்லறந் தழுவியவர் சிராவகர் எனவும், இன்பத்துள் வேட்கையும் துன்பத்துள் வெறுப்புமின்றி நடுநிலை வகித்த துறவியர் சமணர் எனவும் அழைக்கப் பெற்றனர். இவர்களுள் சமணர் தமிழ்நாடு போந்து தம் கொள்கைகளைப் பரப்பினர். அவர்தம் சமயம் சமண சமயம் எனப் பெயர் பெறலாயிற்று.

சமணர் உலக இன்பங்களை அறவே வெறுத்தனர். இசையும் நாடகமும் மக்களிடையே கீழ்த்தர உணர்ச்சிகளை உண்டுபண்ணுகின்றன என்ற நோக்கமுடையரா யிருந்தனர். துறவு பூணலே நிலையான இன்பத்தை அடையும் ஒரே வழியெனக் கொண்டனர்.

இக் கொள்கைகள் தமிழரது பண்பாட்டிற்கே முழு விரோதம். காதற் றுரையைப் போற்றி வளர்த்த தமிழர்கள் துறவு தழுவி யெழுந்த சமண நூல்களை விரும்பிக் கற்கவில்லை. ஆயினும் சமணரது கொள்கைகள் நாட்டில் பரவுவதற்குத் தமிழரது மற்றுமொரு மனப்பான்மை உறுதுணையா யிருந்தது.

நாட்டிற்கு வரும் புதுமொழி அதன் நாகரிகம், அம் மக்களின் நடையுடை பாவனை ஆகியவற்றில் மூழ்கித் திளைத்துத் தம் சொந்தப் பண்பினை இழப்பது,

அன்று தொட்டு இன்றுவரை தமிழரோடு ஒட்டிப் பிறந்த குணமாகும்.

சமணருடன் வந்த வடமொழியும் அவருடைய் வழக்கும் தமிழ் மக்களால் பெரிதும் விரும்பப்பெற்றன. அவற்றைப் பின் பற்றுவதில் தனி ஆர்வங் காட்டினர். ஆயினும் ஆங்கிலம் போல வடமொழி விரிந்து பரவவில்லை. வடமொழிப் பயிற்சி ஒரு சில உயர்ந்த வகுப்பினருக்கு மட்டுமே கிடைக்கப் பெறத்தக்கதாய் இருந்ததே இதன் காரணமாகும். எனினும் இதுகாரணமாக வடவர் மதக் கோட்பாடுகளை அறிவதிலும் கொண்டொழுகுவதிலும் தமிழர் பின் வாங்கிலர்.

வடமொழி ஆர்வங் காரணமாகத் தூய தமிழ் நூற்கள் அருகலாயின. வடமொழி கலந்த மணிப்பிரவாள நடை இடம்பெற்றது. இலக்கண நூற்களே அவற்றிற்கு வழி வகுத்துத் தர முற்பட்டன எனின் வடமொழியின் ஆட்சியைப் பற்றி வேறொன்றுங் கூறத் தேவையில்லை. சமண முனிவர்கள் இப் பெரும் வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். வடமொழிக் கதைகளில் பெருவிருப் பிருப்பதை நன்கு தெளிந்தனர். இளஞ் சிறார்க்குக் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தினர்.

ஆயினும் இவர்கள் தமிழுக்குச் செய்த பெருந் தொண்டு அழியாப் புகழ்பெற்ற நூல்களே. இவற்றுள் இவர்கள் முதன் முதலாகச் செய்தவை வரலாறு கூறுவனவாய் அமைந்தன. அதை யடுத்து அவர்கள் யாத்த ஒன்றிரண்டு நூல்களும் மக்களின் மனத்தினைக் கவரும் மாண்புடையதாய் அமைந்தில. இஃது அவர் தம் அறிவின் திறத்தினைக் குறைத்துக் கூறியதாய்க்

கொள்ளல் முற்றிலுந் தவறு. இந் நூற்கள் துறவுநிலை தழுவி யிருந்தமையின் வாழ்க்கை இலட்சியத்தில் காதலைப் பெரிதும் போற்றியவர்களுக் கேற்றதாய் அமையவில்லை. எனவே சமணர் இத் துறையைவிட்டுச் செய்யுளியலில் புகுந்தனர். தம் கொள்கைகளைச் செய்யுள் மூலம் பரப்புவது எளிதாய் இருந்தமையால் அவ் வழியில் அரும்பாடு பட்டனர். பல புது நெறிகளையும் வழங்கினர். தொல்காப்பியத்திற் காணப்படாத பல பாட்டினங்கள் இவர்கள் நூலுட் காணப்படுவது இதனை வலியுறுத்தும்.

சமணரிடத்து அதுகாறும் மறைந்திருந்த ஒரு பெருங் குறை, தேவார காலத்தில் அவர்களுக்கேற்பட்ட பெருந் தோல்வியால் தெற்றென விளங்கலாயிற்று. ஏனையத் தமிழ் நூல்களுள் மறை நூல்கள் மலிந்திருப்பதைக் கண்டனர். எனவே தம் சமயக் கருத்துக்களை எங்கெங்கு எப்படி யெப்படிப் புகுத்த முடியுமோ அங்கெல்லாம் புகுத்தினர். சிறுவர் கற்கும் கணக்கியல் வாய்ப்பாடுங்கூட இவர்களின் நோக்கினின்று தப்பவில்லை. காப்புச் செய்யுளில் சமயக் கருத்துக்களைப் புகுத்தினர். இவர்கள் வகுத்த புதுமுறை நிகண்டுகளிலும் இம் முறையைக் கையாண்டு வெற்றி பெற்றனர்.

சமணர் செய்த இலக்கண இலக்கிய சேவை நன்றியறிவோடு குறிக்கத் தக்கது. பெரும் நூலாகிய தொல்காப்பியத்தைப் படித்துணர்வது சிரமமான காரியமாயிருந்தமையின் சிறு நூற்களாகச் சின்னூல் நன்னூல் என இரு நூல்களை வழங்கினர். சிற்றிலக்கிய வகையில் திருக் கலம்பகம், திரு நூற்றந்தாதி, நரி விருத்தம்,

மேருமன்ற புராணம், யசோதர காவியம் ஆகிய நூற்களை யாத்தனர்.

சமண நூல்களுள் சூளாமணி சிறந்ததோர் நூல். இதன் ஆசிரியர் தோலாமொழித் தேவர். இதன் தனிச் சிறப்பு யாதெனின், சமணசமயக் கொள்கைகளை வலியுறுத்தினும் ஏனையச் சமயத்தினரும் ஒப்பப் போற்றும் பெற்றியது. இப்பெருமை ஆசிரியரின் பரந்த நோக்கினால் உண்டாயதாம் தமிழ்நாட்டின் ஏனையச் சமயப்பொருள்களையும், வரலாறுகளையும் ஆய்ந்து, அவற்றோடு ஒப்பனவாகத் தமது சமயத்துள்ளவற்றை எழுதியதே இவ்வெற்றியின் மர்மமாகும். சீவக சிந்தாமணியின் ஆசிரியராகிய திருத்தக்கத் தேவரும் இவ்வாறே வெற்றியடைந்துள்ளார் என்பதையுங் குறிப்பிடல் வேண்டும்.

# அதிகாரம் 42.

## தமிழைப்போற்ற வேண்டிய முறை

நாம் நமது தமிழ் மொழியை எவ்வாறு போற்றி வளர்த்தல் வேண்டுமென்பதைப் பற்றி ஈண்டுச் சிறிது இயம்புவாம்.

மாணவர்களாயின் ஓய்வு நேரங்களிலெல்லாம் தமிழ்மொழி வல்லாரிடத்துப் பல அரிய நூல்களைப் பயின்று வெண்பா, அகவற்பா முதலிய பாக்களையுந் தற்கால வுலகில் மிகுதியாக வழங்கிவரும் புதிய வகைப் பாடல்களையும் பாடிப் பழகித் தமிழைப் போற்றலாம்.

இன்னோரன்ன செய்கையால் இவர் தம் கீர்த்தி மாபெருநிலையை யடைவதுடன், மற்றை மக்களும் இவர்களைப் பின்பற்றித் தாமும் தமிழினைப் போற்ற முற்படுவர்.

மற்றுத் தமிழாசிரியர்களோவெனின் தமக்குள்ள ஓய்வு நேரங்களி லெல்லாம், ஊதியம் அகப்படுவதை யு அகப்படாத் தொழிவதையும் ஒரு பொருளாக வெண்ணாது தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லும் அரும்பணியில் மிகுதியும் ஈடுபடுதல் வேண்டும். தம்மைப்போல் மற்றவர்களுங் கற்றுவிடின் தமக் கென்ன மதிப்பிருக்கப் போகிறதென்னும் புன்மை யெண்ணத்தை இன்மையாக்கி, நன்மை யெண்ணத்தை நாளுங் கடைப்பிடித்துப், பலர் தம்மிடங் கற்றுத் தேர்ச்சி யுறுவோர்களாயின் தம் மாண்புந் தமிழ் மாண்பும் மிக வுயருமென்னும் உயரிய நோக்கினை மேற் கொள்ளுதல் வேண்டும். இத்தகைய மேதகைய நோக்கே ஒருவர்தஞ் சீரை யுயர்த்துவதாகும்.

பொது மக்களோ தங்கட்கு விளங்கக் கூடிய வகையி லெழுதப்பெற்ற உரைநடை நூல்களையும் பாடல்களையும் நன்கு பயிலுவதன்றிக் கூடுமாயின் தமிழ் வல்லாரிடத்தில் நல்ல நூல்களையும் பயிலலாம். சிறுவர்கட்குத் தமிழ்மாட்டுப் பெருங்காத லுண்டாம் படி அவர்களை இளமையிலேயே பழக்கலாம்.

நல்ல செல்வ நிலைமையி லுள்ளவர்கள் தமிழ் கற்கும் எளிய மாணவர்கட்கு உண்டி உறையுள் உடை நூல் முதலியன வழங்கி உதவி புரியலாம். இன்னும் ஒல்லும்வகையா னெல்லாம் தாய்மொழியாந் தமிழை இனிது பேணலாம்.

பதிப்புக் கூடங்கள் வைத்திருப்போர் பிழைமலிய நூல்களைப் பதிப்பிக்காமல் தக்க அறிஞர்களைக் கொண்டு பதிப்புப் பிழை பார்க்கச் செய்து நூல்களை வெளியிடலாம். ஒரு பிழைகூட இல்லாது ஒரு நூலை வெளியிடின் அப் புத்தகத்தைப் பதிப்பித்தவரின் கீர்த்தி வெகு விரைவில் யாண்டும் பரவுதலடையும். பிழை யுண்மையையும் இன்மையையும் மக்கள் பொருட்படுத்த மாட்டார்களென்று துணிந்து மனம் போனபடி நூல்களைப் பதிப்பித்து விற்கத் தொடங்கின், பின்னர் அந்தப் பதிப்பகத்திலிருந்து பிழையற்ற சரியான நூல்கள் வெளிப்படினும் மக்கள் அதனை ஆதரிக்க மாட்டார்கள். நூல்களைப் பிழையுடன் பதிப்பித்தல் தமிழ்க் கொலை செய்வதாகும். பிழையுள்ள பதிப்புக்களைப் பேரறிஞர்கள் கான்ற சோறென அருவருத்தொதுக்குகின்றன ராதலின் பதிப்புக்கூட உரிமையாளர்கள் பிழை மலிந்ததாக நூல்களை ஒருக் காலும் வெளியிடுதல் கூடாது.

பிழையுள்ள பதிப்பைக் கண்டதும் "இது என்ன குசிலிக்கடைப் பதிப்பா?" என்று அறிவாளிகள் கேட்கின்றனர். குசிலிக்கடைகளில் விற்கப்படும் நூல்கள் அளவுகடந்த தவறுகளுடன் வெளி வருகின்றன வென்பதற்கு இது ஒன்றே தக்க சான்றாகும். பொருட் செலவு செய்து நூலினை வெளியிடுவோர் செலவோடு செலவாக ஒரு தமிழறிஞரையும் பிழைபார்க்க நியமிப்பின், நூல்கள் பொருத்தமுந் திருத்தமும் அமைய வெளிவருவன வாகும். ஆதலின் நூல் பதிப்பிப்போர் பிழையற நூல்கள் வெளியிடுதலே பெருந் தமிழ்த் தொண்டாகும்.

இன்னும் தமிழ் மக்கள் ஒவ்வொருவருந் தத்தமக் இயன்ற வழிகளிலெல்லாந் தமிழ்த்தொண்டு செய்து வரின் தமிழ்மொழியின் சீருஞ் சிறப்பும் மேலோங்குவதற்கு அதிகக் காலஞ் செல்லாது. ஆதலின் ஒவ்வொருவரும் இயன்ற வழியால் தமிழைப் போற்றுவார்களாக.

**தமிழும் தமிழரும் முடிந்தது**

**சுபம்**

கோல்டன் பிரஸ், 2/50, டாணா தெரு, புரசைவாக்கம், சென்னை-7.

Approved by the Madras Text Book Committee Feb 1952

## தமிழ் நாட்டு நவமணிகள்

தமிழ் நாட்டிலே கற்புக்கரசிகளாக விளங்கிய பெண்மணிகள் பலராவர். அவர்களுடைய சரிதங்கள் சங்கநூல் முதலிய பழந் தமிழ் நூல்களிலே வந்துள்ளன. அவர்களுள் 1. [illegible]யார் 2. விசாகையார் 3. மருதியார் 4. கோப்பெருந் தேவியார் 5 மணி மேகலையார் 6. கண்ணகியார் 7. புனிதவதியார் 8. மங்கையர்க்கரசி யார் 9. திலகவதியார் ஆகிய ஒன்பதின்மருடைய சரித்திரமும், மணிமேகலை, சிலப்பதிகாரம், பெரிய புராணம் ஆகியவைகளில் வந்திருந்ததைத் தமிழ் நாட்டு நவமணிகள் எனப் பெயர் கொடுத்து, ஸ்ரீமான். [illegible]. பி. சேதுப்பிள்ளையவர்கள் தெள்ளிய செந்தமிழ் நடையில் மாதர்களுக்கும் நன்கு விளங்கும் வண்ணம் அழகுபெற எழுதியுள்ளார். இவ்வரிய நூல் பெரிய எழுத்தில் நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இந் நூலை ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் படிக்கவேண்டியது அவசியமாகும்.

**இதன் விலை ரூ. 1-0-0**

Approved by the Madras Text Book Committee Feb 1952

## ஞானகுரு அல்லது நல்லாசிரியன்

**Gnanaguru or the Ideal teacher**

இச் சரிதை ஒரு ஆசிரியனுக்கும் ஒரு மாணவனுக்கும் இருந்த ஒப்பில்லாத அன்பை விளக்குகின்றது. ஆசிரியர் பெருங்குணமும் நல்லொழுக்கமும் பெரிதும் பாராட்டத்தக்கன. மாணவன் களங்க மில்லா உள்ளமும் கவின்மிகு அன்பும் படிப்போர் உள்ளத்தைக் கவரும்.

கதையழகும், நடையழகும், மாணவர் மனத்தை மகிழச் செய்யும். உலகில் நடைபெறும் சாதாரண சம்பவங்களில் எவ்வளவு அழகுகள் இருக்கின்றன என்பது விளங்கும். கற்கவேண்டிய முறை யாதெனவும் புலனாகும். சாதாரண இயற்கைப் பொருள்களை வர்ணிக்கும் அழகு மாணவர்களுக்கும் தனி சுவையை ஊட்டும். ஆங்காங்குச் சொல்லழகும், மோனை எதுகையும் அணி பெற மிளிரும். நகைச்சுவை ததும்ப நல்லறிவு புகட்டும் பான்மை மகிழ்ச்சி கவனிக்கத் தக்கது. மாணவர்க்கே யன்றி மற்றையோருக்கும் மகிழ்ச்சி உண்டாகும். பெண்களுக்கு பெருங் களிப்பிற்கு இடம் உண்டு.

**இதன் விலை ரூ. 1-0-0**

---

**ஒற்றுமை ஆபீஸ், 8 வியாசராவ் தெரு, தியாகராயநகர், மதருஸ்**